THE BOOK

OF

COMMON PRAYER,

AND ADMINISTRATION OF

THE SACRAMENTS,

AND OTHER RITES AND CEREMONIES,

ACCORDING TO THE USE OF

The Church of England:

TOGETHER WITH

THE PSALMS OF DAVID,

POINTED AS THEY ARE TO BE SUNG OR SAID IN CHURCHES;

AND THE

FORM AND MANNER OF MAKING, AND ORDAINING,
OF PRIESTS, AND DEACONS.

IN TAMIL.

Revised Second Edition, Sanctioned by the Lord Bishop of Madras.

Madras:

PUBLISHED BY THE MADRAS DIOCESAN COMMITTEE OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE, AND SOLD AT THEIR DEPOSITORIES, 17, CHURCH ROAD, VEPERY, AND 33, OXFORD STREET, SECUNDERABAD.

1885.

Printed at the Christian Knowledge Society's Press, 18, Church Road, Vepery.

இங்கிலாந்து தேசத்துத்

திருச்சபையில் வழங்கிவருகிற

பொதுவான ஜெபங்களும்,

சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கும் முறைமைகளும்,

சபைக்குரிய மற்றச் சடங்காசாரங்களும்,

தேவாலயங்களில் சொல்ல அல்லது பாடவேண்டிய

தாவீதின் சங்கீதங்களும்,

குருப்பட்டமும் உதவிக்குருப்பட்டமும் கொடுக்கும்

முறைமைகள் முதலானவைகளும்

அடங்கிய புஸ்தகம்.

இது கனம்பொருந்திய அத்தியட்சர் அநுமதிபெற்று திருத்தி அச்சிடப்பட்ட இரண்டாம் பதிப்பு.

சென்னபட்டணம்:

கிறிஸ்துமார்க்க கல்வி அபிவிர்த்தி சங்கத்தாராகிய
மதிராஸ் டையோசீசன் கம்மிட்டியாரால் பதிப்பிக்கப்பட்டு,
வேப்பேரியிலும் சிக்கந்தராபாத்திலுமுள்ள அவர்களது
புஸ்தகசாலையில் விற்கப்படுகிறது.

௧௮௮௫.

THE CONTENTS OF THIS BOOK.

		Page.
1	The Order how the Psalter is appointed to be read	ix
2	The Order how the rest of the Holy Scripture is appointed to be read	x
3	A Table of Proper Lessons for Sundays	xiii
4	A Table of Proper Lessons and Psalms for Holy Days	xv
5	The Calendar, with the Table of Lessons	xviii
6	Table of Moveable Feasts	xxx
7	The Order for Morning Prayer	1
8	The Order for Evening Prayer	15
9	The Creed of St. Athanasius	25
10	The Litany	28
11	Prayers and Thanksgivings, upon several occasions	35
12	The Collects, Epistles, and Gospels, to be used at the Ministration of the Holy Communion, throughout the Year	44
13	The Order of the Ministration of the Holy Communion	207
14	The Order of Public Baptism	233
15	The Order of Private Baptism	242
16	The Order of Baptism for those of Riper Years	249
17	The Catechism	258
18	The Order of Confirmation	265
19	The Form of Solemnization of Matrimony	269
20	The Order for the Visitation of the Sick	279
21	The Communion of the Sick	290
22	The Order for the Burial of the Dead	293
23	The Thanksgiving of Women after Child-birth	301
24	The Commination Service	305
25	The Psalms of David	313
26	The Form and Manner of Ordaining Priests and Deacons	477
27	The Articles of Religion	504
28	A Table of Kindred and Affinity	521

THE CONTENTS OF THIS BOOK.

Page

1 The Order how the Psalter is appointed to be read ix
2 The Order how the rest of the Holy Scripture is appointed to be read x
3 A Table of Proper Lessons for Sundays xiii
4 A Table of Proper Lessons and Psalms for Holy Days xv
5 The Calendar, with the Table of Lessons xviii
6 Table of Moveable Feasts xxx
7 The Order for Morning Prayer 1
8 The Order for Evening Prayer 15
9 The Creed of St. Athanasius 25
10 The Litany 28
11 Prayers and Thanksgivings, upon several occasions 35
12 The Collects, Epistles, and Gospels, to be used at the Ministration of the Holy Communion, throughout the Year 44
13 The Order of the Ministration of the Holy Communion 207
14 The Order of Public Baptism 233
15 The Order of Private Baptism 242
16 The Order of Baptism for those of Riper Years 249
17 The Catechism 258
18 The Order of Confirmation 265
19 The Form of Solemnization of Matrimony 269
20 The Order for the Visitation of the Sick 272
21 The Communion of the Sick 280
22 The Order for the Burial of the Dead 283
23 The Thanksgiving of Women after Child-birth 291
24 The Commination Service .... [illegible]
25 The Psalms of David 313
26 The Form and Manner of Ordaining Priests and Deacons .... [illegible]
27 The Articles of Religion .... [illegible]
28 A Table of Kindred and Affinity .... [illegible]

இந்தப் புஸ்தகத்தில் அடங்கியவைகள்:

பக்கம்.

1 சங்கீதங்கள் வாசிக்கப்படும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு. ix
2 சத்தியவேதத்திலுள்ள மற்ற ஆகமங்கள் வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு x
3 ஞாயிற்றுக்கிழமைக்குரிய விசேஷித்த பாட அட்டவணை....... xiii
4 திருநாட்களுக்குரிய பாடங்களையும், விசேஷித்த சங்கீதங்களையும் காட்டிய அட்டவணை xv
5 வருஷமுழுவதும் சம்பவிக்கும் திருநாட்களையும், நாடோறும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய தேதி அட்டவணை xviii
6 தேதி மாறிவருகிற திருநாட்களைக் காட்டிய அட்டவணை....... xxx
7 காலைஜெப ஒழுங்கு 1
8 மாலைஜெப ஒழுங்கு 15
9 பரி. அதநாசியின் விசுவாசப்பிரமாணம்....... 25
10 லித்தானியா....... 28
11 விசேஷகாலங்களில் செய்யவேண்டிய ஜெபங்களும் ஸ்தோத்திரங்களும்....... 35
12 வருஷமுழுவதும் பரிசுத்த நற்கருணை ஒழுங்கில் வாசிக்கவேண்டிய சுருக்கஜெபங்களும், நிருபவாக்கியங்களும், சுவிசேஷவாக்கியங்களும் 44
13 பரிசுத்த நற்கருணையைக் கொடுக்கும் முறைமை....... 207
14 தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை 233
15 வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனிமையாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை....... 242
16 சிறுபிராயம் கடந்தவர்களுக்குக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை 249
17 ஞானோபதேச வினவிடை 258
18 திடப்படுத்தல் செய்யும் முறைமை....... 265

		பக்கம்.
19	விவாகம் நடத்தும் முறைமை	269
20	வியாதியுள்ளவர்களைச் சந்திக்கும் முறைமை	279
21	வியாதியுள்ளவர்களுக்கு நற்கருணையைக் கொடுக்கும் முறைமை.	290
22	மரித்தவர்களை அடக்கம்பண்ணும் முறைமை	293
23	ஸ்திரீகள் பிரசவித்தபின்பு செய்யவேண்டிய ஸ்தோத்திரம்	301
24	பாவிகள்மேல் வரும் தேவ கோபாக்கினை கூறல்	305
25	சங்கீத புஸ்தகம்	313
26	குருப்பட்டமும் உதவிக்குருப்பட்டமும் கொடுக்கும் முறைமை.	477
27	வேதசித்தாந்தப் பிரமாணங்கள்	504
28	இனமுறை சம்பந்த விவாக அட்டவணை	521

¶ THE ORDER HOW THE PSALTER IS APPOINTED TO BE READ.

சங்கீதங்கள் வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு.

சங்கீதங்கள் முழுவதையும், குறிக்கப்பட்டிருக்கிறபடி, காலை மாலை ஜெபத்தில் மாசத்திற்கு ஒருமுறை வாசிக்கவேண்டும். பெப்ருவரி மாசத்தில்மாத்திரம் இருபத்தெட்டாம் இருபத்தொன்பதாம் தேதிவரைக்கும் வாசிக்கவேண்டும்.

ஜனுவரி, மார்ச்சு, மே, ஜூலை, ஆகஸ்டு, அக்டோபர், டிசெம்பர் மாசங்களில் முப்பத்தொரு தேதி இருக்கிறபடியால், முப்பதாம் தேதிக்குக் குறிக்கப்பட்டிருக்கிற சங்கீதங்களையே முப்பத்தோராம் தேதியிலும் வாசிக்கவேண்டும். இவ்விதமாய் வாசிக்கிறதினால் அடுத்த மாசத்தின் முதலாம் தேதியில் சங்கீத புஸ்தகத்தை ஆரம்பிக்கலாம்.

இருபத்திரண்டு பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற நூற்றுப்பத்தொன்பதாம் சங்கீதத்தை ஒரேமுறை வாசித்து முடியாதாகையால், அதில் நாலு ஐந்து பங்குகளைமாத்திரம் ஒவ்வொரு முறைக்கு, குறிக்கப்பட்டிருக்கிறபடி, வாசிக்கவேண்டும்.

ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவிலும், நூற்றுப்பத்தொன்பதாம் சங்கீதத்தின் ஒவ்வொரு பங்கின் முடிவிலும், "பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக; ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்" என்னும் கீர்த்தனையைச் சொல்லவேண்டும்.

¶ THE ORDER HOW THE REST OF HOLY SCRIPTURE IS APPOINTED TO BE READ.

சத்தியவேதத்திலுள்ள மற்ற ஆகமங்கள் வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு.

பழைய ஏற்பாடு காலை மாலை ஜெபத்தில் முதலாம் பாடமாக வாசிக்கக் குறிக்கப்பட்டிருக்கிறது; காலண்டர் என்னும் தேதி அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கிறபடி, பழைய ஏற்பாட்டிலுள்ள பங்குகளெல்லாம் பெரும்பாலும் வருஷத்துக்கு ஒருமுறை வாசிக்கப்படவேண்டும்.

புதிய ஏற்பாடு காலை மாலை ஜெபத்தில் இரண்டாம் பாடமாக வாசிக்கக் குறிக்கப்பட்டிருக்கிறது; நிருபவாக்கியங்களும் சுவிசேஷவாக்கியங்களும் வாசிக்கப்படுகிறதுமன்றி, புதிய ஏற்பாடு காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையுமாக வருஷத்துக்கு இரண்டுமுறை முழுவதும் வாசிக்கப்படவேண்டும். திவ்வியவாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து, வருஷத்தின் முடிவிலும் சில திருநாட்களிலும் வாசிக்கப்படும்படி, சில விசேஷ பாடங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது.

காலை மாலை ஜெபங்களில் வாசிக்கவேண்டிய பாடங்கள் தேதி அட்டவணையில் கண்டிருக்கிறபடியால், அந்தந்தத் தேதியில் வாசிக்கவேண்டிய பாடங்களைத் தேதி அட்டவணையில் பார்த்து அறிந்துகொள்ளவேண்டும். தேதி அட்டவணையில் கண்டிராத தேதி மாறிமாறி வருகிற திருநாட்களிலும், அட்டவணையில் குறிக்கப்படாமல் இடம் வெறுமையாய் விட்டிருக்கிற தேதி மாறாமல் வருகிற திருநாட்களிலும் வாசிக்கவேண்டிய விசேஷ பாடங்களை, அதற்கென்று குறிக்கப்பட்டிருக்கிற விசேஷ பாட அட்டவணையில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மாலைஜெபத்தில் வாசிக்கும்படி தேதி அட்டவணையில் இரண்டு பாடங்கள் குறிக்கப்பட்டிருந்தால், குருவானவர் தம்முடைய இஷ்டப்படி இரண்டில் ஒன்றை வாசிக்கலாம். ஒரே இடத்தில் மாலைஜெபம் இரண்டுதரம் சொல்லப்படுமானால், இந்த இரண்டு பாடங்களில் ஒரு பாடத்தை முதல்தரம் செய்யப்படும் ஜெபத்திலும், மற்றொரு பாடத்தை இரண்டாந்தரம் செய்யப்படும் ஜெபத்திலும் வாசிக்கலாம்.

ஒரே கோவிலில் ஞாயிற்றுக்கிழமையில் நடக்கும் ஆராதனையில் மாலைஜெபம் இரண்டுதரம் சொல்லப்படுமானால், அந்த ஞாயிறுக்கு இரண்டாம் பாடமாக இரட்டைப் பாடங்கள் குறிக்கப்படாதிருக்கும்போது, இரண்டாவது மாலைஜெபத்தில் நாலு சுவிசேஷங்களிலிருந்து குருவானவர் தமக்கு இஷ்டமான யாதொரு அதிகாரத்தையாவது, தேதி அட்டவணையில் கண்டிருக்கிற யாதொரு பாடத்தையாவது இரண்டாம் பாடமாக வாசிக்கலாம்.

அந்தந்த நாளில் வாசிக்கவேண்டிய பாடங்கள் தேதி அட்டவணையில் குறிக்கப்பட்டிருந்தபோதிலும், விசேஷித்த சமயங்களில் அத்தியட்சர் அநுமதியினால் வேறே பாடங்களைத் தெரிந்தெடுத்து வாசிக்கலாம்.

மேலும், விசேஷ சங்கீதங்களும் பாடங்களும் வாசிக்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற நாட்களில், அந்த நாட்களுக்கென்று தேதி அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கிற சங்கீதங்களும் பாடங்களும் (வேறாயிருக்குமானால்) அவைகளை வாசிக்காமல் விட்டுவிடவேண்டும்.

தேதி அட்டவணையில் விசேஷ பாடங்கள் குறிக்கப்பட்டிருக்கிற திருநாட்கள், அட்வெந்தென்னும் நாட்களின் முதலாம் ஞாயிறு, உயிர்த்தெழுந்த திருநாள், பரிசுத்த ஆவியின் திருநாள், திரித்துவத்திருநாள் ஆகிய இந்த ஞாயிறுகளில் வருமானால், அந்தந்த விசேஷித்த திருநாட்களுக்கென்று குறிக்கப்பட்டிருக்கிற பாடங்களை வாசிக்கவேண்டும். திருநாட்கள் மற்ற ஞாயிறுகளில் வருமானால், அந்தந்த ஞாயிறுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற பாடங்களையாவது, திருநாளுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற பாடங்களையாவது குருவானவர் தம்முடைய இஷ்டப்படி வாசிக்கலாம்.

மேலும், அந்தந்த ஞாயிறுக்குக்குறிக்கப்பட்டிருக்கிற சுருக்கஜெபத்தையும், நிருபவாக்கியத்தையும், சுவிசேஷவாக்கியத்தையும் அந்தந்த வாரமுழுவதும் வழங்கவேண்டும். ஆனாலும் வேறே சுருக்கஜெபமும், நிருபவாக்கியமும், சுவிசேஷவாக்கியமும் இந்தப் புஸ்தகத்தில் குறிக்கப்பட்டிருக்குமானால் அவைகளையே வழங்கவேண்டும்.

¶ வருஷ முழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றத் திருநாட்களிலும்
காலை மாலை ஜெபத்தில் வாசிக்கவேண்டிய

விசேஷ பாடங்கள்.

¶ ஞாயிற்றுக்கிழமைகளுக்குரிய பாடங்கள்.

	காலைஜெபம்.	மாலைஜெபம்.	
அட்வெந்தென்னும் நாட்களில். 1. ஞாயிறு	ஏசா—1	ஏசா—2.	அல்லது ஏசா—4. 2
2.	—5	—11.11 வரை	,, —24
3.	—25	—26	,, —28, 5, 19 வரை
4.	—30. 27 வரை	—32	,, —33.2–23 வரை
கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும் 1. ஞாயிறு	—35	—38	,, —40
2.	—42	—43	,, —44
பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 1. ஞாயிறு	—51	—52. 13 & 53	,, —54
2.	—55	—57	,, —61
3.	—62	—65	,, —66
4.	யோபு—27	யோபு—28	,, யோபு—29
5.	நீதி—1	நீதி—3	,, நீதி—8
6.	—9	—11	,, —15
செப்துவகெசிமா ஞாயிறு. 1. பாடம்	ஆதி—1 & 2. 4 வரை	ஆதி—2.4	,, யோபு—38
2.	வெளி—21, 9 வரை	வெளி 21.9&22.6வ.	,, —
செக்சகெசிமா ஞாயிறு.	ஆதி—3	ஆதி—6	,, ஆதி—8
கின்குவகெசிமா ஞாயிறு.	—9. 20 வரை	—12	,, —13
லெந்தென்னும் நாட்களில் 1. ஞாயிறு	—19. 12-30 வரை	—22. 20 வரை	,, —23
2.	—27. 41 வரை	—28	,, —32
3.	—37	—39	,, —40
4.	—42	—43	,, —45
5.	யாத்—3	யாத்—5	,, யாத்—6. 14 வரை
6. 1. பாடம்	—9	—10	,, —11
2.	மத்—26	லூக்—19. 28	,, லூக். 20, 9-21 வரை
உயிர்த்தெழுந்த திருநாள். 1. பாடம்	யாத்—12. 29 வரை	யாத்—12. 29	,, யாத்—14
2.	வெளி. 1. 10-19 வரை	யோ—20.11-19 வ.	,, வெளி—15

¶ ஞாயிற்றுக்கிழமைகளுக்குரிய பாடங்கள்.

	காலஜெபம்.	மாலஜெபம்.		
உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்வரும்				
1. ஞாயிறு				
1. பாடம்......	என்—16. 36 வரை	என்—16. 36	அல்லது	என்—17. 12 வரை
2.	1 கொரி. 15. 29 வரை	யோவா.20.24.30 வ.	,,	—
2.	என்—20. 14 வரை	என்.20.14&21.10வ.	,,	என்—21. 10
3.	—22	—23	,,	—24
4.	உபா— 4. 23 வரை	உபா—4. 23-41 வ.	,,	உபா—5
5.	— 6	— 9	,,	—10
பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.	உபா— 30	உபா—34	,,	யோசு— 1
பரிசுத்த ஆவியின் திருநாள்.				
1. பாடம்	உபா—16. 18 வரை	எசா—11	,,	எசேக்—36. 25
2.	ரோ — 8. 18 வரை	கலா—5.16	,,	அப்.18.24&19,21வ.
திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.				
1. பாடம்	எசா—6. 11 வரை	ஆதி— 18	,,	ஆதி-1 & 2. 4 வரை
2.	வெளி — 1. 9 வரை	எபே—4.17 வரை	,,	மத் — 3
திரித்துவ ஞாயிறுக்குப் பின்வரும்				
1. ஞாயிறு.... ...	யோசு—3. 7 & 4. 15 வ	யோசு.5.13&6.21வ.	,,	யோசு — 24
2.	நியா— 4	நியா—5	,,	நியா—6. 11
3.	1 சாமு—2. 27 வரை	1 சாமு—3	,,	1 சாமு—4. 19 வரை
4.	—12	—13	,,	ரூத்— 1
5.	—15. 24 வரை	—16	,,	1 சாமு—17
6.	2 சாமு— 1	2 சாமு—12. 24 வ.	,,	2 சாமு—18
7.	1 நாளா— 21	1 நாளா— 22	,,	1 நாளா —28. 21 வ.
8.	— 29. 9–29 வரை	2 நாளா—1	,,	1 ராஜா —3
9.	1 ராஜா. 10. 25 வரை	1 ராஜா. 11. 15 வ.	,,	—11. 26
10.	—12	—13	,,	— 17
11.	—18	—19	,,	—21
12.	— 22. 41 வரை	2 ராஜா. 2. 16 வரை	,,	2 ராஜா. 4. 8-38 வ.
13.	2 ராஜா—5	—6. 24 வரை	,,	— 7
14.	— 9	— 10. 32 வரை	,,	— 13
15.	— 18	—19	,,	—23. 31 வரை
16.	2 நாளா — 36	நெகே—1& 2,9 வ.	,,	நெகே — 8
17.	எரே— 5	எரே— 22	,,	எரே — 35
18.	—36	எசேக்— 2	,,	எசேக்—13. 17 வரை
19.	எசேக்— 14	—18	,,	—24. 15
20.	—34	—37	,,	தானி— 1
21.	தானி — 3	தானி — 4	,,	— 5
22.	— 6	— 7. 9	,,	— 12
23.	ஓசி—14	யோவே— 2. 21	,,	யோவே—3. 9
24.	ஆமோஸ் — 3	ஆமோஸ்— 5	,,	ஆமோஸ்—9
25.	மீகா—4 & 5. 8 வரை	மீகா—6	,,	மீகா— 7
26.	ஆப— 2	ஆப—3	,,	செப் — 3
27.	பிர—11 & 12	ஆகாப்—2. 10 வரை	,,	மல்கி — 3 & 4

☞ திரித்துவத் திருநாளாகிய இருபத்தேழாம் ஞாயிறுக்குக் குறிக்கப்பட்ட பாடங்கள் அட்வெந்தென்னும் காலுக்கு முன்வரும் ஞாயிறில் வாசிக்கப்படவேண்டும்.

¶ திருநாட்களுக்குரிய பாடங்கள்.

	காலஜெபம்.	மாலஜெபம்.
பரி. அந்திரேயாவின் திருநாள்.		
1. பாடம்	எசா—54	எசா—65. 17 வரை
2.	யோ—1.35-43வரை	யோ—12. 20. 42 வரை
பரி. அப். தோமாவின் திருநாள்.		
1. பாடம்	யோபு—42. 7 வரை	எசா—35
2.	யோ—20. 19-24 வரை	யோ — 14. 8 வரை
கிறிஸ்து ஜநந திருநாள்		
1. பாடம்	எசா—9. 8 வரை	எசா —7. 10-17 வரை
2.	லூக்—2. 15வரை	தீத்து—3.4-9வரை
பரி. ஸ்தேவான்.		
1. பாடம்	ஆதி—4.11 வரை	2நாளா—24. 15-23 வரை
2.	அப் —6	அப்—8.9 வரை
பரி. யோவான் சுவிசேஷகன்.		
1. பாடம்	யாத்—33. 9	எசா—6
2.	யோ—13. 23-36 வரை	வெளி — 1
குற்றமில்லாப் பாலகருடைய திருநாள்.		
1. பாடம்.........	எரே—31. 18 வரை	பாருக்—4. 21-31வரை
கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.		
1. பாடம்.........	ஆதி—17.9	உபா —10. 12
2	ரோ —2.17	கொலோ —2. 8-18 வரை
பிரசன்னத் திருநாள்.		
1 பாடம்	எசா—60	எசா—49. 13–24 வரை
2	லூக்—3. 15-23வரை	யோ—2.12 வரை
பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.		
1. பாடம்	எசா —49. 13 வரை	எரே—1. 11வரை
2	கலாத் —1. 11	அப் —26. 21 வரை
பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.		
1. பாடம்.	யாத் —13. 17 வரை	ஆகாய்—2. 10 வரை
பரி. மத்தியா.		
1. பாடம்.........	1 சாமு—2.27-36 வரை	எசா —22. 15
பாக்கியவதியாகிய கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.		
1. பாடம்..	ஆதி—3. 16 வரை	எசா—52. 7-13 வரை
லெந்தின் முதல்நாளாகிய புதன்கிழமை.		
1. பாடம்.	எசா —58. 13 வரை	யோவே —3
2.........	மாற் —2.13-23வரை	எபி —12. 3-18 வரை

¶ திருநாட்களுக்குரிய பாடங்கள்.

	காலைஜெபம்.	மாலைஜெபம்.
உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்வரும் திங்கள்.		
1. பாடம்.	புலம்பல் — 1. 15 வரை	புலம்பல் — 2. 13
2.	யோ — 14. 15 வரை	யோ — 14. 15
உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்வரும் செவ்வாய்.		
1. பாடம்	புலம்பல் — 3. 34 வரை	புலம்பல் — 3. 34
2.	யோ — 15. 14 வரை	யோ — 15. 14
உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்வரும் புதன்.		
1. பாடம்.	புலம்பல் — 4. 21 வரை	தானி — 9. 20
2.	யோ — 16. 16 வரை	யோ — 16. 16
உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்வரும் வியாழம்.		
1. பாடம்.	ஓசியா — 13. 15 வரை	ஓசியா — 14
2.	யோ — 17	யோ — 13 36 வரை
பெரிய வெள்ளிக்கிழமை.		
1. பாடம்.	ஆதி — 22. 20 வரை	ஏசா — 52. 13 & 53
2	யோ — 18	1பேதுரு — 2
உயிர்த்தெழுந்த நாளுக்கு முந்தின மாலை.		
1 பாடம்.	சகரி — 9	ஓசியா — 5.8 & 6. 4 வரை
2.	லூக் — 23. 50	ரோ — 6. 14 வரை
உயிர்த்தெழுந்த நாளுக்கு. பின்வரும் திங்கள்.		
1. பாடம்	யாத் — 15. 22 வரை	உன்னத — 2. 10
2.	லூக் — 24. 13 வரை	மத் — 28. 10 வரை
உயிர்த்தெழுந்த நாளுக்குப் பின்வரும் செவ்வாய்.		
1. பாடம்.	2ராஜா — 13.14-22 வரை	எசேக் — 37. 15 வரை
2.	யோ — 21. 15 வரை	யோ — 21. 15
பரி. மாற்குவின் திருநாள்.		
1. பாடம்.	ஏசா — 62. 6	எசேக் — 1. 15 வரை
பரி. பிலிப்பு, பரி. யாக்கோபு.		
1. பாடம்.	— 61	சகரி — 4
2.	யோ — 1.43	—
கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.		
1. பாடம்.	தானி — 7. 9-15 வரை	2ராஜா — 2. 16 வரை
2.	லூக் — 24. 44	எபி — 4
பரிசுத்த ஆவியின் திருநாளுக்குப் பின்வரும் திங்கள்.		
1. பாடம்.	ஆதி — 11. 10 வரை	எண் — 11. 16-31 வரை
2.	1 கொரி — 12. 14 வரை	1 கொரி — 12. 27 & 13

¶ திருநாட்களுக்குரிய பாடங்கள்.

	காலைஜெபம்.	மாலைஜெபம்.
பரிசுத்த ஆவியின் திருநாளுக்குப் பின்வரும் செவ்வாய்.		
1. பாடம்	யோவேல் — 2. 21	மீகா — 4. 8 வரை
2.	1 தெச — 5. 12-24 வரை	1 யோ — 4. 14 வரை
பரி. பர்னபா.		
1. பாடம்	உபா — 33. 12 வரை	நாகூம் — 1
2.	அப் — 4. 31	அப் — 14. 8
பரி. யோவான்ஸ்நானன்.		
1. பாடம்	மல்கி — 3. 7 வரை	மல்கி — 4
2.	மத் — 3	மத் — 14. 13 வரை
பரி. பேதுரு.		
1. பாடம்	எசேக் — 3. 4-15 வரை	சகரி — 3
2.	யோ — 21. 15-23 வரை	அப் — 4.8–23 வரை
பரி. யாக்கோபு.		
1. பாடம்	2 ராஜா — 1. 16 வரை	எரே — 26. 8-16 வரை
2.	லூக் — 9. 51-57 வரை	—
பரி. பர்த்தொலோமேயு.		
1. பாடம்	ஆதி — 28. 10-18 வரை	உபா — 18. 15
பரி. மத்தேயு.		
1. பாடம்	1 ராஜா — 19. 15	1 நாளா — 29. 20. வரை
பரி. மிகாவேல், ஞ.		
1. பாடம்	ஆதி — 32	தானி — 10. 4
2.	அப் — 12. 5-18 வரை	வெளி — 14. 14
பரி. லூக்கா.		
1. பாடம்	ஏசா — 55	சிராக்கு — 38. 15 வரை
பரி. சீமோன், பரி. யூதா.		
1. பாடம்	ஏசா — 28. 9–17 வரை	எரே — 3. 12-19 வரை
சகல பரிசுத்தவான்களின் திருநாள்.		
1. பாடம்	ஞானம் — 3. 10 வரை	ஞானம் — 5. 17 வரை
2.	எபி — 11.33 & 12. 7 வரை	வெளி — 19. 17 வரை

¶ விசேஷித்த நாட்களுக்குரிய சங்கீதங்கள்.

	காலைஜெபம்.	மாலைஜெபம்.
கிறிஸ்து ஜநந திருநாள்	சங் — 19, 45, 85	சங் — 89, 110, 132
லெந்தில் முதல்நாளாகிய புதன்கிழமை	— 6, 32, 38	— 102, 130, 143
பெரிய வெள்ளிக்கிழமை.	— 22, 40, 54	— 69, 88
உயிர்த்தெழுந்த திருநாள்.	— 2, 57, 111	— 113, 114, 118
பரத்துக்கேறின திருநாள்.	— 8, 15, 21	— 24, 47, 108
பரிசுத்தஆவியின் திருநாள்.	— 48, 68	— 104, 145

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

ஜனுவரிமீ 31 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1 .பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	A	விருத்தசேதனத் திருநாள்.			
2	b	ஆதி 1. 20 வரை	மத் 1. 18	ஆதி. 1. 20 & 2. 4வரை	அப் 1
3	c	2. 4	2	3. 20 வரை	2. 22 வரை
4	d	3. 20 & 4. 16வரை	3	4. 16	2. 22
5	e	5. 28 வரை	4. 23வரை	5. 28 & 6. 9 வரை	3
6	f	பிரசன்னத் திருநாள்.			
7	g	ஆதி 6. 9	4. 23 & 5. 13வரை	7	4. 32 வரை
8	A	ஞாசியன், P. & M. ஆதி 8	5. 13-33 வரை	9. 20 வரை	4. 32 & 5.17 வரை
9	b	11. 10வரை	5. 33	12	5. 17
10	c	13	6. 19 வரை	14	6
11	d	15	6. 19 & 7. 7 வரை	16	7. 35 வரை
12	e	17. 23வரை	7. 7	18. 17 வரை	7. 35 & 8. 5 வரை
13	f	இலாரி, Bp. & Con. ஆதி 18. 17	8. 18வரை	19. 12-30 வரை	8. 5-26 வரை
14	g	20	8. 18	21. 22 வரை	8. 26
15	A	21. 33 & 22. 20 வரை	9. 18 வரை	23	9. 23 வரை
16	b	24 29வரை	9. 18	24. 29-52 வரை	9. 23
17	c	24. 52	10. 24 வரை	25. 5-19 வரை	10. 24 வரை
18	d	பிரிஸ்கா, Virg.&M. ஆதி 25. 19	10.24	26. 18 வரை	10.24
19	e	26. 18	11	27. 30 வரை	11
20	f	பபியான், Bp. & M. ஆதி 27. 30	12. 22 வரை	28	12
21	g	ஆக்னெஸ், Vr.&M. ஆதி 29. 21 வரை	12.22	31. 25 வரை	13. 26 வரை
22	A	வின் சென்ட், Mart. ஆதி 31. 36	13. 24 வரை	32. 22 வரை	13. 26
23	b	32. 22	13. 24-53 வரை	33	14
24	c	35.21 வரை	13. 53 & 14. 13வரை	37. 12 வரை	15. 30வரை
25	d	பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.			
26	e	ஆதி 37. 12	14. 13	39	15. 30&16.16வரை
27	f	40	15. 21 வரை	41. 17 வரை	16. 16
28	g	41. 17-53 வரை	15.21	41. 53 & 42. 25 வரை	17. 16 வரை
29	A	42. 25	16. 24 வரை	43. 25 வரை	17. 16
30	b	43. 25 & 44. 14 வரை	16. 24 & 17. 14 வரை	44. 14	18. 24 வரை
31	c	45. 25வரை	17. 14	45. 25 & 46. 8 வரை	18. 24 & 19.21வரை

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

பெப்ருவரிமீ 28 நாட்கள்.

ஒவ்வொரு நான்காம் வருஷம் 29 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	d	உபவாசம். ஆதி. 46.26 & 47.13வ.	மத் 18. 21வரை	ஆதி 47. 13	அப் 19. 21
2	e	பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.	18. 21 & 19. 3 வரை		20. 17 வரை
3	f	பிலாசியஸ், Bp. M. ஆதி 48	19. 3-27வரை	49	20. 17
4	g	50	19. 27 & 20. 17 வரை	யாத் 1	21. 17 வரை
5	A	அகத்தா, V. & M. யாத் 2	20-17	3	21. 17-37 வரை
6	b	4. 24 வரை	21. 23வரை	4. 27 & 5. 15 வரை	21. 37 & 22.23 வரை
7	c	5. 15 & 6. 14 வரை	21. 23	6. 28 & 7. 14 வரை	22.23 & 23.12வரை
8	d	7. 14	22. 15வரை	8. 20 வரை	23. 12
9	e	8. 20 & 9. 13 வரை	22. 15-41 வரை	9. 13	24
10	f	10.21 வரை	22. 41 & 23. 13வரை	10. 21 & 11	25
11	g	12. 21வரை	23. 13	12. 21-43 வரை	26
12	A	12. 43 & 13. 17 வரை	24. 29வரை	13. 17 & 14. 10 வரை	27. 18 வரை
13	b	14.10	24. 29	15. 22 வரை	27. 13
14	c	வலன்தின், Bp.M. யாத். 15.22 & 16.11வரை	25. 31வரை	16.11	28. 17 வரை
15	d	17	25. 31	18	28. 17
16	e	19	26. 31வரை	20. 22வரை	ரோ 1
17	f	21. 18 வரை	26. 31-57 வரை	22. 21 & 23. 10வரை	2. 17 வரை
18	g	23 . 14	26. 57	24	2. 17
19	A	25. 23வரை	27. 27வரை	28. 13 வரை	3
20	b	28. 29-42 வரை	27. 27-57 வரை	29. 35 & 30. 11 வரை	4
21	c	31	27. 57	32. 15 வரை	5
22	d	32. 15	28	33. 12 வரை	6
23	e	உபவாசம். யாத். 33. 12 & 34. 10வ	மாற்கு 1. 21 வரை	34. 10-27 வரை	7
24	f	பரி. அப். மத்தியாவின் திருநாள்.	1. 21		8. 18 வரை
25	g	யாத் 34. 27	2. 23 வரை	35. 29 & 36. 8 வரை	8. 18
26	A	39. 30	2. 23 & 3. 13 வரை	40. 17 வரை	9. 19 வரை
27	b	40. 17	3. 13	லேவி. 9. 22 & 10. 12வ	9. 19
28	c	லேவி 14. 23 வரை	4. 35 வரை	16. 23 வரை	10
29	—	19. 19வரை	மத் 7	19. 30 & 20. 9 வரை	12

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

மார்ச்சுமீ 31 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	d	தாவீது, Arch Bp.			
		லேவி—25. 18 வரை	மாற்—4. 35 & 5. 21. வ	லேவி—-25. 18-44 வ	ரோ—11. 25 வரை
2	e	சாட், Bishop.			
		லேவி—26. 21 வரை	—5. 21	—26. 21	—11. 25
3	f	எண்—6	—6. 14 வரை	எண். 9. 15 & 10. 11வ	—12
4	g	—10. 11	—6. 14-30 வரை	—11. 24 வரை	—13
5	A	—11. 24	—6. 30	—12	—14 & 15. 8 வரை
6	b	—13. 17	—7. 24 வரை	—14. 26 வரை	—15. 8
7	c	பர்பெத்துவா, M.			
		எண்—14. 26	—7. 24 & 8.10 வரை	—16. 23 வரை	—16
8	d	—16. 23	—8. 10 & 9. 2 வரை	—17	1 கொரி. 1. 26 வரை
9	e	—20. 14 வரை	—9. 2-30 வரை	—20. 14	—1. 26 & 2
10	f	—21. 10 வரை	—9. 30	—21. 10-32 வரை	—3
11	g	—22. 22 வரை	—10. 32வரை	—22.22	—4. 18 வரை
12	A	கிரகோரி, Bp.&M.			
		எண்—23	—10. 32	—24	—4. 18 & 5
13	b	—25	—11. 27 வரை	—27. 12	—6
14	c	உபா—1. 19 வரை	11. 27& 12. 13 வரை	உபா—1. 19	—7. 25 வரை
15	d	—2. 26 வரை	—12. 13-35 வரை	2. 26 & 3. 18 வரை	—7. 25
16	e	—3. 18	12. 35 & 13. 14 வரை	—4. 25 வரை	—8
17	f	—4. 25-41 வரை	—13. 14	—5. 22 வரை	—9
18	g	எட்வார்ட்,K.W.S.			
		உபா—5. 22	—14. 27 வரை	—6	—10 & 11. 1
19	A	—7. 12வரை	—14. 27-53 வரை	—7. 12	—11. 2-17 வரை
20	b	—8	—14. 53	—10. 8	—11. 17
21	c	பெனிடிக்ட், Abb.			
		உபா—11. 18 வரை	—15. 42 வரை	—11. 18	—12. 28 வரை
22	d	—15. 16 வரை	—15. 42 & 16	—17 8	—12. 28 & 13
23	e	—18. 9	தூக்—1. 26 வரை	—24. 5	—14. 20 வரை
24	f	உபவாசம்.			
		—26	—1. 26-46வரை	—27	—14. 20
25	g	பரி. கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.	—1. 46	—	—15. 35 வரை
26	A	உபா—28. 15 வரை	—2. 21 வரை	—28. 15-47 வரை	—15. 35
27	b	—28. 47	—2. 21	—29. 9	—16
28	c	—30	—3. 23 வரை	—31. 14 வரை	2 கொரி—1. 23வரை
29	d	—31. 14-30 வரை	—4. 16 வரை	31. 30 & 32. 44வரை	1. 23 & 2. 14 வரை
30	e	—32. 44	—4. 16	—33	—2. 14 & 3
31	f	—34	—5. 17 வரை	யோச—1	—4

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

எப்பிரல்மீ 30 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	g	யோச—2	தூக்—5. 17	யோச—3	2 கொரி—5
2	A	—4	—6. 20 வரை	—5	—6 & 7. 1
3	b	ரிச்சார்ட், Bp.			
		யோச—6	—6. 20	—7	—7. 2
4	c	பரி. அம்புரோஸ், Bp.			
		யோச—9. 3	—7. 24 வரை	—10. 16 வரை	—8
5	d	21. 43 & 22. 11 வரை	—7. 24	—22. 11	—9
6	e	—23	—8. 26 வரை	—24	—10
7	f	நியா—2	—8. 26	நியா—4	—11. 30 வரை
8	g	—5	—9. 28 வரை	—6. 24 வரை	11.30 & 12. 14 வ
9	A	—6. 24	—9. 28-51 வரை	—7	—12. 14 & 13
10	b	8. 32 & 9. 25 வரை	9. 51 & 10. 17 வரை	—10	கலா—1
11	c	—11. 29வரை	—10.17	—11. 29	—2
12	d	—13	—11. 29 வரை	—14	—3
13	e	—15	—11.29	—16	—4. 21 வரை
14	f	ரூத்—1	—12. 35. வரை	ரூத்—2	4. 21 & 5. 13 வரை
15	g	—3	—12. 35	—4	—5 13
16	A	1 சாமு—1	—13. 18வரை	1 சாமு—2. 21 வரை	—6
17	b	—2. 21	—13. 18	—3	எபே—1
18	c	—4	—14. 25 வரை	—5	—2
19	d	அல்பேஜ், Arch Bp			
		1 சாமு—6	14. 25 & 15. 11 வரை	—7	—3
20	e	—8	—15. 11	—9	—4. 25 வரை
21	f	—10	—16	—11	4. 25 & 5. 22 வரை
22	g	—12	—17. 20 வரை	—13	5. 22 & 6. 10 வரை
23	A	ப. ஜார்ஜ். Martyr.			
		1 சாமு—14. 24 வரை	—17. 20	—14. 24-47 வரை	—6. 10
24	b	—15	—18. 31 வரை	—16	பிலிப்—1
25	c	பரி. மாற்கு சுவி. திருநாள்.	18. 31 & 19. 11 வரை	—	—2
26	d	1 சாமு—17. 31 வரை	—19. 11-28 வரை	—17. 31-55 வரை	—3
27	e	17. 55 & 18. 17 வரை	—19.28	—19	—4
28	f	—20. 18 வரை	—20. 27 வரை	—20. 18	கொலே. 1. 21 வரை
29	g	—21	20. 27 & 21. 5 வரை	—22	1. 21 & 2. 8 வரை
30	A	—23	—21. 5	—24 & 25. 1	—2. 8

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

மேமீ 31 நாட்கள்.

		காலஜெபம்.		மாலஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	b	பரி. பிலிப்பு, யாக்கோபு, அப். திரு.	—	—	கொலோ. 3. 18 வரை
2	c	1 சாமு — 26	தூக் — 22. 31 வரை	1 சாமு — 28. 3	3. 18 & 4. 7 வரை
3	d	சிலுவை கண்டெடுத்தல்.			
		1 சாமு — 31	— 22. 31-54 வரை	2 சாமு — 1	— 4. 7
4	e	2 சாமு — 3. 17	— 22. 54	— 4	1 தெச — 1
5	f	— 6	— 23. 26 வரை	— 7. 18 வரை	— 2
6	g	பரி. யோவான் சுவிசேஷகன். Port Lat.			
		2 சாமு — 7. 18	— 23. 26-50 வரை	— 9	— 3
7	A	— 11	23. 50 & 24. 13 வரை	— 12. 24 வரை	— 4
8	b	13. 38 & 14. 26 வரை	— 24. 13	— 15. 16 வரை	— 5
9	c	— 15. 16	யோ — 1. 29 வரை	— 16. 15 வரை	2 தெச — 1
10	d	16. 15 & 17. 24 வரை	— 1. 29	17. 24 & 18. 18 வரை	— 2
11	e	— 18. 18	— 2	— 19. 24 வரை	— 3
12	f	— 19. 24	— 3. 22 வரை	— 21. 15 வரை	1 தீமோ. 1. 18 வரை
13	g	— 23. 24 வரை	— 3. 22	— 24	— 1. 18. & 2
14	A	1 ராஜா — 1. 28 வரை	— 4. 31 வரை	1 ராஜா 1.28-49 வரை	— 3
15	b	1 நாளா — 29. 10	— 4. 31	— 3	— 4
16	c	1 ராஜா — 4. 20	— 5. 24 வரை	— 5	— 5
17	d	— 6. 15 வரை	— 5. 24	— 8. 22 வரை	— 6
18	e	— 8. 22-54 வரை	— 6. 22 வரை	8. 54 & 9. 10 வரை	2 தீமோ — 1
19	f	டன்ஸ்டன், A. Bp.			
		1 ராஜா — 10	— 6. 22-41 வரை	— 11. 26 வரை	— 2
20	g	— 11. 26	— 6. 41	— 12. 25 வரை	— 3
21	A	— 12. 25 & 13. 11 வ	— 7. 25 வரை	— 13. 11	— 4
22	b	— 14. 21 வரை	— 7. 25	15. 25 & 16. 8 வரை	தீத் — 1
23	c	— 16. 8	— 8. 31 வரை	— 17	— 2
24	d	— 18. 17 வரை	— 8. 31	— 18. 17	— 3
25	e	— 19	— 9. 39 வரை	— 21	பிலேமோன் நிருபம்.
26	f	அகுஸ்தீன், A. Bp.			
		1 ராஜா — 22. 41 வரை	9. 39 & 10. 22 வரை	2 ராஜா — 1	எபி — 1
27	g	கனம்: பீட், Presb.			
		2 ராஜா — 2	— 10. 22	— 4. 8	— 2 & 3. 7 வரை
28	A	— 5	— 11. 17 வரை	— 6. 24 வரை	3. 7 & 4. 14 வரை
28	b	— 6. 24	— 11. 17-47 வரை	— 7	— 4. 14 & 5
30	c	— 8. 16 வரை	11. 47 & 12. 20 வரை	— 9	— 6
31	d	— 10. 18 வரை	— 12. 20	— 10.18	— 7

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

ஜூன்மீ 30 நாட்கள்.

		காலஜெபம்.		மாலஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	e	நிக்கோமேத். P&M			
		2 ராஜா — 13	யோ — 13. 21 வரை	2 ராஜா — 17.24 வரை	எபி — 8
2	f	— 17. 24	— 13. 21	2 நாளா — 12	— 9
3	g	2 நாளா — 13	— 14	— 14	— 10. 19 வரை
4	A	— 15	— 15	— 16 & 17. 14 வரை	— 10.19
5	b	பொனிப்பாஸ், Bp.			
		2 நாளா — 19	— 16. 16 வரை	— 20. 31 வரை	— 11. 17 வரை
6	c	— 20. 31 & 21	— 16. 16	— 22	— 11. 17
7	d	— 23	— 17	— 24	— 12
8	e	— 25	— 18. 28 வரை	— 26 & 27	— 13
9	f	— 28	— 18.28	2 ராஜா — 18.9 வரை	யாக் — 1
10	g	— 29. 3-21 வரை	— 19. 25 வரை	2 நாளா — 30 & 31. 1	— 2
11	A	பரி. அப். பர்னபாவின் திருநாள்.	—	—	—
12	b	2 ராஜா — 18.13	— 19.25	2 ராஜா — 19. 20 வரை	யாக் — 3
13	c	— 19. 20	— 20. 19 வரை	— 20	— 4
14	d	ஏசா. — 38.9-21 வரை	— 20.19	2 நாளா — 33	— 5
15	e	2 ராஜா — 22	— 21	2 ராஜா — 23. 21 வரை	1 பேது. — 1.22 வரை
16	f	23. 21 & 24. 8 வரை	அப் — 1	24. 8 & 25- 8 வரை	1. 22 & 2. 11 வரை
17	g	பரி. அல்பான், M.			
		2 ராஜா — 25. 8	— 2. 22 வரை	எஸ்ரு — 1 & 3	2. 11 & 3. 8 வரை
18	A	எஸ்ரு — 4	— 2. 22	— 5	— 3. 8 & 4. 7 வரை
19	b	— 7	— 3	— 8. 15	— 4. 7
20	c	எட்வார்ட் ராஜாவின்மறுஅடக்கம்.			
		எஸ்ரு — 9	— 4. 32 வரை	— 10. 20 வரை	— 5
21	d	நெகே — 1	4. 32 & 5. 17 வரை	நெகே — 2	2 பேது — 1
22	e	— 4	— 5. 17	— 5	— 2
23	f	உபவாசம்.			
		— 6 & 7. 5 வரை	— 6	— 7. 73 & 8	— 3
24	g	பரி. யோவான் ஸ்நானன் பிறந்தநாள்.	—	—	—
25	A	நெகே — 13. 15 வரை	அப் — 7. 35 வரை	நெகே — 13. 15	1 யோ — 1
26	b	எஸ்தர் — 1	— 7. 35 & 8. 5 வரை	எஸ்தர் — 2. 15 & 3	— 2. 15 வரை
27	c	— 4	— 8.5–26 வரை	— 5	— 2. 15
28	d	உபவாசம்.			
		எஸ்தர் — 6	— 8. 26	— 7	— 3. 16 வரை
29	e	பரி. அப். பேதுருவின் திருநாள்	—	—	—
30	f	யோபு — 1	அப் — 9. 23 வரை	யோபு — 2	1 யோ.3.16 & 4. 7 வ

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

ஜூலைமீ 31 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	g	யோபு—— 3	அப்——9. 23	யோபு——4	1 யோ —— 4. 7
2	A	பரி. கன்னிமரியாள் சந்திக்கப்போனது			
		யோபு ——5	—— 10. 24 வரை	—— 6	—— 5
3	b	—— 7	——10.24	—— 9	2 யோவான் நிருபம்.
4	c	பரி. மர்த்தீனின் மறு அடக்கம்.			
		யோபு——10	——11	——11	3 யோவான் நிருபம்.
5	d	——12	——12	——13	யூதா நிருபம்.
6	e	——14	—— 13. 26 வரை	——16	மத்.——1. 18
7	f	——17	—— 13. 26	——19	—— 2
8	g	——21	——14	——22. 12-29 வரை	—— 3
9	A	——23	—— 15. 30 வரை	——24	——4. 23 வரை
10	b	——25 & 26	15. 30 & 16. 16 வரை	——27	4. 23 & 5. 13 வரை
11	c	——28	—— 16. 16	——29 & 30. 1	——5. 13–33 வரை
12	d	—— 30. 12–27 வரை	—— 17. 16 வரை	—— 31. 13	——5. 33
13	e	——32	—— 17. 16	—— 38. 39 வரை	——6. 19 வரை
14	f	—— 38. 39 & 39	—— 18. 24 வரை	——40	6. 19 & 7. 7 வரை
15	g	சவிதன், Bp.			
		யோபு——41	18. 24 & 19. 21 வரை	——42	——7.7
16	A	சீநி—— 1. 20 வரை	—— 19. 21	சீநி——1. 20	—— 8. 18 வரை
17	b	—— 2	——20. 17 வரை	——3. 27 வரை	——8. 18
18	c	—3. 27 & 4. 20 வரை	—— 20. 17	4. 20 & 5. 15 வரை	—— 9–18 வரை
19	d	——5. 15	——21. 17 வரை	——6. 20 வரை	—— 9-18
20	e	மருகிருதா, V.&M.			
		சீநி—— 7	—— 21. 17-37 வரை	—— 8	—— 10. 24 வரை
21	f	—— 9	21. 37 & 22. 23 வரை	——10.16	—— 10. 24
22	g	பரி. மக்தலேனு மரியாள்.			
		சீநி—— 11. 15 வரை	22. 23 & 23. 12 வரை	——11.15	——11
23	A	—— 12. 10	—— 23. 12	——13	—— 12. 22 வரை
24	b	உபவாசம்.			
		சீநி. 14. 9–28 வரை	——24	14. 28 & 15. 18 வரை	—— 12. 22
25	c	பரி. அப். யாக்கோபின் திருநாள்.	——	——	—— 13. 24 வரை
26	d	பரி. அன்னுள்.			
		சீநி—— 15. 18	அப்——25	சீநி—— 16. 20 வரை	— 13. 24-53 வரை
27	e	16. 31 & 17. 18 வரை	——26	——18.10	13. 53 & 14. 13 வரை
28	f	—— 19. 13	——27	—— 20. 23 வரை	——14. 13
29	g	—— 21. 17 வரை	—— 28. 17 வரை	—— 22. 17 வரை	—— 15. 21 வரை
30	A	—— 23. 10	—— 28. 17	—— 24. 21	—— 15. 21
31	b	——25	ரோ—— 1	—— 26. 21 வரை	——16. 24 வரை

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

ஆகஸ்துமீ 31 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	c	Lammas Day.			
		சீநி—— 27. 23 வரை	ரோ—— 2. 17 வரை	சீநி—— 28. 15 வரை	மத். 16. 24 & 17. 14 வ
2	d	—— 30. 18 வரை	——2. 17	—— 31. 10	—— 17. 14
3	e	பிரசங்கி—— 1	—— 3	பிரசங்கி——2.12 வரை	—— 18. 21 வரை
4	f	—— 3	—— 4	—— 4	18. 21 & 19.3 வரை
5	g	—— 5	—— 5	—— 6	——19. 3-27 வரை
6	A	கர்த்தர் மறுரூபமான நாள்.			
		பிரசங்கி—— 7	—— 6	—— 8	19. 27 & 20.17 வரை
7	b	இயேசுவின் திருநாம நாள்.			
		பிரசங்கி—— 9	—— 7	——11	—— 20. 17
8	c	—— 12	——8. 18 வரை	எரே——1	—— 21. 23 வரை
9	d	எரே——2. 14 வரை	——8. 18	——5. 19 வரை	—— 21. 23
10	e	பரி. லாரென்ஸ், M.			
		எரே—— 5. 19.	——9. 19 வரை	——6. 22 வரை	——22. 15 வரை
11	f	——7. 17 வரை	—— 9. 19	—— 8. 4	—22. 15-41 வரை
12	g	——9. 17 வரை	——10	—— 13. 8-24 வரை	22.41 & 23.13 வரை
13	A	——15	—— 11. 25 வரை	—— 17. 19 வரை	—— 23. 13
14	b	—— 18. 18 வரை	—— 11. 25	——19	—— 24. 29 வரை
15	c	——21	——12	—— 22. 13 வரை	—— 24. 29
16	d	—— 22. 13	——13	—— 23. 16 வரை	——25. 31 வரை
17	e	——24	——14 & 15. 8 வரை	—— 25. 15 வரை	—— 25. 31
18	f	——26	—— 15. 8	——28	—— 26. 31 வரை
19	g	—— 29. 4-20 வரை	——16	——30	— 26. 31-57 வரை
20	A	—— 31. 15 வரை	1 கொரி——1. 26 வரை	——31. 15-38 வரை	—— 26. 57
21	b	—— 33. 14 வரை	—— 1. 26 & 2	—— 33. 14	—— 27. 27 வரை
22	c	——35	—— 3	—— 36. 14 வரை	—27. 27-57 வரை
23	d	உபவாசம்.			
		எரே——36. 14	——4. 18 வரை	—— 38. 14 வரை	—— 27. 57
24	e	பரி. அப். பர்த்தொலோமேயுவின் திருநாள்.	——4. 18 & 5	——	—— 28
25	f	எரே——38. 14	—— 6	——39	மாற்கு 1. 21 வரை
26	g	—— 50. 21 வரை	——7. 25 வரை	—— 51. 54	—— 1. 21
27	A	எசேக்—— 1. 15 வரை	—— 7. 25	எசேக்——1. 15	—— 2. 23 வரை
28	b	பரி. அகுஸ்தீன், B.			
		எசேக்—— 2	—— 8	——3. 15 வரை	—2. 23 & 3.13 வரை
29	c	பரி. யோவான்ஸ்நானன் சிரச்சேதம்.			
		எசேக்——3. 15	—— 9	—— 8	—— 3. 13
30	d	—— 9	—— 10 & 11. 1	——11.14	——4. 35 வரை
31	e	—— 12. 17	—— 11. 2-17 வரை	—— 13. 17 வரை	—4. 35 & 5.21 வரை

§

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

செப்டெம்பர்மீ 30 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	f	ஜைலஸ். Abbot.			
		எசேக் — 13. 17	1 கொரி — 11. 17	எசேக் — 14. 12 வரை	மாற்கு — 5. 21
2	g	— 14. 12	— 12. 28 வரை	— 16. 44	— 6. 14 வரை
3	A	— 18. 19 வரை	— 12. 28 & 13	— 18. 19	— 6. 14-30 வரை
4	b	— 20. 18 வரை	— 14. 20 வரை	— 20. 18-33 வரை	— 6. 30
5	c	— 20. 33-44 வரை	— 14.20	— 22. 23	— 7. 24 வரை
6	d	— 24. 15	— 15. 35 வரை	— 26	— 7.24 & 8.10 வரை
7	e	யுனர்கஸ், Bp.			
		எசேக் — 27. 26 வரை	— 15. 35	— 27. 26	— 8.10 & 9. 2 வரை
8	f	கன்னி மரியாள் பிறப்பு.			
		எசேக் — 28. 20 வரை	— 16	— 31	— 9. 2-30 வரை
9	g	— 32. 17 வரை	2 கொரி — 1. 23 வரை	— 33. 21 வரை	— 9. 30
10	A	— 33. 21	— 1.23 & 2. 14 வரை	— 34. 17 வரை	— 10. 32 வரை
11	b	— 34. 17	— 2. 14 & 3	— 36. 16-33 வரை	— 10. 32
12	c	— 37. 15 வரை	— 4	— 37.15	— 11. 27 வரை
13	d	— 47. 13 வரை	— 5	தானி — 1	11. 27 & 12. 13 வரை
14	e	திருச்சிலுவை நாள்			
		தானி — 2. 24 வரை	— 6 & 7. 1	— 2. 24	— 12.13-35 வரை
15	f	— 3	— 7. 2	— 4. 19 வரை	12.35 & 13.14 வரை
16	g	— 4. 19	— 8	— 5. 17 வரை	— 13. 14
17	A	லாம்பர்ட், Bp.			
		தானி — 5. 17	— 9	— 6	— 14. 27 வரை
18	b	— 7. 15 வரை	— 10	— 7. 15	— 14. 27-53 வரை
19	c	— 9. 20 வரை	— 11. 30 வரை	— 9. 20	— 14. 53
20	d	உபவாசம்.			
		தானி — 10. 20 வரை	— 11.30 & 12.14 வரை	— 12	— 15. 42 வரை
21	e	பரி. அப். மத்தேயுவின் திருநாள்.	— 12. 14 & 13	—	— 15. 42 & 16
22	f	ஓசியா — 2. 14	கலா — 1	ஓசியா — 4. 13 வரை	லூக் — 1. 26 வரை
23	g	— 5. 8 & 6. 7 வரை	— 2	— 7. 8	— 1. 26-57 வரை
24	A	— 8	— 3	— 9	— 1. 57
25	b	— 10	— 4. 21 வரை	— 11 & 12. 7 வரை	— 2. 21 வரை
26	c	பரி. சிப்பிரியன், Abp.			
		ஓசியா — 13. 15 வரை	— 4. 21 & 5. 13 வரை	— 14	— 2. 21
27	d	யோவேல் — 1	— 5. 13	யோவேல் — 2. 15 வரை	— 3. 23 வரை
28	e	— 2. 15-28 வரை	— 6	— 2. 28 & 3. 9 வரை	— 4. 16 வரை
29	f	பரி. மிகாவேல்ஷ	—	—	—
30	g	பரி. ஜெரோம்.			
		யோவேல் — 3. 9	எபேசி — 1	ஆமோஸ் 1. & 2. 4 வரை	— 4. 16

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

அக்டோபர்மீ 31 நாட்கள்.

		காலைஜெபம்.		மாலைஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்.	1. பாடம்.	2. பாடம்.
1	A	ரிமிஜியஸ், Bp.			
		ஆமோ. 2.4 & 3. 9 வரை	எபேசி — 2	ஆமோஸ் — 4. 4	லூக் — 5. 17 வரை
2	b	— 5. 18 வரை	— 3	— 5. 18 & 6. 9 வரை	— 5. 17
3	c	— 7	— 4. 25 வரை	— 8	— 6. 20 வரை
4	d	— 9	4. 25 & 5. 22 வரை	ஒபதியா.	— 6. 20
5	e	யோவே — 1	5. 22 & 6. 10 வரை	யோனா — 2	— 7. 24 வரை
6	f	விசுவாசம், V. & M.			
		யோவே — 3	— 6. 10	— 4	— 7. 24
7	g	மீகா — 1. 10 வரை	பிலிப் — 1	மீகா — 2	— 8. 26 வரை
8	A	— 3	— 2	— 4	— 8. 26
9	b	பரி. டெனிஸ், B & M			
		மீகா — 5	— 3	— 6	— 9. 28 வரை
10	c	— 7	— 4	நாகூம் — 1	— 9. 28-51 வரை
11	d	நாகூம் — 2	கொலோ. 1. 21 வரை	— 3	9. 51 & 10.17 வரை
12	e	ஆபகூக் — 1	— 1. 21 & 2. 8 வரை	ஆபகூக் — 2	— 10.17
13	f	எட்வார்ட் ராஜவின் மறு அடக்கம்.			
		ஆபகூக் — 3	— 2. 8	செப் — 1.14 வரை	— 11. 29 வரை
14	g	செப். 1.14 & 2.4 வரை	— 3. 18 வரை	— 2. 4	— 11. 29
15	A	— 3	— 3. 18 & 4	ஆகாய் — 1	— 12. 35 வரை
16	b	ஆகாய் — 2. 10 வரை	1 தெச — 1	— 2. 10	— 12. 35
17	c	எத்தல்டிரிடா, Vir			
		சகரி — 1. 18 வரை	— 2	சகரி — 1. 18 & 2	— 13. 18 வரை
18	d	பரி. லூக்கா. சுவி. திருநாள்.	— 3	—	— 13. 18
19	e	சகரி — 3	— 4	— 4	— 14.25 வரை
20	f	— 5	— 5	— 6	14.25 & 15. 11 வரை
21	g	— 7	2 தெச — 1	— 8. 14 வரை	— 15. 11
22	A	— 8. 14	— 2	— 9. 9	— 16
23	b	— 10	— 3	— 11	— 17. 20 வரை
24	c	— 12	1 தீமோ — 1. 18 வரை	— 13	— 17. 20
25	d	கிறிஸ்பின், M.			
		சகரி — 14	— 1. 18 & 2	மல்கி — 1	— 18. 31 வரை
26	e	மல்கி — 2	— 3	— 3. 13 வரை	18. 31 & 19.11 வரை
27	f	உபவாசம்.			
		மல்கி — 3. 13 & 4	— 4	ஞானம் — 1	— 19. 11-28 வரை
28	g	பரி. சீமோன், யூதா அப். திருநாள்.	— 5	—	— 19. 28
29	A	ஞானம் — 2	— 6	— 4. 7	— 20. 27 வரை
30	b	— 6. 22 வரை	2 தீமோ — 1	— 6. 22 & 7.15 வரை	20. 27 & 21. 5 வரை
31	c	உபவாசம்.			
		ஞானம் — 7. 15	— 2	— 8. 19 வரை	— 21. 5

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

நவெம்பர்மீ 30 நாட்கள்.

		காலஜெபம்.		மாலஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்,	1. பாடம்.	2. பாடம்.
1	d	சகல பரிசுத்த வான்களின் திரு.	—	—	—
2	e	ஞானம்—9	2 தீமோ—3	ஞானம்—11. 15 வரை	தூக்—22. 31 வரை
3	f	11. 15 & 12. 3 வரை	—4	—17	—22. 31-54 வரை
4	g	சீராக்—1. 14 வரை	தீத்—1	சீராக்—2	—22. 54
5	A	—3. 17—30 வரை	—2	—4. 10	—23. 26 வரை
6	b	லியோனர்ட், C.			
		சீராக்—5	—3	—7. 27	—23. 26-50 வரை
7	c	—10. 18	பிலேமோன் நிருபம்.	—14. 20 வரை	23. 50 & 24. 13 வரை
8	d	—15. 9	எபி—1	—16. 17	—24. 13
9	e	—18. 15 வரை	—2 & 3. 7 வரை	—18. 15	யோ—1. 29 வரை
10	f	—19. 13	—3. 7 & 4. 14 வரை	—22. 6-24 வரை	—1. 29
11	g	பரி. மர்த்தீன், Bp.			
		சீராக்—24. 24 வரை	—4. 14 & 5	—24. 24	—2
12	A	—33. 7–23 வரை	—6	—34. 15	—3. 22 வரை
13	b	பிரிட்டியஸ், Bp.			
		சீராக்—35	—7	—37. 8-19 வரை	—3. 22
14	c	—39. 13 வரை	—8	—39. 13	—4. 31 வரை
15	d	மெக்கூட்டஸ், Bp.			
		சீராக்—41. 14 வரை	—9	—42. 15	—4. 31
16	e	—44. 16 வரை	—10. 19 வரை	—50. 25 வரை	—5. 24 வரை
17	f	இயூ, Bp.			
		சீராக்—51. 10	—10. 19	பாருக்—4. 21 வரை	—5. 24
18	g	பாருக்—4. 36 & 5	—11. 17 வரை	எசா—1. 21 வரை	—6. 22 வரை
19	A	எசா—1. 21	—11. 17	—2	—6. 22-41 வரை
20	b	எட்மன்ட், King.			
		எசா—3. 16 வரை	—12	—4. 2	—6. 41
21	c	—5. 18 வரை	—13	—5. 18	—7. 25 வரை
22	d	சிசிலியா, V. & M.			
		எசா—6	யாக்—1	—7. 17 வரை	—7. 25
23	e	பரி. கிலமெந்து, B.			
		எசா—8. 5-18 வரை	—2	—8. 18 & 9. 8 வரை	—8. 31 வரை
24	f	—9. 8 & 10. 5 வரை	—3	—10. 5-20 வரை	—8. 31
25	g	கத்தரீனாள் V. & M.			
		எசா—10. 20	—4	—11. 10 வரை	—9. 39 வரை
26	A	—11. 10	—5	—12	9. 39 & 10. 22 வரை
27	b	—13	1 பேது—1. 22 வரை	—14. 24 வரை	—10. 22
28	c	—17	1. 22 & 2. 11 வரை	—18	—11. 17 வரை
29	d	உபவாசம்.			
		எசா—19. 16 வரை	—2. 11 & 3. 8 வரை	—19. 16	—11. 17-47 வரை
30	e	பரி. அப். அந்திரேயாவின் திருநாள்.	—	—	—

திருநாட்களையும் வாசிக்கவேண்டிய பாடங்களையும் காட்டிய

தேதி அட்டவணை.

டிசெம்பர்மீ 31 நாட்கள்.

		காலஜெபம்.		மாலஜெபம்.	
		1. பாடம்.	2. பாடம்	1. பாடம்.	2. பாடம்.
1	f	எசா—21. 13 வரை	1 பேது 3. 8 & 4. 7 வரை	எசா—22. 15 வரை	யோ 11. 47 & 12. 20 வ
2	g	—22. 15	—4. 7	—23	—12. 20
3	A	—24	—5	—25	—13. 21 வரை
4	b	—26. 20 வரை	2 பேது—1	—26. 20 & 27	—13. 21
5	c	—28. 14 வரை	—2	—28. 14	—14
6	d	நிக்கொலாஸ், Bp.			
		எசா—29. 9 வரை	—3	—29. 9	—15
7	e	—30. 18 வரை	1 யோ—1	—30. 18	—16. 16 வரை
8	f	கன்னிமரியாள் உற்பவித்தநாள்.			
		எசா—31	—2. 15 வரை	—32	—16. 16
9	g	—33	—2 15	—34	—17
10	A	—35	—3. 16 வரை	—40. 12 வரை	—18. 28 வரை
11	b	—40. 12	—3. 16 & 4. 7 வரை	—41. 17 வரை	—18. 28
12	c	—41. 17	—4. 7	—42. 18 வரை	—19. 25 வரை
13	d	அசி, Virg. & Mar.			
		எசா. 42. 18 & 43. 8 வரை	—5	—43. 8	—19. 25
14	e	—44. 21 வரை	2 யோவான் நிருபம்.	44. 21 & 45. 8 வரை	—20. 19 வரை
15	f	—45. 8	3 யோவான் நிருபம்.	—46	—20. 19
16	g	O Sapientia.			
		எசா—47	யூதா நிருபம்.	—48	—21
17	A	—49. 13 வரை	வெளி—1	—49. 13	வெளி—2. 18 வரை
18	b	—50	—2. 18 & 3. 7 வரை	—51. 9 வரை	—3. 7
19	c	—51. 9	—4	—52. 13 வரை	—5
20	d	உபவாசம்.			
		எசா—52. 13 & 53	—6	—54	—7
21	e	பரி. அப். தோமாவின் திருநாள்.	—	—	—
22	f	எசா—55	—8	—56	—10
23	g	—57	—11	—58	—12
24	A	உபவாசம்.			
		எசா—59	—14	—60	—15
25	b	கிறிஸ்துவின் ஜநந திருநாள்.	—	—	—
26	c	பரி. ஸ்தேவான் ரத்தசாட்சித் திரு.	—	—	—
27	d	ப. அப். யோவான் சுவி. திருநாள்.	—	—	—
28	e	குற்றமில்லாப்பாலகர் திருநாள்.	—16	—	—18
29	f	எசா—61	—19. 11 வரை	—62	—19. 11
30	g	—63	—20	—64 & 65. 8 வரை	—21. 15 வரை
31	A	சில்வெஸ்தர், Bp.			
		எசா—65. 8	21. 15 & 22. 6 வரை	—66	—22. 6

பின்வரும் வருஷங்களில் தேதிமாறிவருகிற திருநாட்களைக் காட்டிய

அட்டவணை.

இறீஸ்தாப்த வருஷம்.	ஞாயிறு எழுத்து.	பிரசன்னத் திருநாட்களுக்குப் பின்வரும் ஞாயிறு இத்தனை.	செப்துவசெசிமா ஞாயிறு.	லெந்து நாட்களில் முதல் நாள்.	உயிர்த்தெழுந்த திருநாள்.	பரத்துக்கேறின திருநாள்.	பரிசுத்த ஆவியின் திருநாள்.	திரித்துவ ஞாயிறுக்குப் பின் வரும் ஞாயிறு இத்தனை.	அட்வெந்து நாட்களில் முதல் ஞாயிறு.
1873	E	4	பெப். 9	பெப். 26	ஏப். 13	மே. 22	ஜூன். 1	24	நவெ. 30
1874	D	3	— 1	— 18	— 5	— 14	மே. 24	25	— 29
1875	C	2	ஜனு. 24	— 10	மார். 28	— 6	— 16	26	— 28
1876	BA	5	பெப். 13	மார். 1	ஏப். 16	— 25	ஜூன். 4	24	டிசெ. 3
1877	G	3	ஜனு. 28	பெப். 14	— 1	— 10	மே. 20	26	— 2
1878	F	5	பெப். 17	மார். 6	— 21	— 30	ஜூன். 9	23	— 1
1879	E	4	— 9	பெப். 26	— 13	— 22	— 1	24	நவெ. 30
1880	DC	2	ஜனு. 25	— 11	மார். 28	— 6	மே. 16	26	— 28
1881	B	5	பெப். 13	மார். 2	ஏப். 17	— 26	ஜூன். 5	23	— 27
1882	A	4	— 5	பெப். 22	— 9	— 18	மே. 28	25	டிசெ. 3
1883	G	2	ஜனு. 21	— 7	மார். 25	— 3	— 13	27	— 2
1884	FE	4	பெப். 10	— 27	ஏப். 13	— 22	ஜூன். 1	24	நவெ. 30
1885	D	3	— 1	— 18	— 5	— 14	மே. 24	25	— 29
1886	C	6	— 21	மார். 10	— 25	ஜூன் 3	ஜூன் 13	22	— 28
1887	B	4	— 6	பெப். 23	— 10	மே. 19	மே. 29	24	— 27
1888	AG	3	ஜனு. 29	— 15	— 1	— 10	— 20	26	டிசெ. 2
1889	F	5	பெப். 17	மார். 6	— 21	— 30	ஜூன். 9	23	— 1
1890	E	3	— 2	பெப். 19	— 6	— 15	மே. 25	25	நவெ. 30
1891	D	2	ஜனு. 25	— 11	மார். 29	— 7	— 17	26	— 29
1892	CB	5	பெப். 14	மார். 2	ஏப். 17	— 26	ஜூன். 5	23	— 27
1893	A	3	ஜனு. 29	பெப். 15	— 2	— 11	மே. 21	26	டிசெ. 3
1894	G	2	— 21	— 7	மார். 25	— 3	— 13	27	— 2
1895	F	4	பெப். 10	— 27	ஏப். 14	— 23	ஜூன். 2	24	— 1
1896	ED	3	— 2	— 19	— 5	— 14	மே. 24	25	நவெ. 29

TABLES AND RULES FOR THE MOVEABLE AND IMMOVEABLE FEASTS; TOGETHER WITH THE DAYS OF FASTING AND ABSTINENCE, THROUGH THE WHOLE YEAR.

வருஷம் முழுவதும் தேதிமாறிவருகிற திருநாட்களையும், தேதிமாருமல் வருகிற திருநாட்களையும், உபவாச நாட்களையும், விரதங்களையும் குறிக்கும் சட்டங்களும் அட்டவணைகளுமாவன:

தேதிமாறிவருகிற பண்டிகைகளும் திருநாட்களும் உண்டாகும் காலங்களை அறிந்துகொள்ளும்படியான சட்டமாவது:

ஈஸ்தர் பண்டிகை என்னும் உயிர்த்தெழுந்த திருநாள் விசேஷித்த திருநாளானபடியினுலும், தேதிமாறிவருகிற மற்றத் திருநாட்கள் எல்லாம் அந்தத் திருநாளைப்பற்றியே குறிக்கப்படுகிறபடியினுலும், உயிர்த்தெழுந்த திருநாள் வரும் முறையைக் குறிக்கும்படி வழங்கிவருகிற சட்டம் என்னவென்ருல்: மார்ச்சுமாசம் இருபத்தோராம் தேதியிலாவது, அதற்குப் பின்னுவது உண்டாகும் பௌர்ணிமியாகிய பூரணசந்திரனுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமையானது உயிர்த்தெழுந்த திருநாளாகும். பௌர்ணிமி ஞாயிற்றுக்கிழமையில் வருமாஞல் அதற்கு மறு ஞாயிறு உயிர்த்தெழுந்த திருநாளாகக் கொண்டாடப்படும்.

பரிசுத்த அந்திரேயாவின் திருநாளுக்குக் கிட்டி முந்தியாவது பிந்தியாவது வரும் ஞாயிறு அட்வெந்தென்னும் ஞாயிருகும்.

செப்துவசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஒன்பது வாரத்துக்கு முன்வரும்.
செக்சசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு எட்டு வாரத்துக்கு முன்வரும்.
கின்குவசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு எழு வாரத்துக்கு முன்வரும்.
லெந்தென்னும் நாட்களில் முதலாம் ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஆறுவாரத்துக்கு முன்வரும்.
விண்ணப்ப ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஐந்து வாரத்துக்குப் பின்வரும்.
பரத்துக்கேறின திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு நாற்பது நாளைக்குப் பின்வரும்.
பரிசுத்தஆவியின் திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு எழுவாரத்துக்குப் பின்வரும்.
திரித்துவத் திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு எட்டுவாரத்துக்குப் பின்வரும்.

வருஷ முழுவதும் இங்கிலாந்து திருச்சபையில் ஆசரிக்கவேண்டிய பண்டிகைகளின் அட்டவணையாவது:

வருஷ முழுவதும் வருகிற ஞாயிற்றுக்கிழமைகள்.
நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விருத்தசேதனத் திருநாள்.
பிரசன்னத் திருநாள்.
பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் சுத்திகரிப்புத் திருநாள்.
பரி. மத்தியா அப்போஸ்தலன் திருநாள்.
பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் மங்களவாக்குத் திருநாள்.
பரி. மாற்கு சுவிசேஷகன் திருநாள்.
பரி. பிலிப்பு, யாக்கோபு, அப்போஸ்தலரின் திருநாள்.
நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
பரி. பர்னபாவின் திருநாள்.
பரி. யோவான்ஸ்நானன் பிறந்த திருநாள்.
பரி. பேதுரு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. யாக்கோபு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. பர்த்தொலோமேயு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. மத்தேயு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.
பரி. லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
பரி. சீமோன், யூதா, அப்போஸ்தலரின் திருநாள்.
சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
பரி. அந்திரேயா அப்போஸ்தலன் திருநாள்.
பரி. தோமா அப்போஸ்தலன் திருநாள்.
நமது கர்த்தருடைய ஜநநதிருநாள்.
பரி. ஸ்தேவான் இரத்தச்சாட்சியின் திருநாள்.
பரி. யோவான் சுவிசேஷகன் திருநாள்.
குற்றமில்லாத பாலகர் திருநாள்.
உயிர்த்தெழுந்த பண்டிகை வாரத்தில் வரும் திங்கள், செவ்வாய்.
பரிசுத்த ஆவியின் பண்டிகை வாரத்தில் வரும் திங்கள், செவ்வாய்.

வருஷமுழுவதும் கைக்கொள்ளவேண்டிய விழிப்பு, உபவாசம், விரதம் முதலான திருநாட்களின் அட்டவணையாவது:

கர்த்தருடைய ஜநநதிருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் சுத்திகரிப்புத் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் மங்களவாக்குத் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரத்துக்கேறின திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரிசுத்த ஆவியின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. மத்தியாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. யோவான்ஸ்நானனுடைய திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. பேதுருவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. யாக்கோபின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. பர்த்தொலோமேயுவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. மத்தேயுவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. சீமோன், யூதாவின் திருநாட்களுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. அந்திரேயாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
பரி. தோமாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.
சகல பரிசுத்தவான்களின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

கவனிப்பு: இந்த அட்டவணையில் அடங்கிய யாதொரு திருநாள் திங்கட்கிழமையில் வருமானால் விழிப்பு, உபவாசம், விரதம் முதலானது அதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமை சாயங்காலத்தில் அல்ல, அதற்கு முந்தின சனிக்கிழமை சாயங்காலத்தில் கைக்கொள்ளப்படவேண்டும்.

உபவாசம் அல்லது விரதங்காக்கும் நாட்களாவன:

I. லெந்தென்னும் நாற்பது நாளும்,

II. 1. லெந்தென்னும் முதலாம் ஞாயிறுக்குப் பின்னும்,
2. பரிசுத்த ஆவியின் பண்டிகைக்குப் பின்னும்,
3. செப்டெம்பர் மாசம் பதினான்காம் தேதிக்குப் பின்னும்,
4. டிசெம்பர் மாசம் பதின்மூன்றாம் தேதிக்குப் பின்னும் வரும் புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் வருஷத்தில் நான்கு முறை வழக்கமாய் குருப்பட்டம் கொடுக்கப்படும் எம்பர் என்னும் நாட்களும்,

III. திரு வியாழம் என்னப்படும் கர்த்தர் பரத்துக்கேறின திருநாளுக்கு முன்வரும் திங்கள், செவ்வாய், புதன் என்னும் விண்ணப்ப நாட்களும்,

IV. கிறிஸ்துவின் ஜநநதிருநாள் தவிர, வருஷமுழுவதும் வரும் வெள்ளிக்கிழமைகளும், உபவாசநாட்களாம்.

THE ORDER FOR MORNING AND EVENING PRAYER DAILY TO BE SAID AND USED THROUGHOUT THE YEAR.

வருஷ முழுவதும் சொல்லவும் வழங்கவும் வேண்டிய காலை மாலை ஜெப ஒழுங்கு.

காலை மாலை ஜெபம் ஆலயத்திலாவது கோவிலிலாவது நற்கருணை ஸ்தானத்திலாவது வழக்கமான இடத்திலே சொல்லப்படவேண்டும். அது வேறே இடத்தில் சொல்லப்படவேண்டுமென்று அத்தியட்சர் தீர்மானிப்பாரானால், அவர் கட்டளைப்படி செய்யவேண்டும். நற்கருணை ஸ்தானம் முன் இருந்தபடியே இருக்கவேண்டும்.

மேலும் கவனிக்கவேண்டியதென்னவென்றால், ஆறாம் எட்வார்ட் ராஜா அரசாண்ட இரண்டாம் வருஷத்தில் பார்லமெந்து சங்கத்தார் தீர்மானித்தபடியே தேவாலய அலங்கரிப்புக்கும் தேவ பணிவிடை செய்யும் குருமாருடைய அலங்கரிப்புக்கும் வேண்டியவைகள் எல்லாம் இங்கிலாந்து சபையில் நடந்துவந்த வழக்கத்தின்படியே இப்பொழுதும் நடந்துவரவேண்டும்.

THE ORDER FOR

MORNING PRAYER,

DAILY THROUGHOUT THE YEAR.

வருஷமுழுவதும் நாள்தோறும்

செய்யவேண்டிய

காலைஜெப ஒழுங்கு.

¶ காலைஜெபம் தொடங்கும்போது, குருவானவர் பின்வரும் வேதவாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்த சத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப்பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.

துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். எசேக். 18. 27.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங். 51. 3.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங். 51. 9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங். 51. 17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே. 2. 13.

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி. 9. 9, 10.

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். எரே. 10. 24. சங். 6. 1.

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி. மத். 3. 2.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூ. 15. 18, 19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங். 143. 2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பரி. 1 யோ. 1. 8, 9.

பிரியமான சகோதரரே, நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக்கொள்ளாமல், பணிவும் தாழ்மையும் துக்கமும் கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோடே அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடவேண்டுவதுமன்றி; அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக்கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ்செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம்பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடிவந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும் தாழ்ந்த சத்தத்தோடும் பரமகிருபாசனத்தண்டையில் என்னுடனேகூடச் சேர்ந்து, நான் சொல்லுகிறபிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சபையாரெல்லாரும் சொல்லவேண்டிய பொதுவான பாவஅறிக்கை.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்து

போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி, நாங்கள் இனி தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசுகிறிஸ்துவினிமித்தம், எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர்மாத்திரம் எழுந்துநின்று கூறவேண்டிய பாவவிமோசனம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவவிமோசனத்தையும் மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆநந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய பரிசுத்தஆவியையும் அருளிச்செய்யவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமேன்.

¶ இவ்விடத்திலும் மற்றெல்லா ஜெபங்களின் முடிவிலும் ஜனங்கள் ஆமென் என்று சொல்லவேண்டும்.

¶ இப்பொழுது குருவானவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தை ஜனங்கள் கேட்கத்தக்கதாய்ச் சொல்லவேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் இப்பொழுதும் தேவாராதனையில் இச்செபம் வழங்குகிற எப்பொழுதும் அவரோடேகூட இதைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவ

தாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது.

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறுமொழி: அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

குரு: தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறுமொழி: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

¶ எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

குரு: கர்த்தரைத் துதியுங்கள்.

மறுமொழி: கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

¶ இப்பொழுது பின்வரும் சங்கீதத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும். ஆனலும், ஈஸ்தர் என்னும் உயிர்த்தெழுந்த திருநாளுக்கு விசேஷித்த கீர்த்தனம் நியமிக்கப்பட்டிருக்கிறதினல், அந்நாளில் இதை வாசிக்கவேண்டியதில்லை. அன்றியும் மாதந்தோறும் (19) தேதியில் இந்தச் சங்கீதத்தை இங்கே வாசியாமல், சங்கீதங்களை வாசிக்கும் முறையிலே வாசிக்கவேண்டும்.

Venite, exultemus Domino.

95. சங்கீதம்.

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி: நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து: சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

கர்த்தரே மகாதேவனும்: எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.

பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது: பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினர்: வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

நம்மை உண்டாக்கின கர்த்தருக்குமுன்பாக: நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடக்கடவோம் வாருங்கள்.

அவர் நம்முடைய தேவன்: நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்: வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து: அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று: என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ பின்பு, குறிக்கப்பட்ட சங்கீதங்கள் முறையே வரும். அன்றியும் வருஷமுழுவதும் வாசிக்கப்படுகிற ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவிலும், மூன்று வாலிபர் கீதம், சகரியாவின் கீதம், கன்னிமரியாளின் கீதம், சிமியோனின் கீதம் (Benedicite, Benedictus, Magnificat, Nunc Dimittis.) என்னும் கீதங்களின் முடிவிலும் சொல்லவேண்டியதாவது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்பொழுது அந்த நாளுக்கென்று விசேஷித்த பாடங்கள் குறித்திராவிட்டால், நாள் அட்டவணைப்படி பழைய ஏற்பாட்டிலிருந்து முதலாம் பாடம் தீர்க்கமாய் உரத்த சத்தத்தோடே வாசிக்கப்படவேண்டும். கூடிவந்திருக்கிற யாவரும் நன்றாய்க் கேட்கத்தக்கதாக, வாசிக்கிறவர் ஜனங்களுக்கு நேராகத் திரும்பிநின்று வாசிக்கவேண்டும். அதற்குப்பின் "தேவனே உம்மைத் துதிக்கிறோம்" என்னும் கீர்த்தனத்தை (Te Deum Laudamus.) வருஷமுழுவதும் நாள்தோறும் வாசிக்க அல்லது பாடவேண்டும்.

¶ கவனிப்பு: ஒவ்வொரு பாடத்துக்குமுன்னும், குருவானவர் இன்ன ஆகமத்திலுள்ள இன்ன அதிகாரத்தை, அல்லது அந்த அதிகாரத்திலுள்ள இன்ன வாக்கியத்தை வாசிக்கிறேன் என்றும், ஒவ்வொரு பாடத்துக்குப்பின்னும் முதலாம் பாடம் அல்லது இரண்டாம் பாடம் முடிந்தது என்றும் சொல்லவேண்டும்.

Te Deum Laudamus.

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மை: பூமண்டலமெல்லாம் வணங்கும்.

தேவதூதர் அனைவோரும்: பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்;

கேரூபின்களும் சேராபின்களும்: தேவரீரை ஓயாமல் புகழ்ந்துபோற்றி,

சேனைகளின் தேவனாகிய கர்த்தரே: நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்;

வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால்: நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமைபொருந்திய கூட்டம்: உம்மைப் போற்றும்.

தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம்: உம்மைப் போற்றும்.

இரத்தச்சாட்சிகளாகிய தைரிய சேனை: உம்மைப் போற்றும்.

அளவில்லாத மகத்துவமுள்ள: பிதாவாகிய தேவரீரையும்,

வணங்கப்படத்தக்க மெய்யான: உம்முடைய ஒரே குமாரனையும்,

தேற்றரவாளனாகிய: பரிசுத்தஆவியையும்,

உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை: பிரஸ்தாபப்படுத்தும்.

கிறிஸ்துவே: தேவரீர் மகிமையின் ராஜா.

நீரே பிதாவினுடைய: நித்திய சுதன்.

நீர் மனிதரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது: கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

நீர் மரணத்தின் கொடுமையை வென்று: விசுவாசிகள் எல்லாருக்கும் மோட்ச ராஜ்யத்தைத் திறந்தீர்.

நீர் பிதாவின் மகிமையிலே: தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக: வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட: உமது அடியாருக்குச் சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

எங்களை நித்திய மகிமையிலே: உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து: உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

அவர்களை ஆண்டுகொண்டு: என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தினம்தினம்: உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

எப்பொழுதும் சதாகாலங்களிலும்: உமது நாமத்தை வணங்குகிறோம்.

ஆண்டவரே, இந்த நாளில் பாவஞ்செய்யாதப்படி: எங்களைக் காத்தருளும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்: எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால்: உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன்: நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

¶ அல்லது பின்வரும் கீதத்தைச் சொல்லவேண்டும்.

Benedicite, Omnia Opera.

கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய தூதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஆகாயவிரிவின்மேலுள்ள ஜலங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய சகல வல்லமைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

சூரிய சந்திரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானத்தின் நட்சத்திரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மழையே, பனியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

தேவனுடைய காற்றுக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அக்கினியே, உஷ்ட்ணமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மாரிகாலமே, கோடைகாலமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மூடுபனியே, ஆலாங்கட்டியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பனிக்கட்டியே, குளிரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

உறைந்த நீரே, உறைந்த மழையே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

இரவே, பகலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஒளியே, இருளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மின்னல்களே, மேகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியானது கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவது.

மலைகளே, குன்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

நீரூற்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

சமுத்திரங்களே, நதிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மகா மச்சங்களே, நீர்வாழும் சகல ஜெந்துக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஆகாயத்துச் சகல பறவைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

காட்டுமிருகங்களே, நாட்டுமிருகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மனுமக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

இஸ்ரவேலர் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவர்கள்.

கர்த்தருடைய ஆசாரியர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அனனியாவே, அசரியாவே, மிசாவேலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ பின்பு முன் வாசித்தபடி புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டாம் பாடத்தை வாசிக்கவேண்டும். அதற்குப்பின் அடியில் கண்டிருக்கிற கீர்த்தனம் வரும். ஆனாலும் இது சில தேதிகளுக்குரிய இரண்டாம் பாடத்திலும், பரிசுத்த யோவான்ஸ்நானனின் திருநாளுக்குரிய சுவிசேஷவாக்கியத்திலும் வாசிக்கப்படுகிறதினால் இங்கே வாசிக்கப்படவேண்டியதில்லை.

Benedictus. பரி. லூ. 1. 68.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு: ஸ்தோத்திரமுண்டாவதாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு: வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை: நினைத்தருளி,

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு: உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்குமுன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று,

அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு: இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்;

ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால்: தாம் சொன்னபடியே,

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு: நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே: நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்: நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும்: அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும்: உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்: அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது இந்தச் சங்கீதத்தைச சொல்லவேண்டும்.

Jubilate Deo. 100. சங்கீதம்.

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்: மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆநந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்: நாம் அவருடைய ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம்.

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து: அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்: அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்பொழுது குருவானவரும் ஜனங்களும் இன்னும் நின்று அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தைப் பாட, அல்லது சொல்லவேண்டும். பரிசுத்த அதனாசியின் விசுவாசப்பிரமாணம் வாசிக்கும்படி குறிக்கப்பட்ட நாட்களில்மாத்திரம் இதைச் சொல்லவேண்டியதில்லை.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்தியஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டிருக்க, அடியில் கண்டிருக்கிற ஜெபங்கள் முறையே வரும். அதற்குமுன் குருவானவர் உரத்தசத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.
மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.
குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் மற்ற தேவஊழியக்காரரும் ஜனங்களும் உரத்தசத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் எழுந்துநின்று சொல்லவேண்டியது.

கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.
மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.
குரு: கர்த்தாவே, எங்கள் ~~சக்கிரவர்த்தினியை~~ இரட்சியும்.
மறுமொழி: நாங்கள் உம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது இரக்கமாய்க் கேளும்.
குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.
மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.
குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.
மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.
குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.
மறுமொழி: தேவரீரேயல்லாமல், எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.
குரு: பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்.
மறுமொழி: உம்முடைய பரிசுத்தஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.

¶ இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்கஜெபம்; இது நற்கருணை முறையிலும் வாசிக்க நியமிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, சமாதானத்துக்காகச் சொல்லுகிற ஜெபம். மூன்றாவது, சன்மார்க்கமாய் நடக்கிறதற்குவேண்டிய கிருபைக்காகச் சொல்லுகிற ஜெபம். எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, இரண்டாம் மூன்றாம் சுருக்கஜெபங்களை வருஷமுழுவதும் நாள்தோறும் தப்பாமல் காலைஜெபத்தில் பின்வருகிறபடி சொல்லவேண்டும்.

இரண்டாம் சுருக்கஜெபம்.

சமாதானத்துக்காகச் சொல்லியது.

சமாதானத்துக்குக் காரணரும் ஏகசிந்தையை விரும்புகிறவருமாகிய தேவனே, உம்மை அறிவதே நித்தியஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம். தேவரீரைத் தஞ்சமாகக் கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள் எந்த விரோதிகளுடைய வல்லமைக்கும் பயப்படாதிருக்கும்படியாக, எங்கள் சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களிலும்நின்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமென்.

மூன்றாம் சுருக்கஜெபம்.

தேவகிருபைக்காகச் சொல்லியது.

சர்வவல்லமையுள்ள நித்தியதேவனே, இந்நாள்வரையும் எங்களைச் சுகமாய் நடத்திவந்த எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கு உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும் உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ கீதஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.

¶ இப்பொழுது பின்வரும் ஜெபங்கள் ஐந்தையும் வாசிக்கவேண்டும். லித்தானி ஜெபம் வாசிக்கப்படும்பொழுது, இவ்வைந்தில் கடைசி இரண்டு ஜெபங்களை மாத்திரம் லித்தானி முறையில் வருகிறபடி வாசிக்கவேண்டும்.

மாட்சிமைபொருந்திய சக்கிரவர்த்தினி அவர்களுக்காகச் சொல்லிய ஜெபம்.

உன்னதமானவரும், வல்லமையுள்ளவரும், ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவும், பிரபுக்களுக்கு ஏகாதிபதியும், பரம சிங்காசனத்திலிருந்து பூமியிலுள்ள எல்லாக் குடிகளையும் கண்ணோக்கிப் பார்க்கிறவருமாயிருக்கிற எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, மகா காருணிய சுயாதிபதியாகிய **விக்த்தோரியா** என்னும் எங்கள் சக்கிரவர்த்தினியின்மேல் தேவரீர் கிருபாகடாட்சம் வைத்து; அவர் எப்பொழுதும் உமது சித்தத்துக்கு இணங்கவும், உமது வழியில் நடக்கவும், உமது பரிசுத்தஆவியின் கிருபையால் அவரை நிரப்பி; பரமவரங்களை அவருக்குத் திரளாகத் தந்து; சுகத்தையும், ஐசுவரியத்தையும், தீர்க்காயுசையும், அருளிச்செய்து; தமது சத்துருக்கள் எல்லாரையும் வென்று கீழ்ப்படுத்த அவரைப் பலப்படுத்தி; கடைசியில் இச்சீவியத்துக்குப்பின்பு நித்திய சந்தோஷத்தையும் பேரின்பவாழ்வையும் அடைய அவருக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு முழுமனதோடே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ராஜகுடும்பத்திற்காகச் சொல்லிய ஜெபம்.

எல்லா நன்மைக்கும் ஊற்றாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்து; அவர்களுக்கு உம்முடைய பரிசுத்தஆவியை வரமாகத் தந்து, உமது பரமகிருபையைப் பரிபூரணமாய்க் கொடுத்து, எல்லாப் பாக்கியத்தையும் சுகவாழ்வையும் அருளிச்செய்து; கடைசியில் உமது நித்திய ராஜ்யத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, எங்சள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

குருமாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்.

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் கண்காணிமார்கள்மேலும், குருமார்கள்மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள்மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு உத்தம பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமல் பெய்யச்செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வவல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்தியஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

வருஷமுழுவதும் நாள்தோறும் செய்யவேண்டிய காலைஜெப ஒழுங்கு
முற்றிற்று.

THE ORDER FOR

EVENING PRAYER,

DAILY THROUGHOUT THE YEAR.

வருஷமுழுவதும் நாள்தோறும்

செய்யவேண்டிய

மாலைஜெப ஒழுங்கு.

¶ மாலைஜெபம் தொடங்கும்போது, குருவானவர் பின்வரும் வேதவாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்தசத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப்பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.

துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். எசேக். 18. 27.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங். 51. 3.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங். 51. 9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங். 51. 17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே. 2. 13.

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி

நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி. 9. 9, 10.

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். எரே. 10. 24. சங். 6. 1.

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி. மத். 3. 2.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூ. 15. 18, 19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங். 143. 2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பரி. 1 யோ. 1. 8, 9.

பிரியமான சகோதரரே, நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக்கொள்ளாமல், பணிவும் தாழ்மையும் துக்கமும் கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோடே அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடவேண்டுவதுமன்றி; அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக்கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ்செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம்பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடிவந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும் தாழ்ந்த சத்தத்தோடும் பரம கிருபாசனத்தண்டையில் என்னுடனேகூடச் சேர்ந்து, நான் சொல்லுகிறபிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சபையாரெல்லாரும் சொல்லவேண்டிய பொதுவான பாவஅறிக்கை.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்துபோனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசுகிறிஸ்துவினிமித்தம், எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர்மாத்திரம் எழுந்துநின்று கூறவேண்டிய பாவவிமோசனம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவவிமோசனத்தையும் மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆநந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய பரிசுத்தஆவியையும் அருளிச்செய்யவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் அவரோடேகூட இதைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய

சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது.

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறுமொழி: அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

குரு: தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறுமொழி: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

¶ எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

குரு: கர்த்தரைத் துதியுங்கள்.

மறுமொழி: கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

¶ பின்பு குறிக்கப்பட்ட சங்கீதங்களை ஒழுங்கின்படி சொல்ல அல்லது பாடவேண்டும். பின்பு நியமித்திருக்கிறபடி பழைய ஏற்பாட்டிலுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (Magnificat) பாக்கியவதியான கன்னிமரியாளுடைய கீதம் வரும்.

Magnificat. பரி. லூ. 1.

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது: என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை: நோக்கிப்பார்த்தார்.

இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும்: என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்: அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு: தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்: இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி: தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி: ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம்செய்ய நினைத்து: தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது பின்வரும் சங்கீதம் வரும். ஆனாலும் மாதத்தின் (19) தேதியில் இதை இங்கே வாசியாமல் சங்கீதமுறையிலே வாசிக்கவேண்டும்.

Cantate Domino. 98. சங்கீதம்.

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்: அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்.

அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும்: இரட்சிப்பை உண்டாக்கினது.

கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி: தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.

அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார்: பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.

பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரைநோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்: முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில்: பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

சமுத்திரமும் அதின் நிறைவும்: பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக.

கர்த்தருக்குமுன்பாக ஆறுகள் கைகொட்டி: பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.

அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்: பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ பின்பு, நியமித்திருக்கிறபடி புதிய ஏற்பாட்டினுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (Nunc Dimittis) சிமியோனுடைய கீதம் வரும்.

Nunc Dimittis. பரி. லூ. 2. 29.

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி: உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

புறஜாதிகளுக்கு: பிரகாசிக்கிற ஒளியாகவும்,

உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு: மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக: ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது மாதத்தின் (12) தேதியாயிராவிட்டால் பின்வரும் சங்கீதம் வரும்.

Deus Misereatur. 67. சங்கீதம்.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும்: எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்;

தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து: உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்: ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

பூமி தன் பலனைத் தரும்: தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்: பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்பொழுது குருவானவரும் ஜனங்களும் நின்று அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டிருக்க, அடியில் கண்டிருக்கிற ஜெபங்கள் முறையே வரும். அதற்குமுன் குருவானவர் உரத்த சத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் மற்றத் தேவ ஊழியக்காரரும் ஜனங்களும் உரத்த சத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் எழுந்துநின்று சொல்லவேண்டியது.

கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

குரு: கர்த்தாவே, எங்கள் சக்கிரவர்த்தினியை இரட்சியும்.

மறுமொழி: நாங்கள் உம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது இரக்கமாய்க் கேளும்.

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறுமொழி: தேவரீரேயல்லாமல், எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.

குரு: பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்.

மறுமொழி: உம்முடைய பரிசுத்தஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.

¶ இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்கஜெபம். இரண்டாவது, சமாதானத்திற்காகச் சொல்லிய சுருக்கஜெபம். மூன்றாவது, சகல மோசங்களுக்கும் விலக்கிக் காக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லிய சுருக்கஜெபம். இவைகளில் கடைசி இரண்டு சுருக்கஜெபங்களை நாள்தோறும் மாலைஜெபத்தில் தப்பாமல் சொல்லவேண்டும்.

மாலைஜெபத்தில் சொல்லிய இரண்டாம் சுருக்கஜெபம்.

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும், சகல நல்லாலோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரணராகிய கடவுளே, உலகம் தரக்கூடாத சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க, மன உற்சாகமுள்ளவர்களாயிருந்து; சத்துரு பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவகாலத்தைப் போக்குவதற்கு, எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமேன்.

மூன்றும் சுருக்கஜெபம்.

சகல மோசங்களுக்கும் நம்மை விலக்கிக் காப்பதற்காகச் சொல்லியது.

கர்த்தாவே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து; இந்த இராத்திரியில் நேரிடும் சகல மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும், உமது

மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்கவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ தேஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.

மாட்சிமைபொருந்திய சக்கிரவர்த்தினி அவர்களுக்காகச் சொல்லிய ஜெபம்.

உன்னதமானவரும், வல்லமையுள்ளவரும், ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவும், பிரபுக்களுக்கு ஏகாதிபதியும், பரம சிங்காசனத்திலிருந்து பூமியிலுள்ள எல்லாக் குடிகளையும் கண்ணோக்கிப் பார்க்கிறவருமாயிருக்கிற எங்கள் பரம பிதாவாகிய கர்த்தாவே, மகா காருணிய சுயாதிபதியாகிய **விக்தோரியா** என்னும் எங்கள் சக்கிரவர்த்தினிமேல் தேவரீர் கிருபாகடாட்சம்வைத்து; அவர் எப்பொழுதும் உமது சித்தத்துக்கு இணங்கவும், உமது வழியில் நடக்கவும், உமது பரிசுத்தஆவியின் கிருபையால் அவரை நிரப்பி; பரம வரங்களை அவருக்குத் திரளாகத் தந்து; சுகத்தையும், ஐசுவரியத்தையும், தீர்க்காயுசையும், அருளிச்செய்து; தமது சத்துருக்கள் எல்லாரையும் வென்று கீழ்ப்படுத்த அவரைப் பலப்படுத்தி; கடைசியில் இச்சீவியத்துக்குப்பின்பு நித்திய சந்தோஷத்தையும் பேரின்ப வாழ்வையும் அடைய அவருக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு முழு மனதோடே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

ராஜகுடும்பத்திற்காகச் சொல்லிய ஜெபம்.

எல்லா நன்மைக்கும் ஊற்றாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்து; அவர்களுக்கு உம்முடைய பரிசுத்தஆவியை வரமாகத் தந்து, உமது பரம கிருபையைப் பரிபூரணமாய்க் கொடுத்து, எல்லாப் பாக்கியத்தையும் சுகவாழ்வையும் அருளிச்செய்து; கடைசியில் உமது நித்திய ராஜ்யத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

குருமாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்.

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் கண்காணிமார்கள்மேலும், குருமார்கள்மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள்மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு உத்தம பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமல் பெய்யச்செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

பரிசுத்த கிறிசோஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வவல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்தியஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடும் கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமேன்.

வருஷமுழுவதும் நாள்தோறும் செய்யவேண்டிய மாலைஜெப ஒழுங்கு முற்றிற்று.

THE ATHANASIAN CREED.

அதநாசி என்பவரின்

விசுவாசப்பிரமாணம்.

காலைஜெபத்தில் சொல்லவேண்டியது.

¶ கிறிஸ்துவின் ஜநநநாள் - பிரசன்னத் திருநாள் - பரி. மத்தியாவின் திருநாள் - உயிர்த்தெழுந்த திருநாள் - பரத்துக்கேறின திருநாள் - பரிசுத்த ஆவியின் திருநாள் - பரி. யோவான்ஸ்நானன் - பரி. யாக்கோபு - பரி. பர்த்தொலொமேயு - பரி. மத்தேயு - பரி. சீமோன், யூதா - பரி. அந்திரேயா - இவர்கள் திருநாட்கள் - திரித்துவ ஞாயிறு ஆகிய இந்த நாட்களில் காலைஜெபம் செய்யும்போது, அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்துக்குப் பதிலாக பரி. அதநாசி விசுவாசப்பிரமாணமென்று பேர்வழங்குகிற கிறிஸ்துமார்க்க விசுவாச அறிக்கையைக் குருவானவரும், ஜனங்களும், நின்று பாட அல்லது சொல்லவேண்டும்.

Quicunque vult.

இரட்சிப்படைய விரும்புகிறவன் எவனோ: அவன் திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசத்தை எல்லாவற்றிலும் முதன்மையாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும்.

அந்த விசுவாசத்தைப் பழுதின்றி முழுமையும் அநுசரியாதவன்: என்றைக்கும் கெட்டுப்போவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசமாவது: தேவத்துவமுள்ளவர்களைக் கலவாமலும், தேவத்துவத்தைப் பிரியாமலும்,

ஏகதேவனைத் திரித்துவமாகவும்: திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டுமென்பதே.

பிதாவானவர் ஒருவர், குமாரனானவர் ஒருவர்: பரிசுத்த ஆவியானவர் ஒருவர்.

ஆனாலும் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: ஒரே தேவத்தன்மையும் சமமகிமையும் சமநித்தியமகத்துவமும் உண்டு.

பிதா எப்படிப்பட்டவரோ, குமாரனும் அப்படிப்பட்டவர்: பரிசுத்த ஆவியும் அப்படிப்பட்டவர்.

பிதா சிருஷ்டிக்கப்படாதவர், குமாரனும் சிருஷ்டிக்கப்படாதவர்: பரிசுத்தஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர்.

பிதா அளவிடப்படாதவர், குமாரனும் அளவிடப்படாதவர்: பரிசுத்த ஆவியும் அளவிடப்படாதவர்.

பிதா நித்தியர், குமாரனும் நித்தியர்: பரிசுத்தஆவியும் நித்தியர்.

ஆகிலும் மூன்று நித்திய வஸ்துக்களில்லை: நித்திய வஸ்து ஒன்றே.

அப்படியே மூன்று அளவிடப்படாத வஸ்துக்களில்லை, மூன்று சிருஷ்டிக்கப்படாத வஸ்துக்களில்லை: சிருஷ்டிக்கப்படாத வஸ்து ஒன்றே, அளவிடப்படாத வஸ்து ஒன்றே.

அப்படியே பிதா சர்வவல்லவர், குமாரனும் சர்வவல்லவர்: பரிசுத்த ஆவியும் சர்வவல்லவர்.

ஆகிலும் மூன்று சர்வவல்ல வஸ்துக்களில்லை: சர்வவல்ல வஸ்து ஒன்றே.

அப்படியே பிதா தேவன், குமாரனும் தேவன்: பரிசுத்தஆவியும் தேவன்.

ஆகிலும் மூன்று தேவர்களில்லை: தேவன் ஒருவரே.

அப்படியே பிதா கர்த்தர், குமாரனும் கர்த்தர்: பரிசுத்தஆவியும் கர்த்தர்.

ஆகிலும் மூன்று கர்த்தர்களில்லை: கர்த்தர் ஒருவரே.

அம்மூவரில் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தேவனென்றும் கர்த்தரென்றும் அறிக்கையிடவேண்டுமென்று: கிறிஸ்துமார்க்க சத்தியத்தினாலே கட்டளையிட்டிருக்கிறதுபோல;

மூன்று தேவர்கள் உண்டென்றும், மூன்று கர்த்தர்கள் உண்டென்றும் சொல்லக்கூடாதென்று: திருச்சபைக்குரிய பொதுவான சித்தாந்தத்தினாலே கட்டளையிட்டிருக்கிறது.

பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவருமல்ல: சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல.

குமாரன் பிதாவினாலேயே இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவரே.

பரிசுத்தஆவி பிதாவினாலும் குமாரனாலும் இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல, புறப்படுகிறவரே.

ஆகையால் மூன்று பிதாக்களில்லை, ஒரே பிதாவும்: மூன்று குமாரரில்லை, ஒரே குமாரனும்: மூன்று பரிசுத்தஆவிகளில்லை, ஒரே பரிசுத்தஆவியும் உண்டு.

அன்றியும் இந்தத் திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவருமல்ல, பிந்தினவருமல்ல: ஒருவரில் ஒருவர் பெரியவருமல்ல, சிறியவருமல்ல.

மூவரும் சமநித்தியரும்: சரிசமானருமாம்.

ஆதலால் மேற்சொல்லியபடி, எல்லாவற்றிலும்: ஏகத்துவத்தைத் திரித்துவமாகவும், திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டும்.

ஆனபடியால், இரட்சிப்படைய விரும்புகிறவன்: திரித்துவத்தைக் குறித்து இப்படியே நினைக்கவேண்டும்.

மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மனுஷாவதாரத்தைக்குறித்துச் சரியானபடி விசுவாசிப்பதும்: நித்திய இரட்சிப்படைவதற்கு அவசியமாயிருக்கிறது.

நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிற சரியான விசுவாசமாவது: தேவகுமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து தேவனும் மனுஷனுமாய் இருக்கிறார்.

உலகங்கள் உண்டாவதற்கு முன்னே அவர் ஜெனிப்பிக்கப்பட்டு, பிதாவின் தன்மையையுடைய தேவனாகவும்: உலகத்தில் பிறந்து தம்முடைய தாயின் தன்மையையுடைய மனுஷனாகவும் இருக்கிறார்.

குறைவற்ற தேவனாயும்: பகுத்தறிவுடைய ஆத்துமாவும் நரதேகமும் பொருந்திய குறைவற்ற மனுஷனாயும் இருக்கிறார்.

தேவத்தன்மையின்படி பிதாவுக்குச் சரியானவர்: மனுஷத்தன்மையின்படி பிதாவுக்குத் தாழ்ந்தவர்.

அவர் தேவனும் மனுஷனுமாயிருந்தும்: இருவராயிராமல், கிறிஸ்து என்னும் ஒருவராகவே இருக்கிறார்.

தேவத்தன்மை மனுஷத்தன்மையாய் மாறினதினாலேயல்ல: தெய்வத்தில் மனுஷத்தன்மையைச் சேர்த்துக்கொண்டதினாலேயே, ஒருவராயிருக்கிறார்.

இரண்டு தன்மையும் கலந்ததினாலேயல்ல: ஒருவராகப் பொருந்தினதினாலே, முற்றும் ஒருவராயிருக்கிறார்.

பகுத்தறிவுடைய ஆத்துமாவும் சரீரமும் பொருந்தி, ஒரேமனுஷனாயிருப்பதுபோல: தேவனும் மனுஷனும் பொருந்தி, ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார்.

அவர் நமக்கு இரட்சிப்புண்டாகப் பாடுபட்டு: பாதாளத்தில் இறங்கி, மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்.

அவர் பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்: அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

அவர் வரும்பொழுது, சகல மனுஷரும் தங்கள் சரீரங்களோடு எழுந்து: தங்கள் கிரியைகளைக்குறித்துக் கணக்கு ஒப்புவிப்பார்கள்.

நன்மைசெய்தவர்கள் நித்திய சீவனையும்: தீமைசெய்தவர்கள் நித்திய அக்கினியையும் அடைவார்கள்.

திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசம் இதுவே: இதை ஒருவன் உண்மையாய் விசுவாசியாவிட்டால் இரட்சிப்படையான்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

THE LITANY.

லித்தானியா

என்னும்

சாதாரணப் பிரார்த்தனை.

¶ இது ஞாயிறு - புதன் - வெள்ளிக்கிழமைகளிலும், அத்தியட்சர் கட்டளையிடும் மற்ற நாட்களிலும், காலைஜெபமானபின்பு பாட அல்லது சொல்ல வேண்டும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும்நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும்நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும்; எங்கள் பாவங்களுக்குத்தக்க தண்டனை செய்யாதேயும்: தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும், உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இருதயக் குருட்டாட்டத்தில் நின்றும், அகந்தையிலும் வீண்பெருமையிலும் மாயத்திலும் நின்றும், பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும், சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

விபசாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும், உலகத்தினாலும் மாமிசத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும், பெருவாரி விஷவியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும், யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில் வரும் மரணத்திலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகலவித கலகத்திலும், அதிகாரிகளுக்கு விரோதமான கட்டுப்பாட்டிலும், ராஜதுரோகத்திலும் நின்றும்; சகலவித பொய்ப்போதகத்திலும் வேதப்புரட்டிலும், சபைப்பிரிவினையிலும் நின்றும்; இருதய கடினத்திலும், உமது வசனத்தையும் கற்பனையையும் அசட்டைபண்ணும் துணிவிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும், உமது பரிசுத்தப் பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும், உமது ஞானஸ்நானம் உபவாசம் சோதனையினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும், உமது சிலுவை பாடுகளினிமித்தமும், உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும், மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினதினிமித்தமும், பரிசுத்தஆவி வந்ததினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

துக்கப்படுங்காலத்திலும், சுகப்படுங்காலத்திலும், மரணவேளையிலும், நியாயத்தீர்ப்புநாளிலும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

கர்த்தராகிய தேவனே, பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்; எங்குமுள்ள உமது பரிசுத்த சபையைச் சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பணிவிடைக்காரியாகிய விக்தோரியா என்னும் எங்கள் காருணிய சக்கிரவர்த்தினி உம்மைச் செம்மையாய் ஆராதிக்கவும், நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும், அவளைக் காத்து ஸ்திரப்படுத்தவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருடைய இருதயத்தை உம்மைப் பற்றும் விசுவாசத்திலும் பயத்திலும் அன்பிலும் ஆண்டு நடத்தி; அவர் எப்பொழுதும் உம்மிடத்தில் நம்பிக்கையாயிருக்கவும், உம்முடைய கனத்தையும் மகிமையையும் எப்பொழுதும் நாடவும் கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருக்குச் சகாயரும் இரட்சகருமாயிருந்து, சத்துருக்கள் எல்லாரையும் ஜெயங்கொள்ள அவருக்குத் தயைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

கண்காணிமார், குருமார், உதவிக்குருமார் யாவருக்கும், உமது வசனத்தைப்பற்றிய மெய்யறிவாகிய பிரகாசத்தை அளித்து; அவர்கள் பிரசங்கத்திலும் நடக்கையிலும் அவ்வசனத்தைத் தகுதியாய்ப் பிரசித்தஞ்செய்து காண்பிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ராஜ்ய பரிபாலன ஆலோசனைக் கர்த்தாக்களுக்கும், பிரபுக்கள் அனைவருக்கும், கிருபையையும் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி; அவர்கள் நியாயத்தை நடப்பிக்கவும், சத்தியத்தைப் பரிபாலனம்பண்ணவும், கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தேசங்களுக்கும் ஒருமையையும், சமாதானத்தையும், ஏக சிந்தையையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் உம்மில் அன்புகூர்ந்து, உமக்குப் பயந்து, உமது கற்பனைகளின்படி ஜாக்கிரதையாய் நடக்க எங்களுக்கு நல்மனதைக் கொடுக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தைச் சாந்தமாய்க் கேட்டு, அன்புடனே உட்கொண்டு, ஆவியின் கனிகளைக் கொடுக்கும்படி, கிருபையை அதிகமதிகமாய்த் தந்தருளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வழிதப்பி மோசம்போன யாவரையும் சத்திய வழியில் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிற்கிறவர்களைப் பலப்படுத்தி, மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து, விழுந்தவர்களைக் கைதூக்கி, கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போடவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் ஆதரவையும் சகாயத்தையும் ஆறுதலையும் செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிலத்திலும் நீரிலும் யாத்திரைபண்ணுகிற யாவரையும், பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீகளெல்லாரையும், சகல வியாதிக்காரரையும் குழந்தைகளையும் காப்பாற்றி; காவலில் அடைபட்டவர்கள் சிறைப்பட்டவர்கள் யாவருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே,

தாய்தந்தையில்லாப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும், திக்கற்றவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும், காத்துப் பராமரிக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எல்லா மனுஷருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களைப் பகைக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் அவதூறுபண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நாங்கள் அநுபவிக்கும்படி, அவைகளை எங்கள் உபயோகத்துக்காகத் தந்து காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து, எல்லாப் பாவங்களையும் அஜாக்கிரதையையும் அறியாமையையும் மன்னித்து; உமது பரிசுத்த வசனத்தின்படி எங்கள் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதற்கு உமது பரிசுத்தஆவியின் கிருபையை அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;

உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச்செய்யும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;

எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, கேட்டருளும்.

கிறிஸ்துவே, கேட்டருளும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் அவரோடேகூட ஜனங்களும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, எங்கள் பாவங்களுக்குத்தக்கதாக எங்களைத் தண்டியாதேயும்.

மறுமொழி: எங்கள் அக்கிரமங்களுக்குத்தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாதேயும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே, துன்பங்களும் இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும்; உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாய தந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபைசெய்தருளும்.

கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து எங்களை இரட்சியும்.

பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும், அவர்களுக்கு முந்தின பூர்வகாலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க, எங்கள் காதுகளால் கேட்டோம்.

கர்த்தாவே, உமது மகிமைப் பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து, எங்களை இரட்சியும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கிறிஸ்துவே, எங்கள் சத்துருக்களை விலக்கி எங்களை இரட்சியும்.

கிருபையாய் எங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கும்.

உருக்கமாய் எங்கள் மனவிசாரங்களைப் பாரும்.
இரக்கமாய் உமது ஜனத்தின் பாவங்களை மன்னியும்.
தயவாய், இரக்கத்துடனே எங்கள் ஜெபங்களைக் கேளும்.
தாவீதின் மைந்தனே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, இப்பொழுதும் எப்பொழுதும் செவிகொடுத்தருளும்.
கிறிஸ்துவே, கிருபையாய்க் கேளும்; கிறிஸ்துநாதரே, கிருபையாய்க் கேளும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.
மறுமொழி: நாங்கள் உம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப்பார்த்து, நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகளெல்லாவற்றையும் உமது நாமத்துக்கு மகிமையுண்டாக விலக்கி, எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும்; உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக எப்பொழுதும் மாசில்லாத பரிசுத்த நடக்கையுள்ளவர்களாய் உம்மைச் சேவிக்கவும், கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துநாதர் மூலமாய் மனத்தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வவல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

லித்தானியா முற்றிற்று.

PRAYERS AND THANKSGIVINGS.

விசேஷித்த காலங்களில்

செய்யவேண்டிய

ஜெபங்களும் ஸ்தோத்திரங்களும்.

¶ இவைகளில் தேவையானதை லித்தானியாவிலும் காலைமாலை ஜெப ஒழுங்கிலும் கடைசியாக வரும் இரண்டு ஜெபங்களுக்குமுன் வழங்கவேண்டும்.

PRAYERS.

ஜெபங்கள்.

மழைக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

பரம பிதாவாகிய தேவனே, உம்முடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுகிற யாவருக்கும் சரீர சம்ரட்சணைக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் கொடுப்பேன் என்று உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு வாக்குத்தத்தஞ்செய்தீரே; எங்களுக்கு ஆறுதலும் தேவரீருக்கு மகிமையும் உண்டாக, பூமியின் பலன்கள் எங்களுக்குக் கிடைக்கும்படி, இப்பொழுது எங்கள் அவசரத்துக்குத் தேவையான மழையை வருஷிக்கச் செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கெடுதிமழை நீங்கும்படி செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள ஆண்டவராகிய தேவனே, பூர்வீகத்திலே மனுஷருடைய பாவத்தினிமித்தம் எட்டுப்பேரைத்தவிர உலக முழுவதையும் ஜலப்பிரளயத்தினால் அழித்தபின், இனி ஒருக்காலும் அதை அப்படி அழிப்பதில்லையென்று மகா இரக்கமாய் வாக்குத்தத்தஞ்செய்தீரே; எங்கள்

அக்கிரமங்களினிமித்தம் கெடுதிமழையினாலும் பெருவெள்ளத்தினாலும் நாங்கள் வருத்தப்படுகிறது நியாயமாயிருந்தும், உண்மையாய் மனஸ்தாபப்படுகிற எங்களுக்குப் பூமியின் பலன்கள் தகுதியான காலத்தில் கிடைக்கத்தக்கதாக, வானம் வெளிவாங்கும்படி செய்யவேண்டுமென்றும்; உம்முடைய தண்டனையை உணர்ந்து எங்கள் நடக்கையைச் சீர்திருத்தவும், உம்முடைய இரக்கத்தை உணர்ந்து உம்மைத் துதித்து மகிமைப்படுத்தவும், கிருபை புரியவேண்டுமென்றும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

பஞ்சகாலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

பரம பிதாவாகிய தேவனே, மழைபெய்வதும், பூமி தன் பலனைத் தருவதும், மிருகங்கள் மச்சங்கள் பலுகிப் பெருகுவதும் உம்முடைய செயலாயிருக்கிறது. உமது ஜனத்தின் உபத்திரவங்களை நோக்கிப்பார்த்து, எங்கள் அக்கிரமத்தினிமித்தம் நியாயமாய் வந்திருக்கிற பஞ்சத்தை உமது தயவினால் அகற்றி, தானியம் நன்றாய் விளையவும், அகவிலை மலியவும் செய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்தஆவிக்கும் சகல கனமும் மகிமையும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமேன்.

அல்லது இது.

நரஜீவதயாபரராகிய பிதாவே, எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் சமாரியா பட்டணத்திலே உண்டான கடும்பஞ்சத்தைச் சடிதியில் அகற்றி, மலிவுண்டாகச் செய்தருளினீரே; எங்கள் பாவங்களினிமித்தம் அப்படிப்பட்ட தண்டனையடைந்து வருத்தப்படுகிற எங்களுக்கும் காலத்துக்கு ஏற்ற சகாயம் கிடைக்கத்தக்கதாய், உமது பரம ஆசீர்வாதத்தினால் பூமியின் பலன்கள் விருத்தியாகும்படி செய்தருளும். தேவரீர் பூரணமாய்க் கொடுக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகிற நாங்கள், உமக்கு மகிமையாகவும், ஏழைகளுக்கு உதவியாகவும், எங்களுக்கு ஆறுதலாகவும், அவைகளை அனுபவிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் அநுக்கிரகஞ்செய்தருளும். ஆமேன்.

யுத்தங்களும், கலகங்களும், நடக்குங்காலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

சகல ராஜாக்களுக்கும் ராஜாவே, சர்வத்துக்கும் ஆண்டவரே, யாதொரு சிருஷ்டியும் எதிர்க்கக்கூடாத சர்வசக்தியுடைய தேவனே, பாவிகளை நியாயமாய்த் தண்டித்து, உண்மையாய் மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு மன்னிப்பு அளிக்கிறவரே, பலத்த அரணாயிருக்கிற உம்மாலே நாங்கள் காக்கப்பட்டு, சகல மோசங்களுக்கும் விலகி, ஜெயத்துக்குக் காரணராகிய உம்மை மகிமைப்படுத்தும்படியாக; சத்துருக்கள் கையில் அகப்படாதபடி, எங்களை இரட்சித்து, அவர்கள் இறுமாப்பை அடக்கி, அவர்கள் குரோதத்தைத் தணித்து, அவர்கள் உபாயங்களை வியர்த்தமாக்கிப்போடவேண்டுமென்று, உமது ஒரே குமாரனும் எங்கள் புண்ணியநாதருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

பெருவாரி விஷவியாதிகள் நடமாடுங்காலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய ஜனங்கள் வனாந்தரத்திலே மோசேயையும் ஆரோனையும் எதிர்த்து, அவர்களுக்கு விரோதமாய் அடஞ்சாதித்துக் கலகஞ்செய்ததினிமித்தம், அவர்கள்மேல் கோபங்கொண்டு வாதையை வரவிட்டு, தாவீதுராஜாவின் காலத்திலும் கொள்ளைநோயினாலே எழுபதினாயிரம்பேரைச் சங்காரஞ்செய்து, பின்பு உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து மற்றவர்களை இரட்சித்தீரே. இக்காலத்தில் கொடிய விஷவியாதியினாலே வாரிக்கொள்ளப்படுகிற ஏழைப் பாவிகளாகிய எங்கள்மேல் மனதுருகி, அப்பொழுது தேவரீர் இரக்கமாய்ப் பாவபரிகாரத்தை ஏற்றுக்கொண்டு, வாதையை நிறுத்தும்படி சங்காரதூதனுக்குக் கட்டளையிட்டதுபோல, இப்பொழுது எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திருமுகத்தைப்பார்த்து, இந்தக் கொடிய விஷவியாதியை எங்களை விட்டு நீக்கியருளும். ஆமேன்.

¶ குருப்பட்டம் பெறுகிறவர்களுக்காக எம்பர் வாரங்களில் நாள்தோறும் செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது நேசகுமாரனுடைய அருமையான இரத்தத்தினாலே எங்குமுள்ள பொதுவான திருச்சபையைச் சம்பாதித்துக்கொண்ட எங்கள் பரம பிதாவே, அந்தச் சபையை உமது அருட்கண்ணால் பார்த்து, உமது மந்தையின் மேய்ப்பர்களும் கண்காணிகளுமாயிருக்கிற உமது பணிவிடைக்காரர், ஒருவருடைய சிரசின்மேலும் சீக்கிரமாய் கைகளை வைக்காமல், உம்முடைய சபைக்குரிய திவ்விய ஊழியத்தைச் செய்ய, தகுதியானவர்களை உண்மையாயும் நிதானமாயும் தெரிந்துகொள்ளும்படி, இக்காலத்திலே அவர்கள் மனதை நடத்தி ஆண்டருளும். அன்றியும், எவ்வகையான திருப்பணிவிடையுஞ்செய்ய பட்டம்பெறுகிற யாவரும் தங்கள் நடக்கையினாலும் உபதேசத்தினாலும் உமது மகிமையைப் பிரஸ்தாபப்படுத்தவும், சகல மனுஷருடைய இரட்சிப்புக்காக

முயற்சிசெய்யவும், உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்முடைய கிருபாகடாட்சத்தையும் பரம ஆசீர்வாதத்தையும் அவர்களுக்கு அநுக்கிரகித்தருளும். ஆமென்.

அல்லது இது.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல வரப்பிரசாதங்களையும் அருளுகிறவரே; திருச்சபையில் வெவ்வேறான குருப்பட்டங்களை நியமிக்கத் திருவுளங்கொண்டவரே; திருச்சபையில் எவ்வகையான உத்தியோகத்துக்கும் ஊழியத்துக்கும் அழைக்கப்படுகிற யாவருக்கும் உமது கிருபையைத் தந்தருளும். அவர்கள் உமது திருநாமத்துக்கு மகிமையும், உமது திருச்சபைக்கு நன்மையும் உண்டாக, உமது சந்நிதானத்தில் உண்மையாய்ப் பணிவிடைசெய்யும்படிக்கு அவர்கள் உமது சத்திய உபதேசத்தினால் நிறையப்படவும், மாசில்லா நடக்கையினால் அலங்கரிக்கப்படவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ முந்தின எந்த ஜெபத்துக்குப்பின்பாகிலும் செய்யத்தக்க ஜெபம்.

தேவனே, எப்பொழுதும் இரக்கஞ்செய்கிறதும் மன்னிக்கிறதும் உமக்குச் சுபாவமும் இலட்சணமுமாயிருக்கிறதினால், எங்கள் தாழ்மையான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, எங்கள் பாவங்களாகிய சங்கிலியினாலே நாங்கள் கட்டுண்டவர்களாயினும், உருக்கமான உமது மிகுந்த இரக்கத்தினாலே எங்களைக் கட்டவிழ்த்து விடுதலையாக்கவேண்டுமென்று, எங்கள் மத்தியஸ்தரும் எங்களுக்காகப் பரிந்துபேசுகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்காகவும், இந்திய துரைத்தனத்தாருக்காகவும், செய்யவேண்டிய ஜெபம்.

மகா காருணிய கடவுளே, அங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட ராஜ்யம் அனைத்திற்காகவும், நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதுமன்றி, விசேஷமாய்ப் பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்காகவும், எங்கள் சக்கிரவர்த்தினி அவர்களால் நியமிக்கப்பட்ட துரைத்தனத்தாருக்காகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இந்தியாவிலே கவர்னர் ஜனரலாகிய ராஜபிரதிநிதிக்காகவும், கவர்னர்களுக்காகவும், மந்திராலோசனைச் சபைகளுக்காகவும், ஹைகோர்ட்டு நியாயாதிபதிகளுக்காகவும், இத்தேசத்தில் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீருடைய மகிமைப்பிரதாபம் விளங்கவும், உமது திருச்சபை நன்மையில் ஓங்கி வளரவும், எங்கள் சக்கிரவர்த்தினியும் அவர் ஆளுகைக்குட்பட்ட தேசங்களும் க்ஷேமமடைந்து புகழ்பெற்று வாழவும், அவர்களு

மிசியோன்களின்மேல் தேவ ஆசீர்வாதம் உண்டாகும்படி செய்யவேண்டிய ஜெபங்கள்.

¶ இவைகளும் துரைத்தனத்தாருக்காகச் சொல்லிய ஜெபமும் "எல்லா மனிதரையும் சிருஷ்டித்தவரும்" என்று தொடங்கும் பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காக வழங்கவேண்டிய ஜெபத்துக்குப் பின்னும், "சர்வ வல்லமையுள்ள தேவனே" என்று தொடங்கும் பொதுவான ஸ்தோத்திரத்துக்கு முன்னும் வாசிக்கப்படவேண்டும்.

இரக்கமுள்ள தேவனே, நீர் எல்லா மனிதரையும் உண்டாக்கினவரும், உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும், பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறவருமாயிருக்கிறீர். உம்முடைய சத்தியத்தை அறியாத எல்லார்மேலும் இரங்கி, சகலவித அறியாமையையும், இருதய கடினத்தையும், உமது வசனத்தை அசட்டைபண்ணும் துணிவையும் அவர்களை விட்டு நீக்கி, மீதியாயிருக்கிற மெய் இஸ்ரவேலரோடேகூட அவர்கள் இரட்சிக்கப்படவும், இயேசுகிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பரிடத்தில் ஒரே மந்தையாகவும், அவர்களையும் தேவரீருடைய சபையாகிய மந்தையில் திரும்பிச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

அல்லது இது.

சர்வ ஜீவ தயாபர பிதாவாகிய தேவனே, மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கி, பூமியின்மேல் குடியிருக்கச் செய்து, தூரமாயிருந்தவர்களுக்கும் சமீபமாயிருந்தவர்களுக்கும் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிக்கும்படி ஸ்தோத்திரிக்கப்பட்ட உம்முடைய ஏக சுதனை அனுப்பினீரே: இத்தேசத்திலுள்ள ஜனங்கள் உம்மை நாடித் தேடிக் கண்டுபிடிக்கும்படி கிருபைகூர்ந்து, மாம்சமான சகல மனுஷர்மேலும் உம்முடைய ஆவியின் அநுக்கிரகத்தை மழைபோல ஊற்றி அருளுவோம் என்று நீர் செய்த வாக்குத்தத்தத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றும்படி எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

துரைத்தனத்தாருக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய எங்கள் பரமபிதாவே, மகா காருண்ய சுயாதிபதியாகிய விக்த்தோரியா என்னும் எங்கள் சக்கிரவர்த்தினியையும், வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்ட் எட்வார்ட் என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும்,

ராஜகுடும்பமனைத்தையும் உமது அருட்கண்ணால் நோக்கிப்பாரும். பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்கு தேவரீர் துணைநின்று அவர்கள் ஆலோசனைகளெல்லாவற்றையும் நடத்தியருளும். இந்தியாவிலே துரைத்தனம் பண்ணுகிற ராஜபிரதிநிதிக்காகவும், கவர்னர்களுக்காகவும், நியாயாதிபதிகளுக்காகவும், சக்கிரவர்த்தினியவர்களால் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாருக்காகவும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீருடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையும், திருச்சபைக்கு நன்மையும், பிரஜைகளுக்கு க்ஷேமமும் உண்டாகும்படி, அவர்கள் சகலத்தையும் ஞானமும், நீதியும், இரக்கமுமாய் நடத்திவர கிருபைசெய்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

டைய ஆலோசனைகள் செய்கைகள் எல்லாவற்றையும் நடத்தி பயன்படச் செய்தருளும். சமாதானமும் செல்வமும், சத்தியமும் நீதியும், சன்மார்க்கமும் தேவபக்தியும், எங்களுக்குள்ளே தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும்படி, அவர்கள் எல்லாக் காரியங்களையும் உறுதியான உத்தம அஸ்திபாரங்களின்மேல் ஸ்தாபிக்கும்படி அநுக்கிரகஞ்செய்தருளும். அவர்களுக்கும் எங்களுக்கும் உமது திருச்சபை அனைத்துக்கும் அவசியம் வேண்டிய இவைமுதலான எல்லா நன்மைகளையும் தரும்படி, எங்கள் அருமையான கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும் மத்தியஸ்தத்தையும் முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ லித்தானியா ஜெபத்தைச்செய்ய நியமித்திராதபோதெல்லாம், பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

எல்லா மனுஷரையும் சிருஷ்டித்தவரும், காப்பாற்றுகிறவருமாயிருக்கிற பராபரனே, எவ்வகையும் எந்த நிலைமையுமுள்ள மனுஷர்களுக்காகவும் நாங்கள் தாழ்மையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். சகல தேசத்தாருக்கும் உமது இரட்சணியத்தையும் சகல ஜாதியாருக்கும் உமது வழிகளையும் தெரியப்படுத்தியருளும். விசேஷமாக, தேவரீர் பொதுவாயிருக்கிற திருச்சபைக்கு நற்சீரைத்தந்து, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்விக்கொள்ளுகிற யாவரும் சத்தியமார்க்கத்திலே நடக்கவும், ஆவியின் ஒருமையிலும் சமாதானக் கட்டிலும் நீதியுள்ள நடக்கையிலும் நிலைத்து விசுவாசத்தைப் பற்றிக்கொண்டேயிருக்கவும், அந்தச் சபையை உம்முடைய நல்லாவியினாலே நடத்தியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். கடைசியாக மனதையும் சரீரத்தையும் ஆஸ்தியையும்பற்றிய எவ்விதமான துன்பங்களும் அடைந்து வருத்தப்படுகிற யாவரையும்,

[* விசேஷமாய்த் தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி எங்களைக் கேட்டுக்கொண்டவர்களையும்,]

* தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி சபையார் யாராகிலும் கேட்டுக்கொள்ளும்போது இதைச் சொல்லவேண்டும்.

பிதாவே, உமது தயவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவரவர்களுடைய அவசரங்களுக்குத் தக்கதாக தேவரீர் ஆறுதலையும் சகாயத்தையும் அருளிச்செய்து; உபத்திரவப்படுகையில் அவர்கள் பொறுமையாயிருக்கவும், அவர்கள் துன்பங்களெல்லாம் இன்பமாய் முடியவும் கட்டளையிட்டருளவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

THANKSGIVINGS.

ஸ்தோத்திரங்கள்.

¶ பொதுவான ஸ்தோத்திரம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சர்வஜீவதயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும்,

[* விசேஷமாய் இப்பொழுது உம்மிடத்தில் பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்காக நன்றியறிதலான ஸ்தோத்திரங்களைச் செலுத்தவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும்,]

தேவரீர் அருளிச்செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலைமதியாத உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும், உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்துகொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்தஆவிக்கும், எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமேன்.

* முன்பு தங்களுக்காக ஜெபம் பண்ணும்படி கேட்டுக்கொண்டவர்கள் ஸ்தோத்திரம்செலுத்த வரும்பொழுது இதைச் சொல்லவேண்டும்.

மழை பெய்ததற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

எங்கள் பரமபிதாவாகிய தேவனே, மனிதர்களுக்கு உபயோகமாக பூமி தன் பலனைத் தரும்படி உம்முடைய தயவுள்ள திருச்செயலால் காலமழையும் கோடைமழையும் வருஷிக்கச் செய்கிறீர். அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கு மிகுந்த ஆறுதலும் உமது பரிசுத்த நாமத்துக்கு மகிமையும் உண்டாகும்படி, எங்களுக்கு உண்டாயிருந்த அவசரத்தில் வறண்டுபோன உமது சுதந்தரத்தின்மேல் அநுகூலமான மழையைப் பொழிந்து, அதைக் குளிரப்பண்ணின இரக்கத்தினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, உமக்குத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். ஆமேன்.

கெடுதிமழை நீங்கினதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

ஆண்டவராகிய தேவனே, கெடுதிமழையினாலும் பெருவெள்ளத்தினாலும் நியாயமானபடி எங்களை வாதித்துச் சிறுமைப்படுத்தி, இப்பொழுது அந்த உபத்திரவத்தை இரக்கமாய் அகற்றி, வானம் வெளிவாங்கச்செய்து, சந்தோஷமான சுபகாலத்தை அருளி, எங்களை ஆற்றித்தேற்றினதினாலே, தேவரீர் செய்த இந்த இரக்கத்துக்காக உமது பரிசுத்த நாமத்தைத் துதித்து மகிமைப்படுத்தி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறையாகத் தேவரீருடைய அன்புள்ள தயவைக் கொண்டாடுகிறோம், சுவாமி. ஆமேன்.

பஞ்சம் நீங்கி மலிவுண்டாகும்போது செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உமது கிருபாகடாட்சத்தினால் திருச்சபையாருடைய வணக்கமான விண்ணப்பங்களைக் கேட்டு, எங்களுக்கு உண்டாயிருந்த பஞ்சத்தையும் குறைவையும் நீக்கி, மலிவையும் செழிப்பையும் அருளிச்செய்திருக்கிறீர்; விசேஷித்த இந்த உபகாரத்தினிமித்தம் நாங்கள் தாழ்மையாய் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறதுமன்றி, உமக்கு மகிமையாகவும் எங்களுக்கு ஆறுதலாகவும் பூமி தன் பலனை நிறைவாய்த் தரும்படி உமது அன்புள்ள தயவை இன்னமும் எங்கள்மேல் பாராட்டிக் கொண்டே வரவேண்டுமென்றும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

சத்துருக்களை விலக்கிச் சமாதானத்தைத் தந்ததற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

சத்துருக்களுடைய முகத்துக்கு எதிரே உமது அடியாருக்குப் பலத்த அரணாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களைச் சூழ்ந்திருந்த பெரிய மோசங்களுக்கு எங்களைத் தப்புவித்ததற்காக உமக்குத் துதிதோத்திரங்களைச் செலுத்துகிறோம். நாங்கள் அவர்களுக்கு இரையாகாமற்போனது உம்முடைய தயவாகவே இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளுகிறதுமல்லாமல், தேவரீர் எங்களுக்குப் பலத்த இரட்சகரென்று உலகமெல்லாம் அறியும்படிக்கு, இன்னமும் அப்படிப்பட்ட இரக்கங்களை அருளிச்செய்து வரவேண்டுமென்றும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

கலகம் நீங்கிச் சமாதானம் உண்டானதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

எங்கள் பரமபிதாவாகிய நித்திய தேவனே, அடங்காத முரட்டுச் சனங்களுடைய மூர்க்கத்தை அடக்கி, மனிதர் ஒற்றுமையாய் வாழும்படி செய்துவருகிறீரே; இராசாங்கத்துக்கு விரோதமாய் எங்களுக்குள்ளே எழும்பின கலகங்களைத் தேவரீர் அமையப்பண்ணினதினிமித்தம் உமது பரிசுத்த நாமத்தைத் துதிக்கிறோம். நாங்கள் இனி உமது பரிசுத்த கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், தேவபக்தியும் உண்மையும் உள்ளவர்களாய் அமைதலோடும் சமாதானத்தோடும் காலங்கழிக்கவும், தேவரீர் அருளின இந்த இரக்கங்களுக்காகத் துதிதோத்திரபலியை இடைவிடாமல் செலுத்தவும், எங்களெல்லாருக்கும் கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, அத்தியந்த பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

பெருவாரி விஷவியாதி நீங்கினதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

கர்த்தாவாகிய தேவனே, கடினமும் பயங்கரமுமான தண்டனையினாலே எங்கள் பாவங்களுக்காக எங்களைச் சிட்சித்து, எங்கள் அக்கிரமங்களுக்காக எங்களைத் தண்டித்து, நீதிசெலுத்தும்போதே உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து, மரணத்தின் வாயிலிருந்து எங்கள் ஆத்துமாக்களை மீட்டு இரட்சித்தீரே; தேவரீரால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நாங்கள் அன்புள்ள பிதாவாகிய உமக்கு எங்கள் ஆத்துமாக்களையும் சரீரங்களையும்

சீவபலியாக ஒப்புக்கொடுத்து, தேவரீருடைய இரக்கங்களை உமது சபை நடுவே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, எப்பொழுதும் புகழ்ந்து போற்றுகிறோம், சுவாமி. ஆமேன்.

அல்லது இது.

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, நியாயப்பிரமாணத்திலே கூறியிருக்கிற தண்டனைகளெல்லாம், நாங்கள் செய்த பலவித பாவங்களுக்காகவும் எங்கள் இருதய கடினத்திற்காகவும், எங்கள்மேல் வருவது நியாயமென்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஆகிலும் நாங்கள் எங்களைத் தாழ்த்திக்கொண்டது குறைவாயும் அபாத்திரமாயும் இருந்தபோதிலும், தேவரீர் உருக்கமாய் இரங்கி அதை ஏற்றுக்கொண்டு, இதுவரைக்கும் எங்களை மிகவும் துன்பப்படுத்தின பெருவாரி விஷவியாதியைத் தணியச்செய்து, சவுக்கியத்தினால் உண்டாகும் கெம்பீரசத்தம் எங்கள் வீடுகளில் திரும்பவும் தொனிக்கச்செய்தீரே; தேவரீர் இவ்விதமாய் எங்களைக் காப்பாற்றி பராமரித்துவருகிறதினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் நாங்கள் உம்முடைய தேவ மகத்துவத்துக்குத் துதிதோத்திர பலிசெலுத்தி, மேன்மைபொருந்திய உமது திருநாமத்தைப் புகழ்ந்தேற்றி மகிமைப்படுத்துகிறோம், சுவாமி. ஆமேன்.

THE

COLLECTS, EPISTLES, AND GOSPELS,

TO BE USED THROUGHOUT THE YEAR.

வருஷமுழுவதும் வழங்கவேண்டிய

சுருக்கச்செபங்களும், நிருபவாக்கியங்களும், சுவிசேஷவாக்கியங்களும்.

¶ கவனிப்பு: அந்தந்த ஞாயிற்றுக்கிழமைக்கு நியமித்திருக்கிற சுருக்கச்செபத்தை முந்தின மாலைச்செபத்தில் வாசிக்கவேண்டும். எந்தத் திருநாளுக்கு முந்தினநாள் உபவாசநாளாயிருக்குமோ, அந்தநாள் மாலைச்செபத்தில் அந்தத் திருநாளுக்கு நியமித்திருக்கிற சுருக்கச்செபத்தை வாசிக்கவேண்டும்.

கிறிஸ்துவின் வருகையாகிய அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள முதலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கச் சிறந்த மகத்துவத்தோடே திரும்பவரும் கடைசிநாளிலே, நாங்கள் உயிர்த்தெழுந்து சாவா சீவனைப் பெறும்படியாக; அவர் மிகுந்த தாழ்மையோடு எங்களைச் சந்திக்கவந்த சாவுக்கினமான இந்தச் சீவகாலத்தில், நாங்கள் அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ள கிருபை செய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் இப்பொழுதும் எப்பொழுதும் சீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶இந்தச் சுருக்கச்செபத்தைக் கிறிஸ்துவின் ஜநந திருநாளுக்கு முந்தின சாயங்காலம்வரைக்கும், அட்வெந்தென்னும் நாட்களுக்குரிய மற்றச் சுருக்கச்செபங்களோடுங்கூட சொல்லவேண்டும்.

நிருபவாக்கியம்: ரோ. 13. 8.

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது, ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும். நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆனபடியினாலே அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக மாம்சத்தைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 21. 1.

அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார். இதோ, உன் இராசா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று, தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும்

குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள். திரளான சனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய திரளான சனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார் என்று விசாரித்தார்கள். அதற்குச் சனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள். இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறாவிற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: என்னுடைய வீடு செபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார்.

அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள

இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சகல பரிசுத்த வேதவாக்கியங்களையும் எங்களுக்குப் போதனையாக எழுதுவித்த கிருபையுள்ள கர்த்தாவே, தேவரீர் எங்களுக்கு அருளிச்செய்த பாக்கியமுள்ள நித்தியசீவ நம்பிக்கையை, உமது பரிசுத்த வசனத்தால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாங்கள் பற்றிக்கொண்டு, எப்பொழுதும் உறுதியாய்க் கைக்கொள்ளும்படி, அந்த வாக்கியங்களை நன்றாய்க் கேட்டு, வாசித்து, கவனித்து, கற்றறிந்து, உட்கொள்ள, எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 15. 4.

தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக. ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். மேலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கு, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் இயேசுகிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும்; புறச்சாதியாரும் இரக்கம்பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி: இதினிமித்தம் நான் புறச்சாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது. மேலும்: புறச்சாதிகளே, அவருடைய சனங்களோடேகூடக் களிகூருங்கள் என்கிறார். மேலும்: புறச்சாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; சனங்களே, எல்லாரும் அவரைப் புகழுங்கள் என்றும் சொல்லுகிறார். மேலும்: ஈசாயின் வேரும் புறச்சாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புறச்சாதியார் நம்பிக்கை வைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான். பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 21. 25.

சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள சனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்; வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார். அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய இராச்சியம் சமீபமாயிற்றென்று அறியுங்கள். இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள

மூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவே, தேவரீர் முதலாந்தரம் வருகையில், உமக்கு முன்பாக உமது வழியை ஆயத்தம்பண்ண உமது தூதனை அனுப்பினீரே; அதுபோலவே தேவரீர் உலகத்தை நியாயந்தீர்க்க இரண்டாந்தரம் வருகையில், நாங்கள் உமக்கு முன்பாகப் பிரியமுள்ள சனங்களாய்க் காணப்பட, இப்பொழுது உமது இரகசியங்களின் உக்கிராணக்காரரும் பணிவிடைக்காரருமானவர்கள் கீழ்ப்படியாதவர்களின் இருதயத்தை நீதிமான்களுடைய ஞானத்துக்கு நேராய்த் திருப்பி, உமது வழியை ஆயத்தம்பண்ண, கிருபைசெய்தருளவேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: 1 கொ. 4. 1.

எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது; நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 11. 2.

அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து: வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமோ? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப்

பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார். அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து சனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந் தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந் தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதெப்படியெனில்: இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.

அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள

நாலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்முடைய வல்லமையோடு எழுந்தருளி, எங்கள் நடுவில் வந்து, மிகுந்த பலத்தோடு எங்களுக்குச் சகாயஞ்செய்யும். எங்களுக்குமுன் வைத்திருக்கிற பந்தயசாலையில் ஓடாதபடி, எங்கள் பாவங்களாலும் அக்கிரமங்களாலும் தடுக்கப்பட்டிருக்கிற எங்களைத் தேவரீருடைய பூரண கிருபையினாலும் இரக்கத்தினாலும் கண்ணோக்கிப்பார்த்துத் தீவிரமாய் உதவிசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராயிருக்கிற உமது குமாரனுடைய உத்தரவாத புண்ணியத்தினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம்; அவருக்கும் உமக்கும் பரிசுத்தஆவிக்கும் சதாகாலமும் கனமும் மகிமையும் உண்டாவதாக. ஆமேன்.

நிருபவாக்கியம்: பிலி. 4. 4.

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்களென்று மறுபடியும் சொல்லுகிறேன். உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய செபத்தினாலும் வேண்டுதலி

னாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 1. 19.

எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்டபொழுது, அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும்: அல்ல என்றான். அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான். அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள். அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் சலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கு நான் பாத்திரனல்ல என்றான். இவைகள் யோர்தானுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன.

நம்முடைய கர்த்தர் பிறந்த பண்டிகையாகிய
கிறிஸ்துவின் ஜநந திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி, அவர் எங்கள் தன்மையைத் தரித்துக்கொள்ளவும், கற்புள்ள கன்னிகையிடத்தில் பிறக்கவும் தயைசெய்தீரே; மறுஜநநம் அடைந்து புத்திர சுவிகாரத்தினாலும் கிருபையினாலும் உமக்குப் பிள்ளைகளான நாங்கள், உமது பரிசுத்தஆவியினாலே தினம் தினம் புதிப்பிக்கப்பட; உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் எப்பொழுதும் ஒரே தேவனாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: எபி. 1. 1.

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள்மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன்மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார், இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைச் செனிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார். தேவதூதரைக்குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிச்சுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய இராச்சியத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்; கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது; அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப் போம்; ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 1. 1.

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும்

அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் சீவன் இருந்தது, அந்தச் சீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க சாட்சியாக வந்தான். அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

பரிசுத்த ஸ்தேவானுடைய திருநாள்.

சுருக்கச்செபம்.

கர்த்தாவே, நாங்கள் உமது சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறதினிமித்தம் பூமியில் துன்பப்படுகிறபொழுதெல்லாம், வானத்தை அண்ணாந்துபார்த்து, இனி வெளிப்படும் மகிமையை விசுவாசத்தினால் தரிசிக்கும்படி செய்தருளும். உமக்காகத் துன்பப்படுகிற எல்லாரையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் நின்று ஆதரித்துவருகிற எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியக்கர்த்தருமாயிருக்கிற இயேசு சுவாமீ, உமது முதலாம் இரத்தச்சாட்சியாகிய பரிசுத்த ஸ்தேவான் தன்னைக் கொலைசெய்கிறவர்களுக்காக உம்மை நோக்கி வேண்டிக்கொண்ட திருஷ்டாந்தத்தைப் பார்த்து, நாங்களும் பரிசுத்தஆவியினால் நிறைந்து, எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களில் அன்புகூர்ந்து, அவர்களை ஆசீர்வதிக்கும்படி, கிருபைசெய்தருளும். ஆமேன்.

¶ இங்கே கிறிஸ்து ஜநந திருநாளுக்குரிய சுருக்கச்செபம் வரும். அதை வருஷப்பிறப்புக்கு முந்தின சாயங்காலம் வரைக்கும் தினந்தோறும் சொல்ல வேண்டும்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 7. 55.

ஸ்தேவான் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அப்பொழுது அவர்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்; இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 23. 34.

இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்; நீதிமானாகிய ஆபேலின் இரத்தம்முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பரிசுத்த யோவான் சுவிசேஷகனுடைய திருநாள்.

சுருக்கச்செபம்.

கிருபையுள்ள கர்த்தாவே, உம்முடைய உத்தம அப்போஸ்தலனும் சுவிசேஷகனுமாகிய பரிசுத்த யோவானுடைய உபதேசத்தினால் உம்முடைய திருச்சபை பிரகாசம் அடைந்து, உம்முடைய சத்தியமாகிய வெளிச்சத்தில் நடந்து, முடிவிலே நித்திய சீவனாகிய வெளிச்சத்தில் சேரும்படி; பிரகாசமான உம்முடைய சோதியின் கதிர்களை அதின்மேல் வீசவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 யோ. 1. 1.

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற சீவ வார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்தச் சீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்தச் சீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம். தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 21. 19.

இயேசு பேதுருவை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். பேதுரு திரும்பிப் பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போசனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து, ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார். ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார். அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை யெழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம். இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.

குற்றமில்லாப் பாலகருடைய திருநாள்.

சுருக்கச்செபம்.

குழந்தைகள் பாலகருடைய வாயினாலே பெலன் உண்டுபண்ணி, அவர்கள் மரணத்தினாலே உமக்கு மகிமை உண்டாகும்படி செய்த சர்வவல்லமையுள்ள தேவனே, நாங்களும் குற்றமில்லா நடக்கையினாலும் மரண பரியந்தமுள்ள உறுதியான விசுவாசத்தினாலும் உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தும்படிக்கு; எங்களில் குடிகொண்டிருக்கும் சகல துர்க்குணங்களையும் அடக்கி அழித்துப்போடவும், உமது கிருபையினாலே எங்களைப் பலப்படுத்தவும் வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: வெளி. 14. 1.

நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரையும் நிற்கக் கண்டேன். அல்லாமலும், பெருவெள்ள இரைச்

சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு சீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 2. 13.

கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்தான். புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

கிறிஸ்து ஜநந திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி, அவர் எங்கள் தன்மையைத் தரித்துக்கொள்ளவும், கற்புள்ள கன்னிகையிடத்தில் பிறக்கவும் தயைசெய்தீரே, மறுஜநநமடைந்து புத்திரசுவிகாரத்தினாலும் கிருபையினாலும் உமக்குப் பிள்ளைகளான நாங்கள், உமது பரிசுத்தஆவியினாலே தினம் தினம் புதுப்பிக்கப்பட; உம்மோடும் பரிசுத்தஆவியோடும் எப்பொழுதும் ஒரே தேவனாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: கலா. 4. 1.

நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எசமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங் காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை. தகப்பன் குறித்த காலம்வரைக்கும் அவன் காரியகாரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான். அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். நாம் புத்திரசுவிகாரத்தை அடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 1. 18.

இயேசுகிறிஸ்துவினுடைய ஜனனத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்தஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவ

ளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்தஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது சனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.

சுருக்கச்செபம்.

துதிக்கப்படத்தக்க உமது திருக்குமாரன் விருத்தசேதனம் பெற்று, மனிதருக்காக நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியும்படி செய்தருளின சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் இருதயமும் எங்கள் அவயவங்கள் யாவும் உலகத்துக்கும் மாம்சத்துக்கும் உரிய துர் இச்சைகளெல்லாவற்றிற்கும் மரிக்கவும், நாங்கள் எந்தக் காரியங்களிலும் உமது திருச்சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவும்; ஆவிக்குரிய மெய்யான விருத்தசேதனத்தை அருளிச்செய்யவேண்டுமென்று, உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 4. 8.

எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான். இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்கு மாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும் வருமோ? ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறோமே. அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதோ, விருத்தசேதனமில்லாதவனாயிருந்தபோதோ? விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதல்ல, விருத்தசேதனமில்லாதவனாயிருந்தபோதே. மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும், விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தைப் பெற்றான். அன்றியும் உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினாலே வருகிற நீதியினால் கிடைத்தது. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 2. 15.

தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம்பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன்னிருதயத்திலே வைத்து, சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள். பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

¶ இந்தச் சுருக்கச்செபமும் நிருபவாக்கியமும் சுவிசேஷவாக்கியமும் பிரசன்னத் திருநாள்வரைக்கும் நாள்தோறும் சொல்லவேண்டும்.

புறச்சாதியாருக்குக் கிறிஸ்து வெளிப்பட்ட நாளாகிய

பிரசன்னத் திருநாள்.

சுருக்கச்செபம்.

ஒரு நட்சத்திரத்தினாலே புறச்சாதியாரை வழிநடத்தி, அவர்களுக்கு
உம்முடைய ஒரேபேறான குமாரனை வெளிப்படுத்தின தேவனே, இப்
பொழுது விசுவாசத்தினால் உம்மை அறிந்திருக்கிற நாங்கள், இச்சீவ
னுக்குப்பின்பு உமது தேவ மகத்துவத்தைத் தரிசிக்கும் ஆநந்தத்தை அநு
பவிக்கும்படி; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் இரக்க
மாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 3. 1.

இதினிமித்தம், பவுலாகிய நான் புறச்சாதியாராயிருக்கிற உங்கள்
பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்.
உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வகிருபைக்குரிய
நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே; அதென்னவெனில் புறச்
சாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்
ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்
துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்
தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான்
முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கை
யில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற
அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவரு
டைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவ
ராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்
திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால்
எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்
தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரி
லும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப்
புறச்சாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை
எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய
கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்
னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய
அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொ
ருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த
தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள்முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய

ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்
கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரைப்
பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கை
யோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 2. 1.

எரோதுராசாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே
இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு
வந்து, யூதருக்கு இராசாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே
அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்
தோம் என்றார்கள். எரோதுராசா அதைக் கேட்டபொழுது, அவனும் அவ
னோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். அவன் பிர
தான ஆசாரியர் சனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து:
கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.
அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதே
னென்றால்: யூதேயாதேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில்
நீ சிறியதல்ல; என் சனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்
திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது
என்றார்கள். அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்
து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்தில் திட்
டமாய் விசாரித்து: நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய்
விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணி
ந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப்
பெத்லகேமுக்கு அனுப்பினான். இராசா சொன்னதை அவர்கள் கேட்
டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை
இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன்
சென்றது. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆன
ந்த சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து,
பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய்
விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து,
பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக்
காணிக்கையாக வைத்தார்கள். பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத்
திரும்பிப்போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்
கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, தேவரீரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிற உம்முடைய சனத்தின் செபங்களை இரக்கமாய் ஏற்றுக்கொண்டு, நாங்கள் செய்யவேண்டிய காரியங்கள் இவைகளென்று அறிகிற அறிவையும், அவைகளை உண்மையாய் நிறைவேற்றுகிற பெலனையும் எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 12. 1.

சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான சீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 2. 41.

அவருடைய தாய்தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்காபண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது, அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய், பண்டிகை நாட்கள் முடிந்து, திரும்பி வருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது. அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒருநாள் பிரயாணம் வந்து, உறவின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்தி

லும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும்குறித்துப் பிரமித்தார்கள். தாய்தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார். தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன்னிருதயத்திலே வைத்துக்கொண்டாள். இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் ஆளுகிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, உமது சனங்கள் செய்யும் வேண்டுதல்களை இரக்கமாய்க் கேட்டு; எங்கள் வாழ்நாளெல்லாம் உமது சமாதானத்தை எங்களுக்குக் கட்டளையிடவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 12. 6.

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன், பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் சாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிற

வன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் சாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; செபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 2. 1.

மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சரசங் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள். யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது. இயேசு வேலைக்காரரை நோக்கி: சாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள். அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து: எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, சனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இவ்விதமாக இயேசு இந்த முதலாம்

அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானாவூரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும்
மூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப்பார்த்து, எங்களுக்கு மோசங்களும் ஆபத்துகளும் நேரிடும்பொழுதெல்லாம், உமது வலதுகரத்தை நீட்டி எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 12. 16.

உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போசனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்கிறதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 8. 1.

அவர் மலையிலிருந்து இறங்கினபோது, திரளான சனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள். அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான். இயேசு அவனை நோக்கி: இதை

நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார். இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராச்சியத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். இராச்சியத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும்
நாலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

பராபரனே, பலவித கொடிய மோசங்களால் சூழப்பட்டிருக்கிற நாங்கள் எங்கள் சுபாவ பலவீனத்தினாலே நிலைநிற்கத் திராணியற்றவர்கள் என்று அறிந்திருக்கிறீரே, எங்களை எல்லா மோசங்களிலும் தாங்கவும், எல்லாச் சோதனைகளிலும் கடத்தேற்றவும் தக்க பெலனையும் ஆதரவையும் கட்டளையிட்டருளும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 13. 1.

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மையுண்டாகும்பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 8. 23.

அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின்சென்று ஏறினார்கள். அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். அதற்கு அவர்: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள். அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து

புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்தபடியால், அந்த வழியாக ஒருவனும் நடக்கக்கூடாதிருந்தது. அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள். அவர்களுக்குக் கொஞ்ச தூரத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது, பிசாசுகள்: நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவுகொடும் என்று அவரை வேண்டிக்கொண்டன. அதற்கு அவர்: போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது, பன்றிக் கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, சலத்தில் மாண்டுபோயின. அவைகளை மேய்த்தவர்கள் ஓடி, பட்டணத்தில் சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும், பிசாசுபிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள். அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர்கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும்
ஐந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உமது வீட்டாராகிய சபையாரை உமது சத்திய மார்க்கத்திலே இடைவிடாமல் நிலைப்படுத்தி, உமது பரம கிருபையை நம்பி அதையே சார்ந்திருக்கிற அவர்களை உமது மிகுந்த வல்லமையினால் எப்பொழுதும் காப்பாற்றும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: கொலோ. 3. 12.

நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கட

வது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 13. 24.

பரலோக ராச்சியம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப்போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெசமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.

பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும்
ஆறாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

தேவனே, பிசாசினுடைய கிரியைகளை அழிக்கவும், எங்களைத் தேவபுத்திரரும் நித்தியசீவ சுதந்தரரும் ஆக்கவும், உமது திருக்குமாரனைப் பிரசன்னமாகும்படி செய்தீரே; இந்த நம்பிக்கையைக்கொண்டிருக்கிற நாங்கள், அவர் வல்லமையோடும் மகா மகிமையோடும் மறுபடியும் பிரசன்னமாகும்போது, அவருடைய மகிமையுள்ள நித்திய இராச்சியத்தில் அவருக்கு ஒப்பானவர்களாகும்பொருட்டு; அவர் சுத்தமுள்ளவராயிருக்கிற

துபோல நாங்களும் எங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும்படி, எங்களுக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று, பிதாவாகிய தேவரீரோடும் பரிசுத்த ஆவியாகிய தேவரீரோடும், ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற அவர் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 யோ. 3. 1.

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான். பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை. பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 24. 23.

இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகா-

சிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனைமுதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்.

செப்துவகேசிமா ஞாயிறு.

அல்லது லெந்தென்னும் நாட்களுக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

கர்த்தாவே, உமது சனங்களாகிய நாங்கள் செய்கிற செபங்களைத் தயவாய்க் கேட்டு; எங்கள் குற்றங்களுக்காக நியாயமாய்த் தண்டிக்கப்படுகிற நாங்கள் உமது நாமத்துக்கு மகிமை உண்டாக உமது கிருபையினாலே விடுதலையாகும்படி செய்யவேண்டுமென்று; உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: 1 கொ. 9. 24.

பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 20. 1.

பரலோக ராச்சியம் வீட்டெசமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான்; அவர்களும் போனார்கள். மறுபடியும், ஆறாம் ஒன்பதாம் மணிவேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள்; நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில், திராட்சத்தோட்டத்துக்கு எசமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு என்றான். அப்பொழுது பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக்கொண்டு, வீட்டெசமானை நோக்கி: பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணிநேரமாத்திரம் வேலைசெய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

செக்சகெசிமா ஞாயிறு.

அல்லது லெந்தென்னும் நாட்களுக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவராகிய பராபரனே, நாங்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் நாங்கள் நம்பிக்கை வைக்கிறதில்லையென்று கண்டிருக்கிறீரே; எங்களுக்கு நேரிடும் சகல துன்பங்களுக்கும் உமது வல்லமையால் நாங்கள் விலகிக் காக்கப்படும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: 2 கொ. 11. 19.

நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்து புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே. ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே. நாங்கள் பலவீனரானதுபோல, எங்களுக்கு வந்த கனவீனத்தைக்குறித்துப் பேசுகிறேன்; ஒருவன் எதிலே துணிவுள்ளவனாயிருக்கிறானோ அதிலே நானும் துணிவுள்ளவனாயிருக்கிறேன்; இப்படிப் புத்தியீனமாய்ப் பேசுகிறேன். அவர்கள் எபிரெயரா? நானும் எபிரெயன்; அவர்கள் இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும் ஆபிரகாமின் சந்ததியான். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுய சனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய சனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை

கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவைமுதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ? நான் மேன்மைபாராட்ட வேண்டுமானால், என் பலவீனத்திற்கடுத்தவைகளைக்குறித்து மேன்மைபாராட்டுவேன். என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய்சொல்லுகிறதில்லையென்று அறிவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 8. 4.

சகல பட்டணங்களிலுமிருந்து திரளான சனங்கள் அவரிடத்தில் வந்து கூடினபோது, அவர் உவமையாகச் சொன்னது: விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை கற்பாறையின்மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்துபோயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டது. சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது என்றார். இவைகளைச் சொல்லி: கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று சத்தமிட்டுக் கூறினார். அப்பொழுது அவருடைய சீஷர்கள்: இந்த உவமையின் கருத்து என்னவென்று அவரிடத்தில் கேட்டார்கள். அதற்கு அவர்: தேவனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத்தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம். வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான். கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்பொழுது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக் காலமாத்திரம் விசுவாசித்து, சோதனைகாலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரி

யத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

கின்குவகெசிமா ஞாயிறு.

அல்லது லெந்தென்னும் நாட்களுக்கு முந்தின ஞாயிறு.

சுருக்கச்செபம்.

அன்பில்லாமல் நாங்கள் செய்கிறவைகளெல்லாம் பிரயோசனம் இல்லாதவைகளென்று எங்களுக்குக் கற்பித்திருக்கிற கர்த்தாவே, அன்பில்லாதவன் எவனோ அவன் உயிரோடிருந்தாலும் உமக்கு முன்பாகச் செத்தவனென்று எண்ணப்பட்டிருக்கிறபடியால்; தேவரீர் உம்முடைய பரிசுத்தஆவியை அனுப்பி, சகல நல் ஈவுகளிலும் உத்தம ஈவும், சமாதானமுதலிய சகல சற்குணங்களையும் இணைக்கிற கச்சையுமாயிருக்கிற அந்த அன்பை, உமது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்கள் இருதயங்களில் பொழிந்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: 1 கொ. 13. 1.

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தையுடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும்; மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலும்

குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 18. 31.

பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷ குமாரனைக்குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறச்சாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொலைசெய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது; அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். சனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்னவென்று விசாரித்தான். நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்ட வந்தபோது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே, அவருக்குப் பின்சென்றான். சனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்.

சாம்பற் புதன்கிழமை என்று பெயர் வழங்குகிற

லெங்தென்னும் நாட்களில் முதலாம் நாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, தேவரீர் சிருஷ்டித்தவைகளில் ஒன்றையும் பகையாதவரும், தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப்படுகிற யாவருக்கும் மன்னிக்கிறவருமாயிருக்கிறீர்; எங்களுடைய பாவங்களைக்குறித்து நாங்கள் துக்கித்துப் புலம்பி, எங்கள் நிர்ப்பாக்கியத்தை அறிக்கையிட்டு, சம்பூரண இரக்கமுள்ள தேவரீரிடத்தில் குறைவற்ற பாவவிமோசனத்தையும் மன்னிப்பையும் பெறத்தக்கதாக; எங்களுக்குள்ளே நொறுங்குண்ட புதிதான இருதயத்தைச் சிருஷ்டிக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ லெங்தென்னும் நாற்பது நாட்களில் அந்தந்த நாட்களுக்கு நியமித்திருக்கிற சுருக்கச்செபத்துக்குப்பின்பு இதையும் வாசிக்கவேண்டும்.

நிருபவாக்கியத்துக்காக: யோவேல், 2. 12.

நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போசன பலிகளையும் பான பலிகளையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். சனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக. கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது சனத்தைத் தப்பவிட்டுப் புறச்சாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும்; உங்கள் தேவன் எங்கே என்று புறச்சாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 6. 16.

நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

லெந்தென்னும் நாட்களில்

முதலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

எங்கள் நிமித்தம் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசஞ்செய்த கர்த்தாவே, உமது திவ்விய ஏவுதலுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து மெய்யான நீதியும் பரிசுத்தமும் உள்ளவர்களாய் நடக்கும்படி; எங்கள் சரீரம் ஆவிக்கு அடங்கத்தக்கதாய் நாங்கள் உபவாசம் செய்வதற்கு, எங்களுக்குக் கிருபை செய்தருளும். பிதாவோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற தேவரீருக்குக் கனமும் மகிமையும் உண்டாவதாக. ஆமேன்.

நிருபவாக்கியம்: 2 கொ. 6. 1.

தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன்வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். அநுக்கிரககாலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய

நாள். இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராய் விளங்கப்பண்ணுகிறோம். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்திய வசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடது பக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்; எத்தரென்னப்பட்டாலும் நிசஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 4. 1.

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும்பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய், எழுதியிருக்கிறதென்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சைபாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராச்சியங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து

கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

லெந்தென்னும் நாட்களில் இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களை இரட்சித்துக்கொள்ள நாங்கள் சக்தியற்றவர்களென்று அறிந்திருக்கிறீரே; சரீரத்துக்கு நேரிடும் எந்த உபத்திரவங்களும், ஆத்துமாவை விரோதித்துச் சேதப்படுத்தும் எந்தப் பொல்லாத நினைவுகளும் எங்களை அணுகாதபடி; புறம்பாக எங்கள் சரீரத்தையும் உள்ளாக எங்கள் ஆத்துமாவையும் காப்பாற்றவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: 1 தெச. 4. 1.

சகோதரரே, நீங்கள் இன்னின்னபிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும்வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோகஇச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து, இந்த விஷயத்தில் ஒருவனும் மீறுமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும். முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே, இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரையல்ல, தமது பரிசுத்தஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 15. 21.

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்லவென்றார். அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள். அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தையெடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எசமான்களின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

லெந்தென்னும் நாட்களில் மூன்றும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, தாழ்மையான உமது அடியாரைக் கண்ணோக்கிப்பார்த்து, நாங்கள் கொண்டிருக்கிற விருப்பங்களை நிறைவேற்றி, எல்லாச் சத்துருக்களுக்கும் விரோதமாய் மகத்துவமான உமது வலது கரத்தை நீட்டி, எங்களை இரட்சிக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 5. 1.

நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்தவாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொரு

ளாசையும், ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரம் செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படுங் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 11. 14.

இயேசு ஊமையாயிருந்த ஒரு பிசாசைத் துரத்தினார். பிசாசு புறப்பட்டுப்போனபின்பு ஊமையன் பேசினான்; சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களில் சிலர்: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். வேறு சிலர் அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டுமென்று அவரிடத்தில் கேட்டார்கள். அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த இராச்சியமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம். சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் இராச்சியம் எப்படி நிலைநிற்கும்? இப்படியிருக்க, பெயெல்செபூலைக்கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே. நான் பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிற

படியால், தேவனுடைய இராச்சியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. ஆயுதந் தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும். அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள்வானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுத வர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்த்துக்கொள்ளாதவன் சிதறடிக்கிறான். அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி, அதில் வரும்போது, அது பெருக்கிச் சோடிக்கப்பட்டிருக்கக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார். அவர் இவைகளைச் சொல்லுகையில், சனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி: உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள். அதற்கு அவர்: அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.

லெந்தென்னும் நாட்களில்

நாலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் துர்க்கிரியைகளினிமித்தம் தண்டனைக்குப் பாத்திரராயிருக்கிற எங்களுக்கு இரங்கி, உமது கிருபையால் வரும் ஆறுதலினாலே எங்களைத் தேற்றி விடுதலையாக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: கலா. 4. 21.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள். ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்களென்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்

வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையில் உண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே. ஆகார் என்பது அரபிதேசத்திலுள்ள சீனாய்மலை; அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிறாளே. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். அந்தப்படி பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது. சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்; ஆகிலும் மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல, இப்பொழுதும் நடந்துவருகிறது. அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது: அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது. இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 6. 1.

இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக்கடலின் அக்கரைக்குப் போனார். அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான சனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார். அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது. இயேசு தம்முடைய கண்களை யேறெடுத்து, திரளான சனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார். பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை சனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு: சனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள்

ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களையெடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார். அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.

லெந்தென்னும் நாட்களில்
ஐந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வல்லமையுள்ள தேவனே, உமது மிகுந்த தயவினால் உம்முடைய சனங்கள் சரீரப் பிரகாரமாகவும் ஆத்துமப் பிரகாரமாகவும் எப்பொழுதும் ஆளப்படவும் காக்கப்படவும்; அவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்க்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: எபி. 9. 11.

கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் சீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! ஆகையால், முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர்

மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 8. 46.

இயேசு சொன்னது: என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை. தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார். அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள். அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார். ஒருவன் என் வசனத்தைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசுபிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீயோ: ஒருவன் என் வசனத்தைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய். எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து, அவருடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறேன். உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, மனிதரிடத்தில் உருக்கமாய் அன்புகூர்ந்த தயவுள்ள பிதாவே, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து காட்டிய மகா தாழ்மையை எல்லா மனிதரும் பின்பற்றும்படி, அவர் எங்கள் மாம்சதேகத்தைத் தரித்துக்கொள்ளவும், சிலுவையில் மரணத்தை உத்தரிக்கவும் அவரை அனுப்பினீரே; அவர் காட்டிய பொறுமையை நாங்கள் பின்பற்றி நடக்கவும், அவருடைய உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாகவும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பிலி. 2. 5.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 27. 1.

விடியற்காலமானபோது, சகல பிரதானஆசாரியரும் சனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனைபண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். அப்பொழுது, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக் காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது

உன்பாடு என்றார்கள். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசையெடுத்து: இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி, ஆலோசனைபண்ணினபின்பு, அந்நியரை அடக்கம்பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள். இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று. இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்; தேசாதிபதி அவரை நோக்கி: நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: நீர் சொல்லுகிறபடிதான் என்றார். பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை; அதினால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான். காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று சனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது. அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான். பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ, கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ என்று கேட்டான். அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர்நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச்சொன்னாள். பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவைக் கொலைசெய்விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் சனங்களை ஏவிவிட்டார்கள். தேசாதிபதி சனங்களை நோக்கி: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரபாசை என்றார்கள். பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள். தேசாதிபதியோ: ஏன்,

என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அதற்கு அவர்கள்: அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோசனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, சனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்குச் சனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள். அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய இராசாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். போகையில் சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள். கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது, கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார். அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள். அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும்பொருட்டு, இவன் யூதருடைய இராசாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள். அப்பொழுது, அவருடைய வலதுபக்கத்தில் ஒருவனும் அவருடைய இடதுபக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். அந்த வழியாய் நடந்து

போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்றுநாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதானஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் இராசாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ: பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம் என்றார்கள். இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள். நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் திங்கள்.

நிருபவாக்கியத்துக்காக: ஏசா. 63. 1.

ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றாப்பட்டணத்திலுமிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடையவராகவும், மகத்துவமாய் உடுத்திருக்கிறவராகவும், தமது மகத்தான வல்லமையிலே எழுந்தருளினவராகவும் வருகிற

இவர் யார்? நீதியாய்ப்பேசி இரட்சிக்க வல்லவராகிய நான்தானே. உம்முடைய உடுப்புச் சிவப்பாகவும், உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள்போலவும் இருக்கிறதென்ன? நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; சனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்கொண்டேன். நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது. நான் பார்த்தேன், துணைசெய்வார் ஒருவரும் இல்லை; தாங்குவார் ஒருவருமில்லை என்று ஆச்சரியப்பட்டேன்; அப்பொழுது என் புயமே எனக்கு இரட்சிப்பாகி, என் உக்கிரமே என்னைத் தாங்கிற்று. நான் என் கோபத்திலே சனங்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை வெறியாக்கி, அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப்பண்ணினேன். கர்த்தர் எங்களுக்குச் செய்தருளின எல்லாவற்றுக்கும் தக்கதாகவும், அவர் தம்முடைய இரக்கங்களின்படியும் தம்முடைய திரளான தயவுகளின்படியும், இஸ்ரவேல் வம்சத்துக்குச் செய்த மகா நன்மைக்குத்தக்கதாகவும், கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம்பண்ணுவேன். அவர்கள் என் சனந்தானென்றும், அவர்கள் வஞ்சனை செய்யாதிருக்கும் பிள்ளைகளென்றும் சொல்லி, அவர்களுக்கு இரட்சகரானார். அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார். அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்தஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். ஆகிலும் அவர் பூர்வநாட்களையும், மோசேயையும், தம்முடைய சனத்தையும் நினைவுகூர்ந்தார்; ஆனாலும் அவர்களையும், தமது மந்தையின் மேய்ப்பனையும் சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே? அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்தஆவியை இருக்கக் கட்டளையிட்டு, மோசேயின் வலதுகையைக்கொண்டு அவர்களைத் தமது மகிமையின் புயத்தினாலே நடத்தி, தமக்கு நித்திய கீர்த்தியை உண்டாக்க அவர்களுக்கு முன்பாகத் தண்ணீரைப் பிளந்து, ஒரு குதிரை வனாந்தரவெளியிலே நடக்கிறதுபோல, அவர்கள் இடறாதபடிக்கு அவர்களை ஆழங்களில் நடக்கப்பண்ணினவர் எங்கே? கர்த்தருடைய ஆவியானவர் அவர்களைப் பள்ளத்தாக்கிலே போய் இறங்குகிற மிருகஜீவன்களைப்போல இளைப்பாறப்பண்ணினார்; இப்படியே தேவரீர், உமக்கு மகிமையுள்ள கீர்த்தியை உண்டாக்கும்படி உம்முடைய சனத்தை நடத்தினீர். தேவரீர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி, பரிசுத்தமும் மகிமையுமுள்ள

உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து பாரும், உம்முடைய வைராக்கியமும், உம்முடைய வல்லமையும் எங்கே? உம்முடைய உள்ளத்தின் கொதிப்பையும், உம்முடைய மன உருக்கத்தையும் எனக்கு முன்பாக அடக்கிக்கொள்ளுகிறீரோ? தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர்; ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல; கர்த்தாவே, நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர்; இது பூர்வகாலமுதல் உம்முடைய நாமம். கர்த்தாவே, நீர் எங்களை உம்முடைய வழிகளைவிட்டுத் தப்பிப்போகப்பண்ணி, எங்கள் இருதயத்தை உமக்குப் பயப்படாதபடிக்குக் கடினப்படுத்துவானேன்? உம்முடைய ஊழியக்காரரினிமித்தமும், உம்முடைய சுதந்தரமான கோத்திரங்களினிமித்தமும் திரும்பியருளும். பரிசுத்தமுள்ள உமது சனங்கள் கொஞ்சக்காலமாத்திரம் அதைச் சுதந்தரித்தார்கள்; எங்கள் சத்துருக்கள் உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மிதித்துப்போட்டார்கள். நாங்களே உம்முடையவர்கள், அவர்களை ஒருபொழுதும் நீர் ஆண்டதில்லை, அவர்களுக்கு உமது நாமம் தரிக்கப்பட்டதுமில்லை.

சுவிசேஷவாக்கியம்: பரி. மா. 14. 1.

இரண்டுநாளைக்குப்பின்பு புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை வந்தது. அப்பொழுது பிரதானஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி வகைதேடினார்கள். ஆகிலும் சனங்களுக்குள்ளே கலகம் உண்டாகாதபடிக்கு, பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள். அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போசனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள். அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து: இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்? இதை முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவளைக் குறித்து முறுமுறுத்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: அவளை விட்டுவிடுங்கள்; என் அவளைத் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டாகும்போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மைசெய்யலாம், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம் பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது,

பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் அவரைப் பிரதானஆசாரியருக்குக் காட்டிக்கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் அதைக் கேட்டு, சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுப்போம் என்று வாக்குத்தத்தம்பண்ணினார்கள்; அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள். அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்; அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எசமானை நீங்கள் நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள். சாயங்காலமானபோது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார். அவர்கள் பந்தியமர்ந்து போசனம்பண்ணுகையில், இயேசு அவர்களை நோக்கி: என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்கள் துக்கமடைந்து: நானோ? நானோ? என்று ஒவ்வொருவரும், அவரிடத்தில் கேட்கத்தொடங்கினார்கள். அவர் பிரதியுத்தரமாக: என்னுடனேகூடத் தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரில் ஒருவனே அவன் என்று சொல்லி; மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். அவர்கள் போசனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவ

னுடைய இராச்சியத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும், என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறல் அடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்தபின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார். அதற்குப் பேதுரு: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு, இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு அவன்: நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள். பின்பு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் செபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி; பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டுபோய், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்தவேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக்கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார். பின்பு அவர் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து செபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். அவர் மறுபடியும் போய் அந்த வார்த்தைகளையே சொல்லிச் செபம்பண்ணினார். அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள். அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். என்னைக் காட்டிக்

கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். உடனே, அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதானஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான சனங்கள், பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச்சொல்லியிருந்தான். அவன் வந்தவுடனே, அவரண்டையில் சேர்ந்து: ரபீ, ரபீ, என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள். அப்பொழுது கூடநின்றவர்களில் ஒருவன் கத்தியை உருவி, பிரதானஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான். இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது என்றார். அப்பொழுது எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியைமாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு அவர் பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள். அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான். இயேசுவை அவர்கள் பிரதானஆசாரியனிடத்தில் கொண்டுபோனார்கள்; அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடிவந்திருந்தார்கள். பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதானஆசாரியனுடைய அரமனைக்குள் வந்து, சேவகரோடேகூட உட்கார்ந்து, நெருப்பண்டையிலே குளிர்காய்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது பிரதானஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை. அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லியும், அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை. அப்பொழுது சிலர் எழுந்து, கைவேலையாகிய இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன் என்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று, அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னார்கள். அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமற்போயிற்று. அப்பொழுது பிரதானஆசாரியன் எழுந்து நடுவே நின்று, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதானஆசாரியன் அவரை நோக்கி: நீ

ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான். அதற்கு இயேசு: நான் அவர்தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். பிரதானஆசாரியன் இதைக் கேட்டவுடனே, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்களெல்லாரும்: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள். அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்; வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள். அத்தருணத்திலே பேதுரு கீழே அரமனை முற்றத்தில் இருக்கையில், பிரதானஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து, குளிர்காய்ந்துகொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய் என்றாள். அதற்கு அவன்: நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று மறுதலித்து, வெளியே வாசல் மண்டபத்துக்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று. வேலைக்காரி அவனை மறுபடியுங் கண்டு: இவன் அவர்களில் ஒருவன் என்று அருகே நின்றவர்களுக்குச் சொன்னாள். அவன் மறுபடியும் மறுதலித்தான். சற்று நேரத்துக்குப்பின்பு மறுபடியும் அருகே நிற்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து: மெய்யாகவே நீ அவர்களில் ஒருவன், நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவுகூர்ந்து, மிகவும் அழுதான்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் செவ்வாய்.

நிருபவாக்கியத்துக்காக: எசா. 50. 5.

கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்;

ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லை என்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன். என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போலப் பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும். உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன். இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும், நீங்கள் மூட்டின அக்கினிச் சுவாலையிலும் நடவுங்கள்; வேதனையில் கிடப்பீர்கள்; என் கரத்தினால் இது உங்களுக்கு உண்டாகும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மா. 15. 1.

பொழுது விடிந்தவுடனே, பிரதானஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் கூடி ஆலோசனைபண்ணி, இயேசுவைக் கட்டிக்கொண்டுபோய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான். அதற்கு அவர்: நீர் சொல்லுகிறபடிதான் என்றார். பிரதானஆசாரியர்கள் அவர்மேல் அநேகங் குற்றங்களைச் சாட்டினார்கள். அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: இதோ, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, அதற்கு நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான். காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று சனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது. கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான். சனங்கள், வழக்கத்தின்படியே தங்களுக்கு ஒருவனை விடுதலையாக்கவேண்டுமென்று சத்தமிட்டுக் கேட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள். பொறாமையினாலே பிரதானஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து, அவர்களை நோக்கி: நான் யூதருடைய இராசாவை உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான். பரபாசைத் தங்களுக்கு விடுதலையாக்கவேண்

டுமென்று சனங்கள் கேட்டுக்கொள்ளும்படி, பிரதானஆசாரியர்கள் அவர்களை ஏவிவிட்டார்கள். பிலாத்து மறுபடியும் அவர்களை நோக்கி: அப்படியானால், யூதருடைய இராசாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறையும் என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள். அதற்குப் பிலாத்து: ஏன், என்ன பொல்லாப்புச்செய்தான் என்றான். அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். அப்பொழுது பிலாத்து சனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது போர்ச்சேவகர் அவரைத் தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகையில் கொண்டுபோய், அவ்விடத்தில் போர்ச்சேவகருடைய கூட்டமுழுவதையும் கூடிவரச்செய்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி: யூதருடைய இராசாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, அவரைச் சிரசில் கோலால் அடித்து அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள். சிரேனே ஊரானும், அலெக்சாந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள். கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய், வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக்கொள்ளும்படி அவைகளைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள். அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம் மணி வேளையாயிருந்தது. அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும்பொருட்டு, யூதருடைய இராசா என்று எழுதி, சிலுவையின்மேல் கட்டினார்கள். அல்லாமலும், அவருடைய வலதுபக்கத்தில் ஒருவனும் அவருடைய இடதுபக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள். அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதனாலே நிறைவேறிற்று. அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்றுநாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே

பிரதானஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு இராசாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கட்டும் என்று சொல்லிக்கொண்டார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள். ஆறாம் மணி நேரம்முதல் ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். ஒருவன் ஓடி, கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றான். இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சீவனை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டுச் சீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் புதன்.

நிருபவாக்கியம்: எபி. 9. 16.

எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். எப்படியெனில், மரணமுண்டானபின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே. அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை. எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல சனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் சனங்களெல்லார்மேலும் தெளித்து: தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டா

காது. ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். பிரதானஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படி இருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 22. 1.

பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று. அப்பொழுது பிரதானஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, சனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகை தேடினார்கள். அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்து என்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். அவன் பிரதானஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக்குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான். அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள். அதற்கு அவன் சம்மதித்து, சனக்கூட்டம் இல்லாதவேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயம் தேடினான். பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகைநாள் வந்தது. அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் அதை எங்கே ஆயத்தம் பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற

ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும் போய், அந்த வீட்டு எசமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச்சொன்னார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள். வேளை வந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய இராச்சியத்திலே இது நிறைவேறுமளவும், நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய இராச்சியம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போசனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார். பின்பு: இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது. தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார். அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள். அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: புறச்சாதியாரின் இராசாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரஞ்செலுத்துகிறவர்களும் உபகாரிகளென்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவனல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன். மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்தி

ருந்தவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு இராச்சியத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராச்சியத்திலே என் பந்தியில் போசனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார். பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அவர் அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றுங் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். அதற்கு அவர்: இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன்; பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன். அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேறவேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைப்பற்றிய காரியங்கள் முடிவுபெறுங்காலம் வந்திருக்கிறது என்றார். அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள், அவர்: போதும் என்றார். பின்பு அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள். அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்குச் செபம்பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கட்வது என்று செபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே செபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அவர் செபம்பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணுகிறதைக் கண்டு: நீங்கள் நித்திரைபண்ணுகிறது

என்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து செபம்பண்ணுங்கள் என்றார். அவர் அப்படிப் பேசுகையில் சனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி: யூதாஸே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார். அவரைச் சூழநின்றவர்கள் நடக்கப்போகிறதைக் கண்டு: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டுவோமா என்றார்கள். அந்தப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான். அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார். பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத்தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி: ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனே கூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார். அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான். அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள் நடுவிலே உட்கார்ந்தான். அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்றாள். அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான். சற்றுநேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நான் அல்ல என்றான். எறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து: மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன் என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று. அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான். இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம்பண்ணி, அடித்தி, அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி, மற்றும் அநேக தூஷண வார்த்தைகளையும்

அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள். விடியற்காலமானபோது சனத்தின் மூப்பரும் பிரதானஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி: நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள். அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்ப மாட்டீர்கள். நான் உங்களிடத்தில் வினவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்ல மாட்டீர்கள், என்னை விடுதலைபண்ணவுமாட்டீர்கள். இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார். அப்பொழுது அவர்கள்: இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் வியாழம்.

நிருபவாக்கியம்: 1 கொ. 11, 17.

உங்களைப் புகழாமல், இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன்; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறதே. முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று சேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன். உங்களில் உத்தமர்கள் இன்னார் என்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே. நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன் சொந்தப் போசனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போசனம் பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக்குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போசனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய

உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போசனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போசனபானம்பண்ணுகிறான். இதினிமித்தமாக, உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால் என் சகோதரரே, நீங்கள் போசனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 23. 1.

அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டுபோய்: இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராசா என்றும், இராயருக்கு வரிகொடுக்கவேண்டுவதில்லை என்றும் சொல்லி, சனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள். பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடிதான் என்றார். அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் சனங்களையும் நோக்கி: இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்றான். அதற்கு அவர்கள்: இவன் கலிலேயாநாடு தொடங்கி இவ்விடம்வரைக்கும் யூதேயாதேசமெங்கும் உபதேசம்பண்ணி, சனங்களைக் கலகப்படுத்துகிறான் என்று வைராக்கியத்தோடே சொன்னார்கள். கலிலேயா என்பதைப் பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து, அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்று அறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதினிடத்திற்கு அவரை அனுப்பினான். ஏரோது

இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அற்புதத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகு நாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களைக்குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள். அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான். முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்தும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள். பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளையும் சனங்களையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: சனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றங் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே; ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான். பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச் சொன்னான். சனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள். அந்தப் பரபாஸ் என்பவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான். பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான். அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரவிட்டார்கள். அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: என், என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான். அப்படியிருந்தும் அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டே இருந்தார்கள். அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்ட சத்தம் மேற்கொண்டது. அப்பொழுது அவர்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்புசெய்து, கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் போடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக்கொண்டபடியே விடுதலையாக்கி, இயேசுவையோ அவர்கள் இஷ்டத்

துக்கு ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைக் கொண்டுபோகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள். திரள்கூட்டமான சனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்கள் என்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்கள் என்றும் சொல்லத் தொடங்குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள் என்றார். குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடேகூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப் போட்டார்கள். சனங்கள் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடனேகூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து: இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும் என்றார்கள். போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து: நீ யூதரின் இராசாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள். இவன் யூதருடைய இராசா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது. அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயமானபடி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னு

டனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது ஏறக்குறைய ஆறும் மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது. இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, சீவனை விட்டார். நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினான். இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த சனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள். அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பெரிய வெள்ளிக்கிழமை.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வானவர் தேவரீருடைய வீட்டாராகிய எங்களுக்காகக் காட்டிக்கொடுக்கப்படவும், அக்கிரமக்காரருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் மரணமடையவும் மனதாரச் சம்மதித்ததினிமித்தம், எங்களைக் கிருபையோடே கண்ணோக்கிப் பார்க்கவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

சர்வவல்லமையுள்ள அநாதி தேவனே, திருச்சபையாகிய சரீரம்முழுவதையும் உம்முடைய ஆவியினாலே ஆண்டு பரிசுத்தமாக்கிக்கொண்டு வருகிறீர். அதன் அவயவங்களாகிய ஒவ்வொருவரும் தான் அழைக்கப்பட்டிருக்கிற நிலைமையிலும் பணிவிடையிலும் உண்மையாயும் பக்தியாயும் உம்மைச் சேவிக்கும்படி, உம்முடைய பரிசுத்த சபையிலுள்ள எவ்வகையானவர்களுக்காகவும் நாங்கள் உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பங்களையும் செபங்களையும் எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் ஏற்றுக்கொண்டருளும். ஆமேன்.

எல்லா மனிதரையும் உண்டாக்கினவரும், உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும், பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறவருமாயிருக்கிற இரக்கமுள்ள தேவனே, யூதர் மகம்மதுமார்க்கத்தார் அஞ்ஞானிகள் வேதப்புரட்டர்

யாவருக்கும் இரங்கி; சகலவித அறியாமையையும் இருதயகடினத்தையும் உமது வசனத்தை அசட்டைபண்ணும் துணிகரத்தையும் அவர்களை விட்டு நீக்கி, மீதியாயிருக்கிற மெய் இஸ்ரவேலரோடேகூட அவர்கள் இரட்சிக்கப்படவும், இயேசுகிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பரிடத்தில் ஒரே மந்தையாகவும், அவர்களையும் தேவரீருடைய சபையாகிய மந்தையில் திருப்பிச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று; தேவரீரோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுவை முன்னிட்டுக் கெஞ்சிக் கேட்கிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபி. 10. 1.

நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாய் இராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்கள் உண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார். இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். அன்றியும் எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனைசெய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ,

பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார். எப்படியெனில்: அந்த நாட்களுக்குப்பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை உரைத்தபின்பு: அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலிசெலுத்தப்படுவதில்லையே. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துன்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த சலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபைகூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 19. 1.

பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய இராசாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள். பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது, சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை இராசா என்கிறவன் எவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடை என்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான். அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்தநாளும், ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் இராசா என்றான். அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் இராசாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராசா இல்லை என்றார்கள். அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்

திற்குப் புறப்பட்டுப்போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய இராசா என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது. அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய இராசா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய இராசா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள். பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான். போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக் குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள். இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான். அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில்போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.

அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முந்தின நாள்.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உமது பிரியமுள்ள குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாங்கள், எங்கள் கெட்ட இச்சைகளை இடைவிடாமல் அழித்து வருகிறதினாலே, அவரோடே அடக்கம்பண்ணப்படவும், கல்லறையையும் மரண வாசலையும் கடந்து சந்தோஷமுள்ள உயிர்த்தெழுதலை அடையவும், எங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்த உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 பே. 3. 17.

தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும். ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்துச் சலத்தினால் காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவ

னைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 27. 57.

சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள். ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதானஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகம் இருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று சனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவற்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளாகிய

ஈஸ்தர் பண்டிகை.

¶ காலைச்செப ஒழுங்கில் "கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி" என்னும் சங்கீதத்துக்குப் பதிலாக இதன் அடியில் வருகிற கீர்த்தனைகளைப் பாட அல்லது சொல்லவேண்டும்.

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே.

ஆதலால் பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல: துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். 1 கொ. 5. 7.

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை: மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்: அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்: நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ரோ. 6. 9.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து: நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

மனுஷனால் மரணம் உண்டானபடியால்: மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல: கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 1 கொ. 15. 20.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

சுருக்கச்செபம்.

உம்முடைய ஏகசுதனாகிய இயேசுகிறிஸ்துவினால் மரணத்தைச் செயித்து, நித்திய சீவவாசலைத் திறந்த சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்கு முந்திக்கொள்ளும் உமது விசேஷித்த கிருபையினால் தேவரீர் எங்கள் மனதில் நல்விருப்பங்களை உண்டுபண்ணுகிறதுபோல; இடைவிடாமல் துணைநிற்கும் கிருபையினால் அவ்விருப்பங்கள் நற்கிரியைகளாய்ப் பயன்படும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: கொலோ. 3. 1.

நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் சீவன் கிறிஸ்துவுடனே தேவ

னுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய சீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 20. 1.

வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருக்கக் கண்டாள். உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள். அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப் பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டிவைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் திங்கள்.

சுருக்கச்செபம்.

உம்முடைய எகசுதனாகிய இயேசுகிறிஸ்துவினால் மரணத்தைச் செயித்து, நித்திய சீவவாசலைத் திறந்த சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்கு முந்திக்கொள்ளும் உமது விசேஷித்த கிருபையினால் தேவரீர் எங்கள் மனதில் நல்விருப்பங்களை உண்டுபண்ணுகிறதுபோல; இடைவிடாமல்

துணைநிற்கும் கிருபையினால் அவ்விருப்பங்கள் நற்கிரியைகளாய்ப் பயன்படும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 10. 34.

பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்றும், எந்தச் சனத்திலானாலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. யோவான் ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயாநாடு முதற்கொண்டு யூதேயாதேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம்நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்; ஆயினும் எல்லாச் சனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று சனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 24. 13.

அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு எழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள். போகையில் இந்த வர்த்தமானங்கள் யாவையுங்குறித்து அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். இப்படி அவர்கள் பேசி,

சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார்; ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான். அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக்குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் சனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள். அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது; ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப் போய், அவருடைய சரீரத்தைக் காணாமல், திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள். அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப்போய், ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்றார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர்போலக் காண்பித்தார். அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார். அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வாதஞ்செய்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டினபொழுது, நம்முடைய

இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு; அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப் போய், பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக்கண்டு: கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக்கேட்டு, வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்.

உயிர்த்தேழுந்த திருநாளுக்குப் பின்வரும் சேவ்வாய்.

சுருக்கச்செபம்.

உம்முடைய ஏகசுதனாகிய இயேசுகிறிஸ்துவினால் மரணத்தைச் செயித்து, நித்திய சீவ வாசலைத் திறந்த சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்கு முந்திக்கொள்ளும் உமது விசேஷித்த கிருபையினால் தேவரீர் எங்கள் மனதில் நல்விருப்பங்களை உண்டுபண்ணுகிறதுபோல; இடைவிடாமல் துணைநிற்கும் கிருபையினால் அவ்விருப்பங்கள் நற்கிரியைகளாய்ப் பயன்படும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 13 26.

சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள். மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள். அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள். தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். தம்முடனேகூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேகநாள் தரிசனமானார்; அவர்களே சனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள். நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைச் ஜெனிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்

செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம். இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம்பற்றினார். அன்றியும், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர் என்று வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது. தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்தபின்பு, நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான்; தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை. ஆதலால் சகோதரரே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது. அன்றியும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே: அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 24. 36.

இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசுதாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்: புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்குமுன்பாகப் புசித்து, அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும்

தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து, அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும்
முதலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள பிதாவே, எங்கள் பாவங்களுக்காக மரிக்கவும், நாங்கள் நீதிமான்களாவதற்காக உயிர்த்தெழுந்திருக்கவும் உமது ஒரே குமாரனைத் தந்தருளினீரே; நாங்கள் எப்பொழுதும் பரிசுத்த நடக்கையோடும் உண்மையோடும் உமக்கு ஊழியஞ்செய்யும்படி, துர்க்குணமும் பொல்லாப்பும் என்னும் புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போட, உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 யோ. 5. 4.

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவரே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தைச் செயிக்கிறவன் யார்? இயேசுகிறிஸ்துவாகிய இவரே சலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; சலத்தினாலேமாத்திரமல்ல, சலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர். [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்; பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே] சாட்சியிடுகிறவைகள் மூன்று; ஆவி, சலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த

சாட்சி இதுவே. தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய சீவனைத் தந்திருக்கிறார், அந்தச் சீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் சீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் சீவன் இல்லாதவன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 20. 19.

வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்; எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவம் நீக்கும் பலியாகவும், தேவபக்தியுள்ள நடக்கைக்கு மாதிரியாகவும், உமது குமாரனைத் தந்தருளினீரே; அவர் அருளிய விலைமதிக்கப்படாத உபகாரத்தை நாங்கள் எப்பொழுதும் நன்றியறிதலோடே பெற்றுக்கொள்ளவும், அவருடைய மகா பரிசுத்த நடக்கையின் அடிச்சுவடுகளைப் பின்தொடரும்படி நாள்தோறும் பிரயாசப்படவும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 பே. 2. 19.

தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால், அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 10. 11.

இயேசு சொன்னது: நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனானபடியால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் சீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும்
மூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

வழிதப்பினவர்கள் நீதிமார்க்கத்தில் திரும்பிவரும்படி, உமது சத்தியத்தின் ஒளியைக் காட்டுகிற சர்வவல்லமையுள்ள தேவனே, கிறிஸ்து மார்க்கத்தின் ஐக்கியத்தில் சேர்க்கப்பட்ட யாவரும் தங்கள் மார்க்கத்துக்கு ஏற்காதவைகளை விலக்கிப்போடவும், அதற்கேற்ற யாவையும் பின்பற்றி நடக்கவும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 பே. 2. 11.

பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறச்சாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள இராசாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; இராசாவைக் கனம்பண்ணுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 16. 16.

இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னது: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார். அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்

பீர்கள் என்றும், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதுமன்றி, கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள். அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி: கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்ச்க் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ? மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளை பெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தான் என்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும்
நாலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, பாவிகளுடைய அடங்காத சித்தத்தையும் ஆசாபாசங்களையும் அடக்கி ஆளுகிறவரே, பலவித மாறுதலுள்ள இவ்வுலகத்தில் நாங்கள் இருக்கையில் எங்கள் இருதயம் மெய்ச்சந்தோஷங்களுள்ள மேலுலகத்தைப் பற்றிக்கொண்டு உறுதியாய் நிலைத்திருக்கும்படி; தேவரீர் கற்பித்தவைகளை நாங்கள் நேசிக்கவும், நீர் வாக்குத்தத்தம் பண்ணினவைகளை விரும்பவும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்முடைய சனமாகிய எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. யாக். 1. 17.

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லை.

அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 16. 5.

இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னது: இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீர் என்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும்
ஐந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சகல நன்மைகளுக்கும் காரணராகிய கடவுளே, தாழ்மையுள்ள உமது அடியாராகிய நாங்கள் உமது பரிசுத்தமான ஏவுதலினால் நற்காரியங்களைச் சிந்திக்கவும், உமது இரக்கமான நடத்துதலினால் அவைகளை நிறைவேற்றவும், எங்களுக்கு அருள்புரியவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. யாக். 1. 22.

நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு, திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியைசெய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

சுவிசேஷவாக்கியப்: பரி. யோ. 16. 23.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக் குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளில்

நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தைச் செயித்தேன் என்றார்.

கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது ஒரேபேறான குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்து பரமண்டலத்துக்கு எழுந்தருளிப்போனதை விசுவாசிக்கிற நாங்கள் இருதயத்தினாலும் மனதினாலும் அவ்விடத்துக்கேறி, அவரோடே இடைவிடாமல் வாசமாயிருக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 1. 1.

தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்டபின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தைப் பண்ணினேன். அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய இராச்சியத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் சலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்; ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா இராச்சியத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மா. 16. 14.

பதினொருவரும் போசனபந்தியிலிருக்கையில் இயேசு அவர்களுக்குத் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள்

சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

கிறிஸ்து பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

மகிமையின் இராசாவாகிய தேவனே, உம்முடைய ஏக சுதனாகிய இயேசுகிறிஸ்துவை மிகுந்த வெற்றிச்சிறப்போடு உமது பரம இராச்சியத்துக்கு எழுந்தருளச் செய்தீரே; எங்களைத் திக்கற்றவர்களாய் விடாமல், உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திற்கு அனுப்பி எங்களை தேற்றும்படி, எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து முந்திப்போயிருக்கிற அவ்விடத்திற்கே எங்களையும் உயர்த்தியருள வேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: பரி. 1 பே. 4. 7.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, செபம்பண்ணுவதற்குச் சாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும். முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 15. 26: 16. 1—4.

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்ற

ரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.—நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் உங்களைச் செபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும். அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.

பரிசுத்த ஆவியின் திருநாள்.

சுருக்கச்செபம்.

தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி, அவருடைய ஒளியினாலே விசுவாசமுள்ள உம்முடைய சனத்தின் இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தீரே; அந்த ஆவியினாலே நாங்கள் எல்லாக் காரியங்களையுங்குறித்து நிதானமாய் யோசிக்கவும், அவருடைய பரிசுத்தத் தேற்றரவினாலே இடைவிடாமல் சந்தோஷிக்கவும் கட்டளையிட வேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 2. 1.

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான சனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள்

பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக்கேட்கிறோமே, இதெப்படி? பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனேபட்டணத்தைச் சுற்றியிருக்கிற லீபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும், கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே என்றார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 14. 15.

இயேசு தமது சீஷர்களுக்குச் சொன்னது: நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள். நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். ஸ்காரியோத்து அல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணம் என்ன என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்னதெல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. நான் போவேன் என்றும், திரும்ப உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக்குறித்துச் சந்தோஷப்படுவீர்கள்; ஏனெனில், என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும்.

பரிசுத்த ஆவியின் திருநாளுக்குப் பின்வரும் திங்கள்.

சுருக்கச்செபம்.

தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி, அவருடைய ஒளியினாலே விசுவாசமுள்ள உம்முடைய சனத்தின் இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தீரே; அந்த ஆவியினாலே நாங்கள் எல்லாக் காரியங்களையுங்குறித்து நிதானமாய் யோசிக்கவும், அவருடைய பரிசுத்தத் தேற்றரவினாலே இடைவிடாமல் சந்தோஷிக்கவும் கட்டளையிட வேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 10. 34.

பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்றும், எந்தச் சனத்திலானாலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய்

அறிந்திருக்கிறேன். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே. யோவான் ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தபின்பு, கலிலேயாநாடு முதற்கொண்டு யூதேயாதேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்; ஆயினும் எல்லாச் சனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்று சனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறச்சாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு: நம்மைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 3. 16.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை

உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்குசெய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.

பரிசுத்த ஆவியின் திருநாளுக்குப்
பின்வரும் செவ்வாய்.

சுருக்கச்செபம்.

தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி, அவருடைய ஒளியினாலே விசுவாசமுள்ள உம்முடைய சனத்தின் இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தீரே; அந்த ஆவியினாலே நாங்கள் எல்லாக் காரியங்களையுங்குறித்து நிதானமாய் யோசிக்கவும், அவருடைய பரிசுத்தத் தேற்றரவினாலே இடைவிடாமல் சந்தோஷிக்கவும் கட்டளையிடவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 8. 14.

சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபோது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காகச் செபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 10. 1.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அன்னியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டு ஓடிப்போம் என்றார். இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை. ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானே அன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்குச் சீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, மெய்விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு மகிமைபொருந்திய நித்திய திரித்துவத்தை அறிக்கையிடவும், வல்லமை பொருந்திய திவ்விய மகத்துவத்தை ஏகத்துவமாக வணங்கவும், உமது அடியாராகிய எங்களுக்குக் கிருபைசெய்திருக்கிறீரே; இந்த விசுவாசத்திலே எங்களை உறுதிப்படுத்தி, இதற்கு விரோதமான யாவற்றிற்கும் எப்பொழுதும் விலக்கிக் காப்பாற்றவேண்டுமென்று, சதாகாலமும் ஒரே தேவனாகச் சீவித்து அரசாளுகிற உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: வெளி. 4. 1.

இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறி வா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது. உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்கள் இருந்தன; இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரம் தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடல் இருந்தது; அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு சீவன்கள் இருந்தன, அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. முதலாம் சீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் சீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் சீவன் மனுஷமுகம்போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் சீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தன. அந்த நான்கு சீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. மேலும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்தச் சீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது, இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து: கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 3. 1.

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு: இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனும் இல்லை. சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

உம்மிடத்தில் நம்பிக்கைவைக்கிற யாவருக்கும் பெலனாயிருக்கிற தேவனே, எங்கள் செபங்களைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளும். சாவுக்கினமான எங்கள் சுபாவ பலவீனத்தினாலே, தேவரீரால் அன்றி, நாங்கள் யாதொரு நற்காரியத்தையும் செய்யத் திராணியற்றவர்களாயிருக்கிறபடியால், நாங்கள் உமது கற்பனைகளைக் கைக்கொண்டு மனதினாலும் செய்கையினாலும் உமக்குப் பிரியமுள்ளவர்களாய் நடக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபையினால் சகாயம் செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 யோ. 4. 7.

பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில்

நிலைத்திருக்கிறார். நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். அன்பிலே பயம் இல்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 16. 19.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிச்சுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங்காலத்தில் உன் நன்மைகளை அநுபவித்தாய், லாசரு அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்மைப் பற்றிய உறுதியான பயபக்தியிலும் அன்பிலும் நீர் வளர்க்கிறவர்களைத் தவறாமல் என்றைக்கும் ஆதரித்து ஆளுகிறீரே; எங்களை உமது தயவுள்ள விசாரணையினால் காப்பாற்றி, நாங்கள் எப்பொழுதும் உம்முடைய பரிசுத்த நாமத்தைப்பற்றிய பயபக்தியும் அன்பும் உள்ளவர்களாயிருக்கும்படி செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: பரி. 1 யோ. 3. 13.

என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள். நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கிச் சீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகன் எவனோ அவனுக்குள் நித்தியசீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள். அவர் தம்முடைய சீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காகச் சீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும்

அன்பு கூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்கு உரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 14. 16.

ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்துவேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள், என்று சொல்லென்று அவனை அனுப்பினான். அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்கவேண்டும், எனக்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப்பார்க்கப் போகிறேன், எனக்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எசமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெசமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான். ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எசமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாகச் சனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா; அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
மூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, எங்களுக்கு இரக்கமாய்ச் செவிகொடுத்தருளும்; செபம்பண்ணுகிறதற்குப் பூரணமான விருப்பத்தை எங்களுக்குத் தந்திருக்கிறீர், சகல மோசங்களிலும் துன்பங்களிலும் நின்று உமது பலத்த ஒத்தாசையினாலே எங்களைக் காப்பாற்றித் தேற்றவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: பரி. 1 பே. 5. 5.

நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் செலுத்திவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக. அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 15. 1.

சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது பரிசேயரும் வேத

பாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள். அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது, உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் தேடித்திரியானோ? கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடேகூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா? அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் சாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து: காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடேகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் நாலாம் ஞாயிறு.

சருக்கச்செபம்.

உம்மிடத்தில் நம்பிக்கைவைக்கிற யாவரையும் காப்பாற்றுகிறவராகிய தேவனே, உம்மாலேயன்றி யாதொன்றும் பெலனாயும் யாதொன்றும் பரிசுத்தமாயும் இராது. பரமபிதாவாகிய தேவரீர் எங்களை ஆளுகிறவரும் வழிநடத்துகிறவருமாயிருப்பதினால், நாங்கள் கடைசியில் நித்தியமானவைகளை இழந்துபோகாதபடிக்கு, அநித்தியமானவைகளைக் கடந்து செல்ல, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் உம்முடைய இரக்கத்தை மேன்மேலும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: ரோ. 8. 18.

இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 6. 36.

உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். பின்னும் அவர் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமா? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா? சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவன் அல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போல் இருப்பான். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? அல்லது நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரனை நோக்கி: சகோதரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்

ஐந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்முடைய திருச்சபை நிறைந்த தேவபக்தியுள்ள அமரிக்கையோடே உமக்குச் சந்தோஷமாய் ஊழியஞ்செய்யும்படி, இவ்வுலக சம்பவங்களை உமது ஆளுகையினால் சமாதானமாய் நடத்தியருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. 1 பே. 3. 8.

நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். சீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக் கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து, கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 5. 1.

இயேசு கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான சனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன் பிடிக்கிறவர்கள் அவைகளைவிட்டு இறங்கி, வலைகளை அலசிக்கொண்டிருந்

தார்கள். அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, சனங்களுக்குப் போதகம்பண்ணினார். அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு, சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். சீமோன் பேதுரு அதைக் கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போகவேண்டும் என்றான். அவர்கள் திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம், அவனுக்கும் அவனோடேகூட இருந்த யாவருக்கும் பிரமிப்பு உண்டானபடியினால் அப்படிச் சொன்னான். சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்

ஆறாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

உம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு மனோவாக்குக்கெட்டாத நன்மைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிற தேவனே, நாங்கள் எல்லாவற்றிலும் அதிகமாய் உம்மிடத்திலே அன்புகூரவும், நாங்கள் விரும்புகிற எல்லாவற்றிற்கும் மேற்பட்ட உம்முடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ளவும், உம்மைப் பற்றும் அன்பாகிய வரப்பிரசாதத்தை எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்கள் இருதயத்தில் பொழிந்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: ரோ. 6. 3.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான சீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 5. 20.

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம்பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத்தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
ஏழாம் ஞாயிரு.

சுருக்கச்செபம்.

சர்வ அதிகாரமும் வல்லமையுமுடைய கர்த்தாவே, சகல நன்மைகளுக்கும் காரணரே, உமது நாமத்தை நேசிக்கும் அன்பை எங்கள் இருதயத்தில் பொருத்தி, மெய்த்தேவபக்தியை எங்களுக்குள்ளே வளரப்பண்ணி, சகல நன்மையினாலும் எங்களை ஆதரித்து, உமது மிகுந்த இரக்கத்தினாலே இவைகளில் எங்களை நிலைநிறுத்தவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: ரோ. 6. 19.

உங்கள் மாம்ச பெலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியசீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய சீவன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மா. 8. 1.

அந்த நாட்களிலே திரளான சனங்கள் கூடிவந்திருக்கையில், அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றும் இல்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரை

அழைத்து: சனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்று நாளாய்ச் சாப்பிட ஒன்றும் இல்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்துபோவார்களே என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள்: இந்த வனாந்தரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனைபேர்களைத் திருப்தியாக்கக்கூடும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்கள் உண்டு என்றார்கள். அப்பொழுது அவர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அவர்கள் சனங்களுக்குப் பரிமாறினார்கள். சில சிறு மீன்களும் அவர்களிடத்தில் இருந்தது; அவர் அவைகளையும் ஆசீர்வதித்து அவர்களுக்குப் பரிமாறும்படி சொன்னார். அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள். சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம்பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் தவறாத விசாரணையினாலே நடத்துகிற தேவனே, தீமையானவைகள் எல்லாவற்றையும் எங்களை விட்டு விலக்கி, நன்மையானவைகள் எல்லாவற்றையும் எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: ரோ. 8. 12.

சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகள் அல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம்

தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 7. 15.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓனாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் பரலோகராச்சியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று மாத்திரம் சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் ஒன்பதாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்மாலேயன்றி நன்மையானதொன்றையும் செய்யத் திராணியற்றவர்களாகிய நாங்கள் உமது சித்தத்தின்படி நடக்க உம்மாலே திராணியுள்ளவர்களாகும்படி, செம்மையானவைகளை எப்பொழுதும் சிந்திக்கவும் செய்யவும் தக்க மனதை எங்களுக்குத் தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 கொ. 10. 1.

சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்

பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போசனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடே கூடச் சென்ற ஞானக் கல்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கல்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. சனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள். அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 16. 1.

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் தன் எசமானுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறதாக எசமானுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது எசமான் அவனை வரவழைத்து: உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கையொப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாது என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன்: நான் என்ன செய்வேன், என் எசமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலன் இல்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். உக்கிராண விசாரிப்பை விட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் எற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்ன

தென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு; தன் எசமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து, முதலாவது வந்தவனை நோக்கி: நீ என் எசமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான். அவன்: நூறு குடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான். அவன்: நூறு கலம் கோதுமை என்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான். அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எசமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
பத்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உமது அடியார் செய்யும் செபங்களுக்கு இரக்கமாய்ச் செவிகொடுத்து, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறவைகளைப் பெறத்தக்கதாக, உமக்குச் சித்தமானவைகளையே கேட்டுக்கொள்ளும்படி, எங்கள் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 கொ. 12. 1.

சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமே. ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற

தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோசனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 19. 41.

*அ*வர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டு அழுது: உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்! இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார். பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கி: என்னுடைய வீடு செபவீடாய் இருக்கிறதென்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார். அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதினோராம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

பராபரனே, மன உருக்கத்தையும் இரக்கத்தையும் காட்டுகிறதினால் உமது சர்வவல்லமையை முக்கியமாய் விளங்கப்பண்ணுகிறீர்; நாங்கள் உமது கற்பனைகளின் வழியாய் ஓடி, நீர் அருளின வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ளவும், உமது பரம பொக்கிஷத்திற்குப் பங்குள்ளவர்களாகவும், எங்களுக்கு வேண்டிய கிருபையைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் அநுக்கிரகஞ்செய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 கொ. 15. 1.

சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரை அடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும்; அதன்பின்பு அப்போஸ்தலர் எல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும்பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலன் என்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது. ஆகையால் நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்து வருகிறோம், நீங்களும் இப்படியே விசுவாசித்திருக்கிறீர்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 18. 9.

தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்: இரண்டு மனுஷர் செபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் இப்படிப்பட்ட மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்

தியத்திலெல்லாம் தசம பாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே செபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவன் அல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பன்னிரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் செபம்பண்ணும் முன்னே எங்கள் செபத்தைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறீர்; நாங்கள் விரும்புகிறதிலும் பெறத்தக்கதிலும் அதிகமாய்க் கொடுத்துவருகிறீர்; எங்கள்மேல் உமது இரக்கத்தைச் சம்பூரணமாய்ப் பொழிந்தருளி, எங்கள் மனச்சாட்சிக்குப் பயமுண்டாக்குகிற குற்றங்களை மன்னித்து; உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினாலும் மத்தியஸ்தத்தினாலும் மாத்திரம் கேட்டுக்கொள்ளக்கூடிய நன்மைகளை எங்களுக்குத் தந்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: 2 கொ. 3. 4.

நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம். எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது. எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே. ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

சுவிசேஷவாக்கியம்: பரி. மா. 7. 31.

இயேசு தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது, அவர் அவனைச் சனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு; வானத்தை அண்ணாந்துபார்த்து, பெருமூச்சு விட்டு: எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான். அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்பண்ணி, எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதின்மூன்றும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையும் இரக்கமுமுள்ள தேவனே, விசுவாசமுள்ள உம்முடைய சனங்கள் உண்மையும் உத்தமமுமாய் உமக்கு ஊழியஞ்செய்கிறது உம்முடைய ஈவாகவே இருக்கிறது. தேவரீர் வாக்குத்தத்தஞ்செய்த பரம நன்மைகளை மறுமையில் நாங்கள் தவறாமல் பெற்றுக்கொள்ளத் தக்கதாக, இம்மையில் உமக்கு உண்மையுள்ள ஊழியஞ்செய்ய அநுக்கிரகிக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: கலா. 3. 16.

ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே. ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்

துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது. அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே. அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்கு உரியவன் அல்ல, தேவனோ ஒருவர். அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே. அப்படியிராதபடியால், இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 10. 23.

நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார்? அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூர்வதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி: நிதானமாய் உத்தரவுசொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார். அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான். இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள்.

அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதினான்காம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்தியதேவனே, விசுவாசமும் நம்பிக்கையும் அன்பும் எங்களுக்குள்ளே பெருகச்செய்து, தேவரீர் வாக்குத்தத்தம்பண்ணுகிறவைகளை நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு, தேவரீர் கற்பிக்கிறவைகளை நாங்கள் நேசிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: கலா. 5. 16.

பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கு ஏற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்

கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 17. 11.

இயேசு எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணுகையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார். அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக் காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
பதினைந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, என்றுமுள்ள உமது கிருபையினால் உமது திருச்சபையைக் காப்பாற்றியருளும்; உம்மாலேயன்றி பலவீன மனுஷன் நிற்கமாட்டாமல் விழுவானாகையால், தீமையானவைகள் எல்லாவற்றிற்கும் உம்முடைய ஒத்தாசையினால் எப்பொழுதும் எங்களை விலக்கிக்காத்து, இரட்சிப்புக்கேதுவானவைகள் எல்லாவற்றிலும் எங்களை நடத்தியருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: கலா. 6. 11.

என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேன் என்று பாருங்கள். மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம் பண்ணுகிறார்கள். விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் இருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக. இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தமுண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன். சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 6. 24.

இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் சீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் சீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன?

காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்பவிசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
பதினாறும் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உமது திருச்சபை உம்முடைய ஆதரவில்லாமல் மோசத்துக்கு விலகிச் சுகமாயிருக்கக் கூடாதாகையால், உமது சகாயத்தினாலும் தயவினாலும் அதை என்றென்றைக்கும் காப்பாற்றி, இடைவிடாத உமது இரக்கத்தினாலே அதைச் சுத்திகரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 3. 13.

உங்கள்நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே. இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள குடும்பத்தாரெல்லாருக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின்மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 7. 11.

மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான சனங்களும் அவருடனேகூடப் போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு சனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப்பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது சனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
பதினேழாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, சகல நற்கிரியைகளையும் நாங்கள் இடைவிடாமல் உற்சாக மனதோடே செய்துவரும்படி, உமது கிருபை எப்பொழுதும் எங்களுக்கு முன்செல்லவும் பின்தொடரவும் கட்டளையிடவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 4. 1.

கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி என்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்குச் சாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே, நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு, அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 14. 1.

ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே இயேசு போசனம்பண்ணும்படிக்குப் போயிருந்தார். அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோ என்று சனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள். இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார் அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி அனுப்பிவிட்டு; அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார். அதற்கு உத்தரவுசொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று. விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான். அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும். நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு; அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனேகூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனம் உண்டாகும். தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பதினெட்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உலகத்தினாலும் மாம்சத்தினாலும் பிசாசினாலும் நேரிடும் சோதனைகளுக்கு எதிர்த்துநிற்கவும், சுத்த இருதயத்தோடும் சுத்த மனதோடும் ஒரே தேவனாகிய உம்மைப் பின்பற்றி நடக்கவும், உம்முடைய சனமாகிய எங்களுக்குக் கிருபை தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 கொ. 1. 4.

கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 22. 34.

இயேசு சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூர்வாயாக, இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூர்வதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளில் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு

அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் பத்தொன்பதாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

பராபரனே, உம்மாலேயன்றி, நாங்கள் உமக்குப் பிரியமாய் நடக்கத் திராணியற்றவர்களாய் இருக்கிறபடியினால், தேவரீர் எங்களுக்கு இரங்கி எல்லாக் காரியங்களிலேயும் உம்முடைய பரிசுத்தஆவி எங்கள் இருதயத்தை நடத்தி ஆண்டுகொள்ளும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 4. 17.

கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறச்சாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய சீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடி

யால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோசனம் உண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 9. 1.

இயேசு படவில் ஏறி, இக்கரைப்பட்டு, தம்முடைய பட்டணத்திற்கு வந்தார். அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள். இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறது என்ன? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நட என்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான். சனங்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் இருபதாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள தேவனே, எங்களுக்குக் கேடுண்டாக்குகிற எல்லாக் காரியங்களுக்கும் உமது பூரண கிருபையினால் எங்களை விலக்கிக் காத்து; நாங்கள் சரீரத்தின்படியேயும் ஆத்துமத்தின்படியேயும் ஆயத்தப்பட்டவர்களாய்த் தேவரீருக்குச் சித்தமானவைகளை உற்சாகத்தோடே நிறைவேற்ற, கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 5. 15.

நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபானவெறிகொள்ளாமல்; ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 22. 1.

இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்: பரலோக ராச்சியம் தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஒரு இராசாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்துக்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள்

அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். இராசா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி இராசா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேச்சற்றிருந்தான். அப்பொழுது, இராசா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங் காலும் கட்டிக்கொண்டு போய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் இருபத்தோராம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

இரக்கமுள்ள ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிற சனமாகிய நாங்கள் சகல பாவங்களும் அறச் சுத்திகரிக்கப்படுவதற்கும், அமைதலான மனதோடே உமக்கு ஊழியஞ்செய்வதற்கும், எங்களுக்குப் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் அருளிச்செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 6. 10.

என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார

லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு; ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியம் என்னும் தலைச்சீராவையும், தேவனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே செபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப் பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து, சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 4. 46.

கப்பர்நகூமிலே இராசாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். அதற்கு இராசாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டுவந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். அப்பொழுது: எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணம் உண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று எழாம்மணி நேரத்தில் சுரம் அவனை விட்டது என்றார்

கள். உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டார் அனைவரும் விசுவாசித்தார்கள். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்தபின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் இருபத்திரண்டாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உமது நாமத்துக்கு மகிமை உண்டாக உமது குடும்பமாகிய திருச்சபை உம்மாலே காக்கப்பட்டுச் சகல உபத்திரவங்களுக்கும் நீங்கலாகி, நற்கிரியைகளினால் உமக்குப் பணிவாய் ஊழியஞ்செய்து வரும்படி, அதை எப்பொழுதும் தேவபக்தியுள்ளதாகக் காப்பாற்றியருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: பிலி. 1. 3.

சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார் என்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்லி அதைத் திடப்படுத்தி வருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால், உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்கள் எல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாய் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்கள் எல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி. மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 18. 21.

பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரம் மட்டுமோ? என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில், பரலோக ராச்சியம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராசாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்கும் அளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபம் அடைந்து அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்கும் அளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
இருபத்துமூன்றாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

எங்களுக்கு அடைக்கலமும் பெலனுமான தேவனே, தேவபக்திக்குக் காரணரே, உமது திருச்சபை செய்யும் பக்தியுள்ள செபங்களைக் கேட்டருளி, விசுவாசத்தோடு நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறவைகளைச் சம்பூரணமாய்ப் பெற்றுக்கொள்ள, கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: பிலி. 3. 17.

சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 22. 15.

அப்பொழுது, பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனைபண்ணி, தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவர் என்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவர் என்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவை இல்லை என்றும் அறிந்திருக்கிறோம். ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள். இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார். அவர்கள் ஒரு

பணத்தை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்விட்டார்கள்.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
இருபத்துநாலாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவராகிய பரமபிதாவே, உமது சனமாகிய நாங்கள் பெலவீனத்தினால் செய்துவந்த பாவங்களாகிய கட்டுகளை அவிழ்த்து, உமது பூரண தயவினால் எங்களை விடுதலையாக்கி; எங்கள் பாவங்களை விமோசனம் செய்தருளவேண்டுமென்று, எங்கள் கிருபையுள்ள கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியம்: கொலோ. 1. 3.

கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நாங்கள் கேள்விப்பட்டு, பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையின் நிமித்தம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம். அந்த நம்பிக்கையைக்குறித்து, நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு, தேவ கிருபையைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது; அதை எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்; ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான். இதின் நிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் செபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே

கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 9. 18.

இயேசு இவைகளை அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில், தலைவன் ஒருவன் வந்து அவரைப் பணிந்து: என் மகள் இப்பொழுதுதான் மரித்துப்போனாள்; ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான். இயேசு எழுந்து, தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார். அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ: நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரமுதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள். இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற சனங்களையும் கண்டு: விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள். சனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறு பெண்ணின் கையைப் பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள். இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும்
இருபத்தைந்தாம் ஞாயிறு.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிற சனமாகிய நாங்கள் நற்கிரியைகளாகிய கனிகளைச் சம்பூரணமாய்க் கொடுத்து, உம்மிடத்தில் பலனைச் சம்பூரணமாய்ப் பெறும்படி, எங்கள் மனதை எழுப்பியருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: எரே. 23. 5.

இதோ, நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் இராசாவாயிருந்து, ஞானமாய் இராசரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும்

நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே. ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணாமல், இஸ்ரவேல் வீட்டின் சந்ததியாரைத் தங்கள் சுயதேசத்தில் குடியிருக்கும்படிக்கு வடதேசத்திலும், நான் அவர்களைத் துரத்தியிருந்த எல்லாத் தேசங்களிலும் இருந்து அழைத்து வழிநடத்திக்கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 6. 5.

இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான சனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார். பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை சனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு: சனங்களை உட்கார வையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார். அவர்கள் திருப்தி அடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.

¶ அட்வெந்தென்னும் ஞாயிறுக்கு முன்பு வேறு ஞாயிறுகள் வந்தால், இவ்விடத்திலே சுருக்கச்செபமும் நிருப சுவிசேஷவாக்கியங்களும் கண்டிராததினால், பிரசன்னத் திருநாளுக்குப் பின்வருகிற ஞாயிறுகளில் அப்பொழுது வாசியாமல் விட்டிருந்த ஞாயிறுகளின் சுருக்கச்செபம் முதலியவைகளை எடுத்து வாசிக்கவேண்டும். இவ்விருபத்தைந்து ஞாயிறுகளுக்கு ஞாயிறுகள் குறைந்தால், குறைந்த ஞாயிறுகளின் சுருக்கச்செபம் முதலியவைகளை வாசிக்கவேண்டியதில்லை. எப்படியும், இவ்விருபத்தைந்தாம் ஞாயிறின் சுருக்கச்செபம் நிருப சுவிசேஷவாக்கியம் அட்வெந்தென்னும் ஞாயிறுக்கு முன்வரும் ஞாயிறில் வாசிக்கவேண்டும்.

பரிசுத்த அந்திரேயாவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து அழைத்தபோது, உமது பரிசுத்த அப்போஸ்தலனாகிய அந்திரேயா உற்சாகமாய்க் கீழ்ப்படிந்து, தாமதியாமல் அவருக்குப் பின்செல்லும்படி தேவரீர் கிருபைபுரிந்ததுபோல; உமது பரிசுத்த வசனத்தினால் அழைக்கப்பட்டிருக்கிற நாங்களும் இப்பொழுதே உம்முடைய பரிசுத்த கற்பனைகளை நிறைவேற்றுவதற்கு எங்களை ஒப்புக்கொடுக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: ரோ. 10. 9.

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு

எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன். கேள்விப்பட்டார்கள்; அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே. இஸ்ரவேலர் அதை அறியவில்லையா என்று கேட்கிறேன். அறிந்தார்கள். முதலாவது, மோசே: எனக்குச் சனங்கள் அல்லாதவர்களைக்கொண்டு நான் உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன்; புத்தியீனமுள்ள சனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் என்றான். அல்லாமலும் ஏசாயா: என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன், என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்று தைரியங்கொண்டு சொல்லுகிறான். இஸ்ரவேலரைக்குறித்தோ: கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப்பேசுகிறவர்களுமாயிருக்கிற சனங்களிடத்திற்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 4. 18.

இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளைவிட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம்விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

பரிசுத்த அப்போஸ்தலனாகிய தோமாவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, கிறிஸ்துமார்க்க சத்தியம் உறுதிப்படும்படி, உமது குமாரனுடைய உயிர்த்தெழுதலைக்குறித்து உமது பரிசுத்த அப்போஸ்தலனாகிய தோமா சந்தேகங்கொள்ள இடங்கொடுத்தீரே; உமக்குமுன்பாக எங்களுடைய விசுவாசம் குறைவுள்ளதென்று

ஒருக்காலும் கண்டிக்கப்படாதபடிக்கு, நாங்கள் எவ்வளவேனும் சந்தேகங்கொள்ளாமல் உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பூரணமாய் விசுவாசிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிற விண்ணப்பத்தை இயேசுகிறிஸ்துவினிமித்தம் கேட்டருளும்; கர்த்தாவே, அவருக்கும் உமக்கும் பரிசுத்தஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் சகல கனமும் மகிமையும் உண்டாவதாக. ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 2. 19.

நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 20. 24.

இயேசு வந்திருந்தபோது, பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலை இட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டு நாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்குமுன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியசீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்த பவுல் குணப்பட்ட திருநாள்.

சுருக்கச்செபம்.

உத்தம அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலின் பிரசங்கத்தினால் சுவிசேஷத்தின் வெளிச்சம் உலகமெங்கும் பிரகாசிக்கும்படி செய்தருளின தேவனே, அவர் குணப்பட்ட அதிசயத்தை நாங்கள் நினைவுகூர்ந்து, அவர் போதித்த பரிசுத்த உபதேசத்தைப் பின்பற்றி நடக்கவும், அந்த உபதேசத்திற்காக உமக்கு நன்றியறிதலைக் காண்பிக்கவும், கிருபைசெய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 9. 1.

சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதானஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள செபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் பிரயாணமாய்ப்போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை என் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவனுடனேகூடப் பிரயாணம் பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். சவுல் தரையிலிருந்து எழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையும் காணவில்லை. அப்பொழுது கைலாகுகொடுத்து அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான். தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவிலே போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது செபம்பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன் மேல் கைவைக்கவும், தரிசனம் கண்டான் என்றார். அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தான் என்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறச்சாதிகளுக்கும் இராசாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும், என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வை அடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான். பின்பு அவன் போசனம்பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில நாள் இருந்து, தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். கேட்டவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவன் அல்லவா என்றார்கள். சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப் படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 19. 27.

பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான். அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையா

வது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்தியசீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.

பரிசுத்த கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்

என்னப்பட்ட

கிறிஸ்து தேவாலயத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்ட திருநாள்.

சுருக்கச்செபம்.

நித்திய சீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய ஒரேபேறான குமாரன் எங்கள் மாம்சதேகமுள்ளவராய்த் தேவாலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டதுபோல, நாங்களும் அவராலே சுத்தமுள்ள இருதயத்தோடே உமக்குப் பிரதிஷ்டைபண்ணப்படும்படி, உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய அந்த இயேசுகிறிஸ்துவினாலே மகத்துவம்பொருந்திய தேவரீரை மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: மல்கி. 3. 1.

இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார். அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். நான் நியாயத்தீர்ப்புசெய்யும்படி உங்களிடத்தில் வந்து, சூனியக்காரருக்கும் விபசாரருக்கும் பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும் பரதேசிக்கு அநியாயஞ்செய்கிறவர்களுக்கும் விரோதமாகத் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 2. 22.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே, அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது, முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, அவனைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு சோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும், அவனை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்தஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்தஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய்தகப்பன்மார் அவனை உள்ளே கொண்டுவருகையில், அவன் அவனைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து: ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறச்சாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல சனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான். அவனைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள். பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி: இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான். ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் எழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமா

யிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தைவிட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, செபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்துநின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு, கலிலேயாநாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள். பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது; தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது.

பரிசுத்த மத்தியாவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவனாயிருக்கும்படி, உண்மையுள்ள உம்முடைய பணிவிடைக்காரனாகிய மத்தியாவைத் துரோகியாகிய யூதாவுக்குப் பதிலாகத் தெரிந்துகொண்டீரே; கள்ள அப்போஸ்தலர்கள் அணுகாதபடி எப்பொழுதும் உம்முடைய திருச்சபையைக் காப்பாற்றி, விசுவாசமும் உண்மையுமுள்ள மேய்ப்பரால் அதை ஆண்டு நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 1. 15.

அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்துநின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்குபெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. ஆதலால், யோவான் ஞானஸ்நானங்

கொடுத்த நாள்முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக்குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான். அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி: எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக, இவ்விரண்டுபேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று செபம்பண்ணி; பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 11. 25.

அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதாதவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

பாக்கியவதியாகிய கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.

சுருக்கச்செபம்.

ஆண்டவரே, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தைத் தேவதூதனுடைய வாக்கினால் அறிந்துகொண்ட நாங்கள் அவருடைய சிலுவையினாலும் பாடுகளினாலும் அவருடைய மகிமையான

உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகும்படி, எங்கள் இருதயங்களில் உம்முடைய கிருபையைப் பொழிந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: ஏசா. 7. 10.

கர்த்தர் ஆகாசை நோக்கி: நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள்; அதை ஆழத்திலிருந்தாகிலும், உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள் என்று சொன்னார். ஆகாசோ: நான் கேட்கமாட்டேன், நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்றான். அப்பொழுது ஏசாயா: தாவீதின் வம்சத்தாரே, கேளுங்கள்; நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ? ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயதுமட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 1. 26.

ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்குத் தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபைபெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய இராச்சியத்துக்கு முடிவு இராது என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும்

பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாதகாரியம் ஒன்றும் இல்லை என்றான். அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.

பரிசுத்த மாற்குவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது சுவிசேஷகனாகிய பரிசுத்த மாற்குவின் பரம உபதேசத்தால் உமது திருச்சபைக்குப் போதிப்பித்தருளினீரே; நாங்கள் குழந்தைகளைப்போல பலவித வீண் உபதேசமாகிய காற்றினால் அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், உமது பரிசுத்த சுவிசேஷ சத்தியத்தில் நிலைநிற்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 4. 7.

கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினால் அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்

கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம்முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 15. 1.

நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

பரி. பிலிப்பு, பரி. யாக்கோபு ஆகிய இருவருடைய திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்மை மெய்யாய் அறிந்துகொள்வதே நித்திய சீவன். உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறதை நாங்கள் பூரணமாய் அறிந்துகொண்டு, உம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்களாகிய பிலிப்பு யாக்கோபு என்பவர்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து, நித்திய சீவவழியிலே உற்சாகமாய் நடக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் அநுக்கிரகம் செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. யாக். 1. 1.

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது: என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமான தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன். ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான். சோதனையைச் சகிக்கிற மனுஷன்

பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின சீவகிரீடத்தைப் பெறுவான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 14. 1.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின்வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார். தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன் என்றார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பர்னபாவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது பரிசுத்த அப்போஸ்தலனாகிய பர்னபாவுக்குப் பரிசுத்தஆவியின் விசேஷித்த வரங்களை அளித்த ஆண்டவரே, தேவரீர் உமது பற்பல வரங்களை எங்களுக்கும் அளிக்கவும், உமக்குக் கனமும் மகிமையும் உண்டாக அவ்வரங்களை எப்பொழுதும் உபயோகப்படுத்தும் கிருபையைக் கட்டளையிடவும் வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 11. 22.

எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள். அவன் போய்ச்சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மன நிருணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான். அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக சனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி, தர்சுவுக்குப் புறப்பட்டுபோய், அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டுவந்தான். அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியுராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து அனுப்பவேண்டும் என்று தீர்மானம்பண்ணினார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 15. 12.

நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் சீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிக

மான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எசமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

பரிசுத்த யோவான்ஸ்நானனின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது திருவுளச்செயலால் அதிசயவிதமாய்ப் பிறந்த உமது பணிவிடைக்காரனாகிய யோவான்ஸ்நானன் மனந்திரும்புதலைக்குறித்துப் பிரசங்கித்து, உம்முடைய குமாரனாகிய எங்கள் இரட்சகருக்கு முன்பாக வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டாரே; அவருடைய பிரசங்கத்தின்படி நாங்கள் மெய்யாய் மனந்திரும்பவும், அவருடைய நல்மாதிரியின்படி எப்பொழுதும் சத்தியத்தைச் சொல்லி, துன்மார்க்கத்தைத் தைரியமாய்க் கண்டித்து, சத்தியத்தினிமித்தம் வரும் துன்பத்தைப் பொறுமையாய்ச் சகிக்கவும்; அவர் போதகத்தையும் பரிசுத்த நடக்கையையும் பின்பற்றும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கட்டளையிட்டருளும். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: எசா. 40. 1.

என் சனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின்போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின்

வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று. பின்னும் கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று. என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து பூ உதிரும்; சனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது. சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது. அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது. மேய்ப்பனைப்போலே தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 1. 57.

எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப்பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துசனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள். எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அவர்கள் வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள். அப்பொழுது அதின் தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள். அதற்கு அவர்கள்: உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி, அதின் தகப்பனை நோக்கி: இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்துப் பலகையைக் கேட்டுவாங்கி, இவன் பேர் யோவான் என்று எழுதினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான். அதினால் அவர்களைச் சுற்றி வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்டாயிற்று. மேலும் யூதேயாவின் மலைநாடெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம் சொல்லிக்கொள்ளப்பட்டது. அவைகளைக் கேள்விப்பட்டவர்களெல்லாரும் தங்கள் மனதிலே அவைகளை வைத்துக்

கொண்டு, இந்தப் பிள்ளை* எப்படிப்பட்டதாயிருக்குமோ என்றார்கள். கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது. அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனமாக: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்; தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி: உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று, அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது சனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய சனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்.

பரிசுத்த பேதுருவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினால் உம்முடைய அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுருவுக்கு மேன்மையான அநேக வரங்களை அளித்து, உமது மந்தையை மேய்க்கும்படி அவருக்கு உறுதியாய்க் கட்டளையிட்டீரே; நித்திய மகிமையுள்ள கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அத்தியட்சர்கள் மேய்ப்பர்கள் எல்லாரும் சாக்கிரதையுள்ளவர்களாய் உமது பரிசுத்த வசனத்தைப் பிரசங்

கிக்கவும், சனங்களும் அவ்வசனத்தின்படி கீழ்ப்படிந்து நடக்கவும், கிருபைசெய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 12. 1.

அக்காலத்திலே ஏரோது ராசா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது. அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்குப்பின்பு சனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான். அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே செபம்பண்ணினார்கள். ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தினநாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான். அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாம் காவலையும் இரண்டாம் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக் கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப் போய்விட்டான். பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும் யூதசனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 16. 13.

இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னைச் சனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறுசிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் சீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராச்சியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த யாக்கோபின் திருநாள்.

சுருக்கச்செபம்.

கிருபையுள்ள தேவனே, உம்முடைய பரிசுத்த அப்போஸ்தலனாகிய யாக்கோபை உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து அழைத்தபோது, அவர் தாமதமில்லாமல் கீழ்ப்படிந்து, தன் தகப்பனையும் தனக்குண்டான யாவையும் விட்டு, அவருக்குப் பின்சென்றதுபோல; நாங்களும் உலகத்துக்கும் மாம்சத்துக்குமுரிய எல்லா ஆசாபாசங்களையும் வெறுத்துவிட்டு, உமது பரிசுத்த கற்பனைகளின்படி நடக்கிறதற்கு ஆயத்தமுள்ளவர்களாயிருக்க, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 11. 27—12. 3 வரையும்.

அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே

அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணம் சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்துக்கு அனுப்பினார்கள். அக்காலத்திலே ஏரோது ராசா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 20. 20.

அப்பொழுது செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடுகூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்துகொண்டு: உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம்பண்ணவேண்டும் என்றாள். அவர் அவளை நோக்கி: உனக்கு என்னவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய இராச்சியத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலதுபாரிசத்திலும் என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே அல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியம் அல்ல என்றார். மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர்பேரிலும் எரிச்சலானார்கள். அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறச்சாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு

ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய சீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பர்த்தோலோமேயுவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, உமது வசனத்தை உண்மையாய் விசுவாசிக்கவும் பிரசங்கிக்கவும் உம்முடைய அப்போஸ்தலனாகிய பர்த்தொலோமேயுவுக்குக் கிருபைஅளித்தீரே; அவர் விசுவாசித்த வசனத்தில் உம்முடைய திருச்சபை பிரியப்பட்டு, அதைப் பிரசங்கிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் செய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: அப். 5. 12.

அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் சனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் சனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி, கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான சனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 22. 24.

அன்றியும், தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: புறச்சாதியாரின் இராசாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்

போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன். மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு இராச்சியத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராச்சியத்திலே என் பந்தியில் போசனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த மத்தேயுவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, துதிக்கப்படத்தக்க உம்முடைய குமாரனாலே அப்போஸ்தலனும் சுவிசேஷகனுமாகும்படி மத்தேயுவை ஆயத்துறையிலிருந்து அழைத்தீரே; பண ஆசையையும் மற்றெல்லாப் பொருளாசையையும் நாங்கள் வெறுத்துவிட்டு, உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும்படி, எங்களுக்குக் கிருபையைத் தந்தருளவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: 2 கொ. 4. 1.

இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவவசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்குமுன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம். எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவின் நிமித்தமாக உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகா

சிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 9. 9.

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து, அவருக்குப் பின்சென்றான். பின்பு அவர் வீட்டிலே போசனபந்தியிருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங் கூடப் பந்தியிருந்தார்கள். பரிசேயர் அதைக் கண்டு, அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசனம்பண்ணுகிறதென்ன என்று கேட்டார்கள். இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னது என்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்.

பரி. மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.

சுருக்கச்செபம்.

தேவதூதரும் மனிதரும் செய்யும் பணிவிடைகளை அதிசயமான ஒழுங்காய் ஏற்படுத்தின நித்திய தேவனே, பரலோகத்தில் உம்முடைய பரிசுத்த தூதர்கள் எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்து வருகிறதுபோல, பூலோகத்திலும் அவர்கள் உம்முடைய கட்டளையின்படி எங்களை ஆதரித்துக் காப்பாற்றும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியத்துக்காக: வெளி. 12. 7.

வானத்திலே யுத்தம் உண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் செயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தம் உண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராச்சியமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் சீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனைச் செயித்தார்கள். ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று சொல்லக்கேட்டேன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 18. 1.

அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராச்சியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராச்சியத்தில் பெரியவனாயிருப்பான். இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ. உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய சீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய்ச் சீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். இந்தச் சிறியரில்

ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சுவிசேஷகனாகிய பரிசுத்த லூக்காவின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சுவிசேஷ ஊழியத்தில் புகழ்ச்சிபெற்ற லூக்கா என்னும் வைத்தியனைச் சுவிசேஷகனும் ஆத்தும வைத்தியனுமாகும்படி அழைத்தருளினீரே; அவர் எழுதி ஒப்புவித்த உபதேசமாகிய ஆரோக்கியம் தரும் அவுஷதங்களால் எங்கள் ஆத்துமரோகங்களெல்லாம் நீங்கும்படி, தேவரீர் உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: 2 தீமோ. 4. 5.

நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கு அநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்குமாத்திரம் அல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி சாக்கிரதைப்படு. ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியாநாட்டிற்கும், தீத்து தல்மாத்தியாநாட்டிற்கும் போய்விட்டார்கள். லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோசனமுள்ளவன். தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன். துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா. கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 10. 1.

இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எசமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப் போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோகவேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள். சமாதானபாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவன்மேல் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்.

அப்போஸ்தலர்களாகிய பரிசுத்த சீமோன், பரிசுத்த யூதா ஆகிய இருவருடைய திருநாள்.

சுருக்கச்செபம்.

இயேசுகிறிஸ்துவையே பிரதான மூலைக்கல்லாக வைத்து, அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் உமது திருச்சபையைக் கட்டியிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, நாங்கள் உமக்குப் பிரியமான பரிசுத்த ஆலயமாகும்படி, அவர்கள் உபதேசத்தினால் ஆவியின் ஒருமையில் ஒருவரோடொருவர் இணைக்கப்பட, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: பரி. யூதா. 1.

இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது: உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது. பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று

உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. எனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்கள் என்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது. நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில்; கர்த்தர் தமது சனத்தை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார். தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். அப்படியே சோதோம் கொமோராபட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்போலவே, சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 15. 17.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன். உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எசமானிலும்பெரியவன் அல்லவென்று நான் உங்களுக்குச்சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவம் இராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச் சொல்ல அவர்களுக்கு இடம் இல்லை. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவம் இராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்தும் இருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று

அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று. பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

சகல பரிசுத்தவான்களின் திருநாள்.

சுருக்கச்செபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, நீர் தெரிந்துகொண்டவர்களை உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் ஞான சரீரத்திலே ஒரே அந்நியோந்நிய ஐக்கியமாக இணைத்திருக்கிறீரே; உண்மையாய் உம்மில் அன்புகூருகிறவர்களுக்காகத் தேவரீர் ஆயத்தம்பண்ணியிருக்கிற சொல்லிமுடியாத சந்தோஷங்களை அடையும்படிக்கு, நாங்கள் சன்மார்க்கமும் தேவபக்தியும் உள்ளவர்களாய் நடந்து, ஆசீர்வதிக்கப்பட்ட உம்முடைய பரிசுத்தவான்களைப் பின்தொடரும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியத்துக்காக: வெளி. 7. 2.

ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந் திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேர். யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்

திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல சாதிகளிலும் கோத்திரங்களிலும் சனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய சனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு சீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள்.

சுவிசேஷவாக்கியம்: பரி. மத். 5. 1.

இயேசு திரளான சனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராச்சியம் அவர்களுடையது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராச்சியம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

THE ORDER OF THE ADMINISTRATION OF THE LORD'S SUPPER, OR HOLY COMMUNION.

கர்த்தருடைய இராப்போசனமாகிய பரிசுத்த நற்கருணையைக் கொடுக்கும் முறைமை.

¶ பரிசுத்த நற்கருணை பெறவேண்டுமென்று இருக்கிறவர்கள் அதைப் பரிமாறுகிற நாளுக்கு முந்தினநாளுக்குள்ளாகத் தங்கள் பேர்களைக் குருவானவருக்கு அறிவிக்கவேண்டும்.

¶ அவர்களில் சபையாருக்கு மனஸ்தாபம் உண்டாகும்படி வெளியரங்கமாய்ப் பாவஞ்செய்து, துன்மார்க்கனென்று பேர்போனவனாவது, வார்த்தையினாலாவது செய்கையினாலாவது பிறருக்கு அநியாயம் செய்தவனாவது உண்டென்று குருவானவர் அறிந்தால்; அவர் அவனை அழைப்பித்து, அவனைப் பார்த்து; உன்னால் மனஸ்தாபம் அடைந்த சபையாருக்கு மனத்திருப்தி உண்டாக வெளியரங்கமாய் வந்து: நான் மெய்யாய் மனந்திரும்பி அந்தத் துன்மார்க்கத்தை விட்டுச் சீர்பட்டேன் என்றும், நான் அநியாயஞ்செய்த பிறருக்கு நியாயஞ்செய்து தீர்த்தேன், அல்லது என்னால் கூடினமட்டும் சீக்கிரமாய் அவர்களுக்கு நியாயஞ்செய்து தீர்ப்பேன் என்றும், நீ அறிக்கையிடுமளவும் கர்த்தருடைய பந்தியில் சேரவே கூடாதென்று அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

¶ அன்றியும் ஒருவர்மேல் ஒருவர் பகையும் வர்மமும் வைத்திருக்கிறவர்கள் உண்டென்று குருவானவர் அறிந்தால்; அவர்களையும் மேல்சொல்லியபடியே எச்சரித்து, அவர்கள் ஒப்புரவானார்களென்று அறியுமளவும், அவர்கள் கர்த்தருடைய பந்தியில் சேராதபடி விலக்கவேண்டும். இப்படி விரோதப்பட்டவர்களில் ஒருவன் மற்றவன் தனக்குச் செய்த குற்

றங்களையெல்லாம் முழு மனதோடே மன்னித்து, தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரஞ்செய்ய மனதாயிருக்க, மற்றவன் ஒப்புரவாகச் சம்மதியாமல் முருட்டாட்டங்கொண்டு வர்மத்தை வைத்துக்கொண்டிருந்தால்; குருவானவர் முருட்டாட்டக்காரனை விலக்கி, தன் குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டவனைப் பரிசுத்த நற்கருணையில் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனாலும், இந்த ரூபிரிக் சட்டத்தில் இந்தப் பிரிவில் கண்டிருக்கிறபடியாவது முந்தின பிரிவில் கண்டிருக்கிறபடியாவது குருவானவர் ஒருவனை விலக்கியிருப்பாரானால் அதைப் பதினாலுநாளுக்குள்ளே அத்தியட்சருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அப்படிக் குற்றஞ்செய்தவனைக் கனோன் சட்டப்படி அத்தியட்சர் விசாரணையில் வைக்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறும் தருணத்தில் மேசையின்மேல் மெல்லிய வெள்ளைத் துப்பட்டியை விரித்து, நியமப்படி காலைமாலைச்செபம் சொல்லப்படுகிற கோவில் நடுவேயாவது, நற்கருணை அறையிலாவது அதை வைக்கவேண்டும். சனங்கள் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மேசைக்கு வட பக்கத்தில் நின்று, கர்த்தருடைய செபத்தையும் அதற்குப் பின்வருகிற சுருக்கச் செபத்தையும் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

சுருக்கச்செபம்.

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்தஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் சனங்களுக்கு நேரே திரும்பி, பத்துக்கற்பனைகளைத் தெளிவாய் வாசிக்கவேண்டும். சனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, ஒவ்வொரு கற்பனையை வாசித்தபின்பு, தேவனை நோக்கிச் சென்றகாலத்தில் அந்தந்தக் கற்பனையை மீறினதற்காக இரக்கத்தையும், இனிவருங்காலத்தில் அதைக் கைக்கொள்வதற்காகக் கிருபையையும், பின்வருகிறபடி மன்றாடவேண்டும்.

குரு: தேவன் திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: உன் தேவனாகிய கர்த்தர் நானே; என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்து பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

தரு: கொலை செய்யாதிருப்பாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

தரு: விபசாரம் செய்யாதிருப்பாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

தரு: களவு செய்யாதிருப்பாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

தரு: பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

தரு: பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும், இச்சியாதிருப்பாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

¶ பின்பு, குருவானவர் முன்போல நின்று சக்கிரவர்த்தினியவர்களுக்காக, பின்வரும் இரண்டு ஜெபங்களில் ஒன்றைச் சொல்லவேண்டும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நித்திய ராஜ்யத்தையும் அளவற்ற அதிகாரத்தையுமுடைய சர்வவல்லமையுள்ள தேவனே, திருச்சபையனைத்துக்கும் இரக்கமாயிரும்; தேவரீர் தெரிந்துகொண்ட ஊழியக்காரியும், எங்கள் ஆண்டவருமாயிருக்கிற விக்தோரியா சக்கிரவர்த்தினி தம்மை உம்முடைய பணிவிடைக்காரியென்று உணர்ந்து, உமக்கே கனமும் மகிமையும் உண்டாக எல்லாவற்றிலும் முக்கியமாய் விரும்பும்படி, அவருடைய இருதயத்தை ஆண்டு நடத்தியருளும். நாங்களும் அவருடைய மற்றப் பிரஜைகள் எல்லாரும் அவருக்கு இருக்கிற அதிகாரம் உம்மால் உண்டானதென்று உணர்ந்து, உம்முடைய திருவசனத்திற்கும் நியமத்திற்கும் ஏற்றவிதமாய் உமக்குள்ளும் உமக்காகவும் அவருக்குத் தாழ்மையாய்க் கீழ்ப்படிந்து அவரை உண்மையாய்ச் சேவித்துக் கனம்பண்ண எங்களுக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

அல்லது இதைச் சொல்லவேண்டும்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, ராஜாக்களுடைய இருதயங்கள் உம்முடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறதென்றும், தேவரீர் உமது திவ்விய ஞானத்தின்படி அவைகளைத் திருப்பி நடத்துகிறீரென்றும், உமது பரிசுத்த வசனத்தினால் அறிந்திருக்கிறோம். உம்முடைய ஊழியக்காரியும் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற விக்தோரியா சக்கிரவர்த்தினி தம்முடைய யோசனைகள் வார்த்தைகள் கிரியைகள் எல்லாவற்றிலும் உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக எப்பொழுதும் விரும்பவும்; அவர் விசாரணைக்கு உட்பட்ட உம்முடைய ஜனத்தை சுகவாழ்விலும் சமாதானத்திலும் தேவபக்தியிலும் காக்கக் கருதவும், அவருடைய இருதயத்தை நடத்தி ஆளவேண்டுமென்று, தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பிரிய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் இதைக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

¶ பின்பு அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தைச் சொல்லவேண்டும். அது முடிந்தவுடனே, குருவானவர், வாசிக்கவேண்டிய நிருபவாக்கியம் [அல்லது நிருபவாக்கியத்துக்குப் பதிலாக நியமித்திருக்கிற வேதவாக்கியம்] இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியம்முதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி, நிருபவாக்கியத்தை வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு, நிருபவாக்கியம் வாசித்து முடிந்ததென்று சொல்லவேண்டும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் எழுந்துநிற்க—அவர் பரிசுத்த சுவிசேஷவாக்கியம் இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியம்முதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி, சுவிசேஷவாக்கியத்தையும் வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு, ஜனங்கள் இன்னும் நின்றுகொண்டிருக்க, பின்வருகிற விசுவாசப்பிரமாணத்தைப் பாட அல்லது சொல்லவேண்டும்.

வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும், படைத்தவராயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்குமுன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், சோதியில் சோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர், உண்டாக்கப்படாமல், ஜெனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு ரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து, மனுஷனானார்; நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில்

அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம்பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய் தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமேன்.

¶ பின்பு, குருவானவர் அந்த வாரத்தில் ஆசரிக்கவேண்டிய திருநாட்களும் உபவாசநாட்களும் இன்னின்னவென்று அறிவிக்கவேண்டும். பரிசுத்த நற்கருணையைப் பரிமாறுங்காலத்தை அறிவிக்கவும், அறிக்கைப் பத்திரிகைகளையாவது திருச்சபைக்குப் புறம்பாக்கும் தீர்ப்புகளையாவது வாசிக்கவும் வேண்டுமாகில், இப்பொழுது வாசிக்கலாம். மேலும், தேவாராதனை செய்யும் தருணத்தில் குருவானவரேதவிர, மற்றொருவரும் யாதொன்றையும் தேவாலயத்தில் விளம்பரம்பண்ணவும் பிரசித்தஞ்செய்யவும் கூடாது. பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று இந்தப் புஸ்தகத்தின் பிரமாணங்களினாலும் ராஜ கட்டளையினாலும் அத்தியட்சரின் கட்டளையினாலும் பிரசித்தஞ்செய்யக் கட்டளையிடப்பட்டவைகளையல்லாமல், மற்றொன்றையும் குருவானவரும் பிரசித்தஞ்செய்யக்கூடாது.

¶ பின்பு, பிரசங்கம் செய்யவேண்டும்; அல்லது திருச்சபையின் அதிகாரத்தினால் நியமிக்கப்பட்டதும் இனி நியமிக்கப்படுவதுமான ஓமிலி என்னும் பிரசங்கங்களில் ஒன்றை வாசிக்கவேண்டும்.

¶ பின்பு, குருவானவர் கர்த்தருடைய மேஜையினிடத்திற்குப் போய், காணிக்கைவாசகம் என்னும் பின்வருகிற வாக்கியங்களில் தமக்குத் தகுதியென்று தோன்றுகிற ஒன்றையாவது சிலவற்றையாவது வாசிக்கவேண்டும்.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. பரி. மத். 5.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. பரி. மத். 6.

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். பரி. மத். 7.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்றுமாத்திரம் சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. பரி. மத். 7.

சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். பரி. லூ. 19.

எவன் தன் சொந்தப்பணம் செலவழித்து, தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டம் உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? 1 கொ. 9.

நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? 1 கொ. 9.

ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடைசெய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். 1 கொ. 9.

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயும் அல்ல, கட்டாயமாயும் அல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொ. 9.

திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன். மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். கலா. 6.

நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். கலா. 6.

போதமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம். 1 தீமோ. 6.

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. 1 தீமோ. 6.

உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவர் அல்லவே. எபி. 6.

நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபி. 13.

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? 1 யோ. 3.

உன் ஆஸ்திகளில் தர்மஞ்செய்; எந்த ஏழைக்கும் உன் முகத்தை மறையாதே; அப்பொழுது கர்த்தர் உனக்குத் தமது முகத்தை மறைக்கமாட்டார். தோபித்து, 4.

உன் திராணிக்குத் தக்கதாய் தர்மசிந்தையுள்ளவனாயிரு; உனக்கு மிகுதியிருந்தால் மிகுதியாய்க் கொடு, உனக்குக் கொஞ்சமிருந்தால் அந்தக் கொஞ்சத்தில் சந்தோஷமாய்க் கொடுக்கச் சாக்கிரதையாயிரு. இப்படிச் செய்வதினாலே அவசரம் வருங்காலத்துக்கு நற்பலனைக் கூட்டிச் சேர்க்கிறாய். தோபித்து, 4.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி. 19.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். சங். 41.

¶ மேல் எழுதிய வாக்கியங்களை வாசிக்கையில், உதவிக் குருக்களாவது கோவில் காரியக்காரராவது, இந்தக் காரியத்துக்கென்று நியமிக்கப்பட்ட மற்றவர்களாவது அந்தச் சேகரச் சபையாரால் சவதரித்த யோக்கியமான பாத்திரத்திலே, ஏழைகளுக்காகத் தர்மங்களையும் மற்றக் காணிக்கைகளையும் ஜனங்களிடத்தில் வாங்கி, குருவானவரிடத்தில் வணக்கமாய்க் கொண்டுபோக, குருவானவர் அதை ஏற்றுக்கொண்டு தாழ்மையாய்ப் படைத்துத் திருமேஜையின்மேல் வைக்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறுகிறதாயிருந்தால், போதுமான அப்பத்தையும் திராட்சரசத்தையும் இப்பொழுது குருவானவர் மேஜையின்மேல் வைக்கவேண்டும். அப்படிச் செய்தபின்பு, குருவானவர் சொல்லவேண்டியதாவது:

இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்துசபையனைத்துக்கும் சீருண்டாக ஜெபம்பண்ணக்கடவோம்.

எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் செய்து ஸ்தோத்திரங்களைச் செலுத்தவேண்டுமென்று, உமது பரிசுத்த அப்போஸ்தலனைக்கொண்டு கற்பித்தருளின சர்வவல்லமையும் நித்திய ஜீவனுமுள்ள தேவனே, மகத்துவம் பொருந்திய தேவரீருடைய சந்நிதியில் [*நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு,] நாங்கள் செய்கிற ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளவேண்டுமென்று மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். எங்குமுள்ள திருச்சபைக்குத் தேவரீர் உண்மையும் ஐக்கியமும் ஏகசிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச்செய்து; உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக்குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து, ஐக்கியத்திலும் தேவபக்தியுள்ள அன்பிலும் நிலைத்து வாழ்ந்திருக்கும்படி அநுக்கிரகஞ்செய்யும். கிறிஸ்தவர்களான ராஜாக்கள் பிரபுக்கள் அதிகாரிகள் எல்லாரையும் ரட்சித்துக் காப்பாற்றவேண்டுமென்றும்; விசேஷமாய் எங்களைத் தேவபக்தியோடும் சமாதானத்தோடும் ஆளுகிறதற்கு உம்முடைய பணிவிடைக்காரியாகிய விக்தோரியா சக்கிரவர்த்தினியை ரட்சித்துக் காப்பாற்றவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம். அவருடைய ஆலோசனைக் கர்த்தாக்கள் அனைவரும், அவரால் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாரும், பட்சபாதம் இல்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தி, துன்மார்க்கத்தைத் தண்டனையினாலே அடக்கி, உமது சத்திய வேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்தி வரும்படி அவர்களுக்குக் கிருபைசெய்தருளும். பரமபிதாவே, அத்தியட்சர் குருமார் எல்லாரும் தங்கள் நடக்கையினாலும் போதகத்தினாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துக்களை ஒழுங்காயும் செம்மையாயும் கொடுக்க அவர்களுக்குக் கிருபை அளியும்: உம்முடைய ஜனங்கள் எல்லாரும், விசேஷமாய் இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற இந்தச் சபையாரும், சாந்த இருதயத்தோடும் தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும் நீதியும் உள்ள

* தர்மங்களும் காணிக்கைகளும் இராவிட்டால், "நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு" என்கிற வார்த்தைகளை வாசியாமல் விடவேண்டும்.

வர்களாய் உமக்கு ஊழியஞ்செய்ய, அவர்களுக்கு உமது பரம கிருபையைக் கொடுத்தருளும். நிலையில்லாத இந்த ஜீவகாலத்தில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும் உமது தயவினாலே தேற்றி ஆதரிக்கவேண்டுமென்று பணிவாய் கேட்டுக்கொள்ளுகிறோம். உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும் நாங்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தைத் துதிக்கிறோம்; அவர்களோடுகூட நாங்களும் உமது பரம ராஜ்யத்தில் பங்கு பெறும்படி, அவர்கள் காட்டிய நல்மாதிரியைப் பின்பற்ற, எங்களுக்குக் கிருபைசெய்தருளும். பிதாவே, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இந்த நன்மைகளுக்காக உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ *பரிசுத்த நற்கருணையைப் பரிமாறப்போகிற நாளுக்கு முன்வரும் ஞாயிற்றுக் கிழமையிலாவது, பண்டிகைநாளிலாவது பிரசங்கம் முடிந்தபின்பு குருவானவர் இன்னநாளில் நற்கருணை ஆசரிக்கப்படுமென்று அறிவிக்க வேண்டும். அறிவிக்கும்போது அவர் பின்வரும் பிரசங்கத்தையும் வாசிக்க வேண்டும்.*

பிரியமானவர்களே, வருகிற ______________ கிழமையில், தேவ உதவியை முன்னிட்டு பணிவும் தேவபக்தியுமுள்ள சிந்தையாயிருக்கிற யாவருக்கும் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய ஆறுதல் செய்யும் சாக்கிரமெந்தைப் பரிமாறத் தீர்மானித்திருக்கிறேன். நாம் பாவமன்னிப்பைப் பெறுவதற்கும், பரம ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாவதற்கும், ஒரேகாரணமாகிய அவருடைய புண்ணியமுள்ள சிலுவைப்பாடுகளை நினைவுகூர்ந்து, நற்கருணையைப் பெறவேண்டியதாயிருப்பதினால்; நம்முடைய ரட்சகராகிய இயேசுகிறிஸ்து நமக்காக மரணமடைவதற்கும், அந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தின் மூலமாய் நமக்கு ஞானபோஜனமாயும் ஆதரவாயும் இருப்பதற்கும், நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய குமாரனாகிய அவரைத் தந்தருளினதற்காக, நாம் தாழ்மையாய் முழு இருதயத்தோடே அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். பாத்திரராய் நற்கருணையைப் பெறுகிறவர்களுக்கு அது ஆறுதல் செய்யும் திவ்விய நன்மையுள்ளதாயும், அபாத்திரராய்த் துணிந்து பெறுகிறவர்களுக்கு மோசமுள்ளதாயும் இருக்கிறதினாலே; முன்னமே நீங்கள் அந்தப் பரிசுத்த இரகசியத்தின் மேன்மையையும், அபாத்திரமாய் அதைப் பெறுவதினால் வரும் மோசத்தையும் சிந்திக்கவேண்டியதுமல்லாமல், தேவன் வேதவாக்கியத்திலே கற்பித்திருக்கிற கலியாண வஸ்திரத்தை நீங்கள் தரித்துக்கொண்டு, மாசற்ற பரிசுத்தராய் அந்தப் பரம விருந்தில்

சேர்ந்து, அந்தப் பரிசுத்த பந்திக்குப் பாத்திரராய் அங்கிகரிக்கப்பட, நீங்கள் தேவனை வஞ்சிக்கப்பார்க்கும் மாயக்காரர்போல உங்களை இலேசாய்ச் சோதியாமல், உண்மையாய் உங்கள் மனச்சாட்சியைப் பரிசோதித்து அறியவேண்டுமென்று, என் கடமையின்படி உங்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லுகிறேன்.

இதற்கு வழிவகை என்னவெனில், நீங்கள் முதலாவது தேவனுடைய கற்பனைகளைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு, உங்கள் நடக்கையைப் பரிசோதித்து, எந்த விஷயத்திலே மனோவாக்குக்காயங்களினால் குற்றம் செய்தோம் என்று நீங்கள் கண்டறிகிறீர்களோ, அந்தந்தக் குற்றத்தைக் குறித்துத் துக்கப்பட்டு, சர்வவல்லமையுள்ள தேவனுக்கு அதை அறிக்கையிட்டு, இனிச் சீராய் நடப்போம் என்று உறுதியாய்த் தீர்மானம் செய்யவேண்டும். நீங்கள் தேவனுக்கு விரோதமாகமாத்திரம் அல்ல, மனுஷருக்கு விரோதமாகவும் குற்றஞ்செய்தவர்களென்று கண்டால், அவர்களோடே ஒப்புரவாகவேண்டுவதுமன்றி; நீங்கள் மற்றவர்களுக்குச் செய்த நஷ்டங்களுக்கும் அநியாயங்களுக்கும் உங்களாலே இயன்றமட்டும் பரிகாரம்செய்வதற்கும், தேவன் உங்களுக்கு மன்னிக்கவேண்டுமென்று விரும்புகிறதுபோல, நீங்களும் உங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவர்களுக்கு மன்னிப்பதற்கும் மனதுள்ளவர்களாயிருக்கவும் வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், நீங்கள் பரிசுத்த நற்கருணையைப் பெறுவது உங்கள் ஆக்கினை அதிகரிப்பதற்கு ஏதுவாயிருக்கும். ஆகையால், உங்களில் தேவனைத் தூஷிக்கிறவனாவது, அவருடைய வசனத்துக்குத் தடை செய்கிறவனாவது, அதை நிந்திக்கிறவனாவது, விபசாரம், வர்மம், பொறாமை முதலான எந்தக் கொடிய பாவத்தைச் செய்கிறவனாவது இருந்தால், அவன் தன் பாவங்களினிமித்தம் துக்கப்பட்டு மனந்திரும்பக்கடவன். இல்லாவிட்டால், அவன் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெற்றுக் கொண்டபின்பு, சாத்தான் யூதாசுக்குள் புகுந்ததுபோல, அவனுக்குள்ளும் புகுந்து பலவிதமான அக்கிரமங்களினால் அவனை நிரப்பி சரீரத்தையும் ஆத்துமாவையும் கெடுத்துப்போடாதபடிக்கு, பரிசுத்த பந்தியில் சேராதிருக்கக்கடவன்.

அன்றியும், தேவனுடைய இரக்கத்தை உறுதியாய் நம்பி, சமாதானம் அடைந்த மனச்சாட்சியையுடையவர்கள் பரிசுத்த நற்கருணையில் சேரலாமேயன்றி, மற்றவர்கள் சேரக்கூடாதபடியினால்; உங்களில் எவனாகிலும் மேற்சொல்லிய வழிவகையினால் தன் மனச்சாட்சியைச் சமாதானப்படுத்தக்கூடாமல், இன்னும் ஆலோசனையும் ஆறுதலும் வேண்டியவனாயிருந்தால், அவன் தேவனுடைய பரிசுத்த வசனத்திற்கேற்ற ஊழியத்தின் மூலமாய்ப் பாவவிமோசனமாகிய நன்மையையும் ஆத்துமாவுக்குரிய நல்லாலோசனையையும் அடைந்து, எவ்விதமான ஐயமும் சந்தேகமும்

நீங்க, தன் மனச்சாட்சியில் சமாதானம் பெறத்தக்கதாக, என்னிடத்திலாவது தேவ வசனத்தைப் போதிக்கிற விவேகமும் கல்வித்திறமையுமுள்ள வேறொரு குருவானவரிடத்திலாவது வந்து தன் மனவிசாரத்தைத் தெரியப்படுத்தக்கடவன்.

¶ ஜனங்கள் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறதில் அசட்டையாயிருக்கிறதாகக் குருவானவர் கண்டால், மேற்சொல்லிய பிரசங்கத்தை வாசியாமல் பின்வருவதை வாசிக்கக்கடவர்.

பிரியமான சகோதரரே, ____________ நாளில் தேவ கிருபையினாலே கர்த்தருடைய இராப்போசனத்தைப் பரிமாற எத்தனமாயிருக்கிறேன். இங்கே கூடிவந்திருக்கிற நீங்களெல்லாரும் அதில் சேரவேண்டுமென்று நான் தேவனுடைய நாமத்தினால் உங்களை அழைக்கிறேன்; தேவன் தாமே உங்களை இவ்வளவு அன்பாய் அழைக்கும்போது, நீங்கள் வரமாட்டோம் என்று சொல்லாதபடி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு மனிதன் பலவகையான பதார்த்தங்களைச் சம்பாதித்து, சம்பிரமமான விருந்து செய்து, விருந்தினர் வந்து உட்காரும்படி எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியிருக்கும்போது, அழைக்கப்பட்டவர்கள் நன்றிகெட்டவர்களாய் வரமாட்டோம் என்று முகாந்தரமில்லாமல் சொன்னால், மிகவும் அபசாரமாயும் விசனமான காரியமாயும் இருக்குமென்று அறிவீர்களே. உங்களில் எவனாகிலும் விருந்து செய்யும்போது, அப்படிச் சம்பவித்தால் அவனுக்கு மனநோவாயிராதா? தனக்கு மிகுந்த நஷ்டமும் அநியாயமும் செய்தார்கள் என்று எண்ணுவான் அல்லவா? ஆகையால் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நீங்கள் இந்தப் பரிசுத்த இராப்போசன பந்தியில் சேராமல் போவதினால் தேவ கோபாக்கினையை உங்கள்பேரில் மூட்டிக்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

லௌகீக அலுவல் எனக்குத் தடையாயிருக்கிறதினால் நான் நற்கருணைப் பந்தியில் சேரவில்லை என்று ஒருவன் சொல்லுவது எளிது. அப்படிப்பட்ட போக்கைத் தேவன் ஒப்புக்கொள்வது அரிது. நாங்கள் கொடிய பாவிகளாயிருக்கிறதினால் வரப் பயப்படுகிறோம் என்று சொல்வீர்களாகில், நீங்கள் மனந்திரும்பிச் சீரடையாமலிருக்கிறதென்ன? தேவன் உங்களை அழைக்கும்போது, வரமாட்டோம் என்று சொல்ல உங்களுக்குப் பயம் இல்லையா? தேவனிடத்தில் நீங்கள் திரும்பவேண்டியதாயிருக்க, ஆயத்தமில்லையென்று போக்குச் சொல்லலாமா? இப்படிப்பட்ட வீண் போக்கு தேவனுக்கு முன்பாகச் செல்லாது என்று நன்றாய்ச் சிந்தித்துக்கொள்ளுங்கள். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிற விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் வயல் நிலத்தைக் கொண்டோம் என்றும், வாங்கின

ஏர்மாட்டைச் சோதிக்கவேண்டும் என்றும், கலியாணம் செய்துகொண்டோம் என்றும் போக்குச் சொன்னபோது, மன்னிப்படையாமல் பரம விருந்துக்கு அபாத்திரராய் போனார்களே. நானே நற்கருணையைப் பரிமாற ஆயத்தமாயிருக்கிறேன். என் உத்தியோகத்தின்படி தேவனுடைய நாமத்தினால் நான் உங்களை அழைக்கிறேன், கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், ஆத்தும ரட்சிப்படையும்படி எவ்வளவேனும் உங்களுக்கு விருப்பம் இருக்குமாகில், பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேரவேண்டுமென்று உங்களை எச்சரிக்கிறேன். உங்களுக்கு ரட்சிப்பு உண்டாகத் தேவனுடைய குமாரன் சிலுவையில் அடைந்த மரணத்தினால் தமது ஆத்துமாவை ஒப்புக்கொடுத்தபடியால், நீங்கள் அவர் இட்ட கட்டளையின்படி அவருடைய மரணபலியை நினைவுகூர்ந்து நற்கருணையைப் பெறக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அப்படியிருக்க, நீங்கள் அதை அசட்டைபண்ணி மனதாரக் கர்த்தருடைய பந்தியில் சேராமல், பரம ஆகாரத்தை உட்கொள்ளும்படி இவ்விருந்துக்கு வருகிற உங்கள் சகோதரரை விட்டுப் பிரிந்துபோனால், தேவ துரோகமாயும் கொடிய தண்டனைக்கு ஏதுவாயும் இருக்குமென்று நினைத்துக்கொள்ளுங்கள். இவைகளை நீங்கள் கருத்தாய்ச் சிந்தித்துக்கொண்டால், தேவ கிருபையினால் நல்லெண்ணங்கொள்வீர்கள். அதற்காக நாம் நம்முடைய பரம பிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி மனத்தாழ்மையாய் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவோம்.

¶ நற்கருணையை ஆசரிக்கும் நேரத்தில் அதில் சேருகிறவர்கள் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஒழுங்காயிருக்க, குருவானவர் வாசிக்கவேண்டிய பிரசங்கமாவது.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே, நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேர மனதாயிருக்கிற நீங்கள் இந்த அப்பத்தைப் புசிக்கவும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணவும் துணிந்து சேராமல், யாவரும் தங்களை நன்றாய்ச் சோதித்து அறிந்து சேரவேண்டும் என்று பரிசுத்த பவுல் புத்திசொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள்ளவேண்டும். பாவத்தினிமித்தம் மெய்யாய்த் துக்கப்படுகிற இருதயத்தோடும், உயிருள்ள விசுவாசத்தோடும் நாம் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கினால், பிரயோஜனம் பெரிதாயிருக்கும். நாம் அப்பொழுது ஞானப்பிரகாரமாய்க் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவோம்; கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க நாம் அவருக்குள் வாசமாயிருப்போம், கிறிஸ்து நம்மோடு ஒன்றாயிருக்க நாம் அவரோடு ஒன்றாயிருப்போம். அப்படியே, இந்தச் சாக்கிரமெந்தை நாம் அபாத்திரராய் வாங்கினால் மோசமும்

பெரிதாயிருக்கும். அப்பொழுது நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாகி, கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டாகப் புசித்துப் பானம்பண்ணி, நமக்கு விரோதமாகத் தேவ கோபத்தை மூட்டி, பற்பலவியாதியினாலும் அநேகவித மரணத்தினாலும் நம்மைத் தண்டிக்கும்படி அவனை ஏவுகிறவர்களாயிருப்போம். ஆகையால் சகோதரரே, கர்த்தராலே ஆக்கினைத் தீர்ப்படையாதபடிக்கு நீங்களே உங்களைப் பரிசோதித்து, நீங்கள் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவை உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தினாலே பற்றிக்கொண்டு, உங்கள் நடக்கையைச் சீர்திருத்தி, எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருங்கள். இப்படிச் செய்தால், இந்தப் பரிசுத்த இரகசியங்களைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருப்பீர்கள். எல்லாவற்றிலும் முக்கியமாக, தேவனும் மனுஷனுமாயிருக்கிற நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவானவர், அந்தகாரத்திலும் மரண இருளிலும் கிடந்த நிர்ப்பாக்கியமுள்ள பாவிகளாகிய நம்மைத் தேவ புத்திரராக்கி நித்திய ஜீவ மகிமைக்கு உயர்த்தும்படியாக, சிலுவையிலே மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தி, பாடுபட்டு, பிராணத்தியாகஞ்செய்து, உலகத்தை மீட்டுக்கொண்டதினிமித்தம், பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய தேவனுக்கு நீங்கள் முழு இருதயத்தோடே தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். நம்முடைய சற்குருவும் ஏக ரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து நமக்காக மரணமடைந்ததினால் வெளிப்படுத்திய ஒப்பில்லாத அன்பையும் தமது அருமையான இரத்தத்தினால் நமக்காகச் சம்பாதித்த எண்ணிமுடியாத உபகாரங்களையும் நாம் எப்பொழுதும் நினைக்கும்படி; நமக்கு என்றைக்கும் மிகுந்த ஆறுதல் உண்டாக அவர் இந்தப் பரிசுத்த இரகசியங்களைத் தமது அன்புக்கு அத்தாட்சியாகவும், தமது மரணத்தைப்பற்றிய என்றுமுள்ள நினைவுகூருதலாகவும் நியமித்திருக்கிறார். ஆகையால், அவருக்கும் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் நமது கடமையின்படியே இடைவிடாமல் ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய பரிசுத்த சித்தத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்து, நமது வாழ்நாளெல்லாம் மெய்யான பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு ஊழியஞ்செய்யக் கருத்துள்ளவர்களாய் இருக்கக்கடவோம். ஆமென்.

¶ பின்னும் குருவானவர் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது.

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய்

அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், விசுவாசத்தோடு சேர்ந்து, உங்களுக்கு ஆறுதல் உண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக்கொள்ளுங்கள். அதற்காகப் பணிவாய் முழங்கால்படியிட்டுச் சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

¶ அப்பொழுது பரிசுத்த நற்கருணையைப் பெறவேண்டுமென்றிருக்கிற அனைவருடைய நாமத்தினாலும், குருமாரில் ஒருவர் பின்வருகிற பொதுவான பாவ அறிக்கையைச் சொல்லவேண்டும். அவரும் ஜனங்களெல்லாரும் தாழ்மையாய் முழங்கால்படியிட்டுச் சொல்லவேண்டியதாவது.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையும் சிருஷ்டித்தவரே, சகல மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினை எங்கள்மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும், உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்கரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம்; இந்தக் குற்றங்களைக்குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு முழுமனதோடே துக்கப்படுகிறோம்; அவைகளை நினைத்து வேதனைப்படுகிறோம்; அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம். எங்களுக்கு இரங்கும், மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் செய்த யாவையும் உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னியும்; உமது நாமத்துக்குக் கனமும் மகிமையும் உண்டாக, நாங்கள் புதிதாக்கப்பட்டவர்களாய் இனி எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்து, உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமென்.

¶ அப்பொழுது அத்தியட்சராவது, அவர் இராவிட்டால் குருவானவராவது எழுந்து நின்று, ஜனங்கள் முகமாய்த் திரும்பி, பின்வரும் பாவ விமோசனத்தைக் கூறவேண்டும்.

உத்தம மனஸ்தாபத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவ மன்னிப்பை அருளிச்செய்வோம் என்று, மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை ரட்சித்து, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தி, உங்களை நித்திய ஜீவகாயில் சேர்ப்பாராக. ஆமென்.

¶ பின்பு குருவானவர் சொல்வது.

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் நமது ரட்சகராகிய கிறிஸ்து திருவுளம்பற்றுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். பரி. மத். 11. 28.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். பரி. யோ. 3. 16.

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்.

பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமானது. 1 தீமோ. 1. 15.

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்.

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. பரி. 1 யோ. 2. 1.

¶ பின்னும் குருவானவர் சொல்வதாவது.

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

மறுமொழி: எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

மறுமொழி: அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

¶ அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய மேஜையிடமாய்த் திரும்பிச் சொல்வது.

கர்த்தாவே, *பரிசுத்த பிதாவே, சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

*[பரிசுத்த பிதாவே,] என்கிற வார்த்தைகளைத் திரித்துவ ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கப்படாது.

¶ அந்த நாளுக்கு விசேஷித்த முகவுரை இருக்குமாகில், அதை வாசிக்கவேண்டும். இல்லாவிட்டால், பின்வருவதை இவ்விடத்திலே சொல்லவேண்டும்.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமேன்.

விசேஷித்த முகவுரைகள்.

கிறிஸ்து பிறந்த பண்டிகைக்கும், பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை.

சகல பாவமும் அற எங்களைச் சுத்திகரிப்பதற்கு, பரிசுத்த ஆவியின் செயலினாலே பாவக்கறையில்லாமல் தம்முடைய தாயாராகிய கன்னி மரியாளுடைய தன்மையில் மெய்மனுஷனாகப் பிறக்கும்படி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைத் தந்தருளினதற்காக விசேஷமாய் ஸ்தோத்திரஞ்செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ழ.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை.

விசேஷமாக, உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்து மகிமையோடே உயிர்த்தெழுந்ததினிமித்தம் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். எங்களுக்காகப் பலியிடப்பட்டு உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்த்த மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி அவரே. தம்முடைய மரணத்தினாலே மரணத்தை அழித்து, தம்முடைய உயிர்த்தெழுதலினாலே நித்திய ஜீவனைத் திரும்பவும் தந்தருளினார். ஆதலால் தூதரோடும், ழ.

கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழுநாட்களுக்கும் உரிய முகவுரை.

சிறந்த மகிமையோடே உயிர்த்தெழுந்து தமது அப்போஸ்தலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாகத் தரிசனையாகி, அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பரமண்டலத்துக்கேறி, தாம் இருக்கிற இடத்திலே நாங்களும்

ஏறிப்போய்ச் சேரவும் தம்மோடேகூட மகிமையிலே ஆளுகைசெய்யவும் எங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப் போயிருக்கிற உம்முடைய மிகவும் பிரியமான குமாரனாகிய எங்கள் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ழ.

பரிசுத்த ஆவியின் திருநாளுக்கும், அதன் பின்வரும் ஆறு நாட்களுக்கும் உரிய முகவுரை.

எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவாய் மலர்ந்தருளிய வாக்குத்தத்தத்தின்படியே, பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்றைப்போல வானத்திலிருந்து சடிதியாய் வரும் பெரிய சத்தத்தோடு அக்கினிமயமான நாவுகள் போன்ற ரூபமாய் இறங்கி அப்போஸ்தலர்மேல் தங்கி, அவர்களுக்குப் போதித்து, அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்தி, அவர்கள் எல்லாத் தேசத்தாருக்கும் சுவிசேஷத்தை விடாமுயற்சியாய்ப் பிரசங்கிக்கத்தக்கதாக பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தையும், தைரியத்தையும் பக்திவைராக்கியத்தையும் அநுக்கிரகித்ததும் அல்லாமல்; அதினாலே நாங்கள் இருளுக்கும் மருளுக்கும் விலகி, உம்மையும் உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற மெய்ஞ்ஞான வெளிச்சத்தில் சேரும்படி கிருபைசெய்ததினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ழ.

திரித்துவத் திருநாளுக்குமாத்திரம் உரிய முகவுரை.

தேவரீர் ஒரே தேவனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறீர்; ஒருவராய்மாத்திரம் இராமல் ஒரே தத்துவமுடைய மூவருமாயிருக்கிறீர். பிதாவினுடைய மகிமை எத்தன்மையதென்று நாங்கள் விசுவாசிக்கிறோமோ, குமாரனுடைய மகிமையும் பரிசுத்த ஆவியினுடைய மகிமையும் யாதொரு வித்தியாசமும் குறைவுமின்றி அத்தன்மையதென்றே விசுவாசிக்கிறோம். ஆதலால் தூதரோடும், ழ

¶ மேற்சொல்லிய முகவுரைகளில் ஒன்றை வாசித்தவுடனே பாட அல்லது சொல்லவேண்டியதாவது.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய ராப்போஜன மேஜையருகே முழங்கால்படியிட்டு நற்கருணை வாங்கப்போகிற எல்லாருடைய நாமத்தினாலும் சொல்லவேண்டிய ஜெபமாவது.

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேஜையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற லட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எங்கள் ஆத்துமா கழுவப்படுவதற்கும், எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும், ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமேன்.

¶ குருவானவர் மேஜைக்கு முன்பாக நின்று தடையில்லாமல் விநயமாய் ஜனங்களுக்கு முன்பாக அப்பத்தைப் பிட்கவும் கையிலே பாத்திரத்தை எடுத்துக்கொள்ளவும் தக்கதாக; அப்பத்தையும் திராட்சரசத்தையும் ஒழுங்காய் வைத்து, பின்வரும் பிரதிஷ்டை ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் பரம பிதாவே, தேவரீர் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரேதரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல்; தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அநுசரித்துவரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டிருக்கிறாரே. இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டிபதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, அவருடைய பரிசுத்தமுள்ள சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாகும்படி, கிருபைசெய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்

மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே(*) அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, (†) அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், (‡) இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அப்படியே ராப்போஜனம் பண்ணினபின்பு, (§) அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; (‖) இது பாவமன்னிப்புண்டாகும்படி, உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; இதைப் பானம்பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆமேன்.

(*) இதைச் சொல்லுகையில், குருவானவர் அப்பம் வைத்திருக்கிற தட்டைக் கையில் எடுக்கவும்,

(†) இப்பொழுது அப்பத்தைப் பிட்கவும்,

(‡) இப்பொழுது அப்பம் எல்லாவற்றின்மேலும் கையை வைக்கவும்,

(§) இப்பொழுது பாத்திரத்தைக் கையில் எடுக்கவும்,

(‖) இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்படும் திராட்சரசம் இருக்கும் ஒவ்வொரு பாத்திரத்தின்மேலும் கையை வைக்கவும் வேண்டும்.

¶ *அப்பொழுது குருவானவர் நற்கருணை அப்பமும் திராட்சரசமும் ஆகிய இரண்டையும் தாம் முந்தி உட்கொண்டு, பின்பு அங்கிருக்கும் கண்காணிமார் குருமார் உதவிக்குருமாருக்குப் பரிமாறவேண்டும். அப்புறம் ஜனங்களெல்லாரும் பணிவாய் முழங்கால்படியிட்டிருக்க, அவரவர் கையில் கொடுக்கவேண்டும். ஒருவனுக்கு அப்பத்தைக் கொடுக்கும்போது அவர் சொல்லவேண்டியதாவது:*

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் உன் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்தியஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்து உனக்காக மரணமடைந்தார் என்று நினைவுகூரும்படி, நீ இதை வாங்கிப் புசித்து, விசுவாசத்தினால் உன் இருதயத்தில் நன்றியறிதலோடே அவரை உனக்கு ஆகாரமாய் உட்கொள்வாயாக.

¶ *பாத்திரத்தைக் கொடுக்கும் குருவானவர், அதை ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்போது சொல்லவேண்டியதாவது:*

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உன் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகச் சிந்தப்பட்டதென்று நினைவுகூரும்படி, இதைப் பானம்பண்ணி நன்றியறிந்தவனாய் (ளாய்) இருப்பாயாக.

¶ *இன்னும் சிலர் நற்கருணை வாங்காமல் இருக்கும்போது, பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்பமாவது திராட்சரசமாவது செலவாய்ப் போனால், குருவானவர் முன் சொல்லிய ஒழுங்கின்படி வேண்டிய அளவு பிரதிஷ்டை செய்யவேண்டும். அதில் 'நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே' என்கிற வார்த்தை முதற்கொண்டு வாசித்து அப்பத்தை ஆசீர்வதிக்கவேண்டும்; அந்தப் பிரகாரமாய் 'ராப்போஜனம் பண்ணினபின்பு' என்கிற வார்த்தை முதற்கொண்டு வாசித்துப் பாத்திரத்தையும் ஆசீர்வதிக்கவேண்டும்.*

¶ *எல்லாரும் வாங்கினபின்பு, குருவானவர் கர்த்தருடைய மேஜைக்குத் திரும்பிவந்து, பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்பத்திலும் திராட்சரசத்திலும் மீதியானதை அதின்மேல் வணக்கமாய் வைத்து, சுத்த வெண் வஸ்திரத்தினாலே மூடவேண்டும்.*

¶ *பின்பு குருவானவர் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல, ஜனங்களும் அதில் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தொடர்ந்து சொல்லவேண்டும்.*

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ *பின்பு சொல்லவேண்டுவதாவது:*

பரம பிதாவாகிய கர்த்தாவே, உமது அடியாராகிய நாங்கள் இப்பொழுது செலுத்தியிருக்கிற துதி தோத்திர பலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று, தயவுள்ள பிதாவாகிய உம்மை முழு மனதோடே வேண்டிக்கொள்ளுகிறோம். உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினாலும் மரணத்தினாலும், அவர் திரு இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய், நாங்களும் மற்றுமுள்ள உம்முடைய சபை அனைத்தும் பாவமன்னிப்பையும், அவர் பாடுகளினால் உண்டான மற்றெல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படி, தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். கர்த்தாவே, சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை முழுவதும் தேவரீருக்குப் புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். இப்பொழுது பரிசுத்த நற்கருணையில் பங்குபெற்றிருக்கிற எங்கள் எல்லாரையும் தேவரீர் உமது

கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும் நிரப்பியருளவேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அநேகவிதமாய் இருக்கிற எங்கள் பாவங்களினாலே தேவரீருக்கு எந்தப் பலியும் செலுத்துவதற்கு நாங்கள் அபாத்திரராயிருந்தும், எங்கள் பாத்திராபாத்திரத்தைத் தேவரீர் கவனியாமல், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் கடமையின்படி நாங்கள் செலுத்தியிருக்கிற பணிவிடையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற தேவரீருக்கு, அவர் மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. **ஆமென்.**

¶ *அல்லது இது.*

நித்திய ஜீவியாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்றவிதமாய் வாங்கியிருக்கிற எங்களை, தேவரீர் உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தினால் போஷித்ததற்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் எங்கள்மேல் தயைகூர்ந்து கிருபாகடாட்சம் வைத்திருக்கிறதையும், உத்தம விசுவாசிகளின் கூட்டமும் உமது நேச குமாரனுடைய ஞான சரீரமுமாகிய சபையில் நாங்கள் அவயவங்களாய் இணைக்கப்பட்டிருக்கிறதையும், அவருடைய அருமையான பாடுகளினாலும் மரணத்தினாலும் உண்டான புண்ணியத்தினாலே, உமது நித்திய ராஜ்யத்துக்கு நாங்கள் சுதந்தரராயிருக்கிறதையும், இந்த நற்கருணையினாலே எங்களுக்கு நிச்சயப்படுத்தினதற்காக முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பரம பிதாவே, நாங்கள் இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருந்து, நாங்கள் செய்யும்படி தேவரீர் நியமித்திருக்கிற நற்கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற, உமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. **ஆமென்.**

¶ *பின்பு சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:*

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

கர்த்தராயிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். **ஆமென்.**

¶ *அப்பொழுது குருவாவது, அத்தியட்சர் இருந்தால் அவராவது, பின் வருகிற ஆசீர்வாதத்தைச் சொல்லி, ஜனங்களை அனுப்புவிக்கவேண்டும்.*

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருப்பதாக, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. **ஆமென்.**

¶ *நற்கருணை பரிமாறுமலிருக்கும் நாட்களில், "காணிக்கைவாசகம்" என்னும் வாக்கியங்களுக்குப் பின்பு வாசிக்கவேண்டிய சுருக்கஜெபங்களாவன, அந்நாட்களில் இரண்டொரு ஜெபங்களை வாசிக்கவேண்டும். அல்லாமலும், இவைகள் காலை மாலைஜெப ஒழுங்கில் வருகிற சுருக்கஜெபங்களுக்குப் பின்பும், நற்கருணை ஒழுங்குக்கும் லித்தானியாவுக்கும் பின்பும் குருவானவருக்கு இஷ்டமான வேளையிலும் வாசிக்கவேண்டும்.*

கர்த்தாவே, சாவுக்கினமான இந்த ஜீவகாலத்தில் மாறிமாறிவருகிற சுகதுக்கங்களிலெல்லாம் உமது அடியாராகிய நாங்கள் உமது சம்பூரண கிருபையினாலும் சகாயத்தினாலும் எப்பொழுதும் காக்கப்படும்படி; இப்பொழுது நாங்கள் செய்கிற விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் இரக்கமாய்க் கேட்டு, நாங்கள் நித்திய ரட்சிப்பைப் பெறத்தக்கதாக, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களை வழி நடத்தியருளும். **ஆமென்.**

சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரத்தின்படியும் ஆத்துமத்தின்படியும் உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி; உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்ற கிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி, ஆண்டு நடத்தவேண்டுமென்று எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

சர்வவல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய நாமத்துக்குக் கனமும் புகழும் உண்டாவதற்கு ஏதுவாக நன்னடக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்திலே பதித்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆண்டவரே, நாங்கள் எந்த கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபா கடாட்சத்தோடே எங்களுக்கு துணைநின்று இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்குமுன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அநுக்கிரகித்தருளும். ஆமென்.

உம்முடைய குமாரனின் நாமத்தினாலே வேண்டிக்கொள்ளுகிறவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்போம் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, இப்பொழுது உம்மை நோக்கி ஜெபங்களையும் வேண்டுதல்களையும் செய்திருக்கிற எங்களுக்கு இரக்கமாய்ச் செவிகொடுத்து, நாங்கள் உமது சித்தத்துக்கு ஏற்றபடி விசுவாசமாய்க் கேட்கிறவைகள் சம்பூரணமாய்க் கிடைப்பதினால், எங்கள் அவசரம் தீரவும், உம்முடைய மகிமை விளங்கவும், அவைகளைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ நற்கருணை பரிமாறாமலிருக்கும் ஞாயிறுகளிலும், மற்றத் திருநாட்களிலும் நற்கருணை ஒழுங்கில் [இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபை அனைத்துக்காகவும்] சொல்லிய பொதுவான ஜெபம் வரைக்கும் அடங்கியிருக்கிற யாவற்றையும், இந்த ஒழுங்கின் கடைசியில் அடங்கியிருக்கிற சுருக்க ஜெபங்களில் இரண்டொரு ஜெபத்தையும், ஆசீர்வாதத்தையும் வாசித்து முடிக்கவேண்டும்.

¶ தம்மோடே கூடக் கர்த்தருடைய ராப்போஜனத்தை வாங்கும்படி, போதுமான ஜனங்கள் இல்லையென்று குருவானவர் கண்டால், அதைப் பரிமாறக்கூடாது.

¶ ஒரு சேகரத்தில் நற்கருணையை வாங்கத்தக்கவர்கள் இருபதுபேருக்கு அதிகமாயிராவிட்டாலும், அவர்களில் நான்குபேராவது, குறைந்தது மூன்று பேராவது இராவிட்டால் அதைப் பரிமாறக்கூடாது.

¶ அநேக குருமார் உதவிக்குருமார் இருக்கும் கதீட்ரல் கோவில்களிலும், குரு சமுகக் கோவில்களிலும், வித்தியாசாலைக் கோவில்களிலும் தகுதியான முகாந்தரம் இல்லாவிட்டால், அவர்களெல்லாரும் குருவானவரோடே கூடத் தவறாமல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது நற்கருணையை வாங்கவேண்டும்.

¶ நற்கருணை அப்பத்தையும் திராட்சரசத்தையும் குறித்துத் தர்க்கத்துக்கும் வீண்பக்திக்கும் இடமில்லாதபடிக்குக் கட்டளையிடுகிறது என்னவென்றால், அந்த அப்பம் வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாயிருந்தால் போதும்; ஆனால் அது நல்ல கோதுமை அப்பமாயிருக்கவேண்டும்.

¶ பிரதிஷ்டையாக்காத அப்பமாவது திராட்சரசமாவது இருந்தால், குருவானவர் தனக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். பிரதிஷ்டையாக்கினதில் மீதியிருந்தால், கோவிலை விட்டுக் கொண்டுபோகாமல் ஆசீர்வாதம் சொல்லியவுடனே குருவானவரும், பந்தியிலிருந்தவர்களில் அவர் அழைக்கும்பேர்களும் அதை வணக்கமாய்ப் புசித்துப் பானம்பண்ணவேண்டும்.

¶ நற்கருணைக்குத் தேவையான அப்பத்தையும் திராட்சரசத்தையும் குருவானவரும் கோவில் காரியகாரரும் அந்தச் சேகரத்தாருடைய செலவினாலே வாங்கவேண்டும்.

¶ அந்தந்தச் சேகரத்தாரில் ஒவ்வொருவனும் வருஷாவருஷம் கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் முதலான மூன்று திருநாட்களிலாவது நற்கருணையில் சேரவேண்டும். மேலும் வருஷந்தோறும் உயிர்த்தெழுந்த திருநாள் வாரத்தில் கணக்குப்பார்த்துத் தன் தன் குருவுக்காவது, அவருடைய பிரதி காரியஸ்தருக்காவது சபைக்குரிய வரிப்பணத்தை வழக்கப்படி அவர்களுக்குச் செலுத்தவேண்டும்.

¶ தேவாராதனை முடிந்தபின்பு, காணிக்கை வாசகம் வாசிக்கையில் விழுந்த பணத்தை குருவானவரும் கோவில் காரியகாரரும் செய்யும் ஆலோசனையின்படி, பக்தியும் தர்மமுமான விஷயங்களில் செலவுசெய்யவேண்டும். அதைக்குறித்து அவர்கள் விகற்பப்பட்டால் அத்தியட்சர் கட்டளைப்படி செலவு செய்யவேண்டும்.

" கர்த்தருடைய ராப்போஜனம் ஆசரிக்கப்படும் ஒழுங்கில், நற்கருணையில் " சேருகிறவர்கள் முழங்காற்படியிட்டு அதை வாங்கவேண்டுமென்று நியமித் " திருக்கிறதே, இது நல்ல ஒழுங்குதான். பாத்திரமான வகையாய் அதை " வாங்குகிறவர்கள், அதன் மூலமாய்க் கிறிஸ்துநாதரிடத்தில் பெற்றுக்கொள்ளு " கிற நன்மைகளை மகா முக்கியமென்று தாழ்மையோடும் நன்றியறிதலோடும் " அறிக்கையிடும்படிக்கும், மற்றப்படிப் பரிசுத்த நற்கருணையில் நேரிடும் " பரிசுத்த குலைச்சலுக்கும் குழப்பத்துக்கும் இடமிராதபடிக்கும் இப்படிச் " செய்ய நியமித்திருக்கிறது. ஆனாலும், சிலர் அறியாமையினாலும், வேறு சிலர் " விரோதத்தினாலும் முழங்காற்படியிடுகிற விஷயத்தைக் குறித்துத் தப்பாய் " எண்ணாமலும் அதைப் புரட்டாமலும் இருக்கும்படி இதனாலே தெரிவிக்கிறது " என்னவென்றால், இப்படி முழங்காற்படியிடுவதினாலே நற்கருணையில் சரீரப் " பிரகாரமாய் வாங்கப்படுகிற நற்கருணை அப்பம் திராட்சரசம் என்பவைகளுக் " காவது, கிறிஸ்துநாதருடைய இயற்கையான மாம்சமும் இரத்தமும் சரீரப் " பிரகாரமாய் எழுந்தருளினாற்போல அவைகளுக்காவது, யாதொரு ஆராதனை " செய்யவேண்டுமென்கிற நோக்கம் இல்லை; அப்படிச் செய்கிறதற்கு நியாய " மும் இல்லை. ஏனென்றால், நற்கருணை அப்பமும் ரசமுமாகிய பதார்த்தங் " கள் முன்போல அதனதன் சொந்த இயற்கையின்படி மாறாமலிருக்கிறது. " ஆதலால், அவைகளை ஆராதிக்கலாகாது. அப்படிச் செய்வது சகல உத்தம " கிறிஸ்தவர்களாலும் வெறுக்கவேண்டிய விக்கிரகாராதனையாமே. மேலும் நம்மு " டைய இரட்சகராகிய கிறிஸ்துநாதருடைய இயற்கையான சரீரமும் இரத்த " மும் இவ்விடத்தில் இல்லாமல் பரலோகத்திலிருக்கிறது. கிறிஸ்துநாதருடைய " இயற்கையான சரீரம் ஒரே காலத்தில் பல இடங்களிலும் இருக்கும் என்று " சொன்னால், அவருக்கு இயற்கையான சரீரம் உண்டென்கிற சத்தியத்துக்கு " விரோதமாயிருக்கும்."

THE MINISTRATION
OF
PUBLICK BAPTISM OF INFANTS,
TO BE USED IN THE CHURCH.

தேவாலயத்தில்
குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும்

ஞானஸ்நான முறைமை.

¶ ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றத் திருநாட்களிலும் அநேக ஜனங்கள் கூடிவரும்போது, அந்தச் சமயங்களிலேயல்லாமல், மற்ற நாட்களில் ஞானஸ்நானம் கொடுக்கிறது தகுதியல்லவென்று ஜனங்களுக்கு எச்சரிக்க வேண்டும். என்னத்தினாலெனில், ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுவதற்கு, கூடிவந்திருக்கும் சபையார் சாட்சிகளாயிருக்கும்படியாகவும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் தானும் ஞானஸ்நானத்தில் தேவனுக்கு முன்பாகச் செய்த அறிக்கையை நினைவுகூரும்படியாகவும், அந்த நாட்களில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். அதினிமித்தம் ஞானஸ்நானம் நாடோடிப் பாஷையில் கொடுக்கிறது நல்லது; ஆனாலும் அவசரம் இருந்தால், மற்ற நாட்களிலும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

¶ மேலும், ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் இரண்டு ஞானத்தகப்பன்மாரும் ஒரு ஞானத்தாயும், ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ஒரு ஞானத்தகப்பனும் இரண்டு ஞானத்தாய்மாரும் இருக்க வேண்டும்.

¶ பிள்ளைகள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்கும்போது, முந்தின சாயங்காலத்திலாவது, அந்த நாளில் காலைஜெபம் தொடங்குமுன்பாவது, பெற்றோர் குருவானவருக்கு அறிவிக்கவேண்டும். பின்பு, குருவானவர் நியமிக்கிறபடி, காலைஜெபத்தின் இரண்டாம் பாடத்தை வாசித்தவுடனேயாவது, மாலைஜெபத்தின் இரண்டாம் பாடத்தை வாசித்தவுடனேயாவது, ஞானத்தாய் தகப்பன்மாரும் பிள்ளைகளோடே வருகிற ஜனங்களும் ஞானஸ்நானத் தொட்டியண்டையில் ஆயத்தமாய் வந்திருக்கவேண்டும். அப்பொழுது சுத்த ஜலத்தை வார்த்து நிரப்பியிருக்கிற ஞானஸ்நானத் தொட்டியருகே குருவானவர் வந்துநின்று சொல்லவேண்டியதாவது:

இந்தப் பிள்ளை இதற்குமுன்னே ஞானஸ்நானம் பெற்றதா, இல்லையா?

¶ அவர்கள் இல்லை என்றால், குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, எல்லா மனிதரும் பாவத்தில் உற்பவித்துப் பிறந்திருக்கிறதினாலும்; ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சொல்லியிருக்கிறதினாலும்; சுபாவமாய் இந்தப் பிள்ளையினிடத்தில் இராத நன்மை இதற்குக் கிடைக்கும்படி, நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவனாகிய பிதாவை நோக்கி, இந்தப் பிள்ளை ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பரிசுத்த சபையில் சேர்ந்து, அதில் ஜீவனுள்ள அவயவமாகும்படி, அவர் தமது மிகுந்த காருணியத்தினால் செய்தருளவேண்டுமென்று விண்ணப்பம்பண்ண உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

¶ பின்பு குருவானவர் சொல்லவேண்டியது:

ஜெபம் பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நோவாவும் அவனுடைய குடும்பமும் ஜலத்தினால் அழியாதபடிக்குத் தேவரீர் மிகுந்த இரக்கமாய் அவர்களைப் பேழையில் தற்காத்து ரட்சித்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரைச் சிவந்த சமுத்திரத்தின் நடுவாகச் சேதமின்றி நடத்தி, அதினால் உமது பரிசுத்த ஞானஸ்நானத்தை அடையாளமாகக் காட்டி; உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து யோர்தான் நதியிலே பெற்ற ஞானஸ்நானத்தினால் ஞானப்பிரகாரமாய்ப் பாவத்தைப் போக்கும் ஸ்நானமாக ஜலத்தைப் பிரதிஷ்டைசெய்தீரே. தேவரீர் இந்தப் பிள்ளையை இரக்கமாய்க் கண்ணோக்கி; இவன் (ள்) உமது கோபத்துக்கு நீங்கி, கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் சேர்க்கப்படவும்; விசுவாசத்தில் உறுதியாகி, நன்னம்பிக்கையில் மகிழ்ந்து, அன்பில் வேரூன்றி, இவ்வுலகமாகிய துக்கசாகரத்தின் அலைகளைக் கடந்து, நித்திய ஜீவ கரையைச் சேர்ந்து, சதாகாலமும் உம்மோடே அரசாளவும்; பரிசுத்த ஆவியினாலே இவனை (ளை) க் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று, உமது அளவில்லாத இரக்கங்களினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

தாழ்ச்சியுள்ள அனைவருக்கும் அநுகூலமாயும், அடைக்கலம்பெற உம்மிடத்தில் வருகிறவர்களுக்குச் சகாயமாயும், விசுவாசிகளுக்கு ஜீவனாயும், மரித்தோருக்கு உயிர்த்தெழுதலாயும் இருக்கிற அழிவில்லாத சர்வவல்லமையுள்ள தேவனே, நீர் கட்டளையிட்ட பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெற வந்திருக்கிற இந்தக் குழந்தை ஆவிக்குரிய மறுஜன்மத்தால் பாவமன்னிப்படையும்படி இவனு (ளு) க்காக உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் என்று தேவரீர் உம்முடைய பிரியமான குமாரனைக்கொண்டு அருளின திருவாக்கின்படியே இந்தக் குழந்தையை ஏற்றுக்கொண்டு; நீர் அருளிச்செய்த பரம ஸ்நானமாகிய நித்திய ஆசீர்வாதத்தை இவன் (ள்) பெற்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவரீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நித்திய ராஜ்யத்தில் சேரும்படி; கேட்கிற எங்களுக்குக் கொடுத்து, தேடுகிற நாங்கள் கண்டடையச்செய்து, தட்டுகிற எங்களுக்கு வாசலைத் திறந்தருளும். ஆமேன்.

¶ அப்பொழுது ஜனங்கள் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பரிசுத்த மாற்கு பத்தாம் அதிகாரம் பதின்மூன்றாம் வசனமுதல் எழுதிய சுவிசேஷவாக்கியத்தைக் கேளுங்கள்:

சிறு பிள்ளைகளைக் கிறிஸ்துவானவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

¶ சுவிசேஷவாக்கியத்தை வாசித்தபின்பு, குருவானவர் அதைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக் கேட்ட இந்தச் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சிறுபிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார், அவர்களைத் தம்மிடத்தில் வரவிடாதவர்களைக் கடிந்துகொண்டார்; எல்லா மனிதரும் அவர்களைப்போலக் குற்றமில்லாதவர்களாய் இருக்கவேண்டும் என்று

போதித்தார். அவர் அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்த வெளியரங்கமான செய்கையினாலே, தாம் அவர்களுக்குத் தயவுள்ளவரென்றும் காண்பித்தார். அப்படியே அவர் இந்தக் குழந்தையையும் தயவாய் ஏற்றுக்கொண்டு, தமது கிருபையாகிய கரத்தினால் இவனை (ளை) அணைத்து, நித்தியஜீவனாகிய ஆசீர்வாதத்தை இவனு (ளு) க்குத்தந்தருளி, என்றுமுள்ள தமது ராஜ்யத்தில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்வாரென்று, சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசியுங்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்தபடி, நம்முடைய பரமபிதா இந்தக் குழந்தையின்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம் நிச்சயங்கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெறும்படி நாம் இந்தக் குழந்தையைக் கொண்டுவந்த அன்பான செய்கையை அவர் தயவாய் ஒப்புக்கொள்ளுகிறாரென்றும் நம்பியுமிருக்கிறோம். ஆகையால் நாம் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரம பிதாவே, உமது கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தருளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். இந்தக் குழந்தை மறுபடியும் பிறந்து, நித்திய ரட்சிப்புக்குச் சுதந்தரவாளியாகும்படி, இவனு (ளு) க்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுத்தருளவேண்டுமென்று, இப்பொழுதும் எப்பொழுதும் உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ அப்பொழுது குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, ஞானஸ்நானம் பெறுவதற்கு இந்தப் பிள்ளையைக் கொண்டுவந்தீர்களே; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவனை (ளை) ஏற்றுக்கொண்டு, இவனை (ளை) ப் பாவங்களிலிருந்து விடுதலையாக்கி, பரிசுத்த ஆவியினாலே சுத்திகரித்து, இவனு (ளு) க்குப் பரலோக ராஜ்யத்தையும் நித்திய ஜீவனையும் கொடுத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டீர்கள். நீங்கள் வேண்டிக்கொண்ட இவைகள் எல்லாவற்றையும் அருளிச்செய்வோம் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது சுவிசேஷத்தில் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறதையும் கேட்டிருக்கிறீர்கள். அவர், தாம் ஒப்புக்கொண்டபடி, அந்த வாக்குத்தத்தத்தை நிச்சயமாகவே நிறைவேற்றுவார். ஆகையால் கிறிஸ்து இந்த வாக்குத்தத்தம் செய்ததின்பேரில், இந்தக் குழந்தையும்: தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன் என்றும், தேவனுடைய பரிசுத்த வசனத்தை உறுதியாய் விசுவாசிப்பேன் என்றும், அவர் கற்பனைகளைப் பணிவாய்க் கைக்கொள்வேன் என்றும், இந்த உடன்படிக்கையைத் தானே ஒப்புக்கொள்ளத்தக்க வயதாகுமட்டும் தன் பிணையாளிகளாயிருக்கிற உங்களைக்கொண்டு உண்மையாய் வாக்குத்தத்தஞ்செய்யவேண்டும்.

ஆகையால் நான் கேட்கிறதாவது:

நீ இந்தப் பிள்ளையின் பேராலே பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாதபடிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும் அவைகளை வெறுத்துவிடுகிறாயா?

மறுமொழி: அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

மறுமொழி: இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

இந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம் பெற விரும்புகிறாயா?

மறுமொழி: அதையே விரும்புகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: அப்படியே நடந்துகொள்வேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இரக்கமுள்ள தேவனே, இந்தப் பிள்ளையிலுள்ள பழைய ஆதாம் அடக்கம்பண்ணப்படவும், புதிய மனுஷன் இவனி (ளி) ல் உயிர்த்தெழும்பவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

இவனி (ளி) லுள்ள மாம்ச இச்சைகளெல்லாம் அழியவும், ஆவிக்குரியவைகளெல்லாம் பிழைத்து வளர்ந்தேறவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் ஜெயித்து வெற்றி சிறக்கும்படி, இவனு (ளு) க்கு வல்லமையையும் பெலனையும் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய ஜீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவனே, எங்கள் உத்தியோகத்தினாலும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிற யாவரும் பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு, நித்திய பலனை அடையும்படி, உமது இரக்கத்தினாலே கிருபைசெய்தருளும். ஆமேன்.

நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது அருமையான விலாவிலிருந்து ஜலத்தையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டருளினாரே. தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி, ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த ஜலத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இந்தப் பிள்ளை உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று, தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவனா (ளா) ய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் பிள்ளையைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு, ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளைக்குப் பேரிடுங்கள்.

¶ அப்பொழுது அவர்கள் இடுகிற பேரை அவர் சொல்லி, பிள்ளை ஜலத்தில் முழுக்காட்டத் தாங்குமென்று அவர்கள் சொன்னால், பத்திரமாய் முழுக்காட்டிச் சொல்லவேண்டியது:

__________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

¶ பிள்ளை பலவீனமாயிருக்கிறதென்று அவர்கள் சொன்னால், அதின்மேல் ஜலத்தை வார்க்கிறதே போதும். அப்பொழுது மேற்சொல்லிய வார்த்தைகளைச் சொல்லக்கடவர். அதாவது:

__________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளையைக் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

¶ அப்பொழுது குருவானர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இந்தப் பிள்ளை மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இந்தப் பிள்ளை தன் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

¶ அப்பொழுது எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, சொல்லவேண்டியதாவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம்

* இப்பொழுது பிள்ளையின் நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து, கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற இவன் (ள்) தன்னிலுள்ள பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்து, பாவசரீரத்தை முற்றிலும் அழிக்கவும், இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

இந்தப் பிள்ளை தன் பிணையாளிகளாகிய உங்கள் மூலமாய், தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து அவருக்கு ஊழியஞ்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால்; இவன் (ள்) உங்களைக்கொண்டு இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று அறிந்துகொள்ளத்தக்க திராணியுண்டானவுடனே, இவனு (ளு) க்கு அதைப் போதித்துவருகிறார்களா என்று பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. இவைகளை இவன் (ள்) நன்றாய் அறிந்துகொள்ளும்படி, பிரசங்கங்களைக் கேட்கவும், விசேஷமாய் சுயபாஷையில் விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும், தங்களுக்கு ஆத்தும ரட்சிப்பு உண்டாகக் கிறிஸ்தவர்கள் அறிந்து விசுவாசிக்கவேண்டிய மற்றெல்லாவற்றையும் படிக்கவும், கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற தேவபக்தியும் சன்மார்க்கமுமுள்ளவனா (ளா) ய் நடக்கத்தக்கதாக வளர்க்கப்படவும், நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாமும் பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகள் எல்லாவற்றையும் அழித்து, சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளுங்கள்.

¶ பின்னும் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளை விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும் சுயபாஷையில் சொல்லுகிறதுமல்லாமல், திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் படிக்கவேண்டிய திருச்சபை ஞானோபதேச வினாவிடையையும் கற்று அறிந்தவுடனே, திடப்படுத்தலைப் பெறும்படிக்கு அத்தியட்சரிடத்தில் கொண்டுவரப்படும்படி, நீங்கள் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும்.

¶ ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள் கர்மபாவம் இல்லாதவர்களாய் இறந்தால், இரட்சிக்கப்படுவார்களென்பது வேதவசனத்தால் நிச்சயமாய் இருக்கிறது.

¶ ஞானஸ்நான முறைமையில் சிலுவையின் அடையாளத்தை வரைகிறதைக் குறித்துச் சமுசயம் முற்றும் நீங்கும்படி, அதின் அர்த்தமும், அதைக் கைக்கொள்ளுகிற முகாந்தரங்களும் இன்னவைகளென்று, முதலாவது 1604-ம் வருஷத்தில் பிரசித்தம் செய்யப்பட்ட கனோன் சட்டங்களிலே 30-ம் சட்டத்தில் காண்க.

THE MINISTRATION
OF
PRIVATE BAPTISM OF CHILDREN
IN HOUSES.

வீடுகளில்

பிள்ளைகளுக்குத் தனிமையாகக் கொடுக்கும்

ஞானஸ்நான முறைமை.

¶ பிள்ளைகள் பிறந்து முதலாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, அதற்கு இடையில் வரும் திருநாளிலாவது ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும், குருவானவர் ஒப்புக்கொள்ளத்தக்க முகாந்தரம் இல்லாவிட்டால், ஞானஸ்நானத்தைத் தாமதம்பண்ணக் கூடாதென்றும், அந்தந்தச் சேகரத்திலுள்ள குருமார் அடிக்கடி ஜனங்களுக்கு எச்சரிக்கவேண்டும்.

¶ மேலும், தகுதியான முகாந்தரம் இல்லாவிட்டால், வீடுகளில் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்கக் கூடாதென்று, குருமார் அவர்களுக்கு எச்சரிக்கவேண்டும். முகாந்தரம் உண்டானால், பின்வரும் முறைமையின்படி ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்.

¶ முதலாவது, அந்தச் சபைக்குக் குருவானவராகிலும், அவர் இல்லாத காலத்தில் கிரமமாய் குருப்பட்டம் பெற்ற வேறொரு குருவானவர் சமீபமாயிருந்தால் அவராகிலும், கூடிவந்திருக்கிறவர்களோடே தேவனை நோக்கிக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுகிறதுமல்லாமல், தேவாலயத்தில் வெளியரங்கமாய்க் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையில் முன் கண்டிருக்கிறபடி வாசிக்கக் குறித்திருக்கிற சுருக்கஜெபங்களில் சில சுருக்கஜெபங்களை அவசரங்கண்டு சமயத்துக்குத்தக்கதாய்ச் சொல்லக்கடவர். அப்பொழுது அங்கே இருக்கிறவர்களில் ஒருவர் பிள்ளைக்குப் பெயரிட, குருவானவர் பிள்ளையின்மேல் ஜலத்தை வார்த்துச் சொல்லவேண்டிய வார்த்தைகளாவன:

________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்திச் சொல்லவேண்டியதாவது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்தவான்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ இவ்விதமாய்ப் பிள்ளைக்குக் கொடுத்திருக்கிற ஞானஸ்நானம் ஒழுங்காயும் தகுதியாயும் இருக்கிறதென்றும், அது திரும்ப ஞானஸ்நானம் பெறவேண்டியதில்லையென்றும், யாவரும் நிச்சயமாய் அறிந்துகொள்வார்களாக. ஆனாலும் இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்ற பிள்ளை பிழைத்தால், அதைத் தேவாலயத்தில் கொண்டுவரவேண்டும். ஏனெனில், அந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் அந்தச்சேகரத்துக் குருவாயிருந்தால், தாம் சரியான ஒழுங்கின்படி தனிமையாய் ஞானஸ்நானம் கொடுத்தது சபையாருக்குத் தெரியவரும்படி இப்படிச் செய்யவேண்டும்: அப்பொழுது அவர் சொல்லவேண்டியதாவது:

________ காலத்தில் ________ இடத்தில் சில சாட்சிகளுக்கு முன்பாக, திருச்சபை நியமித்திருக்கிற முறைமையின்படி, நான் இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

¶ கிரமமாய்க் குருப்பட்டம் பெற்ற வேறு குருவானவராலே அந்தப் பிள்ளை ஞானஸ்நானம் பெற்றிருக்குமாகில், பிள்ளை பிறந்த சேகரத்திலாவது, ஞானஸ்நானம் பெற்ற சேகரத்திலாவது குருவாயிருக்கிறவர், அந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் ஒழுங்காய்க் கொடுக்கப்பட்டதுண்டோ இல்லையோ என்று விசாரித்து அறியவேண்டும். அப்படியே, பிள்ளையைத் தேவாலயத்துக்குக் கொண்டுவந்திருக்கிறவர்கள், இந்தப் பிள்ளை ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதென்று சொன்னால், குருவானவர் பின்னும் அவர்களிடத்தில் விசாரித்துக் கேட்கவேண்டியதாவது:

யாராலே இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது, கூட இருந்தவர்கள் யார்?

அவசரமான காலங்களில் பதற்றத்தினாலாவது ஆத்திரத்தினாலாவது இந்தச் சாக்கிரமெந்துக்கு அவசியம் வேண்டிய சில காரியங்களை ஒருவேளை செய்யாமல் விட்டிருக்கும்; ஆகையால் நான் உங்களிடத்தில் பின்னும் கேட்கிறதாவது:

என்னத்தைக்கொண்டு இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

என்ன வார்த்தைகளைச் சொல்லி இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

¶ பிள்ளையைக் கொண்டுவந்தவர்கள் சொல்லும் மாறுத்தரவினாலே அந்தப் பிள்ளைக்குச் செய்யவேண்டியவைகள் எல்லாம் ஒழுங்கின்படி செய்யப்பட்டதென்று குருவானவருக்குத் தெரியவந்தால், அவர் அந்தப் பிள்ளைக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடாமல், பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி, மெய்க்கிறிஸ்தவர்களாகிய மந்தையில் ஒருவனாய் (ஒருத்தியாய்) ச் சேர்த்துக்கொண்டு சொல்லவேண்டியதாவது:

இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்ததில், நியமித்திருக்கிற ஒழுங்கின்படி செய்யவேண்டியவைகள் எல்லாம் சரியாய்ச் செய்தாயிற்று என்று உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். ஜன்மபாவமுள்ளவனா (ளா) யும் தேவகோபாக்கினைக்கு உட்பட்டவனா (ளா) யும் பிறந்த இந்தப் பிள்ளை ஞானஸ்நானத்திலுள்ள மறுஜன்ம முழுக்கினாலே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளும் நித்திய ஜீவனுக்குச் சுதந்தரருமாகிய கூட்டத்தில் சேர்க்கப்பட்டவனா (ளா) ய் இருக்கிறான் (ள்). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது கிருபைக்கும் இரக்கத்துக்கும் இப்படிப்பட்ட குழந்தைகளை விலக்காமல், மிகுந்த அன்போடே தம்மிடத்தில் வரவழைத்திருக்கிறாரென்று, நமக்கு ஆறுதலாக இப்பொழுது வாசிக்கப்போகிற சுவிசேஷவாக்கியத்தினால் உங்களுக்குத் தெரியவரும்.

அந்தச் சுவிசேஷவாக்கியமாவது: பரி. மா. 10. 13.

சிறு பிள்ளைகளைக் கிறிஸ்துவானவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

¶ சுவிசேஷவாக்கியத்தை வாசித்தபின்பு, குருவானவர் அதைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக்கேட்ட இந்தச் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சிறு பிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார், அவர்களைத் தம்மிடத்தில் வரவிடாதவர்களைக் கடிந்துகொண்டார்; எல்லா மனிதரும் அவர்களைப்போலக் குற்றமில்லாதவர்களாய் இருக்கவேண்டும் என்று போதித்தார். அவர் அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்த வெளியரங்கமான செய்கையினாலே, தாம் அவர்களுக்குத் தயவுள்ளவரென்று காண்பித்தார். அப்படியே அவர் இந்தக் குழந்தையையும் தயவாய் ஏற்றுக்கொண்டு, தமது கிருபையாகிய கரத்தினால் இவனை (ளை) அணைத்துக்கொண்டிருக்கிறாரென்றும், தமது பரிசுத்த வசனத்தினாலே வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடி நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தை இவனு (ளு) க்குத் தந்தருளி, என்றுமுள்ள தமது ராஜ்யத்தில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்வாரென்றும், சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசியுங்கள். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்தபடி, நம்முடைய பரம பிதா இந்தக் குழந்தையின்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம் நிச்சயங்கொண்டிருக்கிறதினாலே, நாம் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, கர்த்தர்தாமே நமக்குக் கற்பித்த ஜெபத்தைச் சொல்லக்கடவோம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரம பிதாவே, உமது கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தருளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். மறுபடியும் பிறந்து எங்கள் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நித்திய ரட்சிப்புக்குச் சுதந்தரவாளியான இந்தக் குழந்தை உம்முடைய ஊழியக்காரனா (ரியா) ய் நிலைத்திருந்து, தேவரீர் செய்த வாக்குத்தத்தத்தை அடையும்படி, உம்மோடும் பரிசுத்தஆவியோடும், இப்பொழு

தும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினித்தம் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் பிள்ளையின் பேர் என்னவென்று கேட்க, ஞானத்தாய் தகப்பன்மார் அதைச் சொல்லியபின்பு குருவானவர் சொல்லவேண்டியது:

நீ இந்தப் பிள்ளையின் பேராலே பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாதபடிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும் அவைகளை வெறுத்துவிடுகிறாயா?

மறுமொழி: அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம்நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

மறுமொழி: இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: அப்படியே நடந்துகொள்வேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளையைக் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக, இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

* இப்பொழுது பிள்ளையின் நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இந்தப் பிள்ளை ஞானஸ்நானத்தினால் மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இந்தப் பிள்ளை தன் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து, கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற இவன் (ள்) தன்னிலுள்ள பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்து, பாவ சரீரத்தை முற்றிலும் அழிக்கவும், இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறது போல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபை செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

இந்தப் பிள்ளை தன் பிணையாளிகளாகிய உங்கள் மூலமாய், தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து அவருக்கு ஊழியஞ்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால்; இவன் (ள்) உங்களைக்கொண்டு இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று அறிந்துகொள்ளத்தக்க திராணியுண்டானவுடனே, இவனு (ளு) க்கு அதைப் போதித்துவருகிறார்களா என்று பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. இவைகளை இவன் (ள்) நன்றாய் அறிந்துகொள்ளும்படி, பிரசங்கங்களைக் கேட்கவும், விசேஷமாய் சுயபாஷையில் விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும், ஆத்தும இரட்சிப்பு உண்டாகக் கிறிஸ்தவர்கள் அறிந்து விசுவாசிக்கவேண்டிய மற்றெல்லாவற்றையும் படிக்கவும், கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற தேவ பக்தியும் சன்மார்க்கமுமுள்ளவனா (ளா) ய் நடக்கத்தக்கதாக வளர்க்கப்படவும், நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாமும் பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகளெல்லாவற்றையும் அழித்து, சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளுங்கள்.

¶ ஜலத்தினால் ஞானஸ்நானம் செய்கிறதும், "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்கிற வார்த்தைகளைச் சொல்லுகிறதும் ஞானஸ்நானத்துக்கு அவசியம் வேண்டிய காரியங்களாயிருக்கிறதினாலே, கோவிலுக்குக் கொண்டுவரப்பட்ட பிள்ளை அந்த ஒழுங்கின்படி ஞானஸ்நானம் பெற்றதென்று நிச்சயிக்கக்கூடாதபடி, அதைக் கொண்டுவந்தவர்கள் குருவானவருடைய கேள்விகளுக்குச் சந்தேகமான மாறுத்தரவு சொன்னால், குழந்தைகளுக்கு வெளியரங்கமாக ஞானஸ்நானம் கொடுக்க நியமித்திருக்கிற முறைமையின்படி அவர் ஞானஸ்நானம் கொடுக்கக்கடவர். ஆனாலும் அவர் பிள்ளையை ஞானஸ்நானத்தொட்டியில் முழுக்காட்டும்போது, அவர் பின்வரும் முறைமையின்படி சொல்லவேண்டிய வார்த்தைகளாவன:

நீ இதற்குமுன் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால், ________ உனக்கு, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

THE MINISTRATION

OF

BAPTISM TO SUCH AS ARE OF RIPER YEARS,

AND ABLE TO ANSWER FOR THEMSELVES.

சிறுபிராயம் கடந்து

தங்களுக்காக உத்தரவு சொல்லத்தக்கவர்களுக்குக்

கொடுக்கும்

ஞானஸ்நான முறைமை.

¶ ஞானஸ்நானம் பெறப்போகிற சிறுபிராயம் கடந்தவர்கள் கிறிஸ்துமார்க்கத்தின் பிரதான உபதேசங்களை நன்றாய்க் கற்று அறிந்திருக்கிறார்களா என்று சோதித்தறியும்படிக்கும், அவர்கள் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெறுவதற்குத் தங்களை ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் ஆயத்தப்படுத்திக்கொள்ள ஏவப்படும்படிக்கும், அவர்கள் ஞானஸ்நானம் பெற விரும்புகிறார்களென்று தாய்தகப்பன்மாராவது, விவேகமுள்ள மற்றவர்களாவது ஒரு வாரத்துக்கு முன்னே அத்தியட்சருக்கு அல்லது அவராலே நியமிக்கப்பட்டவருக்கு அறிவிக்கவேண்டும்.

¶ அவர்கள் ஞானஸ்நானம் பெறத்தக்கவர்களென்று காணப்பட்டால், குறிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமையிலாவது, திருநாளிலாவது, ஜனங்கள் கூடிவந்திருக்க, குருவானவர் நியமிக்கிறபடி காலைஜெபத்திலாவது மாலைஜெபத்திலாவது, இரண்டாம் பாடம் வாசித்தபின்பு, ஞானத்தாய் தகப்பன்மார் அவர்களை ஞானஸ்நானத் தொட்டியண்டையில் அழைத்துக்கொண்டுவந்து ஆயத்தமாய் நிற்கவேண்டும்.

¶ குருவானவர் அவ்விடத்தில் நின்று, இங்கே அழைத்துக்கொண்டுவரப்பட்டவர்களில் எவராகிலும் ஞானஸ்நானம் பெற்றதுண்டா இல்லையா என்று கேட்கவேண்டும்; பெறவில்லை என்றால், குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, எல்லா மனிதரும் பாவத்தில் உற்பவித்துப் பிறந்திருக்கிறதினாலும், மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாயிருக்கிறதினாலும், மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டாமல் பாவத்தில் நடந்து அநேகம் அக்கிரமங்களைச் செய்துவருகிறதினாலும்; ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால்

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சொல்லியிருக்கிறதினாலும்; சுபாவமாய் இவர்களிடத்தில் இராத நன்மை இவர்களுக்குக் கிடைக்கும்படி, நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவனாகிய பிதாவை நோக்கி, இவர்கள் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பரிசுத்த சபையில் சேர்ந்து, அதில் ஜீவனுள்ள அவயவங்களாகும்படி, அவர் தமது மிகுந்த காருணியத்தினால் செய்தருளவேண்டுமென்று விண்ணப்பம்பண்ண உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

¶ பின்பு குருவானவர் சொல்லவேண்டியது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

(¶ அப்பொழுது சபையாரெல்லாரும் முழங்கால்படியிட்டிருக்கவேண்டும்.)

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நோவாவும் அவனுடைய குடும்பமும் ஜலத்தினால் அழியாதபடிக்குத் தேவரீர் மிகுந்த இரக்கமாய் அவர்களைப் பேழையில் தற்காத்து இரட்சித்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரைச் சிவந்த சமுத்திரத்தின் நடுவாகச் சேதமின்றி நடத்தி, அதினால் உமது பரிசுத்த ஞானஸ்நானத்தை அடையாளமாகக் காட்டி; உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து யோர்தான் நதியிலே பெற்ற ஞானஸ்நானத்தினால் ஞானப்பிரகாரமாய்ப் பாவத்தைப் போக்கும் ஸ்நானமாக ஜலத்தைப் பிரதிஷ்டை செய்தீரே. தேவரீர் உமது அடியாராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி; இவர்கள் உமது கோபத்துக்கு நீங்கி, கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் சேர்க்கப்படவும்; விசுவாசத்தில் உறுதியாகி, நல்நம்பிக்கையில் மகிழ்ந்து, அன்பில் வேரூன்றி, இவ்வுலகமாகிய துக்கசாகரத்தின் அலைகளைக் கடந்து, நித்திய ஜீவகரையைச் சேர்ந்து, சதாகாலமும் உம்மோடே அரசாளவும்; பரிசுத்த ஆவியினாலே இவர்களைக் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று, உமது அளவில்லாத இரக்கங்களினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

தாழ்ச்சியுள்ள அனைவருக்கும் அநுகூலமாயும், அடைக்கலம் பெற உம்மிடத்தில் வருகிறவர்களுக்குச் சகாயமாயும், விசுவாசிகளுக்கு ஜீவனாயும், மரித்தோருக்கு உயிர்த்தெழுதலாயும் இருக்கிற அழிவில்லாத சர்வவல்லமையுள்ள தேவனே, நீர் கட்டளையிட்ட பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெற வந்திருக்கிற இவர்கள் ஆவிக்குரிய மறுஜன்மத்தால் பாவமன்னிப்படையும்படி இவர்களுக்காக உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் என்று தேவரீர் உம்முடைய பிரியமான குமாரனைக் கொண்டு அருளின திருவாக்கின்படியே இவர்களை ஏற்றுக்கொண்டு; நீர் அருளிச்செய்த பரம ஸ்நானமாகிய நித்திய ஆசீர்வாதத்தை இவர்கள் பெற்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவரீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நித்திய ராஜ்யத்தில் சேரும்படி; கேட்கிற எங்களுக்குக் கொடுத்து, தேடுகிற நாங்கள் கண்டடையச்செய்து, தட்டுகிற எங்களுக்கு வாசலைத் திறந்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது ஜனங்கள் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பரிசுத்த யோவான் மூன்றாம் அதிகாரம் முதல்வசனமுதல் எழுதிய சுவிசேஷவாக்கியத்தைக் கேளுங்கள்:

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ, அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

¶ பின்பு அவர் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக்கேட்ட இந்தச் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து தெளிவாய்ச் சொல்லி

யிருக்கிறார். இந்தச் சாக்கிரமெந்தைப் பெறக்கூடியபோது அதைப்
பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமென்று இந்த வசனத்தினாலே அறிந்து
கொள்ளலாம். மேலும் பரிசுத்த மாற்கு எழுதின சுவிசேஷம் கடைசி
அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகர் பரமண்ட
லத்திற்கு எழுந்தருளினதற்குமுன் தம்முடைய சீஷர்களைப்பார்த்து: நீங்கள்
உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்
கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு
வான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று
கட்டளையிட்டதினாலே, இந்தச் சாக்கிரமெந்தின் மூலமாய் நமக்குப் பலிக்
கும் நன்மை பெரிதென்று விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பரிசுத்த
பேதுருவும் சுவிசேஷத்தை முதல்முதல் பிரசங்கித்தபோது, அநேகர் தங்கள்
இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, அவரையும் மற்ற அப்போஸ்தலரையும்
பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்க,—
அவர் மாறுத்தரமாக: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்
புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த
ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும்
உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும்
தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறதென்று சொன்னதுமல்லாமல்;
இன்னும் அநேக வார்த்தைகளையும் சொல்லி: மாறுபாடுள்ள இந்தச் சந்த
தியை விட்டு விலகி, உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்று புத்தி
சொன்னார். இன்னொரு வாக்கியத்திலும் இந்த அப்போஸ்தலன் சொல்லி
யிருக்கிறபடி, ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல்,
தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்
பொழுது நம்மை இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினாலே இரட்
சிக்கிறது. இப்படியிருக்க, மெய்யாக மனந்திரும்பி விசுவாசத்தினால்
தம்மிடத்திற்கு வருகிற இந்த ஜனங்களை அவர் தயவாய் ஏற்றுக்கொள்
வாரென்றும், இவர்களுக்குப் பாவமன்னிப்பைக் கொடுத்துப் பரிசுத்த
ஆவியை அருளிச்செய்வாரென்றும், இவர்களுக்கு நித்திய ஜீவனாகிய
ஆசீர்வாதத்தைத் தந்து, தம்முடைய நித்திய ராஜ்யத்துக்கு இவர்களைச்
சுதந்தரவாளிகள் ஆக்குவாரென்றும் சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசி
யுங்கள். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்திருக்கிறபடி, நம்மு
டைய பரம பிதாவானவர் இவர்கள்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம்
நிச்சயங்கொண்டிருக்கிறோம்; ஆகையால் விசுவாசத்தோடும் வணக்கத்தோ
டும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரமபிதாவே, உமது
கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தரு
ளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்

கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப்
பலப்படுத்தியருளும். இவர்கள் மறுபடியும் பிறந்து, நித்திய இரட்சிப்
புக்குச் சுதந்தரவாளிகளாகும்படி, இவர்களுக்கு உமது பரிசுத்தஆவியைக்
கொடுத்தருளவேண்டுமென்று, இப்பொழுதும் எப்பொழுதும் உம்மோடும்
பரிசுத்த ஆவியோடும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் ஞானஸ்நானம் பெற வந்திருக்கிறவர்களுக்குச்
சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று இங்கே வந்
திருக்கிறீர்களே; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஏற்
றுக்கொண்டு, ஆசீர்வதித்து, பாவங்களிலிருந்து உங்களை விடுதலையாக்கி,
பரலோக ராஜ்யத்தையும் நித்திய ஜீவனையும் உங்களுக்குத் தந்தருள
வேண்டுமென்று சபையார் ஜெபம்பண்ணினதைக் கேட்டிருக்கிறீர்கள்.
நாங்கள் வேண்டிக்கொண்டவைகள் எல்லாவற்றையும் அருளிச்செய்
வோம் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது திருவச
னத்தில் வாக்குத்தத்தம் செய்திருக்கிறதையும் கேட்டிருக்கிறீர்கள். அவர்,
தாம் ஒப்புக்கொண்டபடி, அந்த வாக்குத்தத்தத்தை நிச்சயமாகவே நிறை
வேற்றுவார். ஆகையால் கிறிஸ்து இந்த வாக்குத்தத்தம் செய்ததின்பேரில்,
நீங்களும் உங்கள் சாட்சிகளாகிய இவர்கள் முன்பாகவும் இந்தச் சபையார்
எல்லாருக்கு முன்பாகவும்: நாங்கள் பிசாசையும் அதின் கிரியைகள்
எல்லாவற்றையும் வெறுத்துவிடுவோம் என்றும், தேவனுடைய பரிசுத்த
வசனத்தை உறுதியாய் விசுவாசிப்போம் என்றும், அவர் கற்பனைகளைப்
பணிவாய்க் கைக்கொள்வோம் என்றும் உண்மையாய் வாக்குத்தத்தம்
செய்யவேண்டும்.

¶ அப்பொழுது ஞானஸ்நானம் பெற வந்திருக்கிற ஒவ்வொருவரிடத்திலும்
குருவானவர் கேட்கவேண்டிய கேள்விகளாவன:

கேள்வி: நீ பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும்,
இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய
பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாத
படிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும், அவைகளை வெறுத்து
விடுகிறாயா?

மறுமொழி: அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

கேள்வி: வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள
பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்
துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியா

ளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்திய பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

மறுமொழி: இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

கேள்வி: இந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம் பெற விரும்புகிறாயா?

மறுமொழி: அதையே விரும்புகிறேன்.

கேள்வி: நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: தேவ ஒத்தாசையினால் அப்படியே நடந்துகொள்வேன்.

¶ பின்பு குருவானவர் சொல்வது.

இரக்கமுள்ள தேவனே, இவர்களிலுள்ள பழைய ஆதாம் அடக்கம் பண்ணப்படவும், புதிய மனுஷன் இவர்களுக்குள் உயிர்த்தெழும்பவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

இவர்களிலுள்ள மாம்ச இச்சைகளெல்லாம் அழியவும், ஆவிக்குரியவைகளெல்லாம் பிழைத்து வளர்ந்தேறவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் ஜெயித்து வெற்றி சிறக்கும்படி, இவர்களுக்கு வல்லமையையும் பெலனையும் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய ஜீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவனே, எங்கள் உத்தியோகத்தினாலும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிற இவர்கள் பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு, நித்திய பலனை அடையும்படி, உமது இரக்கத்தினாலே கிருபைசெய்தருளும். ஆமேன்.

நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது அருமையான விலாவிலிருந்து ஜலத்தையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டருளினாரே. தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி, ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த ஜலத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இவர்கள் உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று, தெரிந்து கொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவர்களாய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

¶ அப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகிற ஒவ்வொருவருடைய வலது கையையும் குருவானவர் பிடித்து, ஞானஸ்நானத் தொட்டியருகே நிற்கச்செய்து, ஞானத்தாய் தகப்பன்மாரிடத்தில் பேரைக் கேட்டு, அவர்களை ஜலத்தில் முழுக்காட்டி அல்லது அவர்கள்மேல் ஜலத்தை வார்த்து, சொல்லவேண்டியதாவது:

____________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இவனை (ளை) க் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக, இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

* இப்பொழுது நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இவர்கள் மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்

திரஞ்செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இவர்கள் மீதியாயிருக்கும் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

¶ அப்பொழுது எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, சொல்லவேண்டியதாவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். **ஆமேன்.**

பரமபிதாவே, உமது கிருபையை அறிந்துகொள்ளவும், உம்மை விசுவாசிக்கவும் எங்களை அழைத்தருளினதற்காக, உமக்குத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். இப்பொழுது மறுபடியும் பிறந்து எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நித்திய இரட்சிப்புக்குச் சுதந்தரவாளிகளான இவர்கள், உமது ஊழியக்காரராய் நிலைத்திருந்து, தேவரீர் வாக்குத்தத்தம் செய்ததை அடையும்படி, உமது பரிசுத்த ஆவியை அருளிச்செய்யவேண்டுமென்று, என்றைக்கும் பரிசுத்த ஆவியோடே ஐக்கியப்பட்டவராய்த் தேவரீருடன் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் முதலாவது ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

இவர்கள் இந்தச் சபைக்கு முன்பாகவும், விசேஷமாய் இவர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளாகிய உங்களுக்கு முன்பாகவும் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து, அவருக்கு ஊழியஞ்செய்வோம் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால், இவர்கள் இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று இவர்களுக்கு நினைப்பூட்டுகிறது உங்கள் கடமையென்று நினைத்துக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் இவர்கள் வளர்ந்து, இவ்வுலகத்தில் தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவரும்படி; தேவனுடைய பரிசுத்த வசனத்தை நன்றாய்க் கற்றறிந்துகொள்வதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று புத்திசொல்லுங்கள்.

¶ பின்பு ஞானஸ்நானம் பெற்றவர்களை நோக்கி அவர் சொல்லவேண்டியதாவது:

இப்பொழுது ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களே, நீங்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுக்குப் புத்திரரும் வெளிச்சத்தின் பிள்ளைகளுமானதால், கிறிஸ்துமார்க்க அழைப்புக்குப் பாத்திரராயும், வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு ஏற்றவிதமாயும் நடந்துகொள்ளுகிறது உங்கள் கடமையாயிருக்கிறது. நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பானவர்களாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல, ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாம், பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகள் எல்லாவற்றையும் அழித்துச் சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை எப்பொழுதும் நினைத்துக்கொண்டு, அப்படியே நடக்கவேண்டும்.

¶ இப்படி ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேரத்தக்கதாக சமயம் வாய்த்தவுடனே, அத்தியட்சரால் திடப்படுத்தலைப் பெறவேண்டும்.

¶ குழந்தைப்பருவத்தில் ஞானஸ்நானம் பெறுதவர்கள் தங்களுக்காக உத்தரவு சொல்லத்தக்க வயதாகிறதற்குமுன்பு, ஞானஸ்நானம் பெறக் கொண்டுவரப்பட்டால், தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையையாவது, மரணவஸ்தை உண்டாயிருந்தால் வீட்டிலே பிள்ளைகளுக்குத் தனிமையாய்க் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையையாவது வாசிக்கலாம். இவ்விரண்டு முறைமைகளில் எதையாவது வாசிக்கும்போது, "இந்தக் குழந்தை" என்கிறதற்குப் பதிலாக இந்தப் பிள்ளை என்றாவது, இவன் இவள் என்றாவது சொல்லவேண்டும்.

A CATECHISM.

அத்தியட்சராலே திடப்படுத்தலைப் பெறும்படி வருமுன்

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய

ஞானோபதேச வினாவிடை.

வினா: உன் பேர் என்ன?

விடை: ——————

வினா: இந்தப் பேர் உனக்கு இட்டவர் யார்?

விடை: நான் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் அவயவமும், தேவனுடைய பிள்ளையும், பரலோக ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியுமானபொழுது, என் ஞானத்தாய் தகப்பன்மார் இந்தப் பேர் எனக்கு இட்டார்கள்.

வினா: உன் ஞானத்தாய் தகப்பன்மார் அப்பொழுது உனக்காகச் செய்தது என்ன?

விடை: அவர்கள் என் பேராலே மூன்று காரியங்களை வாக்குத்தத்தம் செய்து பிரதிக்கினை பண்ணினார்கள். முதலாவது—நான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இந்தப் பொல்லாத லோகத்தின் ஆடம்பரத்தையும் வீண் பெருமையையும், பாவமான மாம்ச இச்சைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன் என்றும். இரண்டாவது—நான் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிப்பேன் என்றும். மூன்றாவது—நான் தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொண்டு, என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடப்பேன் என்றும் பிரதிக்கினை செய்தார்கள்.

வினா: அவர்கள் உனக்காகச் செய்த வாக்குத்தத்தத்தின்படி நீ விசுவாசிப்பதும் நடப்பதும் உன் கடமையென்று நினைக்கிறதில்லையா?

விடை: அப்படியே நினைக்கிறேன்; தேவனுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன். நம்முடைய பரமபிதா நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு இந்த இரட்சணிய நிலைமைக்கு என்னை வரவழைத்ததற்காக அவருக்கு நான் முழு இருதயத்தோடே ஸ்தோத்திரஞ்செலுத்தி, என் ஜீவகாலமெல்லாம் அதிலே நிலைகொண்டிருக்கும்படி தம்முடைய கிருபையை எனக்குத் தந்தருளவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

உபதேசிக்கிறவர்:

நீ விசுவாசிக்கிற சத்தியங்களைச் சொல்லு.

மறுமொழி:

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.

வினா: நீ விசுவாசிக்கிற இந்தச் சத்தியங்களினால் பிரதானமாய் அறிந்துகொள்ளுகிறது என்ன?

விடை: முதலாவது—என்னையும் உலகம் அனைத்தையும் படைத்த தேவனாகிய பிதாவை விசுவாசிக்கவேண்டும் என்றும்.

இரண்டாவது—என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்ட தேவனாகிய குமாரனை விசுவாசிக்கவேண்டும் என்றும்.

மூன்றாவது—என்னையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எல்லாரையும் பரிசுத்தம் செய்கிற தேவனாகிய பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுகிறேன்.

வினா: தேவனுடைய கற்பனைகளை நீ கைக்கொள்வாய் என்று உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காக வாக்குத்தத்தம் செய்ததாகச் சொன்னாயே; அந்தக் கற்பனைகள் எத்தனை?

விடை: பத்து.

வினா: அவைகள் எவை?

மறுமொழி:

மோசேயின் இரண்டாம் ஆகமம், இருபதாம் அதிகாரத்தில் தேவன் திருவுளம்பற்றின கற்பனைகளே. அவையாவன: உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்து பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; சர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

வினா: இந்தக் கற்பனைகளினாலே நீ பிரதானமாய் அறிந்துகொள்ளுகிறது என்ன?

விடை: தேவனுக்கு நான் செய்யவேண்டிய கடமையும், பிறனுக்கு நான் செய்யவேண்டிய கடமையும் ஆகிய இவ்விரண்டையும் அறிந்துகொள்ளுகிறேன்.

வினா: தேவனுக்கு நீ செய்யவேண்டிய கடமை என்ன?

விடை: அவரை விசுவாசித்து, அவருக்குப் பயந்து, என் முழு இருதயத்தோடும், என் முழு மனதோடும், என் முழு ஆத்துமாவோடும், என் முழு பலத்தோடும், அவரிடத்தில் அன்புகூருகிறதும்; அவரை வணங்கி, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, என் முழு நம்பிக்கையையும் அவரிடத்தில் வைத்து, அவரை நோக்கி வேண்டிக்கொண்டு, அவருடைய பரிசுத்த நாமத்தையும் அவருடைய வசனத்தையும் கனப்படுத்தி, என் ஜீவகாலமெல்லாம் அவருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்கிறதுமே, நான் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமை.

வினா: பிறனுக்கு நீ செய்யவேண்டிய கடமை என்ன?

விடை: நான் என்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூர்ந்து, மற்றவர்கள் எனக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்றிருக்கிறேனோ அவைகளை நான் மற்றவர்களுக்குச் செய்கிறதும்; என் தாய் தந்தையரை நேசித்துக் கனப்படுத்தி ஆதரிக்கிறதும்; சக்கிரவர்த்தினியையும் அவரால் அதிகாரம் பெற்றிருக்கிற யாவரையும் பெருமைப்படுத்தி, அவர்களுக்குக் கீழ்ப்படிகிறதும்; எனக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும், உபாத்திமார்களுக்கும், ஆத்தும மேய்ப்பர்களுக்கும், எஜமான்களுக்கும் அடங்கியிருக்கிறதும்; பெரியோர் எல்லாரும் தாழ்மையும் மரியாதையுமாய் நடக்கிறதும்; வார்த்தையினாலாவது செய்கையினாலாவது, ஒருவனையும் நஷ்டப்படுத்தாதிருக்கிறதும்; நான் நடப்பிக்கிற எல்லாக் காரியங்களிலும் உண்மையும் நீதியுமாயிருக்கிறதும்; வர்மத்தையும் பகையையும் என் மனதில் பேணிவையாதிருக்கிறதும்; என் கைகளைத் திருட்டுக்கும் அற்பக் களவுக்கும், என் நாவைத் தூஷணத்துக்கும் பொய்க்கும் அவதூறுக்கும் விலக்குகிறதும்; என் தேகத்தை மிதத்தோடும் அடக்கத்தோடும் கற்போடும் காக்கிறதும்; பிறர்பொருளை இச்சியாமல், பிழைப்புக்காக வேலை கற்றுக்கொண்டு உண்மையாய் உழைக்கிறதும்; தேவன் என்னை வைக்கச் சித்தமாயிருக்கும் நிலைமையிலே நான் செய்யவேண்டியவைகளைச் செய்கிறதுமே, நான் பிறனுக்குச் செய்யவேண்டிய கடமை.

உபதேசிக்கிறவர்:

நல்ல பிள்ளையே, தேவனுடைய விசேஷித்த கிருபை இல்லாமல் இவைகளை நிறைவேற்றவும், அவருடைய கற்பனைகளின்படி நடந்து அவருக்கு ஊழியஞ்செய்யவும் உன்னால் கூடாதே; அந்தக் கிருபையைப் பெறும்படி எக்காலத்திலும் கருத்தாய் ஜெபம்பண்ண நீ கற்றுக்கொள்ளவேண்டுவது அவசியம். ஆகையால், கர்த்தருடைய ஜெபம் உனக்குத் தெரியுமா? அதைச் சொல்லு.

மறுமொழி:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம்

பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

வினா: இந்த ஜெபத்தினாலே நீ தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறது என்ன?

விடை: எல்லா நன்மைகளையும் கொடுக்கிற நம்முடைய பரம பிதாவும் ஆண்டவருமாகிய தேவனை நாம் தகுந்தபடி வணங்கி, அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்கிறதற்கு, அவர் எனக்கும் மற்ற யாவருக்கும் தமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுகிறேன். அல்லாமலும் நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கவும், நமக்கு இரங்கி நமது பாவங்களை மன்னிக்கவும், ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் நேரிடும் எல்லா மோசங்களினின்றும் தயவாய் நம்மை இரட்சிக்கவும், எல்லாப் பாவத்துக்கும் துன்மார்க்கத்துக்கும் நமது ஆத்தும சத்துருவுக்கும் நித்திய மரணத்துக்கும் நம்மை விலக்கிக்காக்கவும்வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், தமது இரக்கத்தினாலும் தயவினாலும் இப்படிச் செய்வார் என்று நான் நம்பி, அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தங்கொள்ளுகிற ஆமென் என்றும் சொல்லுகிறேன்.

வினா: கிறிஸ்துவானவர் தமது சபையில் ஏற்படுத்தின சாக்கிரமெந்துக்கள் எத்தனை?

விடை: ஞானஸ்நானமும், கர்த்தருடைய இராப்போசனமும் ஆகிய இவ்விரண்டையுமாத்திரம் ரட்சிப்புக்குப் போதுப்பட அவசியம் என்று ஏற்படுத்தினார்.

வினா: சாக்கிரமெந்து என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

விடை: நமக்கு அருளிச்செய்யப்படுகிற ஆவிக்குரிய உள்ளான கிருபைக்குக் காணப்படுகிற புறம்பான அடையாளமாகவும், அந்தக் கிருபையைப் பெறுவதற்கு யத்தனமாகவும், அதைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்று நமக்கு நிச்சயப்படுத்துகிற அத்தாட்சியாகவும் கிறிஸ்துவானவரே ஏற்படுத்திய நியமம் என்று அர்த்தமாம்.

வினா: சாக்கிரமெந்து எத்தனை பங்குள்ளது?

விடை: காணப்படுகிற புறம்பான அடையாளமும், ஆவிக்குரிய உள்ளான கிருபையும் ஆகிய இரண்டு பங்குள்ளது.

வினா: ஞானஸ்நானத்திலே காணப்படுகிற புறம்பான அடையாளம், அல்லது முறை என்ன?

விடை: பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுகிற தண்ணீரே.

வினா: ஞானஸ்நானத்திலே ஆவிக்குரிய உள்ளான கிருபை என்ன?

விடை: பாவத்துக்கு இறப்பும், நீதிக்குப் புதுப்பிறப்புமே: எப்படியெனில், சுபாவப்படி பாவத்திலே பிறந்து, கோபாக்கினையின் பிள்ளைகளான நாம் அதினாலே கிருபையின் பிள்ளைகளாகிறோம்.

வினா: ஞானஸ்நானம் பெறவருகிறவர்களிடத்தில் இருக்கவேண்டுவது என்ன?

விடை: அவர்கள் பாவத்தை விட்டு விலகுகிற மனந்திரும்புதலும், இந்தச் சாக்கிரமெந்தில் தேவன் தங்களுக்கு அருளின வாக்குத்தத்தங்களை உறுதியாய் நம்புகிற விசுவாசமுமே.

வினா: குழந்தைகள் சிறு பிராயத்திலே இவைகளை நிறைவேற்றக்கூடாதிருக்க, அவைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத்தகுமா?

விடை: அவ்விரண்டையும் செய்வோம் என்று குழந்தைகள் தங்கள் பிணையாளிகள் மூலமாய் வாக்குத்தத்தம் செய்கிறதினாலும், தகுந்த வயது அடையும்போது அவைகளை நிறைவேற்றக் கடமையுள்ளவர்களாயிருக்கிறதினாலும், ஞானஸ்நானம் கொடுக்கத்தகும்.

வினா: கர்த்தருடைய இராப்போசனம் என்னும் சாக்கிரமெந்து என்னத்திற்காக ஏற்படுத்தப்பட்டது?

விடை: கிறிஸ்து பலியாக அடைந்த மரணத்தையும், அதினாலே நாம் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளையும், நாம் இடைவிடாமல் நினைவுகூருகிறதற்காக ஏற்படுத்தப்பட்டது.

வினா: கர்த்தருடைய இராப்போசனத்திலே புறம்பான பங்கு அல்லது அடையாளம் என்ன?

விடை: நாம் வாங்கிக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்ட அப்பமும் திராட்சரசமுமே.

வினா: அதிலே குறிக்கப்படுகிற காரியமாகிய உள்ளான பங்கு என்ன?

விடை: கர்த்தருடைய இராப்போசனத்திலே மெய்யாகவும் நிச்சயமாகவும் விசுவாசிகள் வாங்கி உட்கொள்ளுகிற கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமே.

வினா: இவைகளாலே நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் என்ன?

விடை: அப்பத்தினாலும் திராட்சரசத்தினாலும் நம்முடைய சரீரம் பெலனடைந்து தேற்றப்படுகிறதுபோல, கிறிஸ்துவின் சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் நம்முடைய ஆத்துமா பெலனடைந்து தேற்றப்படுகிறதே.

வினா: கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் என்ன செய்யவேண்டும்?

விடை: அவர்கள் முன்செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, புது ஜீவனுள்ளவர்களாய் நடக்க உறுதியாய்த் தீர்மானம் பண்ணுகிறோமா என்றும்; தேவன் கிறிஸ்துவின் மூலமாய் அருளிய இரக்கத்தில் உயிருள்ள விசுவாசம் வைத்து, அவருடைய மரணத்தை நன்றியறிதலோடே நினைவுகூருகிறோமா என்றும்; எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்கிறோமா என்றும், தங்களைச் சோதித்து அறியவேண்டும்.

¶ ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாட்களிலும் மாலைஜெப ஒழுங்கில் இரண்டாம் பாடம் வாசித்தபின்பு, அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் அனுப்பப்படும் பிள்ளைகளில், தாம் எத்தனைபேரைத் தெரிந்துகொள்ளுகிறாரோ அத்தனைபேருக்கும் இந்த ஞானோபதேச வினாவிடையில் ஒரு பங்கைப் போதித்து அதிலே அவர்களைச் சோதிக்கவேண்டும்.

¶ தாய்தகப்பன்மாரும், எஜமான் எஜமாட்டிகளும் தங்கள் பிள்ளைகள் வேலைக்காரர் முதலானவர்களில் எவர்கள் ஞானோபதேச வினாவிடையைப் படிக்கவில்லையோ, அவர்கள் குறித்த வேளையில் தேவாலயத்துக்கு வரும்படிக்கும், ஞானோபதேசத்தில் அடங்கியிருக்கிற யாவையும் அவர்கள் கற்றறியுமட்டும் குருவானவர் சொன்னபடி பணிவாய்க் கேட்டு நடக்கவும் செய்யவேண்டும்.

¶ பிள்ளைகள் தகுந்த வயதடைந்து சுயபாஷையில் விசுவாசப்பிரமாணம், கர்த்தருடைய ஜெபம், பத்துக்கற்பனை இவைகளைப் படித்து, இந்த ஞானோபதேச வினாவிடையிலுள்ள கேள்விகளுக்கு உத்தரவு சொல்லத் தெரிந்தவுடனே, அவர்களை அத்தியட்சரிடத்தில் அழைத்துவரவேண்டும். அவர்கள் திடப்படுத்தலைப் பெறும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஞானத்தகப்பனாவது, ஞானத்தாயாவது அதற்குச் சாட்சியாயிருக்கவேண்டும்.

¶ திடப்படுத்தலைப் பெறும்படிக்குப் பிள்ளைகளைத் தம்மிடத்தில் அழைத்துவரவேண்டுமென்று அத்தியட்சர் பிரசித்தஞ்செய்யும்போது, அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் திடப்படுத்தப்பட எவர்களைத் தகுதியானவர்களென்று நிதானிக்கிறாரோ அவர்களுடைய பெயரைக் காகிதத்தில் எழுதிக் கொண்டுவரவேண்டும், அல்லது அதில் கையொப்பம் வைத்து அனுப்பவேண்டும். அத்தியட்சர் அவர்களை ஒப்புக்கொண்டால் பின்வரும் முறைமையின்படி அவர்களைத் திடப்படுத்தவேண்டும்.

THE ORDER OF

CONFIRMATION.

ஞானஸ்நானம் பெற்றுப் பகுத்தறியும்

வயதுள்ளவர்களுடைய

சிரசின்மேல் கைகளை வைத்து

திடப்படுத்தல் செய்யும் முறைமை.

¶ திடப்படுத்தலைப் பெறுகிற யாவரும் குறிக்கப்பட்டநாளில் அத்தியட்சருக்கு முன்பாக ஒழுங்காய் வந்துநிற்க, அவராவது, அவரால் நியமிக்கப்பட்ட மற்றொரு குருவாவது பின்வருகிற முகவுரையை வாசிக்கவேண்டும்.

திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் அதினாலே பக்திவிருத்தி அடையும்படி, விசுவாசப்பிரமாணத்தையும் கர்த்தருடைய ஜெபத்தையும் பத்துக் கற்பனைகளையும் பாடமாக்கி, ஞானோபதேச வினாவிடையில் அடங்கியிருக்கிற கேள்விகளுக்கு உத்தரவுசொல்லுகிறவர்களே அல்லாமல், மற்றவர்கள் திடப்படுத்தலைப் பெறக்கூடாதென்று திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது. இந்தக் கட்டளையை அநுசரிக்கிறது மிகவும் நல்லது. பிள்ளைகள் பகுத்தறியும் வயதுள்ளவர்களாகும்போது, தாங்கள் ஞானஸ்நானம் பெற்ற காலத்தில் தங்களுக்காக ஞானத்தாய் தகப்பன்மார் செய்த வாக்குத்தத்தங்கள் இவைகளென்று அறிந்து, அவைகளைத் தாங்களே திருச்சபைக்கு முன்பாக வெளியரங்கமாய்ச் சொந்த வாக்கினாலும் சம்மதியினாலும் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறதுமன்றி; ஒப்புக்கொண்டோம் என்று தாங்கள் அறிக்கையிடுகிற கடமைகளை எப்பொழுதும் தேவகிருபையினால் உண்மையாய்க் கைக்கொள்ளப் பிரயாசப்படுவோம் என்றும், வாக்குக்கொடுக்கிறார்கள். இதனாலே இந்த முறைமையின் பிரயோஜனத்தை அறியலாம்.

¶ அப்பொழுது அத்தியட்சர் சொல்வதாவது:

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றகாலத்தில், உங்கள் ஞானத்தாய் தகப்பன்மார் உங்கள் பேராலே செய்த பக்தியுள்ள வாக்குத்தத்தத்தையும் பிரதிக்கினையையும் இப்பொழுது தேவனுக்கு முன்பாகவும் இந்தச் சபைக்கு

முன்பாகவும் புதுப்பித்து, அவர்கள் உங்களுக்காக ஏற்பட்டு செய்த வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் அங்கிகரித்து, அவைகளை நாங்கள் விசுவாசிக்கவும் நிறைவேற்றவும் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம் என்று நீங்களே சுதாவாய் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தச் சம்மதிக்கிறீர்களா?

¶ ஒவ்வொருவரும் சத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது:

சம்மதிக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது.

நமக்குச் சகாயம் கர்த்தருடைய நாமத்திலுள்ளது;
மறுமொழி: வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.
அத்தியட்சர்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்;
மறுமொழி: சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக.
அத்தியட்சர்: கர்த்தாவே, எங்கள் ஜெபங்களைக் கேட்டருளும்;
மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

அத்தியட்சர் சொல்வது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் உமது அடியாராகிய இவர்களை மறுபடியும் ஜெனிப்பித்து, இவர்களுக்கு எல்லாப் பாவங்களையும் மன்னிக்கக் கிருபைகூர்ந்த கர்த்தாவே, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினால் இவர்களைப் பலப்படுத்தி, உமது கிருபையின் பற்பல வரப்பிரசாதங்களை இவர்களுக்குள்ளே தினந்தோறும் பெருகச்செய்யும். ஞானத்தையும் விவேகத்தையும் அருளும் ஆவியையும், ஆலோசனையையும் ஆத்தும பெலனையும் அருளும் ஆவியையும், அறிவையும் மெய்த்தேவபக்தியையும் அருளும் ஆவியையும், தேவரீருக்குப் பயப்படுகிற பரிசுத்த பயத்தை அருளும் ஆவியையும், இப்பொழுதும் எப்பொழுதும் இவர்களுக்கு நிறைவாய்க் கொடுத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ அப்பொழுது அவர்கள் எல்லாரும் அத்தியட்சருக்கு முன்பாக ஒழுங்காய் முழங்கால்படியிட்டிருக்க, அவர் ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் தமது கைகளை வைத்துச் சொல்லவேண்டியதாவது:

கர்த்தாவே, உம்முடைய பிள்ளை [அல்லது உம்முடைய அடியாள் (ள்)] ஆகிய இவன் (ள்) என்றைக்கும் உம்முடையவனா (ளா) யிருக்கவும், உமது நித்திய ராஜ்யத்தில் சேருமளவும் நாள்தோறும் மேன்மேலும் உம்முடைய பரிசுத்த ஆவியை அடைந்து தேறவும், உமது பரமகிருபையால் இவனை (ளை) க் காத்தருளும். ஆமென்.

¶ பின்பு, அத்தியட்சர் சொல்வதாவது:

கர்த்தர் உங்களோடிருப்பாராக.
மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சர் பின்னும் சொல்வதாவது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

இந்தச் சுருக்க ஜெபத்தையும் சொல்லவேண்டும்.

உமது திவ்விய மகத்துவத்துக்கு ஏற்றிருக்கிற நற்காரியங்களை விரும்பவும் செய்யவும் எங்களுக்குக் கிருபை அளிக்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, உமது அடியாராகிய இவர்கள்மேல் தேவரீர் கிருபையும் பூரண அன்பும் வைத்திருக்கிறதை இவர்களுக்கு நிச்சயப்படுத்தும் அடையாளமாக, உம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர் செய்துவந்தபடி, நாங்கள் இப்பொழுது கைகளை வைத்துத் திடப்படுத்தின இவர்களுக்காக உம்மை நோக்கித் தாழ்மையாய் விண்ணப்பம் செய்கிறோம். பிதாவே, அன்பான உமது திருக்கரம் இவர்கள்மேல் எப்பொழுதும் அமர்ந்திருப்பதாக. உமது பரிசுத்தஆவி எப்பொழுதும் இவர்களோடே இருப்பாராக. இவர்கள் கடைசியில் நித்திய ஜீவனை அடையத்தக்கதாக உமது திருவசனத்தை அறிந்து கைக்கொள்ளும்படி இவர்களை நடத்துவீராக; உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரத்தின்படியும் ஆத்துமத்தின்படியும் உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி, உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்ற கிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி ஆண்டு நடத்தவேண்டுமென்று, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ பின்பு அத்தியட்சர் அவர்களுக்கு ஆசீர்வாதமாகச் சொல்வதாவது:

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள்மேல் தங்கி, என்றென்றைக்கும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. **ஆமேன்.**

¶ திடப்படுத்தலைப் பெற்றிருக்கிறவர்களையும், அதைப் பெறுவதற்கு ஆசையாயும் ஆயத்தமாயும் இருக்கிறவர்களையும் அல்லாமல், மற்றவர்களைப் பரிசுத்த நற்கருணைப்பந்தியில் சேர்க்கக்கூடாது.

THE FORM OF SOLEMNIZATION OF MATRIMONY.

விவாகம் நடத்தும் முறைமை.

¶ யாராவது விவாகம் செய்யப்போகிறபோது, தேவாலயத்திலே காலை ஜெபம் நடக்கும்போதாவது, (காலை ஜெபம் இராவிட்டால்) மாலை ஜெபம் நடக்கும்போதாவது, இரண்டாம் பாடம் வாசித்தவுடனே, குருவானவர் வழக்கத்தின்படி மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் கூறி அறிவிக்கவேண்டியதாவது:

________ இன்ன ஊரிலிருக்கும் ________ இன்னானும் ________ இன்ன ஊரிலிருக்கும் ________ இன்னாளும் விவாகம் செய்துகொள்ளப்போகிறார்கள் என்று அறிவிக்கிறேன். இவ்விருவரையும் பரிசுத்த விவாகத்தில் சேர்க்கக்கூடாத காரணமாவது நியாயமான தடையாவது உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், அதைத் தெரியப்படுத்தவேண்டும்; இது முதலாம் (இரண்டாம், மூன்றாம்) அறிக்கை.

¶ விவாகம் செய்துகொள்ளப்போகிறவர்கள் வெவ்வேறு சேகரத்தில் வாசம்பண்ணுகிறவர்களாயிருந்தால், இரண்டு சேகரங்களிலும் அதை அறிவிக்கவேண்டும். மூன்றுதரம் அறிக்கையாயிற்று என்று ஒரு சேகரத்துக் குருவானவர் அத்தாட்சி எழுதிக்கொடாவிட்டால், மற்றச் சேகரத்துக் குருவானவர் விவாகத்தை நடத்தக்கூடாது.

¶ விவாகத்தை நடத்த நியமித்த நாளிலும் நேரத்திலும் விவாகம் செய்துகொள்ளப்போகிறவர்கள் இனத்தாரோடும் சிநேகிதரோடுங்கூடத் தேவாலயத்தின் நடுவில் வந்து, வலதுபக்கத்தில் புருஷனும் இடதுபக்கத்தில் ஸ்திரீயும் கூடிநிற்க, குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, இந்தப் புருஷனையும் இந்த ஸ்திரீயையும் தேவசமுகத்திலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் பரிசுத்த விவாக நிலைமையில் சேர்க்கும்படி, இவ்விடத்தில் கூடிவந்திருக்கிறோம். விவாகமானது மேன்மையுள்ள நிலைமையாயிருக்கிறது. அது மனுஷன் பாவம்செய்யாதிருந்தகாலத்தில் தேவனால் நியமிக்கப்பட்டதாயும், கிறிஸ்துவுக்கும் அவர்

திருச்சபைக்குமுள்ள ஞான ஐக்கியத்தைக் காட்டுகிறதாயும் இருக்கிறது; கிறிஸ்துநாதர் கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரில் நடந்த கலியாணத்துக்குப் போயிருந்து, முதலாம் அற்புதத்தைச் செய்து, இந்தப் பரிசுத்த நிலைமையை மேன்மைப்படுத்திச் சிறப்பித்தார். அப்போஸ்தலனாகிய பவுலும், இது எல்லாராலும் கனமாக எண்ணப்படத்தக்கதென்று புகழ்ந்திருக்கிறார். ஆகையால் இதை அற்பமாய் எண்ணி, யோசனையில்லாமல், புத்தியில்லாத மிருகங்களைப்போல, தேக இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று விவாகம்செய்யாமல்; விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்தரங்களை எண்ணி, பயபக்தியோடும் விவேகத்தோடும் தகுந்த யோசனையோடும் தெளிந்த புத்தியோடும் தேவனுக்கு அஞ்சி விவாகம் செய்யவேண்டும். அந்த முகாந்தரங்களாவன:

முதலாவது, கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாக பிள்ளைகளைப் பெற்று, அவருக்கேற்ற பயபக்தியில் வளர்க்க, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இரண்டாவது, விரக்தராயிருக்க வரம் பெறாதவர்கள் வேசித்தனத்துக்கு விலகி, பாவத்துக்குத் தப்பிக்கொள்ளும்படி கலியாணஞ்செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் அசுசிப்படாத அவயவங்களாய்த் தங்களைக் காத்துக்கொள்ள, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவது, சுகத்திலும் துக்கத்திலும் ஸ்திரீ புருஷர் ஒருவரால் ஒருவர் பெறவேண்டிய சிநேகத்தையும் சகாயத்தையும் ஆறுதலையும் அடைய, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் பரிசுத்த நிலைமையிலே சேர்க்கப்படும்படி, இவ்விரண்டுபேரும் இப்பொழுது வந்திருக்கிறார்கள்; ஆகையால் இவர்களை ஒருவரோடொருவர் ஒழுங்கின்படி சேர்க்கக்கூடாத நியாயமான முகாந்தரத்தை யாரானாலும் சொல்லக்கூடுமானால், இப்பொழுதே அதைச் சொல்லக்கடவன்; சொல்லாவிட்டால் இனி ஒருக்காலும் சொல்லாதிருக்கக்கடவன்.

¶ பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்து அவர் சொல்வதாவது:

தேவவசனத்துக்கு ஏலாத வகையாய்ச் சேர்க்கப்பட்டவர்கள் தேவனால் சேர்க்கப்பட்டவர்கள் அல்லவென்றும், அவர்கள் செய்த விவாகம் விவாகம் அல்லவென்றும், நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். ஆகையால் எல்லா இருதயங்களின் இரகசியங்களும் வெளிப்படும் பயங்கரமான நியாயத்தீர்ப்பு நாளிலே நீங்கள் இருவரும் உத்தரவாதம் செய்யவேண்டுவதால், நீங்கள் ஒழுங்கின்படி விவாகத்தினாலே சேர்க்கப்படக்கூடாத முகாந்தரம் உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், அதை இப்பொழுதே அறிவிக்கவேண்டுமென்று உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகிறேன்.

¶ விவாகம் செய்கிற நாளிலே வேதப் பிரமாணத்தின்படியாவது, தேசப் பிரமாணத்தின்படியாவது அவர்களைச் சேர்க்கக்கூடாத தடை உண்டென்று யாராகிலும் சொன்னால், அதினால் கலியாணம் தடைபட்டு கலியாணக்காரருக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு, அவனும் அவன் ஏற்படுத்தும் தகுந்த பிணையாளிகளும் உத்தரவாதம் செய்வோம் என்று உடன்படிக்கை செய்யவும், அல்லது அவன் சொல்லுகிற தடையை மெய்ப்பிக்குமளவும் அதற்குச் சரியான இடு வைக்கவும் வேண்டும். அப்படிச் செய்தால், நிஜம் இன்னதென்று விசாரித்து அறியுமளவும் கலியாணத்தை நிறுத்தி வைக்கவேண்டும்.

¶ தடை உண்டென்று ஒருவரும் சொல்லாவிட்டால், குருவானவர் மாப்பிள்ளையைப்பார்த்துச் சொல்லவேண்டியது.

__________ நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாகநிலைமையில் ஒருமித்து வாழ, இந்த ஸ்திரீயை உனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, சுகத்திலும் துக்கத்திலும் இவளை நேசித்து ஆதரித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவளுக்கே புருஷனாயிருப்பாயா?

¶ அதற்கு மாப்பிள்ளை சொல்வதாவது:

இருப்பேன்.

¶ அப்பொழுது குருவானவர் பெண்ணைப்பார்த்துச் சொல்லவேண்டியது.

__________ நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாகநிலைமையில் ஒருமித்து வாழ, இந்த மனுஷனை உனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, இவனுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடைசெய்து, சுகத்திலும் துக்கத்திலும் இவனை நேசித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவனுக்கே மனைவியாயிருப்பாயா?

¶ அதற்கு பெண் சொல்வதாவது:

இருப்பேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது.

விவாகஞ்செய்ய இந்த ஸ்திரீயை இந்தப் புருஷனுக்குக் கொடுக்கிறது யார்?

¶ அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுக்கிறதாவது:

குருவானவர் ஸ்திரீயினுடைய தகப்பன் கையினாலாவது, அவள் இனத்தாரில் ஒருவன் கையினாலாவது, அவளை ஏற்றுக்கொண்டு, புருஷன் தன்

¶ ...னுடைய வலதுகையால் அவளுடைய வலதுகையைப் பிடிக்கச்செய்து, தாம் சொல்லுகிறபிரகாரம் சொல்லவேண்டியதாவது:

________ஆகிய நான் ________ஆகிய உன்னை இன்றுமுதல் எனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும், உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்குக்கொடுக்கிறேன்.

¶ அப்பொழுது, பிடித்த கையை விடவேண்டும். பின்பு ஸ்திரீயானவள் தன் வலதுகையினால் புருஷனுடைய வலதுகையைப் பிடித்து குருவானவர் சொல்லுகிறபிரகாரமாய்ச் சொல்லவேண்டியதாவது:

________ஆகிய நான்________ஆகிய உன்னை இன்றுமுதல் எனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும், உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் உனக்குக் கீழ்ப்படியவும் வாக்குக்கொடுக்கிறேன்.

¶ அவர்கள் மறுபடியும் பிடித்த கையை விட்டபின்பு, புருஷன் குருவானவருக்கும் தேவாலய ஊழியக்காரருக்கும் வழக்கத்தின்படி செலுத்தவேண்டிய காணிக்கையோடே ஸ்திரீக்குத் தரிக்கும் மோதிரத்தை அல்லது மங்கிலியத்தைப் புஸ்தகத்தின்மேல் வைக்கவேண்டும். குருவானவர் அதை எடுத்து, ஸ்திரீயினுடைய இடதுகையின் நான்காம் விரலில் மோதிரத்தை அல்லது கழுத்தில் மங்கிலியத்தைத் தரிக்கும்படி புருஷனிடத்தில் கொடுக்கவேண்டும். புருஷன் தரித்தபின்பு, அதைப் பிடித்துக்கொண்டு, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சொல்லவேண்டியதாவது:

இந்த மோதிரத்தினாலே (மங்கிலியத்தினாலே) நான் உன்னை விவாகம் செய்து, என் சரீரத்தினாலே உன்னை மேன்மைப்படுத்தி, எனக்கு உண்டான லோக ஆஸ்திகளையெல்லாம் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிறேன்; பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

¶ பின்பு புருஷன் ஸ்திரீயினுடைய நான்காம் விரலிலே மோதிரத்தை (அல்லது கழுத்திலே மங்கிலியத்தை) தரித்தபின்பு, இருவரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்வதாவது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

மனுகுலம் அனைத்தையும் படைத்துக் காப்பாற்றுகிற அநாதி தேவனே, ஆவிக்குரிய எல்லா நன்மைகளையும் ஈகிற கருணாகரனே, நித்திய ஜீவனுக்குக் காரணராகிய கடவுளே, ஈசாக்கும் ரெபெக்காளும் உண்மையாய்

ஒருமித்து வாழ்ந்ததுபோல, உமது நாமத்தினால் நாங்கள் ஆசீர்வதிக்கிற உமது அடியாராகிய இந்தப் புருஷனும் இந்த ஸ்திரீயும் இந்த மோதிரத்தை (மங்கிலியத்தை) அடையாளமாகவும் அத்தாட்சியாகவும், புருஷன் தரிக்க ஸ்திரீ தரித்துக்கொண்டதினாலே, தங்களுக்குள்ளே செய்த உடன்படிக்கையை உறுதியாய்க் கைக்கொண்டு நிறைவேற்றி, எப்பொழுதும் பூரண அன்பும் சமாதானமும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழ்ந்து, உமது கற்பனைகளின்படி நடக்க, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், இவர்கள்மேல் உமது ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் அவர்கள் வலதுகைகளைச் சேர்த்துச் சொல்வதாவது:

தேவனால் சேர்க்கப்பட்டவர்களை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.

¶ பின்பு குருவானவர் ஜனங்களைப்பார்த்துச் சொல்லவேண்டியதாவது:

________இன்னானும்________இன்னாளும் பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழச் சம்மதித்து, தேவசந்நிதியிலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் அதை அறிக்கையிட்டு, ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுத்து, உறுதிக்கு அடையாளமாக மோதிரத்தை (மங்கிலியத்தை)த் தரித்து, கைப்பிடித்து, தெரியப்படுத்தினபடியினாலே, இவர்கள் புருஷனும் மனைவியுமாயிருக்கிறார்களென்று, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே அறிவிக்கிறேன். ஆமென்.

¶ பின்னும் குருவானவர் சொல்லவேண்டிய ஆசீர்வாதமாவது:

தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்தஆவி, உங்களை ஆசீர்வதித்துக் காத்து ஆதரிக்கக்கடவர். கர்த்தர் கிருபைகூர்ந்து உங்களை இரக்கமாய்க் கண்ணோக்கக்கடவர். நீங்கள் மறுமையிலே நித்திய ஜீவனை அடையத்தக்கதாக இம்மையிலே ஒருவருக்கொருவர் ஆதரவாய் வாழும்படி, கர்த்தர் உங்களைச் சகல ஆசீர்வாதத்தினாலும் கிருபையினாலும் நிரப்பக்கடவர். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவரும் மற்றக் குருக்கள்மாரும் கர்த்தருடைய மேஜையருகே சேர்ந்து, பின்வருகிற சங்கீதத்தைச் சொல்ல, அல்லது பாடவேண்டும்.

Beati omnes. 128. சங்கீதம்.

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ: அவன் பாக்கியவான்.

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்: உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போல் இருப்பாள்: உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன்: இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்: நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்: இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அல்லது இந்தச் சங்கீதத்தைச் சொல்ல ஷ.

Deus misereatur. 67. சங்கீதம்.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும்: எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,

தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து: உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்: ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

பூமி தன் பலனைத் தரும்: தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்: பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ சங்கீதம் முடிந்தபின்பு, புருஷனும் ஸ்திரீயும் கர்த்தருடைய மேஜைக்கு முன்பாக முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மேஜையருகே நின்று, அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொல்லவேண்டியதாவது:

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

மறுமொழி: கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

குரு: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, உமது அடியானும் உமது அடியாளுமாகிய இவர்களை இரட்சியும்.

மறுமொழி: இவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.

குரு: ஆண்டவரே, உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இவர்களுக்குச் சகாயத்தை அனுப்பும்.

மறுமொழி: இவர்களை என்றைக்கும் காப்பாற்றியருளும்.

குரு: இவர்களுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: சத்துருவின் முகத்துக்கு இவர்களை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு.

ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே, உமது அடியாராகிய இவர்களை ஆசீர்வதித்து, இவர்கள் உமது பரிசுத்த வசனத்தினால் கற்றுக்கொள்ளும் பிரயோஜனமான காரியங்கள் எவைகளோ, அவைகளின்படி உண்மையாய் நடக்க, நித்திய ஜீவவிதையை இவர்கள் இருதயத்திலே விதைத்தருளும். ஆண்டவரே, பரலோகத்திலிருந்து இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி ஆசீர்வதியும். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாக, தேவரீர் உமது ஆசீர்வாதத்தை அருளினதுபோல; உமது அடியாராகிய இவர்கள், உமது சித்தத்திற்கு அடங்கி நடந்து, எப்பொழுதும் தேவரீராலே சேதமின்றிக் காக்கப்பட்டு, ஜீவனுள்ளளவும் உம்மில் அன்புகூருகிறவர்களாய் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது ஆசீர்வாதத்தை இவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும். ஆமென்.

¶ ஸ்திரீயானவள் பிள்ளைபெறும் பருவத்தைக் கடந்தவளாயிருந்தால், பின்வரும் ஜெபத்தைச் சொல்லவேண்டியதில்லை.

பரமபிதாவே, இரக்கமுள்ள கர்த்தாவே, மனுகுலம் விருத்தியாகிறது தேவரீர் அளிக்கும் வரமாயிருக்கிறது. இவர்கள் புத்திரபாக்கியம் அடைந்து, உமக்குத் துதியும் கனமும் உண்டாக, அந்தப் பிள்ளைகள் கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற சன்மார்க்கராய் வளருகிறதைக் கண்டு களிகூருமளவும், தேவஅன்பும் நீதியும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழ, இவர்கள் இருவருக்கும் உமது ஆசீர்வாதத்தை அநுக்கிரகிக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

ஒன்றும் இல்லாதிருக்கையில் சர்வவல்லமையினால் அனைத்தையும் சிருஷ்டித்த தேவனே, சிருஷ்டித்தவைகளை ஒழுங்குபடுத்தினபின்பு, உமது சாயலின்படியே சிருஷ்டிக்கப்பட்ட புருஷனிலிருந்து ஸ்திரீயை உருவாக்கி, அவர்களை ஒன்றாக இணைத்து, விவாகத்தினால் ஒருமைப்படுத்தி, அவர்களை ஒருக்காலும் பிரித்துவிடக்கூடாதென்று கற்பித்தருளினீர். கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபைக்குமுள்ள ஐக்கியத்தையும் ஞானவிவாகத்தையும் காட்டத்தக்கதாய் விவாகநிலைமையை மேன்மையான இரகசியமாக நியமித்தீர். கிறிஸ்து தமது மணவாட்டியாகிய திருச்சபையில் அன்புகூர்ந்து, அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, தமது சொந்த சரீரமாக அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, இந்தப் புருஷன் உமது வசனத்தின்படி தன் மனைவியில் அன்புகூரவும், இந்த ஸ்திரீயும் தன் புருஷனிடத்தில் அன்பும் பட்சமும், உண்மையும் பணிவும் உள்ளவளாயிருக்கவும்; எப்பொழுதும் அமைதலும், அடக்கமும், சமாதானமும் உள்ளவளாய் தேவபக்தியுள்ள பதிவிரதா பத்தினிகளைப் பின்பற்றவும், உமது அடியாராகிய இவர்களுக்கு அநுக்கிரகம்பண்ணும். கர்த்தாவே, இவர்கள் இருவரையும் ஆசீர்வதித்து, இவர்கள் உமது நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

ஆதியிலே நமது ஆதித்தாய் தந்தையாகிய ஆதாம் ஏவாள் என்பவர்களைச் சிருஷ்டித்து, விவாகத்தினாலே இணைத்துப் பரிசுத்தமாக்கின சர்வவல்லமையுள்ள தேவன், நீங்கள் சரீரத்திலும் ஆத்துமத்திலும் தமக்குப் பிரியமாய் நடந்து, உங்கள் ஜீவகாலபரியந்தம் பரிசுத்த அன்புடையவர்களாய் ஒருமித்து வாழ, தம்முடைய அருள்செல்வத்தை உங்கள்மேல் பொழிந்து உங்களைப் பரிசுத்தமாக்கி ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

¶ பின்பு புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைக் காட்டிய பிரசங்கம் செய்யவேண்டும். செய்யாவிட்டால், குருவானவர் வாசிக்கவேண்டியதாவது:

விவாகம் செய்திருக்கிறவர்களும், அந்தப் பரிசுத்த நிலைமையில் சேரவேண்டும் என்றிருக்கிறவர்களுமாகிய நீங்கள் அனைவரும், புருஷர் தங்கள் மனைவிகளுக்கும், மனைவிகள் தங்கள் புருஷருக்கும், செய்யவேண்டிய கடமையைக்குறித்துப் பரிசுத்த வேதாகமங்களில் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்:

பரிசுத்த பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபம் ஐந்தாம் அதிகாரத்தில், விவாகஞ்செய்திருக்கிற புருஷர் எல்லாருக்கும் போதனையாகச் சொல்லுகிறது என்னவென்றால்: புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர்முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும், தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனும் இல்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்.

பரிசுத்த பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலும்: புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள் என்று விவாகஞ்செய்த புருஷர் யாவருக்கும் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலனும் விவாகஞ்செய்திருந்தவருமாகிய பேதுருவும் விவாகஞ்செய்திருக்கிறவர்களுக்குச் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாத்திரமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு

அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

புருஷன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் சொல்லக் கேட்டீர்களே. இப்பொழுது மனைவிகளே, பரிசுத்த வேதாகமங்களில் தெளிவாய்க் காண்பித்திருக்கிறபடி, நீங்கள் உங்கள் புருஷருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைக் கேட்டுக் கற்றறிந்துகொள்வீர்களாக.

பரிசுத்த பவுல் எபேசியருக்கு எழுதின மேற்சொல்லிய நிருபத்தில்: மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்றும்; வேறொரு வாக்கியத்தில்: மனைவியானவள் தன் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் என்றும் போதித்திருக்கிறார்.

கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலும்: மனைவிகளே, கர்த்தருக்கு ஏற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் என்று பரிசுத்த பவுல் சுருக்கமாய்ப் புத்திசொல்லியிருக்கிறார்.

பரிசுத்த பேதுருவும் உங்களுக்கு நன்றாய் உபதேசித்துச் சொல்லுகிறது என்னவென்றால்: மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

¶ விவாகம்செய்கிறவர்கள் விவாகம்செய்யும் தருணத்திலாவது அதற்குப் பின்பு முதலாவது கிடைக்கும் சமயத்திலாவது பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறது தகுதி.

THE ORDER FOR

THE VISITATION OF THE SICK.

வியாதியுள்ளவர்களைச்

சந்திக்கும் முறைமை.

¶ ஒருவன் வியாதியாயிருக்கும்போது, தன் சேகரத்துக் குருவானவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அப்பொழுது அவர் வியாதியுள்ளவன் வீட்டில் வந்து சொல்லவேண்டியதாவது:

இந்த வீட்டுக்கும் இதில் வாசம்பண்ணுகிற யாவருக்கும் சமாதானம் உண்டாவதாக.

¶ அவர் வியாதியஸ்தன் இருக்கிற இடத்தில் சேரும்போது, முழங்கால்படியிட்டுச் சொல்லவேண்டியது:

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும். தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும்; மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

மறுமொழி: எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, உம்முடைய அடியானா (ளா) கிய இவனை (ளை) இரட்சியும்.

மறுமொழி: இவன் (ள்) உம்மையே நம்பியிருக்கிறான் (ள்).

குரு: உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இவனு (ளு) க்குச் சகாயத்தை அனுப்பும்.

மறுமொழி: எப்பொழுதும் உமது வல்லமையைக்கொண்டு இவனை (ளை) க் காத்தருளும்.

குரு: சத்துரு இவனை (ளை) மேற்கொள்ள இடங்கொடாதிரும்.

மறுமொழி: பொல்லாங்கன் அணுகி இவனை (ளை) ச் சேதப்படுத்தாதபடி செய்யும்.

குரு: கர்த்தாவே, இவனு (ளு) க்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: எதிராளியின் முகத்துக்கு இவனை (ளை) மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குருவானவர் சொல்வது.

கர்த்தாவே, பரமண்டலத்திலிருந்து உமது அடியானா (ளா) கிய இவனை (ளை) க் கண்ணோக்கிப்பார்த்து சகாயஞ்செய்தருளும். அருட்கண்ணால் இவனை (ளை) க் கடாட்சித்து ஆற்றித்தேற்றி, உம்மை உறுதியாய் நம்புகிற விசுவாசத்தை இவனு (ளு) க்குக் கொடுத்து, சத்துருவினால் வரும் மோசத்துக்கு இவனை (ளை) விலக்கி, சேதமின்றிச் சமாதானத்துடன் இடைவிடாமல் காப்பாற்றியருளும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, மிகுந்த இரக்கமுமுள்ள இரட்சகரே, நீர் எப்பொழுதும் கிருபைசெய்துவருகிறதுபோல இப்பொழுது வியாதியினால் வருத்தப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். பிதாவே, நீர் செய்கிற இந்தச் சிட்சையினால், இவன் (ள்) தன் பலவீனத்தை உணரவும், இவனு (ளு) டைய பச்சாத்தாபம் அதிகரிக்கவும், இவனு (ளு) டைய விசுவாசம் உறுதிப்படவும், உமது ஆசீர்வாதம் கட்டளையிடும். முன்போல் இவன் (ள்) சுகமாயிருக்க தேவரீருக்குச் சித்தமானால்; இனி தான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயந்து உமக்கே மகிமை உண்டாகும்படி நடந்துவர இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். சுகங்கொடாவிட்டாலும், துன்பம் நிறைந்த இந்த ஜீவகாலம் முடிந்தபின்பு, உம்மோடே வாசம்பண்ணி நித்தியஜீவனை அநுபவிக்கும்படி, உம்மால் வந்திருக்கிற இந்தச் சிட்சையைச் சகித்துக்கொள்ள இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ *பின்பு குருவானவர் வியாதியுள்ளவனை (ளை) ப் பார்த்துப் பின்வருகிறவிதமாயாவது வேறு விதமாயாவது புத்திசொல்லவேண்டும்.*

பிரியமுள்ளவனே (ளே), சர்வவல்லமையுள்ள தேவன் ஜீவனுக்கும் மரணத்துக்கும் ஆண்டவராயிருக்கிறதுபோல, இளமை மூப்பு, பெலன் பெலவீனம், சுகம் சுகவீனம் ஆகிய இவைகளுக்கும் ஆண்டவராயிருக்கிறார். ஆதலால் உனக்கு உண்டான வியாதி எப்படிப்பட்டதானாலும், அது தேவனுடைய செயல் என்று உணர்ந்துகொள். மற்றவர்களுக்கு நல்மாதிரி உண்டாகும்படி, உன் பொறுமையைச் சோதிக்கவும், உனக்கு நித்திய ஆநந்தம் அதிகரிக்கும்படி, கர்த்தருடைய நாளிலே உன் விசுவாசம் புகழப்படவும், இந்த வியாதி வந்திருக்கலாம். அல்லது உன்னுடைய பரமபிதாவின் பார்வைக்குத் தகாதவைகள் உன்னைவிட்டு நீங்க, உன்னைக் கண்டித்துச் சீர்திருத்தும்படி இந்த வியாதி வந்திருக்கலாம். இந்த முகாந்தரங்களினாலாவது, வேறெந்த முகாந்தரத்தினாலாவது இந்த வியாதி வந்திருந்தாலும்; நீ உன் பாவங்களினிமித்தம் உண்மையாய்ப் பச்சாதாபப்பட்டு, இந்த நோயைப் பொறுமையோடே சகித்து, தம்முடைய பிரியகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தேவன் உன்மேல் இரக்கமாயிருப்பார் என்று நம்பி: பிதாவாகிய அவர் தயவாய் அனுப்பியிருக்கிற இந்தச் சிட்சைக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய சித்தத்துக்கு முற்றிலும் கீழடங்குவாயானால், இந்த வியாதி நீ நித்திய ஜீவவழியிலே நடக்க உனக்கு உதவியாயிருந்து பிரயோஜனமாய் முடியும் என்று அறிந்துகொள்.

¶ *வியாதியஸ்தனுக்கு அதிக வருத்தமாயிருந்தால், குருவானவர் இதுவரையும் புத்திசொல்லியது போதும். இல்லாவிட்டால் பின்னும் சொல்லவேண்டியது:*

ஆகையால், கர்த்தருடைய சிட்சை நலமென்று ஒப்புக்கொள். பரிசுத்த பவுல் எபிரெயர் நிருபம் 12–ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டும் அல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்மு

டைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். பிரிய சகோதரனே (ரியே) நம்முடைய பரமபிதாவானவர் நம்மேல் தயவுவைத்து நமக்கு எந்தவிதமான உபத்திரவத்தையாகிலும் அனுப்பி நம்மைச் சிட்சிக்கும்போது, நாம் ஆறுதலும் புத்தியும் அடைந்து, அந்த உபத்திரவத்தைப் பொறுமையோடும் நன்றியறிதலோடும் சகிக்கும்படி, மேற்சொல்லிய வேதவாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களையும் நோய்களையும் பொறுமையாய்ச் சகிக்கிறதினாலே கிறிஸ்துவுக்கு ஒப்பாகிறோம் என்பதே அவர்களுக்கு முக்கியமான ஆறுதலாய் இருக்கவேண்டும்; அவர் மோட்சானந்தம் அடையப் பரத்துக்கு எழுந்தருளும் முன்னே பாடுபட்டார்; மகிமையில் பிரவேசிக்கும் முன்னே சிலுவையில் அறையப்பட்டார். அப்படியே இவ்வுலகத்தில் நாம் கிறிஸ்துவுடனே பாடுபடுகிறது நித்திய ஜீவனுக்குப் போகிற வழி. நாம் அவரோடே சந்தோஷமாய் மரிக்கிறதே நித்திய ஜீவனில் பிரவேசிக்கிற வாசல். அதுதான் நாம் மரணத்தைவிட்டெழுந்து கிறிஸ்துவுடனே வாசம்பண்ணி நித்திய ஜீவனை அநுபவிக்கிற வழி; ஆகையால் உனக்குப் பிரயோஜனமாயிருக்கும் இந்த வியாதியைப் பொறுமையாய்ச் சகிக்கிறதும் அல்லாமல், நீ ஞானஸ்நானம் பெற்றபோது தேவனுக்குச் செய்த வாக்குத்தத்தங்களை நினைக்கவும் வேண்டுமென்று, தேவனுடைய நாமத்தினாலே உனக்குப் புத்திசொல்லுகிறேன். பட்சபாதமில்லாமல் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நீதியுள்ள நியாயாதிபதிக்கு முன்பாக மறுமையில் கணக்கு ஒப்புவிக்கவேண்டியதாயிருக்கிறதினால், இன்னின்ன குற்றங்களைச் செய்து தண்டனைக்குப் பாத்திரமாயிருக்கிறேன் என்று நீயே உன்னைக் குற்றவாளி என்று தீர்த்து, பயங்கரமான நியாயத்தீர்ப்புநாளில் ஆக்கினைக்குட்படாமல் கிறிஸ்துவினிமித்தம் நம்முடைய பரமபிதாவினாலே இரக்கத்தைப் பெறத்தக்கதாக; தேவனுக்கும் மனுஷருக்கும் செய்யவேண்டிய கடமைகளைக்குறித்து நீ எப்படி நடந்திருக்கிறாய் என்று பரிசோதிக்கும்படி உனக்குக் கற்பிக்கிறேன். ஆகையால், கிறிஸ்தவன் (ள்) விசுவாசிக்கவேண்டியவைகளை நீ விசுவாசிக்கிறாயோ இல்லையோ என்று அறியும்படி விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லுகிறேன் கேள்:

¶ அப்பொழுது குருவானவர் விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லவேண்டும்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்தஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம்நாள் உயிரோடு

எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும் சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

¶ வியாதியுள்ளவன் சொல்வதாவது:

இவைகளையெல்லாம் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ அப்பொழுது தான் செய்த பாவங்களைக்குறித்து அவன் உண்மையாய் மனஸ்தாபப்படுகிறானோ இல்லையோ என்றும், அவன் எல்லா மனிதரோடும் சிநேகமாயிருக்கிறானோ இல்லையோ என்றும், குருவானவர் சோதித்து அறிகிறதும் அல்லாமல்; தனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்திருக்கும் எல்லாருக்கும் அவன் முழுமனதோடே மன்னிக்கவேண்டும் என்றும், தான் மற்றவர்களுக்கு விரோதமாய்ச் செய்திருக்கும் குற்றங்களுக்கு அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும், தான் யாருக்காகிலும் அநியாயமாவது நஷ்டமாவது செய்திருப்பானாகில் அவனாலே கூடியமட்டும் அதற்குப் பரிகாரஞ்செய்யவேண்டும் என்றும், போதிக்கவேண்டும். அன்றியும் தன் ஆஸ்திகளைக்குறித்து ஒழுங்குசெய்யாதிருந்தால், அவன் மரணசாதனம் எழுதவும், தன்னுடைய மனச்சாட்சிக்குச் சமாதானம் உண்டாகிறதும் அல்லாமல், மரணசாதனத்தை நிறைவேற்றுகிறவர்களுக்கும் தொந்தரவு வராதபடிக்கும் தன் கொடுக்கல் வாங்கல் காரியங்கள் எல்லாவற்றையும் அறிவிக்கவும், அவனுக்குப் புத்திசொல்லவேண்டும். மனிதர் சுகமாயிருக்கும்போதே, தங்கள் ஆஸ்திகளைக்குறித்து ஒழுங்குசெய்யவேண்டுமென்று அவர்களுக்கு அடிக்கடி நினைப்பூட்டவும் வேண்டும்.

¶ அவசியமென்று தோன்றினால், ஜெபஞ்செய்வதற்கு முன்பு மேற்சொல்லிய வார்த்தைகளைக் குருவானவர் சொல்லலாம்.

¶ வியாதியஸ்தர்கள் ஆஸ்தியுள்ளவர்களாயிருந்தால் ஏழைகளுக்கு மனப்பூர்வமாய் தர்மம் செய்யவேண்டும் என்று புத்திசொல்லி அவர்களை ஏவுவதற்கு மறக்கக்கூடாது.

¶ அப்பொழுது யாதொரு விசேஷித்த காரியத்தினால் வியாதியுள்ளவனுடைய மனச்சாட்சி கலக்கம் அடைந்திருக்குமானால், அவன் தன் பாவங்களைத் தாராளமாய் அறிக்கையிடும்படி சொல்லவேண்டும். அறிக்கையிட்டபின்பு, அவன் மனத்தாழ்மையோடும் ஆசையோடும் விரும்பிக் கேட்டால், குருவானவர் அவனுக்குப் பின்வருகிறபடி சொல்லி, பாவவிமோசனம் செய்யவேண்டும்.

உண்மையாய்ப் பச்சாதாபப்பட்டு, தம்மை விசுவாசிக்கிற பாவிகள் யாவருக்கும் பாவவிமோசனம் செய்வதற்கு, தமது திருச்சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மிகுந்த இரக்கத்தினால் உன் குற்றங்களையெல்லாம் உனக்கு மன்னிப்பாராக. எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற அவருடைய அதிகாரத்தினால், நான், பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே உனது பாவங்கள் எல்லாவற்றையும் விமோசனம் செய்கிறேன். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டிய சுருக்கஜெபமாவது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

உண்மையாய் மனந்திரும்புகிறவர்களுடைய பாவங்களை அப்புறம் நினையாமல் உமது பூரண கிருபையினால் நிவிர்த்திசெய்கிற இரக்கமுள்ள தேவனே, பாவமன்னிப்பு அடையவேண்டுமென்று ஆவலோடே விரும்புகிற உம்முடைய அடியானு (ளா) கிய இவனை (ளை) இரக்கமாய்க் கண்ணோக்கிப்பாரும். அன்புள்ள பிதாவே, பிசாசினுடைய தந்திரத்தினாலும் குரோதத்தினாலும் தன்னுடைய மாம்ச இச்சையினாலும் பலவீனத்தினாலும், இவனு (ளு) க்குள்ளே சீர்கெட்டிருக்கிறதைச் சீர்திருத்தியருளும். திருச்சபையில் அவயவமாகிய இந்த வியாதியஸ்தனை (தியை) ச் சபையின் ஐக்கியத்தில் காத்து, இவனு (ளு) டைய மனத்துயரத்தைப் பார்த்து, இவன் (ள்) கண்ணீருக்கு இரங்கி, தேவரீருக்கு நலமென்று காண்கிறபடி, இவன் (ள்) படுகிற நோவைத் தணியச்செய்யும். இவன் (ள்) உம்முடைய இரக்கத்தையே பூரணமாய் நம்பியிருக்கிறபடியால், இவன் (ள்) செய்த பாவங்களை இவன் (ள்) மேல் சுமத்தாமல், உமது பரிசுத்த ஆவியினால் இவனை (ளை) ப் பலப்படுத்தி, தேவரீர் இவனை (ளை) இம்மையிலிருந்து அழைத்துக்கொள்ளச் சித்தமாகும்போது, உமது அருமையான குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் உம்மிடத்தில் கிருபையாய்ச் சேர்த்துக்கொள்ளும். ஆமேன்.

¶ பின்பு குருவானவர் இந்தச் சங்கீதத்தைச் சொல்லவேண்டும்,

In te, Domine, speravi. 71. சங்கீதம்.

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.

உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்: உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.

நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்: என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.

என் தேவனே, துன்மார்க்கருடைய கைக்கும்: நியாயக்கேடும் கொடுமையும் உள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.

கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும்: என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாய் இருக்கிறீர்.

நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்: என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.

அநேகருக்கு நான் ஒரு புதுமைபோலானேன்: நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.

என் வாய் உமது துதியினாலும்: நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.

முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும்: என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.

என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி: என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி,

தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்: அவனை விடுவிப்பார் இல்லை என்கிறார்கள்.

தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்: என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும்: எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவும் கடவர்கள்.

நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து: மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்: அவைகளின் தொகையை நான் அறியேன்.

கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்: உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.

தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்: இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.

இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும்: முதிர்வயதும் நரைமயிரும் உள்ளவனாகும்வரைக்கும் என்னைக் கைவிடீராக.

தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது: பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இதையும் சொல்லவேண்டும்:

உலக இரட்சகரே, உமது சிலுவையினாலும் அருமையான உமது இரத்தத்தினாலும் எங்களை மீட்டுக்கொண்ட கர்த்தாவே, எங்களை இரட்சித்து எங்களுக்குச் சகாயம் செய்யவேண்டும் என்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

¶ பின்னும் குருவானவர் சொல்லவேண்டியது:

தம்மை நம்பியிருக்கிற யாவருக்கும் பலத்த அரணும், வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவரும் அடிபணிந்து போற்றுகிறவராயும் இருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், இப்பொழுதும் எப்பொழுதும் உனக்கு அடைக்கலமாயிருந்து, நீ ஆரோக்கியத்தையும் இரட்சிப்பையும் அடையும்பொருட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமமே அல்லாமல், வேறொரு நாமமும் வானத்தின்கீழ் மனிதருக்குக் கொடுக்கப்படவில்லையென்று நீ உணர்ந்து அறியக் கிருபைசெய்வாராக. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது:

தேவனுடைய இரக்கமுள்ள கிருபைக்கும் பராமரிப்புக்கும் உன்னை ஒப்புவிக்கிறோம். கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும் எப்பொழுதும் உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென்.

வியாதிப்பட்டிருக்கிற பிள்ளைக்காகச் செய்யத்தக்க ஜெபம்.

ஜீவனையும் மரணத்தையும் உமது சித்தத்தின்படி கட்டளையிடுகிற சர்வவல்லமையுள்ள தேவனே, இரக்கமுள்ள பிதாவே, இங்கே வியாதியினால் வருத்தப்படுகிற இந்தப் பிள்ளையை தேவரீர் பரலோகத்திலிருந்து இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்க்கவேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். உமது இரட்சிப்பினாலே இவனை (ளை) ச் சந்தித்தருளும். தேவரீருக்குப் பிரியமான காலத்தில் சரீரநோவை நீக்கி, உமது இரக்கங்களினிமித்தம் இவனு (ளு) டைய ஆத்துமாவை இரட்சியும்.

இவன் (ள்) நாட்கள் பூமியிலே நீடித்திருக்க தேவரீருக்குச் சித்தமானால், இவன் (ள்) உமக்கென்றே பிழைத்து, உம்மை உண்மையாய்ச் சேவித்து, தன் வாழ்நாளெல்லாம் மற்றவர்களுக்கு நன்மைசெய்து, உமது மகிமையை விளங்கப்பண்ணுகிறவனா (ளா) யிருக்கும்படி கிருபைசெய்யும். இப்படிச் செய்ய தேவரீருடைய திருவுளத்துக்கு ஏற்றிராவிட்டால், இயேசுநாதருக்குள் நித்திரையடைந்தவர்களுடைய ஆத்துமாக்கள் இடைவிடாமல் இளைப்பாறி ஆநந்தத்தை அநுபவிக்கிற பரம வாசஸ்தலங்களில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்ளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது இரக்கங்களினிமித்தம் இதைச் செய்தருளும். ஆமென்.

வியாதியுள்ளவன் ஒருவேளை பிழைப்பான் என்று சந்தேகப் பட்டால் அவனுக்காகச் செய்யத்தக்க ஜெபம்.

இரக்கம் நிறைந்த பிதாவே, எல்லா ஆறுதலுக்கும் காரணரே, ஆபத்துக்கு உதவும் சகாயரே, இங்கே உமது செயலால் சரீரத்தில் மிகவும் வருத்தப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனு (ளு) க்காக நாங்கள் உமது பாதமே தஞ்சமென்று உம்மிடத்தில் ஓடிவருகிறோம். இவனை (ளை)க் கிருபையாய்க் கண்ணோக்கிப் பாரும். ஆண்டவரே, புறம்பே இவன் (ள்) சரீரம் ஒடுங்கிப்போனாலும், உமது கிருபையினாலும் பரிசுத்த ஆவியினாலும் உள்ளே இவன் (ள்) ஆத்துமாவை மேன்மேலும் பலப்படுத்தியருளும். இவன் (ள்) இம்மையைவிட்டுப் போகும்முன்னே உமது இரக்கத்தால் இவனு (ளு) க்குப் பாவம் தொலையவும், பரமண்டலத்திலே பாவமன்னிப்பு இவனு (ளு) க்கு முத்திரிக்கப்படவும், தான் இதுவரைக்கும் செய்த தப்பிதங்கள் எல்லாவற்றிற்காகவும் உண்மையாய் மனஸ்தாபப்படுகிற துக்கத்தையும் உம்முடைய குமாரனாகிய இயேசுவை உறுதியாய்ப் பற்றும் விசுவாசத்தையும் இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். தேவரீருக்குக் கூடாத காரியம் ஒன்றும் இல்லையென்றும், உமக்குச் சித்தமானால் இவனை (ளை) இப்பொழுதும் சுகமாக்கி இன்னும் எங்களோடே உயிரோடிருக்கும்படி செய்ய உம்மால் ஆகுமென்றும், அறிந்திருக்கிறோம். ஆகிலும் இவனு (ளு) க்கு அந்தியகாலம் சமீபித்திருக்கிறதென்று தோன்றுகிறபடியால், இவன் (ள்) உமது கிருபைபெற்றவனா (ளா) ய், சமாதானத்தோடே இவ்வுலகத்தை விட்டுப்போய் உமது நித்திய ராஜ்யத்தில் சேரத்தக்கதாக; மரணத்துக்கு இவனை (ளை) ஆயத்தப்படுத்தவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தையும் மத்தியஸ்தத்தையும் முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

மரணாவஸ்தைப்படுகிறவனைத் தேவனுக்கு ஒப்புவிக்கிற ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சிறைச்சாலைபோன்ற இம்மைக்குரிய சரீரத்திலிருந்து விடுதலையானபின்பு பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் தேவரீரிடத்தில் சேர்ந்து ஆநந்தமடைந்து வாழுகிறதே. உமது அடியானு (ளு) ம் எங்கள் சகோதரனு (ரியு) ம் ஆகிய இவனு (ளு) டைய ஆத்துமாவை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவும் மிகுந்த இரக்கமுள்ள இரட்சகருமாகிய தேவரீருடைய திருக்கரத்தில் ஒப்புக்கொடுத்து, அது உமது பார்வைக்கு அருமையாயிருக்கவேண்டும் என்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். நிர்ப்பாக்கியமுள்ள இந்தப் பொல்லாத உலகத்தில் சஞ்சரிக்கும்போது மாம்ச இச்சையினாலும் சாத்தானுடைய தந்திர உபாயங்களினாலும் இவன் (ள்) ஆத்துமாவைப் பற்றியிருக்கும் அசுசிகளெல்லாம் நீங்கி, உமக்குமுன்பாக மாசில்லாமல் பரிசுத்தமுள்ளதாகக் காணப்படுவதற்கு; உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படி பலியிடப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினாலே அதைக் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். உயிரோடிருக்கிற நாங்கள் தேகநிலையாமையைக் காட்டுகிற இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களை நாளுக்குநாள் பார்க்கும்போது, எங்கள் வாழ்நாள் நிலையற்றதும் நிச்சயமற்றதுமாயிருக்கிறதென்று உணரவும், கடைசியில் நித்திய ஜீவனுக்கு நடத்துகிற பரம ஞானத்தை நாங்கள் இம்மையில் பெறத்தக்கதாக எங்கள் நாட்களை எண்ணும் அறிவை அடையவும் கிருபைசெய்யவேண்டுமென்று, உமது ஒரேகுமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

மனக்கிலேசத்தினாலாவது குற்றஞ்சாற்றும் மனச்சாட்சியினாலாவது வியாதுலப்படுகிறவர்களுக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

இரக்கம் நிறைந்த பிதாவே, ஆறுதல் அளிக்கும் கிருபையுள்ள கர்த்தாவே, வியாகுலப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனை (ளை) இரக்கத்தோடும் உருக்கத்தோடும் கண்ணோக்கியருளும். கசப்பான தீர்ப்புகளை இவன் (ள்) பேரில் எழுதி, இவன் (ள்) செய்த அக்கிரமங்களைப் பலிக்கச்செய்கிறீர்; உம்முடைய கோபம் இவன் (ள்) மேல் பாரமாய் இறங்கியிருக்கிறதினால், இவன் (ள்) ஆத்துமா உபத்திரவத்தால் நிறைந்திருக்கிறது. இரக்கமுள்ள தேவனே, நாங்கள் உமது பரிசுத்த வேத வாக்கியங்களால் பொறுமையும் ஆறுதலும் அடைந்து நம்பிக்கையுள்ளவர்களாகும்படி, அந்த வசனத்தை எங்களுக்குப் போதகமாக எழுது

வித்திருக்கிறீர். இவன் (ள்) உம்மையே நம்பியிருக்கவும், உம்மைத்தவிர மற்றொன்றையும் நம்பாமலிருக்கவும், தன்னை அறிகிற அறிவையும், தேவரீர் உரைத்த சாபங்களையும் வாக்குத்தத்தங்களையும் நிதானமாய் அறிகிற அறிவையும் இவனு (ளு) க்குக் கொடுத்தருளும். எந்தச் சோதனைகள் வந்தாலும், இவனு (ளு) க்கு வேண்டிய பெலனை அளித்து, இவன் (ள்) வியாகுலங்களையெல்லாம் தீர்த்தருளும். நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் இரும். கோபத்தினாலே உம்முடைய இரக்கத்தை அடைத்துக்கொள்ளாமல் இவன் (ள்) சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். சத்துருவால் வரும் பயத்தை அகற்றி, உமது திருமுகப் பிரகாசத்தை இவன் (ள்) மேல் வீசச்செய்து, இவனு (ளு) க்குச் சமாதானம் கட்டளையிட்டருளும் என்று புண்ணிய சொரூபியாகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தமூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

THE

COMMUNION OF THE SICK.

வியாதியுள்ளவர்களுக்கு

நற்கருணையைக் கொடுக்கும்

முறைமை.

¶ மனிதரெல்லாரும் சடிதியாய் வரும் பலவித மோசங்களுக்கும் வியாதிகளுக்கும் ஏதுவாயிருக்கிறதுமன்றி, தாங்கள் இம்மையைவிட்டுப் பிரியும் நேரத்தை அறியாதவர்களாயும் இருக்கிறதினாலே, சர்வவல்லமையுள்ள தேவன் அவர்களை அழைக்கச் சித்தமாயிருக்கும் எந்த நேரத்திலும் அவர்கள் மரணத்திற்கு ஆயத்தமாயிருப்பதற்குக் குருமார் செய்யவேண்டுவதென்னவென்றால்; வியாதி சடிதியாய் வருங்காலத்தில் பரிசுத்த நற்கருணைக்குச் சேரக்கூடாமற்போவதினால் மனக்கலக்கம் உண்டாகாதபடி; நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய நற்கருணையைத் தேவாலயத்தில் வெளியரங்கமாய்ப் பரிமாறும்போதெல்லாம், தங்கள் தங்கள் சேகரத்திலிருக்கிறவர்கள் அதற்குச் சேரவேண்டுமென்று குருமார் அடிக்கடி விசேஷமாக விஷவியாதிகள் வருங்காலங்களில் அவர்களை எச்சரிக்கவேண்டும். வியாதியுள்ளவன் (ள்) கோவிலுக்கு வரப் பெலனில்லாமல் தன் வீட்டில் நற்கருணை வாங்க விரும்பினால், முந்தியே அதைக் குருவானவருக்கு அறிவிக்கிறதுமல்லாமல், தன்னோடேகூட நற்கருணை வாங்குகிறவர்கள் இத்தனைபேர் என்று தெரிவிக்கவும் வேண்டும். அவனோடேகூட வாங்கப்போகிறவர்கள் மூன்றுபேர் அல்லது இரண்டுபேருக்குக் குறையாமலிருக்கவேண்டும். குருவானவர் பயபக்தியோடே பரிசுத்த நற்கருணையை அநுஷ்டிக்கும்படி, வியாதியுள்ளவனுடைய வீட்டிலே தகுதியான இடத்தையும் மற்றும் அதற்கு வேண்டியவைகளையும் எத்தனம் செய்திருக்கவேண்டும். குருவானவர் பின்வருகிற சுருக்கஜெபம், நிருபவாக்கியம், சுவிசேஷவாக்கியம் முதல்தொடங்கி வாசித்து, நற்கருணையைப் பரிமாறவேண்டும்.

சுருக்கஜெபம்.

மனுகுலம் அனைத்தையும் படைத்த சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, தேவரீர் நேசிக்கிறவர்களைச் சிட்சித்து, நீர் ஏற்றுக்கொள்ளுகிறவர்களைத் தண்டிக்கிறீர்; உமது கரத்தினாலே தண்டிக்கப்பட்டிருக்கிற உமது அடியான் (ள்) ஆகிய இவன் (ள்) மேல் இரக்கமாயிருந்து, இவன் (ள்) இந்த வியாதியைப் பொறுமையோடே சகிக்கவும், தேவரீருக்குச் சித்தமானால், சரீர சவுக்கியத்தை அடையவும் கிருபைசெய்யவேண்டுமென்றும்; இவனு (ளு) டைய ஆத்துமா சரீரத்தைவிட்டுப் பிரியும்போது மாசில்லாமல் உம்மிடத்தில் சேர்க்கப்படவேண்டுமென்றும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

நிருபவாக்கியம்: எபி. 12. 5.

என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.

சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 5. 24.

என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

¶ அப்பொழுது நற்கருணை முறைமையில் வருகிற "உங்கள் பாவங்களினிமித்தம் ஜ" என்கிற வார்த்தைகள் முதற்கொண்டு வாசிக்கவேண்டும்.

¶ பரிசுத்த சாக்கிரமெந்தாகிய நற்கருணையைப் பரிமாறும்போது, முதலாவது குருவானவரும், பின்பு வியாதியுள்ளவனோடே வாங்க நியமிக்கப்பட்டவர்களும், கடைசியாக வியாதியுள்ளவனும் அதை வாங்கவேண்டும்.

¶ வியாதியின் கொடுமையினாலாவது குருவானவருக்கு முன்னே தெரியப்படுத்தாததினாலாவது வியாதியுள்ளவனோடே வாங்க மற்றப்பேர் இல்லாததினாலாவது நியாயமான மற்றத் தடையினாலாவது வியாதியுள்ளவன் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை வாங்கக்கூடாமற்போனால், குருவானவர் அவனைப் பார்த்து: நீ உன் பாவங்களினிமித்தம் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு உனக்காக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து உனக்கு மீட்புண்டாகும்படி தமது திரூரத்தத்தைச் சிந்தினார் என்பதை உறுதியாய் விசுவாசித்து அதினால் உண்டாகும் நன்மைகளைப் பெரிதாக எண்ணி அவருக்கு முழுமனதோடே ஸ்தோத்திரம் செலுத்தினால், நீ வாயினாலே சாக்கிரமெந்தை உட்கொள்ளாவிட்டாலும், உன் ஆத்துமாவுக்குச் சவுக்கியம் உண்டாக நீ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் புசித்துப் பானம்பண்ணினவன் (ள்) ஆவாய் என்று போதிக்கவேண்டும்.

¶ ஒரே சமயத்தில் வியாதியுள்ளவனைச் சந்திக்கவும், பரிசுத்த நற்கருணையைக் கொடுக்கவும் நேரிடுமானால், அதிகநேரம் செல்லாதபடி வியாதியுள்ளவர்களைச் சந்திக்கிற முறைமையில் குருவானவர், "கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன் என்று" ஆரம்பிக்கிற சங்கீதத்தை வாசியாமல் நிறுத்தி, நற்கருணையைக் கொடுக்கும் முறைமையை வாசிக்கவேண்டும்.

¶ பெருவாரிக் காய்ச்சல் விஷவியாதி முதலான தொத்துவியாதிகள் நடமாடுங்காலத்தில், வியாதியுள்ளவன் இருக்கிற சேகரத்தாரிலாவது அயலகத்தாரிலாவது ஒருவராகிலும் வியாதிக்குப் பயந்து கூட நற்கருணை வாங்கும்படி அவ்வீட்டில் வர மனதாயிராவிட்டால்; நோயாளி மிகவும் கேட்டுக்கொள்வதின்பேரில், குருவானவர் தனியாய் அவனோடேகூட நற்கருணை வாங்கலாம்.

THE ORDER FOR

THE BURIAL OF THE DEAD.

மரித்தவர்களை

அடக்கம்பண்ணும் முறைமை.

¶ ஞானஸ்நானம் பெறாதவர்களையும் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களையும் தற்கொலைசெய்தவர்களையும் அடக்கம்பண்ணும்போது, இந்த முறைமை வாசிக்கப்படாதென்று கவனிக்கவேண்டும்.

¶ கோவில் பிராகாரவாசலில் பிரேதத்தைக் கொண்டுவருகிறபோது, குருவானவரும் மற்றக் குருமாரும் எதிர்கொண்டுபோய், கோவிலில் பிரவேசிக்குமுன், அல்லது கல்லறைக்கு நேராய்ப் போனால் அதனிடத்தில் சேருமுன், பிரேதத்துக்கு முன்னாக நடந்து சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருக்கையில் என்னை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் ஒருக்காலும் மரிக்கமாட்டான். பரி. யோ. 11. 25, 26.

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நியக்கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும். யோபு, 19. 25, 26, 27.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததும் இல்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம்.—கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம். 1 தீமோ. 6. 7. யோபு, 1. 21.

¶ கோவிலில் பிரவேசித்தபோது, பின்வருகிற இரண்டு சங்கீதங்களை யாவது அவைகளில் ஒன்றையாவது வாசிக்கவேண்டும்.

Dixi, Custodiam 39. சங்கீதம்.

என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து: துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தினால் அடக்கிவைப்பேன் என்றேன்.

நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்: ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது.

என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது: அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்.

கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி: என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்.

இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்: என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்.

வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்: ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்.

இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்: நீரே என் நம்பிக்கை.

என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும்: மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்.

நீரே இதைச் செய்தீர் என்று: நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன்.

என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும்: உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்துபோனேன்.

அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது, அவன் வடிவைப் பொட்டரிப்பைப்போல் அழியப்பண்ணுகிறீர்: நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே.

கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்: என் பிதாக்களெல்லாரையும்போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்.

நான் இனி இராமற்போகுமுன்னே: தேறுதல் அடையும்படி என்னிடத்தில் பொறுமையாயிரும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

Domine, refugium. 90. சங்கீதம்.

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக: எங்களுக்கு அடைக்கலமானவர்.

பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும்: நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

நீர் மனுஷனை நிர்த்தூளியாக்கி: மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும்: இராச்சாமம்போலவும் இருக்கிறது.

அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர்: நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

அது காலையிலே முளைத்துப் பூத்து: மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து: உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம்.

எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும்: எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது: ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே: அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

உமது கோபத்தின் வல்லமையையும்: உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்?

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி: எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்: உமது அடியாருக்காகப் பரிதபியும்.

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி: காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்: நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய், எங்களை மகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும்: உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.

எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக: எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்போது பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் 15-ம் அதிகாரத்திலிருந்தெடுத்த பாடம் வாசிக்கப்படும்.

1 கொ. 15. 20.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரை அடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனம் என்ன? மரித்தோருயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன். ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள் என்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்று எழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது, ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்துவந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானத்துக்குரியவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். சகோதரரே, நான் சொல்லுகிறது என்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்த

ரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

¶ அவர்கள் பிரேதக்குழியினிடத்தில் வந்து பிரேதத்தைப் பூமியில் வைக்க எத்தனிக்கிறபோது, குருவானவர் சொல்ல, அல்லது குருவானவரும் மற்றக் குருக்களும் பாடவேண்டியதாவது:

ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்.

ஜீவனோடிருக்கும்போதே சாவுக்குட்பட்டிருக்கிறோம்; எங்கள் பாவங்களினிமித்தம் நியாயப்படி கோபங்கொண்டிருக்கிற கர்த்தாவே, தேவரீரிடத்தில் அன்றி, யாரிடத்தில் சகாயம் தேடுவோம்.

பரிசுத்தமுள்ள தேவனே, சர்வவல்லமைபொருந்திய கர்த்தாவே, இரக்கம் நிறைந்த இரட்சகரே, நித்திய மரணத்தின் கொடிய வேதனைகளுக்கு எங்களை ஒப்புக்கொடாதேயும்.

கர்த்தாவே, எங்கள் இருதயத்தின் இரகசியங்களை அறிந்திருக்கிறீர்; எங்கள் ஜெபங்களுக்கு இரக்கமுள்ள உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும். பரிசுத்தமுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். சர்வவல்லமையுள்ள தேவனே, பரிசுத்தமும் இரக்கமுமுள்ள இரட்சகரே, நீதியுள்ள நித்திய நியாயாதிபதியே, எங்கள் அந்தியகாலத்தில் நேரிடும் எந்த வேதனைகளினாலும் நாங்கள் உம்மை விட்டுப் பிரியாதபடி செய்தருளும்.

¶ அப்பொழுது, அருகே நிற்கிறவர்களில் சிலர் பிரேதத்தின்மேல் மண் போடுகையில், குருவானவர் சொல்லவேண்டியது:

மரித்துப்போன நம்முடைய பிரிய சகோதரனா (ரியா) கிய இவனு (ளு) டைய ஆத்துமாவைச் சர்வவல்லமையுள்ள தேவன் மிகுந்த இரக்கத்தினாலே தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளச் சித்தமானபடியினால்; எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்,* நித்திய ஜீவனை அடைய உயிர்த்தெழுதல் உண்டாகும் என்று உறுதியாய் நம்பி, நாம் இவனு (ளு) டைய சரீரத்தை மண்ணுக்கு மண்ணாயும், சாம்பலுக்குச் சாம்பலாயும், புழுதிக்குப் புழுதியாயும், பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

¶ அப்பொழுது சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:

பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் என்று ஆவியானவர் திருவுளம்பற்றுகிறார்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்க்ள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

---

* கப்பல் யாத்திரையில் மரித்தவர்களைத் தண்ணீரில் அடக்கம்பண்ணும்போது, "மூலமாய்" என்னும் பதத்துக்குப் பின்பு வாசிக்கவேண்டியதாவது:

சரீர உயிர்த்தெழுதல் உண்டாகும்போது, சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தவர்களை ஒப்புக்கொடுக்கும் என்றும், மறுமைக்குரிய ஜீவன் உண்டாகும் என்றும் நம்புகிற நாங்கள் இவனு (ளு) டைய சரீரத்தை அழிந்துபோகும்படி அதைச் சமுத்திரத்தின் ஆழத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

¶ குருவானவர் சொல்வது.

சர்வவல்லமையுள்ள தேவனே, கர்த்தருக்குள் மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சரீரமாகிய சுமை நீங்கி விடுதலையடைந்து, இம்மையை விட்டுப்போய் தேவரீரிடத்தில் ஆநந்த சந்தோஷம் அநுபவித்து வாழுகிறது. பாவம் நிறைந்த இவ்வுலகத்திலுள்ள துன்பங்களினின்று எங்கள் சகோதரனா (ரியா) கிய இவனை (ளை) இரட்சிக்கச் சித்தமானதற்காகத் தேவரீருக்கு முழுமனதோடே ஸ்தோத்திரம்செலுத்துகிறோம். தேவரீர் தெரிந்துகொண்டவர்களின் தொகையைச் சீக்கிரத்தில் நிறைவாக்கவும், உம்முடைய ராஜ்யத்தைத் தீவிரமாய் வருவிக்கவும் கிருபைகூர்ந்து கட்டளையிட்டருளும். உம்முடைய பரிசுத்த நாமத்தைப் பற்றும் மெய்விசுவாசமுள்ளவர்களாய் மரித்த அனைவரோடுங்கூட நாங்களும் என்றுமுள்ள உமது நித்திய மகிமையிலே சரீரத்திலும் ஆத்துமத்திலும் குறைவின்றிச் சம்பூரணம் அடைந்தவர்களாய் ஆநந்தத்தை அநுபவிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

சுருக்கஜெபம்.

இரக்கமுள்ள தேவனே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார், அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருக்கையில் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் ஒருக்காலும் மரிக்கமாட்டான். அவருக்குள் நித்திரையடைந்தவர்களைக்குறித்து நம்பிக்கையற்றவர்களைப்போலத் துக்கப்படாதபடி, தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு எங்களுக்குக் கற்பித்திருக்கிறாரே. பிதாவே, எங்கள் சகோதரனா (ரியா) கிய இவன் (ள்) கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து இளைப்பாறுகிறான் (ள்) என்று நாங்கள் நம்புகிறதுபோல, இம்மையைவிட்டுப் போகும்போது, நாங்களும் அவரிடத்தில் சேர்ந்து இளைப்பாறவும், மரித்தோர் உயிர்த்தெழும்பும் கடைசிநாளிலே உம்முடைய சமுகத்தில் பிரியமுள்ளவர்களாய்க் காணப்படவும்; உம்முடைய பிரிய குமாரன் உம்மிடத்தில் அன்பாயும் பயபக்தியாயுமிருக்கிற யாவரையும் நோக்கி: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று அருளிச்செய்யும் ஆசீர்வாதத்தைப்பெற்று அநுபவிக்கவும்; நீதியாகிய ஜீவனை அடைய, பாவமாகிய மரணத்தினின்று எங்களை உயிர்ப்பித்தருளவேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, எங்கள் மத்தியஸ்தரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் இதைக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமேன்.

THE

THANKSGIVING OF WOMEN AFTER CHILD-BIRTH,

COMMONLY CALLED,

THE CHURCHING OF WOMEN.

ஸ்திரீகள் பிரசவித்தபின்பு,

கோவிலுக்கு வரும்போது செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

¶ ஸ்திரீயானவள் பிரசவித்துப் போதுமானகாலம் சென்றபின்பு, சுத்தவஸ்திரம் தரித்துக் கோவிலுக்கு வந்து, வழக்கமாய்க் குறித்திருக்கிற இடத்திலாவது, அத்தியட்சர் நியமிக்கிற இடத்திலாவது, முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் அவளை நோக்கிச் சொல்லவேண்டியதாவது:

சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய கிருபையினாலே பேறுகாலத்துக்குரிய மிகுந்த ஆபத்தினின்று உன்னை இரட்சித்து, சுகமான பிரசவத்தை உனக்கு அருளிச்செய்திருக்கிறதினால், நீ மனதார அவருக்கு ஸ்தோத்திரம்செலுத்திச் சொல்லவேண்டியதாவது:

(¶ அப்பொழுது குருவானவர் 116-ம் சங்கீதத்தைச் சொல்லவேண்டும்.)

Dilexi, quoniam.

கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால்: அவரில் அன்புகூருகிறேன்.

அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால்: நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன்.

மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது: பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்:

அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு: கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்.

கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர்: நம்முடைய தேவன் மன உருக்கமானவர்.

கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்: நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார்.

என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மைசெய்தபடியால்: நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.

என் ஆத்துமாவை மரணத்துக்கும்: என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.

நான் கர்த்தருக்கு முன்பாக: ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.

விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; நான் மிகுதியும் வருத்தப் பட்டேன்: எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும்: அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு: கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்: கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும்; எருசலேமே, உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அல்லது, *Nisi Dominus.* 127. சங்கீதம்.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்: அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.

கர்த்தர் நகரத்தைக் காவாராகில்: காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து; வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா: அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார்.

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்: கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.

வாலவயதின் குமாரர்: பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

அவைகளால் தன் அம்புறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்: அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலிலே சத்துருக்களோடே பேசுவார்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அப்பொழுது குருவானவர் சொல்வது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

குரு: கர்த்தாவே, உம்முடைய அடியாளாகிய இந்த ஸ்திரீயை இரட்சியும்.

மறுமொழி: தன் நம்பிக்கையை உம்மிடத்தில் வைத்திருக்கிறாள்.

குரு: இவளுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: சத்துருவின் முகத்துக்கு இவளை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது அடியாளாகிய இந்த ஸ்திரீயைப் பேறுகாலத்துக்குரிய மிகுந்த வேதனையிலும் மோசத்திலும் நின்று இரக்

கமாய் இரட்சித்ததற்காக, தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இரக்கமுள்ள பிதாவே, இவள் உமது சகாயத்தினாலே இம்மையில் விசுவாசமுள்ளவளாய், உமது சித்தத்திற்கு ஏற்றபடி நடக்கவும், மறுமையில் நித்திய மகிமையைப் பெற்று அநுபவிக்கவும் கிருபைசெய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ ஸ்தோத்திரம் செலுத்த வந்திருக்கிற ஸ்திரீயானவள் வழக்கப்படி காணிக்கை செலுத்தவேண்டும். மேலும் பரிசுத்த நற்கருணை பரிமாறுகிற தருணமாயிருந்தால், அவளும் அதை வாங்குகிறது தகுதி.

A COMMINATION,

OR

DENOUNCING OF GOD'S ANGER AND JUDGEMENTS AGAINST SINNERS.

தேவகோபாக்கினை கூறல்.

அதாவது, லெந்தென்னும் நாட்களில் முதலாம்நாளிலும், அத்தியட்சர் நியமிக்கும் மற்றக் காலங்களிலும், பாவிகள்மேல்வரும் தேவகோபாக்கினைகளைக் கூறி, ஜெபம்பண்ணுதல்.

¶ காலைஜெபமும் வழக்கப்படி லித்தானியாவும் வாசித்து முடித்து, ஜெபபீடத்திலாவது பிரசங்கபீடத்திலாவது குருவானவர் நின்று சொல்லவேண்டியதாவது:

சகோதரரே, பூர்வத் திருச்சபையிலே தேவபக்திக்கு ஏதுவான ஒரு முறைமை இருந்தது. அதென்னவென்றால், வெளியரங்கமாய்ப் பாவம் செய்த குற்றவாளிகளுடைய ஆத்துமாக்கள் கர்த்தாவின் நாளில் இரட்சிக்கப்படுவதற்கும், மற்றவர்கள் கண்டு எச்சரிப்படைந்து குற்றஞ்செய்யப் பயப்படுவதற்கும், லெந்தென்னும் நாட்களின் துவக்கத்திலே அப்படிப் பட்டவர்கள் வெளியரங்கமாய்த் தவசுசெய்து இவ்வுலகத்தில் சிட்சைக்குட்பட்டார்கள்.

அந்த முறைமையைத் திரும்பவும் ஏற்படுத்துவது நலமாயிருக்கும். அதுவரைக்கும் அதற்குப் பதிலாகச் செய்யவேண்டுவது என்னவெனில், உபாகமம் இருபத்தேழாம் அதிகாரத்திலும், மற்ற வேதவாக்கியங்களிலும், குணப்படாத பாவிகளுக்கு வரும் தேவசாபத்தைக் காட்டிய வசனங்களைத் தெரிந்தெடுத்து இக்காலத்தில் உங்கள் எல்லாருக்குமுன்பாக வாசிக்கிறதும், ஒவ்வொரு வசனத்திற்கும் நீங்கள் ஆமேன் என்று மறுமொழி சொல்லுகிறதும் நலமென்று தோன்றுகிறது. பாவிகள்மேல் வரும் தேவகோபத்தினால் நீங்கள் எச்சரிப்படைந்து உண்மையாய் மனந்திரும்பவும், மோசமுள்ள இந்த நாட்களில் சாவதானமாய் நடக்கவும், தேவ

சாபத்துக்கு ஏதுவானவைகளென்று நீங்களே வாயினாலே அறிக்கையிடுகிற தீவினைகளை விட்டுவிலகவும், உங்களை ஏவிவிடுவதற்கு அந்த வாக்கியங்களை வாசிக்கவேண்டும்.

வணங்கும்படி சித்திரசொரூபத்தையாவது வார்ப்புவிக்கிரகத்தையாவது செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

¶ ஜனங்கள் மறுமொழியாக ஆமேன், என்று சொல்லவேண்டும்.

குரு: தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: குருடனை வழிதப்பச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: அந்நியர் திக்கற்றவர் விதவைகள் ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: பிறனுடைய மனைவியோடே விபசாரஞ்செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: குற்றமில்லாதவனைக் கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, மனுஷனைத் தனக்குத் தஞ்சமாக்கிக்கொண்டு, கர்த்தரைவிட்டு விலகிப்போகிற இருதயமுள்ளவன் சபிக்கப்பட்டவன்.

மறுமொழி: ஆமேன்.

குரு: இரக்கமில்லாதவர்கள், வேசிக்கள்ளர், விபசாரக்காரர், பொருளாசைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், பின்புறணிக்காரர், வெறியர், அநியாயக்காரர், இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.

மறுமொழி: ஆமேன்.

குரு.

தீர்க்கதரிசியாகிய தாவீது சொல்லுகிறபடி: தேவனுடைய கற்பனை
களைவிட்டு, வழிவிலகினவர்களெல்லாரும் சபிக்கப்பட்ட
சங். 119. 21. வர்களானதால், பயங்கரமான கோபாக்கினை நமது தலை
மேல் விழுவதற்கு ஏதுவாயிருக்கிறதென்று நினைத்து, நாம்
செய்த குற்றங்களை ஒத்துக்கொண்டு, அறிக்கையிட்டு, நமது துர்நடக்
கைக்காகப் புலம்பி அழுது, மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்
கும்படி கவலைப்பட்டு, சாந்தமும் நொறுங்குண்டதுமான இருதயத்தோடே
நம்முடைய கர்த்தராகிய தேவனிடத்தில் திரும்பக்கடவோம். நல்ல கனி
கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போ
மத். 3. 10. டப்படும்படிக்கு, இப்பொழுதே கோடரி மரங்களின்
வேர் அருகே வைத்திருக்கிறது. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழு
எபி. 10. 31. கிறது பயங்கரமாயிருக்கிறது. அவர் துன்மார்க்கர்மேல்
சங். 11. 6. கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தக
மும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின்
பங்கு. இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தி
ஏசா. 26. 21. னிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய
ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார். அவர் வரும் நாளைச் சகிப்பவன்
யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்?
மல். 3. 2. தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது
மத். 3. 12. களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்
சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்.
இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள்
1 தெச. 5. 2, 3. வரும். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று மனி
தர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனைவருகிறது
போல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும், அவர்கள் தப்பிப்போவ
தில்லை. குணப்படும்படிக்கு அடிக்கடி வரவழைத்த தேவ
ரோ. 2. 4, 5. னுடைய இரக்கத்தையும், பொறுமையையும், நீடிய சாந்
தத்தையும், அசட்டைபண்ணின முரட்டுப்பாவிகள் இரு
தயகடினத்தினாலே தங்கள்மேல் குவித்துக்கொண்ட தேவகோபமானது
ஆக்கினை செலுத்தும்நாளிலே விளங்கும். அப்பொழுது
நீதி. 1. 28—30. அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள், நான் மறு
உத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே
என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். அவர்கள் அறிவை
வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போ
னார்கள். என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்து
கொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்

லுகிறார். கதவு பூட்டினபின்பு தட்டுகிறது வீணாயிருக்குமே. ஆக்கினை
மத். 25. 10—12, 41. செலுத்துங்காலத்தில் இரக்கத்துக்காகக் கெஞ்சிக்கேட்
கிறதற்குக் காலம் கடந்துபோயிருக்கும். சபிக்கப்பட்ட
வர்களே, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்
பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்று நீதியுள்ள தீர்ப்பைக்
கூறுகிற சத்தம், ஐயோ, எத்தனை பயங்கரமாயிருக்கும்.
யோ. 9. 4, 5. 2கொ. 6. 2. ஆகையால் சகோதரரே, ஒருவனும் கிரியைசெய்யக்கூ
டாத இராக்காலம் வருவதால், நமக்கு இரட்சணியபகல்
கடந்துபோகுமுன்னமே எச்சரிக்கையாய் நடக்கக்கடவோம். அழுகை
யும் பற்கடிப்புமுள்ள புறம்பான இருளிலே நாம் தள்ளப்
மத். 25. 30. படாதபடி, நமக்கு வெளிச்சம் இருக்குமளவும் வெளிச்
சத்தில் விசுவாசமாயிருந்து, வெளிச்சத்தின் பிள்ளைகளாக
நடக்கக்கடவோம். மனதார உண்மையுள்ள இருதயத்தோடே நம்மிடத்
திற்குத் திரும்பினால், முன் செய்த பாவங்களை அளவற்ற தமது இரக்கத்
தினாலே மன்னிப்போம் என்று வாக்குத்தத்தஞ்செய்து, குணப்படும்படிக்கு
நம்மை இரக்கமாய் அழைக்கிற தேவனுடைய தயவை அசட்டைபண்ணா
திருப்போமாக. நமது பாவங்கள் சிவேரென்றிருந்தா
எசா. 1. 18. லும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவை
கள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையா
கும். உங்கள் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்புங்கள்;
எசே. 18. 30—32. அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரண
மாயிருப்பதில்லை. நீங்கள் செய்த பாதகங்களெல்லாவற்
றையும் உங்களைவிட்டு அகற்றி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது
ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள். இஸ்ரவேல் வம்சத்தாரே,
மனந்திரும்புங்கள், அப்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள்; நீங்கள் ஏன்
சாகவேண்டும்? சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று
கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நாம் பாவஞ்செய்
1யோ. 2. 1, 2. திருந்தும் நீதிபரராகிய இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதா
வினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை
நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய
எசா. 53. 5. மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய
அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஆகையால், நாம்
உண்மையாய்க் குணப்பட்டு, அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் கீழ்ப்
படிந்து, இனி அவருடைய வழிகளில் நடந்து, அவரு
மத். 11. 29, 30. டைய மெதுவான நுகத்தையும் இலேசான சுமையையும்
ஏற்றுக்கொண்டு, தாழ்மையோடும் பொறுமையோடும் அன்
போடும் அவருக்குப் பின்சென்று, அவருடைய பரிசுத்த ஆவியினாலே
நடத்தி ஆளப்பட்டு, அவருக்கு மகிமை உண்டாக எப்பொழுதும் விருப்

பமுற்று, நாம் அழைக்கப்பட்ட நிலைமையில் நன்றியறிதலோடே அவ
ரை ஏற்றவிதமாய்ச் சேவிப்போமாகில், அவர் நம்முடைய பாவங்களை
மன்னிக்கிறதற்குச் சித்தமுள்ளவரும் நம்மை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு
ஆயத்தமுள்ளவருமாயிருக்கிறார். நாம் இது நிச்சயம் என்று அறிந்திருப்
பதினால், உண்மையாய்க் குணப்படுகிற பாவிகளை இரக்கமாய் அங்கிக
மத். 25. 39, 54. ரிக்கிற அவரிடத்திற்குத் திரும்பக்கடவோம். இப்படிச்
செய்தால், இடதுபக்கத்தில் நிறுத்தப்படுகிறவர்களுக்குக்
கூறப்படும் கொடிய ஆக்கினைத்தீர்ப்பினின்றும், நியாயப்பிரமாணத்தின்
சாபத்தினின்றும் கிறிஸ்துவானவர் நம்மை விடுதலையாக்கி, நம்மை வலது
பக்கத்தில் நிறுத்தி, தமது பிதாவினுடைய கிருபையுள்ள ஆசீர்வாதத்தை
நமக்குத் தந்தருளி, மகிமையுள்ள தமது ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும்படி
கட்டளையிடுவார். அந்த ராஜ்யத்தில் அவர் தமது அளவில்லாத இரக்
கத்தினால் நம்மெல்லாரையும் சேர்த்துக்கொள்வாராக. ஆமென்.

¶ பின்பு எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவரும் மற்றக் குருக்களும் (லித்தானியாவை வழக்கமாய் வாசிக்கிற இடத்தில்) முழங்கால்படியிட்டு, சொல்லவேண்டிய சங்கீதமாவது:

Miserere mei, Deus. 51. சங்கீதம்.

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்: உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி: என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்: என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்: நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்: அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

நீர் என்னை ஈசோப்பால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்: அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து: என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்: நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்: உமது பரிசுத்தஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து: உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்: பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்: அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்: அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்: தகன பலியும் உமக்குப் பிரியமானதல்ல.

தேவனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்: தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்: எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்: அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள்

மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, உம்முடைய அடியாராகிய எங்களை இரட்சியும்.
மறுமொழி: நாங்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.
குரு: உன்னதத்திலிருந்து எங்களுக்குச் சகாயத்தை அனுப்பும்.
மறுமொழி: எப்பொழுதும் எங்களை வல்லமையோடே காத்தருளும்.
குரு: எங்கள் இரட்சகராகிய தேவனே, எங்களை ஆதரியும்.
மறுமொழி: பாவிகளாகிய எங்களுக்கு உமது நாமத்தினிமித்தம் இரங்கும்; உமது நாமத்துக்கு மகிமையுண்டாக எங்களை இரட்சியும்.
குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு. ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, பாவத்தைக்குறித்து மனச்சாட்சியினால் குற்றஞ்சாட்டப்பட்ட நாங்களெல்லாரும் தேவரீர் இரக்கமாய் அருளிச்செய்யும் மன்னிப்பினால் பாவவிமோசனம் அடையும்படிக்கு, எங்கள் ஜெபங்களை இரக்கமாய்க்கேட்டு, உம்மிடத்தில் பாவங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிருக்க வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இரக்கமுள்ள பிதாவே, நீர் உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாமல் எல்லா மனிதர்மேலும் இரக்கமுள்ளவராயிருக்கிறீர்; பாவியின் மரணத்தை நீர் விரும்பாமல் அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பி இரட்சிக்கப்படுகிறதையே விரும்புகிறீர். எங்கள் குற்றங்களை இரக்கமாய் மன்னியும், பாவச்சுமையினாலே சஞ்சலப்பட்டுத் தவிக்கிற எங்களை ஏற்றுக்கொண்டு ஆறுதல் செய்யும். எப்பொழுதும் இரக்கமாயிருக்கிறது உமக்கு இலட்சணம், பாவங்களை மன்னிக்கிறது உமக்கே உரியது. நீர் மீட்டுக்கொண்ட உமது ஜனமாகிய எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே, இரங்கிப்பொறுத்தருளும்; அற்பமண்ணும் நீசப் பாவிகளுமாகிய உம்முடைய அடியார்களை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். எங்கள் அக்கிரமத்தைத் தாழ்மையாய் அறிக்கையிட்டு, பாவங்களுக்காக உண்மையாய்த் துக்கப்படுகிற எங்களை விட்டு உமது கோபத்தை விலக்கி, நாங்கள் மறுமையில் உம்மோடே என்றும் வாழ்ந்திருக்கும்படி, தேவரீர் தீவிரமாய் இம்மையில் எங்களுக்குச் சகாயஞ்செய்தருளும். எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்ல ஜனங்களுங்கூடச் சொல்லவேண்டியதாவது:

தயவுள்ள கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம். அழுகையோடும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் உம்மிடத்தில் திரும்புகிற உமது ஜனமாகிய எங்கள்மேல் கிருபையாயிரும், கிருபையாயிரும் கர்த்தாவே. நீர் இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் சம்பூரணதயவும் நிறைந்த தேவன். தண்டனைக்குப் பாத்திரராயிருக்கிற எங்கள்மேல் பொறுமையாயிருக்கிறீர். கோபங்கொள்ளுகிற காலத்திலேயும் இரக்கத்தை நினைவுகூருகிறீர். உமது ஜனத்துக்கு இரங்கிப் பொறுத்தருளும், கர்த்தாவே, இரங்கிப் பொறுத்தருளும். உம்முடைய சுதந்தரமாகிய நாங்கள் கலங்காதபடி செய்யும். உமது இரக்கம் மிகுதியாயிருப்பதினால், கர்த்தாவே, எங்களுக்குச் செவிகொடும். திரளான உமது இரக்கங்களின்படியே எங்களை நோக்கிப்பாரும். உம்முடைய குமாரனும் எங்கள் புண்ணியநாதருமாகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினிமித்தம் இதை அநுக்கிரகித்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர்மாத்திரம் சொல்வது.

கர்த்தர் நம்மை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தமது திருமுகப்பிரகாசத்தை நம்மேல் வீசச்செய்து, இப்பொழுதும் எப்பொழுதும் நமக்குச் சமாதானம் தரக்கடவர். ஆமேன்.

THE PSALMS OF DAVID.

தாவீதின் சங்கீதங்கள்.

முதலாம் தேதி.

காலை ஜெபம்.

1. சங்கீதம். *Beatus vir, qui non abiit &c.*

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய
வழியில் நில்லாமலும்: பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காரா
மலும்,
2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து: இரவும் பகலும் அவரு
டைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
3 அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனி
யைத் தந்து: இலை உதிராதிருக்கிற மரத்தைப்போல் இருப்பான்; அவன்
செய்வதெல்லாம் வாய்க்கும்.
4 துன்மார்க்கரோ அப்படி இராமல்: காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்
போல் இருக்கிறார்கள்.
5 ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும்: பாவிகள் நீதிமான்களின்
சபையிலும் நிலைநிற்பதில்லை.
6 கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்: துன்மார்க்கரின்
வழியோ அழியும்.

2. சங்கீதம். *Quare fremuerunt gentes?*

ஜாதிகள் கொந்தளித்து: ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்
பானேன்?
2 கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு
விரோதமாகவும்: பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏக
மாய் ஆலோசனைபண்ணி:
3 அவர்கள் கட்டுகளை அறுத்து: அவர்கள் கயிறுகளை நம்மை விட்டு
எறிந்துபோடுவோம் என்கிறார்கள்.

4 பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்: ஆண்டவர் அவர்களை இகழுவார்.

5 அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி: தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்.

6 நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில்: என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன் என்றார்.

7 தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்: கர்த்தர் என்னை நோக்கி, நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன்;

8 என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும்: பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்;

9 இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி: குயக் கலத்தைப்போல அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்.

10 இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள்: பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள்.

11 பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்: நடுக்கத்துடனே களிகூருங்கள்.

12 குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்: கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

3. சங்கீதம். *Domine, quid multiplicati?*

கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்: எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்.

2 தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லை என்று: என் ஆத்துமாவைக்குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்.

3 ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும்: என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.

4 நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்: அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்.

5 நான் படுத்து நித்திரைசெய்தேன், விழித்துக்கொண்டேன்: கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.

6 எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்துவருகிற: பதினாயிரம்பேருக்கும் நான் பயப்படேன்.

7 கர்த்தாவே, எழுந்தருளும்; என் தேவனே, என்னை இரட்சியும்: நீர் என் பகைஞர் எல்லாரையும் தாடையிலே அடித்து, துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப்போட்டீர்.

8 இரட்சிப்பு கர்த்தருடையது: தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக.

4. சங்கீதம். *Cum invocarem.*

என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்: நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலம் உண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

2 மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி: வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள்.

3 பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டார் என்று அறியுங்கள்: நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

4 நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்: உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்.

5 நீதியின் பலிகளைச் செலுத்தி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

6 எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்: கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

7 அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும்: அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.

8 சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்: கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.

5. சங்கீதம். *Verba mea auribus.*

கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும்: என் தியானத்தைக் கவனியும்.

2 நான் உம்மிடத்தில் விண்ணப்பம்பண்ணுவேன்: என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.

3 கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்: காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

4 நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல: தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை.

5 வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்: அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்.

6 பொய் பேசுகிறவர்களை அழிப்பீர்: இரத்தப் பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார்.

7 நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து: உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்.

8 கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி: எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.

9 அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது: அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள்.

10 தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்: அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படி செய்யும்; அவர்கள் துரோகங்களினுடைய திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும்; உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்களே.

11 உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக: நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தைச் சிநேகிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.

12 கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து: காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர்.

மாலை ஜெபம்.

6. சங்கீதம். *Domine, ne in furore.*

கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும்: உம்முடைய உக்கிரத்திலே என்னைத் தண்டியாதேயும்.

2 என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலன் அற்றுப்போனேன்: என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது.

3 என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது: கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்.

4 திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்: உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.

5 மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை: பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?

6 என் பெருமூச்சினால் இளைத்துப்போனேன்: இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்.

7 துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்துபோயிற்று: என் சத்துருக்கள் அனைவர்நிமித்தமும் மங்கிப்போயிற்று.

8 அக்கிரமக்காரரே, நீங்கள் எல்லாரும் என்னை விட்டு அகன்றுபோங்கள்: கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.

9 கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்: கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்.

10 என் பகைஞர் எல்லாரும் வெட்கி மிகவும் கலங்கிப்போவார்கள்: அவர்கள் பின்னாகத் திரும்பிச் சடிதியிலே வெட்கப்படுவார்கள்.

7. சங்கீதம். *Domine, Deus meus.*

என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

2 சத்துரு சிங்கம்போல என் ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டுபோய்: விடுவிக்கிறவன் இல்லாமையால், அதைப் பீறுதபடிக்கு என்னைத் தப்புவியும்.

3 என் தேவனாகிய கர்த்தாவே, நான் இதைச் செய்ததும்: என் கைகளில் நியாயக்கேடு இருக்கிறதும்,

4 என்னோடே சமாதானமாயிருந்தவனுக்கு நான் தீமை செய்ததும்: காரணமில்லாமல் எனக்குச் சத்துருவானவனை நான் கொள்ளையிட்டதும் உண்டானால்,

5 பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்து பிடித்து: என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்து, என் மகிமையைத் தூளிலே தாழ்த்தக்கடவன்.

6 கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, என் சத்துருக்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உம்மை உயர்த்தி, எனக்காக விழித்துக்கொள்ளும்: நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறீரே.

7 ஜனக்கூட்டம் உம்மைச் சூழ்ந்துகொள்ளும்: அவர்களுக்காகத் திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும்.

8 கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ்செய்வார்: கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும்.

9 துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும்; நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக: நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்து அறிகிறவர்.

10 செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில்: என் கேடகம் இருக்கிறது.

11 தேவன் நீதியுள்ள நியாயாதிபதி: அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்.

12 அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்: அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

13 அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார்: தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார்.

14 இதோ, அவன் அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான்: தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான்.

15 குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்: தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்.

16 அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பும்: அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும்.

17 நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து: உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

8. சங்கீதம். *Domine, Dominus noster.*

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது: உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

2 பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட: தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

3 உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும்: நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,

4 மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்: மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

5 நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்: மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

6 உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து: சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

7 ஆடுமாடுகள் எல்லாவற்றையும்: காட்டு மிருகங்களையும்,

8 ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும்: அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

9 எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே: உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!

இரண்டாம் தேதி.

காலை ஜெபம்.

9. சங்கீதம். *Confitebor tibi.*

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்: உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.

2 உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்: உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

3 என் சத்துருக்கள் பின்னாகத் திரும்பும்போது: உமது சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்துபோவார்கள்.

4 நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து: நீதியுள்ள நியாயாதிபதியாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர்.

5 ஜாதிகளைக் கடிந்துகொண்டு, துன்மார்க்கரை அழித்து: அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப்போட்டீர்.

6 சத்துருக்கள் என்றென்றைக்கும் பாழாக்கப்பட்டார்கள்: அவர்கள் பட்டணங்களை நிர்மூலமாக்கினீர்: அவர்கள் பேரும் அவர்களோடேகூட ஒழிந்துபோயிற்று.

7 கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்: தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம்பண்ணினார்.

8 அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாந்தீர்த்து: சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்.

9 சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்: நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.

10 கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை: ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.

11 சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணி: அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.

12 இரத்தப்பழிகளைக்குறித்து அவர் விசாரணைசெய்யும்போது, அவைகளை நினைக்கிறார்: சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்.

13 மரண வாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற கர்த்தாவே: நான் உம்முடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் விவரித்து, உம்முடைய இரட்சிப்பினால் களிகூரும்படிக்கு,

14 தேவரீர் எனக்கு இரங்கி: என்னைப் பகைக்கிறவர்களால் எனக்கு வரும் துன்பத்தை நோக்கிப்பாரும்.

15 ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்: அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது.

16 கர்த்தர் தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுகிறார்: துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான்.

17 துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும்: நரகத்திலே தள்ளப்படுவார்கள்.

18 எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை: சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை.

19 எழுந்தருளும் கர்த்தாவே, மனுஷன் பெலன் கொள்ளாதபடி செய்யும்: ஜாதிகள் உம்முடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படக்கடவர்கள்.

20 ஜாதிகள் தங்களை மனுஷர் என்று அறியும்படிக்கு: அவர்களுக்குப் பயம் உண்டாக்கும், கர்த்தாவே.

10. சங்கீதம். *Ut quid, Domine?*

கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்: ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருக்கிறீர்.

2 துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமையானவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான்: அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர்களே அகப்படுவார்கள்.

3 துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி: பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி, கர்த்தரை அசட்டைபண்ணுகிறான்.

4 துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்: அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லை என்பதே.

5 அவன் வழிகள் எப்போதும் கேடுள்ளவைகள்: உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது; தன் எதிராளிகள் எல்லார்மேலும் சீறுகிறான்.

6 நான் அசைக்கப்படுவதில்லை: தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லை என்று தன் இருதயத்தில் சொல்லுகிறான்.

7 அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது: அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு.

8 கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான்: திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக்கிறது.

9 தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான்: ஏழையைப் பிடிக்கப் பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறான்.

10 திக்கற்றவர்கள் தன் பலவான்கள் கையில் விழும்படி: அவன் பதுங்கிக் கிடக்கிறான்.

11 தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும்: தன் இருதயத்திலே சொல்லுகிறான்.

12 கர்த்தாவே, எழுந்தருளும்; தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்: ஏழைகளை மறவாதேயும்.

13 துன்மார்க்கன் தேவனை அசட்டைபண்ணி: நீர் கேட்டு விசாரிப்பதில்லை என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்வானேன்?

14 அதைப் பார்த்திருக்கிறீரே, உபத்திரவத்தையும் குரோதத்தையும் கவனித்திருக்கிறீரே: நீர் பதில் அளிப்பீர்; ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான்; திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே.

15 துன்மார்க்கனும் பொல்லாதவனுமாயிருக்கிறவனுடைய புயத்தை முறித்துவிடும்: அவனுடைய ஆகாமியம் காணாமற்போகுமட்டும் அதைத் தேடி விசாரியும்.

16 கர்த்தர் சதாகாலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்: புறஜாதியார் அவருடைய தேசத்திலிருந்து அழிந்துபோவார்கள்.

17 கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்: அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்.

18 மண்ணான மனுஷன் இனிப் பலவந்தஞ்செய்யத் தொடராதபடிக்கு: தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கேட்டருளுவீர்.

11. சங்கீதம். *In Domino confido.*

நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்: பின்னை ஏன் நீங்கள் என் ஆத்துமாவை நோக்கி, பட்சியைப்போல் உன் மலைக்குப் பறந்துபோ என்று சொல்லுகிறீர்கள்.

2 இதோ, துன்மார்க்கர் வில்லை வளைத்து, செம்மையான இருதயத்தார் மேல் அந்தகாரத்தில் எய்யும்படி: தங்கள் அம்புகளை நாணிலே தொடுக்கிறார்கள்.

3 அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே: நீதிமான் என்ன செய்வான்?

4 கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்: கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது; அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது.

5 கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்: துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது.

6 துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்: அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக்கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு.

7 கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்: அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.

மாலை ஜெபம்.

12. சங்கீதம். *Salvum me fac.*

இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்: உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்.

2 அவரவர் தங்கள் தோழரோடே பொய்பேசுகிறார்கள்: இச்சக உதடுகளால் இருமனதாய்ப் பேசுகிறார்கள்.

3 இச்சகம் பேசுகிற எல்லா உதடுகளையும்: பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார்.

4 அவர்கள், எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம்: எங்கள் உதடுகள் எங்களுடையது; யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள்.

5 ஏழைகள் பாழாக்கப்பட்டதினிமித்தமும், எளியவர்கள் விடும் பெருமூச்சினிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து: அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

6 கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி: புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.

7 கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பாற்றி: அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவீர்.

8 மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது: துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள்.

13. சங்கீதம். *Usque quo, Domine?*

கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர்: எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்?

2 என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனைபண்ணிக்கொண்டிருப்பேன்: எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?

3 என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்: நான் மரண நித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்.

4 அவனை மேற்கொண்டேன் என்று என் பகைஞன் சொல்லாதபடிக்கும்: நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களிகூராதபடிக்கும் இப்படிச் செய்தருளும்.

5 நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்: உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்: கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்.

14. சங்கீதம். *Dixit insipiens.*

தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லுகிறான்: அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.

2 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க: கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

3 எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்: நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

4 அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவு இல்லையோ: அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறதில்லை.

5 அங்கே அவர்கள் மிகவும் பயந்தார்கள்: தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே.

6 சிறுமையானவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்று சொல்லி: நீங்கள் அவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணினீர்கள்.

7 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக: கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

மூன்றாம் தேதி.

காலை ஜெபம்.

15. சங்கீதம். *Domine, quis habitabit?*

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்: யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?

2 உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து: மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.

3 அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும்: தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

4 ஆகாதவன் அவன் பார்வைக்குத் தாழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்: ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.

5 தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும்: குற்றம் இல்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான்.

6 இப்படிச் செய்கிறவன்: என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

16. சங்கீதம். *Conserva me, Domine.*

தேவனே, என்னைக் காப்பாற்றும்: உம்மை நம்பியிருக்கிறேன்.

2 என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்;

3 பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும்: அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய்.

4 அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்: அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.

5 கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்: என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்.

6 நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது: ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.

7 எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்: இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்.

8 கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்: அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

9 ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது: என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.

10 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்: உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.

11 ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்: உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

17. சங்கீதம். *Exaudi, Domine.*

கர்த்தாவே, நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்: கபடமில்லாத உதடுகளினின்று பிறக்கும் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடும்.

2 உம்முடைய சந்நிதியிலிருந்து என் நியாயம் வெளிப்படுவதாக: உம்முடைய கண்கள் நியாயமானவைகளை நோக்குவதாக.

3 நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்: என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்.

4 மனுஷரின் செய்கைகளைக்குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே: துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக்கொள்ளுகிறேன்.

5 என் காலடிகள் வழுவாதபடிக்கு: என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்.

6 தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்: என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும்.

7 உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே: உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும்.

8 கண்மணியைப்போல: என்னைக் காத்தருளும்.

9 என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக: உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.

10 அவர்கள் நிணந்துன்னியிருக்கிறார்கள்: தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறார்கள்.

11 நாங்கள் செல்லும் பாதைகளில் இப்பொழுது எங்களை வளைந்து கொண்டார்கள்: எங்களைத் தரையிலே தள்ளும்படி அவர்கள் கண்கள் எங்களை நோக்கிக்கொண்டிருக்கிறது.

12 பீறுகிறதற்கு ஆவலுள்ள சிங்கத்துக்கும்: மறைவிடங்களில் பதிவிருக்கிற பால சிங்கத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள்.

13 கர்த்தாவே, நீர் எழுந்திருந்து, அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும்: கர்த்தாவே, என் ஆத்துமாவைத் துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும்.

14 மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும்; அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்: அவர்கள் புத்திரபாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள்.

15 நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்: நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.

மாலை ஜெபம்.

18. சங்கீதம். *Diligam te, Domine.*

என் பெலனாகிய கர்த்தாவே: உம்மில் அன்புகூருவேன்.

2 கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும்: நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

3 துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்: அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்.

4 மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது: துர்ச்சனப் பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.

5 பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்துகொண்டது: மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தது.

6 எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்: தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.

7 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது: அவர் கோபங்கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.

8 அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது: அதனால் தழல் மூண்டது.

9 வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்: அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது.

10 கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார்: காற்றின் செட்டைகளைக்கொண்டு பறந்தார்.

11 இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்: கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக் கூடாரமாக்கினார்.

12 அவருடைய சந்நிதிப்பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று: கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது.

13 கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்: கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது.

14 தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார்: மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

15 அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும் உம்முடைய நாசியின் சுவாசக் காற்றினாலும்: தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது.

16 உயரத்திலிருந்து அவர் கை நீட்டி, என்னைப் பிடித்து: ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

17 என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும்: என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார்.

18 என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள்: கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.

19 அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து: என்மேல் பிரியமாயிருந்தபடியால், என்னைத் தப்புவித்தார்.

20 கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார்: என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

21 கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன்: நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை.

22 அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்: நான் அவருடைய பிரமாணங்களைத் தள்ளிப்போடவில்லை.

23 அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து: என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

24 ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும்: தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்குந் தக்கதாக எனக்குப் பலனளித்தார்.

25 தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும்: உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்;

26 புனிதனுக்கு நீர் புனிதராகவும்: மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் உம்மைக் காண்பிப்பீர்.

27 தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர்: மேட்டிமையான கண்களைத் தாழ்த்துவீர்.

28 தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்: என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்.

29 உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்: என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

30 தேவனுடைய வழி உத்தமமானது: கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.

31 கர்த்தரையல்லாமல் தேவன் யார்: நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்?

32 என்னைப் பலத்தால் இடைகட்டி: என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே.

33 அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி: என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

34 வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி: என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்

35 உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்: உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.

36 என் கால்கள் வழுவாதபடிக்கு: நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

37 என் சத்துருக்களைப் பின்றொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன்: அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும் திரும்பேன்.

38 அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு: என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன்.

39 யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி: என்மேல் எழும்பினவர்களை என்கீழ் மடங்கப்பண்ணினீர்.

40 நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக: என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

41 அவர்கள் கூப்பிடுகிறார்கள், அவர்களை இரட்சிப்பார் ஒருவருமில்லை: கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை.

42 நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து: தெருக்களிலுள்ள சேற்றைப்போல அவர்களை எறிந்துபோடுகிறேன்.

43 ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறீர்: நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள்.

44 அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்: அந்நியரும் எனக்கு இச்சகம்பேசி அடங்குகிறார்கள்.

45 அந்நியர் முனைவிழுந்து போய்: தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.

46 கர்த்தர் ஜீவனுள்ளவர்: என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக; என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக.

47 அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி: ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர்.

48 அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்: எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை நீர் உயர்த்தி, கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.

49 இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து: உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.

50 தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து: தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபைசெய்கிறார்.

நாலாம் தேதி.

காலை ஜெபம்.

19. சங்கீதம். *Cœli enarrant.*

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது: ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.

2 பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது: இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.

3 அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை: அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.

4 ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது: அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.

5 அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து: பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது.

6 அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறு முனைவரைக்கும் சுற்றி ஓடுகிறது: அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.

7 கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது: கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.

8 கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது: கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

9 கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது: கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

10 அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும்: தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுமாயிருக்கிறது.

11 அன்றியும் அவைகளால் உமது அடியான் எச்சரிக்கப்படுகிறான்: அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.

12 தன் பிழைகளை உணருகிறவன் யார்: மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.

13 துணிகரமான பாவங்களுக்கு உமது அடியானை விலக்கிக் காரும்: அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

14 என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே: என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

20. சங்கீதம். *Exaudiat te Dominus.*

ஆபத்து நாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக: யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.

2 அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசை அனுப்பி: சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக.

3 நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து: உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக.

4 அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி: உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.

5 நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்: உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக.

6 கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்: தமது வலதுகரஞ் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து, தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார்.

7 சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்: நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

8 அவர்கள் முறிந்து விழுந்தார்கள்: நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.

9 கர்த்தாவே, இரட்சியும்: நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக.

21. சங்கீதம். *Domini, in virtute tua.*

கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்: உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்!

2 அவருடைய மன விருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி: அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர்.

3 உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டு வந்து: அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்.

4 அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார்: நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்.

5 உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது: மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர்.

6 அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்: அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.

7 ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்: உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்.

8 உமது கை உமது சத்துருக்கள் எல்லாரையும் எட்டிப் பிடிக்கும்: உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.

9 உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர்: கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்; அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.

10 அவர்கள் கனியைப் பூமியில் இராதபடி நீர் அழித்து: அவர்கள் சந்ததியை மனுபுத்திரரில் இராதபடி ஒழியப்பண்ணுவீர்.

11 அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்லாங்கு நினைத்தார்கள்: தீவினையை எத்தனம்பண்ணினார்கள், ஒன்றும் வாய்க்காமற் போயிற்று.

12 அவர்களை இலக்காக வைத்து: உம்முடைய அம்புகளை நாணேற்றி அவர்கள் முகத்திற்கு நேரே விடுகிறீர்.

13 கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்: அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுவோம்.

மாலை ஜெபம்.

22. சங்கீதம். *Deus, Deus meus.*

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்: எனக்கு உதவிசெய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?

2 என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவு கொடீர்: இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.

3 இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற: தேவரீரே பரிசுத்தர்.

4 எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்: நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

5 உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்: உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகாதிருந்தார்கள்.

6 நானோ ஒரு புழு, மனுஷனல்ல: மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.

7 என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி: உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி,

8 கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்: இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.

9 நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்: என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர்.

10 கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்: நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

11 என்னை விட்டுத் தூரமாகாதேயும்: ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயருமில்லை.

12 அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது: பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது.

13 பீறி கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல: என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.

14 தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகள் எல்லாம் கட்டுவிட்டது: என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.

15 என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது: என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.

16 நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது: என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.

17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்: அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

18 என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு: என் உடையின் பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.

19 ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்: என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.

20 என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும்: எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்.

21 என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்: நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவிகொடுத்தருளினீர்.

22 உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து: சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.

23 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்: இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

24 உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து: தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.

25 மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்: அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

26 சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்: கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்; உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.

27 பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்: ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.

28 ராஜ்யம் கர்த்தருடையது: அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.

29 பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்துகொள்வார்கள்: புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள். ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக் கூடாதே.

30 ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்: தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.

31 அவர்கள் வந்து, அவரே இவைகளைச் செய்தார் என்று: பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

23. சங்கீதம். *Dominus regit me.*

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்: நான் தாழ்ச்சியடையேன்.

2 அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து: அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி: தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

4 நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்: தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

5 என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி: என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

6 என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்: நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

ஐந்தாம் தேதி.

காலை ஜெபம்.

24. சங்கீதம். *Domini est terra.*

பூமியும் அதின் நிறைவும்: உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.

2 அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி: அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்.

3 யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்: யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

4 கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து: தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், சபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

5 அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும்: தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.

6 இதுவே அவரைத் தேடி விசாரித்து: அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி.

7 வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்: மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.

8 யார் இந்த மகிமையின் ராஜா: அவர் வல்லமையும் பராக்கிரமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே.

9 வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்: மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.

10 யார் இந்த மகிமையின் ராஜா: அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா.

25. சங்கீதம். *Ad te, Domine, levavi.*

கர்த்தாவே, உம்மிடத்தில்: என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

2 என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்: என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழ விடாதேயும்.

3 உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்: முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்களாக.

4 கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்: உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்.

5 உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தரு ளும்: நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.

6 கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங் களையும் நினைத்தருளும்: அவைகள் அநாதிகாலமுதல் இருக்கிறதே.

7 என் இளவயதின் பாவங்களையும் என் மீறுதல்களையும் நினையாதிரும்: கர்த்தாவே, உம்முடைய தயவினிமித்தம் என்னை உமது கிருபையின் படியே நினைத்தருளும்.

8 கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்: ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.

9 சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி: சாந்தகுணமுள்ள வர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.

10 கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு: அவருடைய பாதைகளெல்லாம் கிருபை யும் சத்தியமுமானவைகள்.

11 கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது: உம்முடைய நாமத்தினிமித் தம் அதை மன்னித்தருளும்.

12 கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ: அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்.

13 அவன் ஆத்துமா நன்மையில் தங்கும்: அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும்.

14 கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக் கிறது: அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்து வார்.

15 என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது: அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்.

16 என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்: நான் தனித்தவனும் சிறு மைப்படுகிறவனுமாயிருக்கிறேன்.

17 என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கிறது: என் இடுக் கண்களுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்.

18 என் துன்பத்தையும் என் வருத்தத்தையும் பார்த்து: என் பாவங்களை யெல்லாம் மன்னித்தருளும்.

19 என் சத்துருக்களைப் பாரும்: அவர்கள் பெருகியிருந்து, உக்கிர பகை யாய் என்னைப் பகைக்கிறார்கள்.

20 என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும்: நான் வெட்கப் பட்டுப்போகாதபடி செய்யும்; உம்மை நம்பியிருக்கிறேன்.

21 உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது: நான் உமக்குக் காத்திருக்கிறேன்.

22 தேவனே, இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும்: நீங்கலாக்கி மீட்டுவிடும்.

26. சங்கீதம். *Judica me, Domine.*

கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்: நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள் ளாடுவதில்லை.

2 கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்: என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும்.

3 உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது: உம் முடைய சத்தியத்திலே நடந்துகொள்ளுகிறேன்.

4 வீணரோடே நான் உட்காரவில்லை: வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை.

5 பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன்: துன்மார்க்கரோ டே உட்காரேன்.

6 கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி: உம்மு டைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக,

7 நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி: உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன்.

8 கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும்: உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்.

9 என் ஆத்துமாவைப் பாவிகளோடும்: என் ஜீவனை இரத்தப்பிரியரோ டுங்கூட வாரிக்கொள்ளாதேயும்.

10 அவர்கள் கைகளிலே தீவினையிருக்கிறது: அவர்கள் வலதுகை பரி தானங்களால் நிறைந்திருக்கிறது.

11 நானோ என் உத்தமத்திலே நடப்பேன்: என்னை மீட்டுக்கொண்டு என்மேல் இரக்கமாயிரும்.

12 என் கால் செம்மையான இடத்திலே நிலைநிற்கிறது: சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன்.

மாலை ஜெபம்.

27. சங்கீதம். *Dominus illuminatio.*

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்: கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

2 என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க: என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்.

3 எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது: என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

4 கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்: நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

5 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து: என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

6 இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்: அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்தபலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

7 கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு: எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.

8 என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே: உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.

9 உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்: நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும்.

10 என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும்: கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.

11 கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து: என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்.

12 என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்: பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள்.

13 நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று: விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்.

14 கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்: திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

28. சங்கீதம். *Ad te, Domine.*

என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்: நீர் கேளாதவர்போல மவுனமாயிராதேயும்; நீர் மவுனமாயிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன்.

2 நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில்: என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும்.

3 அயலானுக்குச் சமாதான வாழ்த்துதலைச் சொல்லியும்: தங்கள் இருதயங்களில் பொல்லாப்பை வைத்திருக்கிற துன்மார்க்கரோடும் அக்கிரமக்காரரோடும் என்னை வாரிக்கொள்ளாதேயும்.

4 அவர்களுடைய கிரியைகளுக்கும் அவர்களுடைய நடத்தைகளின் பொல்லாங்குக்கும் தக்கதாக அவர்களுக்குச் செய்யும்: அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்கு அளியும், அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும்.

5 அவர்கள் கர்த்தருடைய செய்கைகளையும் அவர் கரத்தின் கிரியைகளையும் கவனியாதபடியால்: அவர்களை இடித்துப்போடுவார், அவர்களைக் கட்டமாட்டார்.

6 கர்த்தருக்கு ஸ்தோத்திரம்: அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்.

7 கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்: ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.

8 கர்த்தர் அவர்களுடைய பெலன்: அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்.

9 தேவரீர் உமது ஜனத்தை இரட்சித்து, உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்: அவர்களைப் போஷித்து, அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

29. சங்கீதம். *Afferte Domino.*

பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்: கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

2 கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்: பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

3 கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது: மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்; கர்த்தர் திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார்.

4 கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது: கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.

5 கர்த்தருடைய சத்தம் கேதுருமரங்களை முறிக்கிறது: கர்த்தர் லீபனோனின் கேதுருமரங்களை முறிக்கிறார்.

6 அவைகளைக் கன்றுக்குட்டிகளைப்போலவும்: லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப்போலவும் துள்ளப்பண்ணுகிறார்.

7 கர்த்தருடைய சத்தம்: அக்கினிஜுவாலைகளைப் பிளக்கும்.

8 கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்: கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறார்.

9 கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படிசெய்து, காடுகளை வெளியாக்கும்: அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.

10 கர்த்தர் ஜலப்பிரவாகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார்: கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார்.

11 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்: கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

ஆறாம் தேதி.

காலை ஜெபம்.

30. சங்கீதம். *Exaltabo te, Domine.*

கர்த்தாவே, என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல்: நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால், நான் உம்மைப் போற்றுவேன்.

2 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்: என்னை நீர் குணமாக்கினீர்.

3 கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி: நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்.

4 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி: அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.

5 அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு: சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.

6 நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று: என் வாழ்விலே சொன்னேன்.

7 கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தைத் திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர்: உமது முகத்தை நீர் மறைத்துக்கொண்டபோதோ நான் கலங்கினவனானேன்.

8 நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு: புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ?

9 கர்த்தாவே, நீர் எனக்குச் செவிகொடுத்து என்மேல் இரக்கமாயிரும்: கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்று சொல்லி;

10 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்: கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.

11 என் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாறப்பண்ணினீர்: என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம்பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்.

12 என் தேவனாகிய கர்த்தாவே: உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்.

31. சங்கீதம். *In te, Domine, speravi.*

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும், உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும்.

2 உமது செவியை எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்: நீர் எனக்குப் பலத்த துருகமும், எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும்.

3 என் கன்மலையும் என் கோட்டையும் நீரே: உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்.

4 அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கிவிடும்: தேவரீரே எனக்கு அரண்.

5 உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்: சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.

6 வீண் மாயைகளைப் பற்றிக்கொள்ளுகிறவர்களை நான் வெறுத்து: கர்த்தரையே நம்பியிருக்கிறேன்.

7 உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்: நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்தும வியாகுலங்களை அறிந்திருக்கிறீர்.

8 சத்துருவின் கையில் என்னை ஒப்புக்கொடாமல்: என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர்.

9 எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன்: துக்கத்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப் போயிற்று.

10 என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்துபோயிற்று: என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.

11 என் சத்துருக்களாகிய யாவர்நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையும், எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன்: வீதியிலே என்னைக் கண்டவர்கள் எனக்கு விலகி ஓடிப்போனார்கள்.

12 செத்தவனைப்போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன்: உடைந்த பாத்திரத்தைப்போலானேன்.

13 அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன்: எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனை பண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது; என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்.

14 நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: நீரே என் தேவன் என்று சொன்னேன்.

15 என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது: என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

16 நீர் உமது முகத்தை உமது ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணி: உமது கிருபையினாலே என்னை இரட்சியும்.

17 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்: துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாயிருக்கட்டும்.

18 நீதிமானுக்கு விரோதமாய்ப் பெருமையோடும் இகழ்ச்சியோடும் கடினமாய்ப் பேசுகிற: பொய் உதடுகள் கட்டப்பட்டுப்போவதாக.

19 உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும்: நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

20 மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து: நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்.

21 கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால்: அவருக்கு ஸ்தோத்திரம்.

22 உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன்: ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர்.

23 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்: உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார்.

24 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள்: அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

மாலை ஜெபம்.

32. சங்கீதம். *Beati, quorum.*

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ: எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.

2 எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ: எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.

3 நான் அடக்கிவைத்தமட்டும்: நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.

4 இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினாலே: என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று.

5 நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்: என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.

6 இதற்காகச் சகாயம் கிடைக்கும் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்: அப்பொழுது மிகுந்த ஜலப் பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.

7 நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து: இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்.

8 நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்: உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

9 வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய: உன் கிட்டச்சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும், கோவேறுகழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.

10 துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு: கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.

11 நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்: செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள்.

33. சங்கீதம். *Exultate, justi.*

நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்: துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும்.

2 சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதித்து: பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

3 அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்: ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.

4 கர்த்தருடைய வார்த்தை உத்தமமும்: அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.

5 அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்: பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.

6 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும்: அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது.

7 அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து: ஆழமான ஜலங்களைப் பொக்கிஷ வைப்பாக வைக்கிறார்.

8 பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக: உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.

9 அவர் சொல்ல ஆகும்: அவர் கட்டளையிட நிற்கும்.

10 கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி: ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.

11 கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும்: அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

12 கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும்: அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

13 கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப்பார்த்து: எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார்.

14 தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து: பூமியின் குடிகளெல்லார் மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்.

15 அவர்களுடைய இருதயங்களையெல்லாம் அவர் உருவாக்கி: அவர்கள் செய்கைகளையெல்லாம் கவனித்திருக்கிறார்.

16 எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான்: சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான்.

17 இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா: அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது.

18 தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை: மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்;

19 பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும்: கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.

20 நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது: அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.

21 அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால்: நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூரும்.

22 கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே: உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

34. சங்கீதம். *Benedicam Domino.*

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்: அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

2 கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்: சிறுமைப்பட்டவர்கள் அதைக் கேட்டு மகிழுவார்கள்.

3 என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்: நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

4 நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து: என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.

5 அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்: அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.

6 இந்த ஏழை கூப்பிட்டான்: கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

7 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி: அவர்களை விடுவிக்கிறார்.

8 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்: அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

9 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்: அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.

10 சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்: கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.

11 பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்: கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

12 நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி: நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?

13 உன் நாவைப் பொல்லாப்புக்கும்: உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.

14 தீமையை விட்டு விலகி, நன்மைசெய்: சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்.

15 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது: அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

16 தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண: கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

17 நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு: அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

18 நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து: நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

19 நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்: கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

20 அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்: அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.

21 தீமை துன்மார்க்கனைக் கொல்லும்: நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

22 கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்: அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றம் சுமராது.

ஏழாம் தேதி.

காலை ஜெபம்.

35. சங்கிதம். *Judica, Domine.*

கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி: என்னோடு யுத்தம் பண்ணுகிறவர்களோடே யுத்தம்பண்ணும்.

2 நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து: எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும்.

3 என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடு எதிர்த்து நின்று, ஈட்டியை யோங்கி அவர்களை மறித்து: நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.

4 என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் வெட்கப்பட்டுக் கலங்குவார்களாக: எனக்குத் தீங்குசெய்ய நினைக்கிறவர்கள் நாணமடைவார்களாக.

5 அவர்கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப்போலாவார்களாக: கர்த்தருடைய தூதன் அவர்களைத் துரத்துவானாக.

6 அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக: கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின்தொடருவானாக.

7 முகாந்தரமில்லாமல் எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்தார்கள்: முகாந்தரமில்லாமல் என் ஆத்துமாவுக்குப் படுகுழி வெட்டினார்கள்.

8 அவன் நினையாத அழிவு அவனுக்கு வரவும், அவன் மறைவாய் வைத்த வலை அவனையே பிடிக்கவும் கடவது: அவனே அந்தக் குழியில் விழுந்து அழிவானாக.

9 என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து: அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.

10 சிறுமையானவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும்: தப்புவிக்கிற உமக்கு ஒப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகள் எல்லாம் சொல்லும்.

11 கொடுமையான சாட்சிகள் எழும்பி: நான் அறியாததை என்னிடத்தில் கேட்கிறார்கள்.

12 நான் செய்த நன்மைக்குப் பதிலாக தீமை செய்கிறார்கள்: என் ஆத்துமா திக்கற்றுப்போகப் பார்க்கிறார்கள்.

13 அவர்கள் வியாதியாயிருந்தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது: நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்; என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது.

14 நான் அவனை என் சிநேகிதனாகவும் சகோதரனாகவும் பாவித்து நடந்துகொண்டேன்: தாய்க்காகத் துக்கிக்கிறவனைப்போல துக்கவஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன்.

15 ஆனாலும் எனக்கு ஆபத்து உண்டானபோது அவர்கள் சந்தோஷப்பட்டுக் கூட்டங் கூடினார்கள்: நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாய்க் கூட்டங் கூடி, ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்.

16 அப்பத்திற்காக இச்சகம் பேசுகிற பரியாசக்காரரோடே சேர்ந்துகொண்டு: என்பேரில் பற்கடிக்கிறார்கள்.

17 ஆண்டவரே, எதுவரைக்கும் இதைப் பார்த்துக்கொண்டிருப்பீர்: என் ஆத்துமாவை அழிவுக்கும், எனக்கு அருமையானதைச் சிங்கக்குட்டிகளுக்கும் தப்புவியும்.

18 மகா சபையிலே உம்மைத் துதிப்பேன்: திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்.

19 வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என்னிமித்தம் சந்தோஷியாமலும்: முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமலும் இருப்பார்களாக.

20 அவர்கள் சமாதானமாய்ப் பேசாமல்: தேசத்திலே அமைதலாயிருக்கிறவர்களுக்கு விரோதமாய் வஞ்சகமான காரியங்களைக் கருதுகிறார்கள்.

21 எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்து: ஆ ஆ, ஆ ஆ, எங்கள் கண் கண்டது என்கிறார்கள்.

22 கர்த்தாவே, நீர் இதைக் கண்டீர், மவுனமாயிராதேயும்: ஆண்டவரே, எனக்குத் தூரமாகாதேயும்.

23 என் தேவனே, என் ஆண்டவரே: எனக்கு நியாயஞ்செய்யவும் என் வழக்கைத் தீர்க்கவும் விழித்துக்கொண்டு எழுந்தருளும்.

24 என் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நீதியின்படி என்னை நியாயம் விசாரியும்: என்னைக்குறித்து அவர்களை மகிழவொட்டாதிரும்.

25 அவர்கள் தங்கள் இருதயத்திலே, ஆ ஆ, இதுவே நாங்கள் விரும்பினது என்று சொல்லாதபடிக்கும்: அவனை விழுங்கிவிட்டோம் என்று பேசாதபடிக்கும் செய்யும்.

26 எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி: எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டுகிறவர்கள் வெட்கத்தாலும் இலச்சையாலும் மூடப்படக்கடவர்கள்.

27 என் நீதி விளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து: தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கடவர்கள்.

28 என் நாவு உமது நீதியையும்: நாள்முழுதும் உமது துதியையும், சொல்லிக்கொண்டிருக்கும்.

36. சங்கீதம். *Dixit injustus.*

துன்மார்க்கனுடைய துரோகப் பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும்: அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை.

2 அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று காணப்படுமளவும்: தன் பார்வைக்கேற்றபடி தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான்.

3 அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது: புத்தியாய் நடந்துகொள்வதையும் நன்மைசெய்வதையும் விட்டுவிட்டான்.

4 அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து: நல்லதல்லாத வழியிலே நிலைத்து, பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.

5 கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது: உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தம் எட்டுகிறது.

6 உமது நீதி மகத்தான பர்வதங்கள்போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது: கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்.

7 தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது: அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.

8 உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்: உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.

9 ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது: உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.

10 உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும்: செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்.

11 பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும்: துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக.

12 அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள்: எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டு போனார்கள்.

மாலை ஜெபம்.

37. சங்கீதம். *Noli æmulari.*

பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே: நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமைகொள்ளாதே.

2 அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு: பசும் பூண்டைப்போல் வாடிப்போவார்கள்.

3 கர்த்தரை நம்பி நன்மைசெய்: தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.

4 கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.

5 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு: அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

6 உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும்: உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்.

7 கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு: காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.

8 கோபத்தைநெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு: பொல்லாப்புச்செய்யஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.

9 பொல்லாதவர்கள் அறுப்புண்டுபோவார்கள்: கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

10 இன்னும் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்: அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை.

11 சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து: மிகுந்த சமாதானத்தினாலே மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.

12 துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து: அவன் பேரில் பற்கடிக்கிறான்.

13 ஆண்டவர் அவனைப் பார்த்து நகைக்கிறார்: அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்.

14 சிறுமையும் எளிமையுமானவனை மடிவிக்கவும், செம்மை மார்க்கத்தாரை விழப்பண்ணவும்: துன்மார்க்கர் பட்டயத்தையுருவி, தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்.

15 ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம்: அவர்கள் வில்லுகள் முறியும்.

16 அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப்பார்க்கிலும்: நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது.

17 துன்மார்க்கருடைய புயங்கள் முறியும்: நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்.

18 உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்: அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.

19 அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து: பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்.

20 துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள்: கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல புகைந்துபோவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள்.

21 துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற்போகிறான்: நீதிமானோ இரங்கிக் கொடுக்கிறான்.

22 அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்: அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டுபோவார்கள்.

23 நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும்: அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

24 அவன் விழுந்தாலும் தள்ளுண்டுபோவதில்லை: கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.

25 நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்: ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.

26 அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான்: அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்.

27 தீமையை விட்டு விலகி, நன்மைசெய்: என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.

28 கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை: அவர்கள் என்றென்றைக்கும் தற்காக்கப்படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்.

29 நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு: என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.

30 நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து: அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்.

31 அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது: அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.

32 துன்மார்க்கன் நீதிமான்மேல் கண் வைத்து: அவனைக் கொல்ல வகை தேடுகிறான்.

33 கர்த்தரோ அவனை இவன் கையில் விடுவதில்லை: அவன் நியாயம் விசாரிக்கப்படுகையில் அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதுமில்லை.

34 நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்: அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டுபோவதை நீ காண்பாய்.

35 கொடிய பலவந்தவனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன்: அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சை மரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான்.

36 ஆனாலும் அவன் ஒழிந்துபோனான்; பாருங்கள், அவன் இல்லை: அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை.

37 நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு: அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.

38 அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்: அறுப்புண்டுபோவதே துன்மார்க்கரின் முடிவு.

39 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்: இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.

40 கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை விடுவிப்பார்: அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்.

எட்டாம் தேதி.

காலை ஜெபம்.

38. சங்கீதம். *Domine, ne in furore.*

கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும்: உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.

2 உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது: உமது கை என்னை இருத்துகிறது.

3 உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை: என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை.

4 என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று: அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று.

5 என் மதிகேட்டினிமித்தம்: என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது.

6 நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்: நாள்முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன்.

7 என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது: என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை.

8 நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன்: என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.

9 ஆண்டவரே, என் எங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது: என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

10 என் உள்ளம் குழம்பி அலைகிறது: என் பெலன் என்னைவிட்டு விலகி, என் கண்களின் ஒளிமுதலாய் இல்லாமற்போயிற்று.

11 என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள்: என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்.

12 என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்: எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள்முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்.

13 நானோ செவிடனைப்போலக் கேளாதவனாகவும்: ஊமையனைப்போல வாய் திறவாதவனாகவும் இருக்கிறேன்.

14 காது கேளாதவனும்: தன் வாயில் மறு உத்தரவுகள் இல்லாதவனுமாயிருக்கிற மனுஷனைப்போலானேன்.

15 கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்: என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறு உத்தரவு கொடுப்பீர்.

16 அவர்கள் என்னிமித்தம் சந்தோஷப்படாதபடிக்கு இப்படிச் சொன்னேன்: என் கால் தவறும்போதும் என்மேல் பெருமைபாராட்டுவார்களே.

17 நான் தடுமாறிவிழ எதுவாயிருக்கிறேன்: என் துக்கம் எப்பொழுதும் என் முன்பாக இருக்கிறது.

18 என் அக்கிரமத்தை நான் அறிக்கையிட்டு: என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்.

19 என் சத்துருக்கள் வாழ்ந்து பலத்திருக்கிறார்கள்: முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் பெருகியிருக்கிறார்கள்.

20 நான் நன்மையைப் பின்பற்றுகிறபடியால்: நன்மைக்குத் தீமை செய்கிறவர்கள் என்னை விரோதிக்கிறார்கள்.

21 கர்த்தாவே, என்னைக் கைவிடாதேயும்: என் தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்.

22 என் இரட்சிப்பாகிய ஆண்டவரே: எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும்.

39. சங்கீதம். *Dixi, Custodiam.*

என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து: துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தினால் அடக்கிவைப்பேன் என்றேன்.

2 நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்: ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது.

3 என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது: அப்பொழுது என் நாவினால் விண்ணப்பஞ்செய்தேன்.

4 கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி: என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்.

5 இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்: என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்.

6 வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்: ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்.

7 இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்: நீரே என் நம்பிக்கை.

8 என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும்: மூடனுடைய நிந்தைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்.

9 நீரே இதைச் செய்தீர் என்று: நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன்.

10 என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும்: உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்துபோனேன்.

11 அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது, அவன் வடிவைப் பொட்டரிப்பைப்போல் அழியப்பண்ணுகிறீர்: நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே.

12 கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்: என் பிதாக்களெல்லாரையும்போல நானும் உமக்கு முன்பாக அரதேசியும் பரதேசியுமாயிருக்கிறேன்.

13 நான் இனியிராமற்போகுமுன்னே: தேறுதலடையும்படி என்னிடத்தில் பொறுமையாயிரும்.

40. சங்கீதம். *Expectans expectavi.*

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்: அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.

2 பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து: என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி,

3 நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்: அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள்.

4 அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல்: கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்.

5 என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள்நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது: ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்.

6 பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்: சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை.

7 அப்பொழுது நான், இதோ, வருகிறேன்: புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது;

8 என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்: உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.

9 மகா சபையிலே நீதியைப் பிரசங்கித்தேன்: என் உதடுகளை மூடேன்; கர்த்தாவே, நீர் அதை அறிவீர்.

10 உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்துவைக்கவில்லை; உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்லியிருக்கிறேன்: உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடிக்கு நான் ஒளித்துவைக்கவில்லை.

11 கர்த்தாவே, நீர் உம்முடைய இரக்கங்களை எனக்குக் கிடையாமற்போகப்பண்ணாதேயும்: உமது கிருபையும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது.

12 எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்துபிடித்தது, நான் நிமிர்ந்து பார்க்கக்கூடாதிருக்கிறது: அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது, என் இருதயம் சோர்ந்துபோகிறது.

13 கர்த்தாவே, என்னை விடுவித்தருளும்: கார்த்தாவே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

14 என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி: எனக்குத் தீங்குசெய்ய விரும்புகிறவர்கள் பின்னிட்டு இலச்சையடைவார்களாக.

15 என்பேரில் ஆ ஆ! ஆ ஆ! என்று சொல்லுகிறவர்கள்: தங்கள் வெட்கத்தின் பலனையடைந்து கைவிடப்படுவார்களாக.

16 உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக: உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

17 நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்: தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்; என் தேவனே, தாமதியாதேயும்.

மாலை ஜெபம்.

41. சங்கீதம். *Beatus qui intelligit.*

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்: தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

2 கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்: அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.

3 படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்: அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்.

4 கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன்: என் ஆத்துமாவைக் குணமாக்கும் என்று நான் சொன்னேன்.

5 அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும் என்று: என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார்கள்.

6 ஒருவன் என்னைப் பார்க்கவந்தால் வஞ்சனையாய்ப் பேசுகிறான்: அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக்கொண்டு, தெருவிலே போய், அதைத் தூற்றுகிறான்.

7 என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து: எனக்கு விரோதமாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து;

8 தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது: படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள்.

9 என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும்: என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.

10 கர்த்தாவே, நீர் எனக்கு இரங்கி: நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்திருக்கப்பண்ணும்.

11 என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால்: நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன்.

12 நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி: என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்.

13 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்: ஆமென், ஆமென்.

42. சங்கீதம். *Quemadmodum.*

மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல: தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

2 என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது: நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?

3 உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால்: இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று.

4 முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடேகூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே: இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.

5 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு: அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.

6 என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது: ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.

7 உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது: உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது.

8 ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது: என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்.

9 நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி, ஏன் என்னை மறந்தீர்: சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும் என்று சொல்லுகிறேன்.

10 உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி: என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக் குத்துகிறதுபோல் இருக்கிறது.

11 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்; தேவனை நோக்கிக் காத்திரு: என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

43. சங்கீதம். *Judica me, Deus.*

தேவனே, நீர் என் நியாயத்தை விசாரித்து, பக்தியில்லாத ஜாதியாரோடு எனக்காக வழக்காடி: சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்.

2 என் அரணாகிய தேவன் நீர்; ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்: சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும்?

3 உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்: அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்துக்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவதாக.

4 அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும், எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன்: தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலத்தால் துதிப்பேன்.

5 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு: என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

ஒன்பதாம் தேதி.

காலை ஜெபம்.

44. சங்கீதம். *Deus, auribus.*

தேவனே, எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வநாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள்: அவைகளை எங்கள் காதுகளாலே கேட்டோம்.

2 தேவரீர் உம்முடைய கையினாலே ஜாதிகளைத் துரத்தி, இவர்களை நாட்டி: ஜனங்களைத் துன்பப்படுத்தி, இவர்களைப் பரவப்பண்ணினீர்.

3 அவர்கள் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக்கொள்ளவில்லை; அவர்கள் புயமும் அவர்களை இரட்சிக்கவில்லை: நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், உம்முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது.

4 தேவனே, நீர் என் ராஜா: யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும்.

5 உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே விழத்தாக்கி: எங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை உம்முடைய நாமத்தினாலே மிதிப்போம்.

6 என் வில்லை நான் நம்பேன்: என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை.

7 நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சித்து: எங்களைப் பகைக்கிறவர்களை வெட்கப்படுத்துகிறீர்.

8 தேவனுக்குள் நித்தம் மேன்மைபாராட்டுவோம்: உமது நாமத்தை என்றென்றைக்கும் துதிப்போம்.

9 நீர் எங்களைத் தள்ளிவிட்டு, நாணப்பண்ணுகிறீர்: எங்கள் சேனைகளுடனே செல்லாதிருக்கிறீர்.

10 சத்துருவுக்கு நாங்கள் இடைந்து பின்னிட்டுத் திரும்பிப்போகப் பண்ணுகிறீர்: எங்கள் பகைஞர் தங்களுக்கென்று எங்களைக் கொள்ளையிடுகிறார்கள்.

11 நீர் எங்களை ஆடுகளைப்போல இரையாக ஒப்புக்கொடுத்து: ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர்.

12 நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர்: அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாபமில்லையே.

13 எங்கள் அயலாருக்கு எங்களை நிந்தையாகவும்: எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமாகவும் வைக்கிறீர்.

14 நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கவும்: ஜனங்கள் எங்களைக்குறித்துத் தலைதுலுக்கவும் செய்கிறீர்.

15 நிந்தித்துத் தூஷிக்கிறவனுடைய சத்தத்தினிமித்தமும்: சத்துருவினிமித்தமும், பழிவாங்குகிறவனிமித்தமும்,

16 என் இலச்சை நித்தம் எனக்குமுன்பாக இருக்கிறது: என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது.

17 இவையெல்லாம் எங்கள்மேல் வந்திருந்தும், உம்மை நாங்கள் மறக்கவுமில்லை: உம்முடைய உடன்படிக்கைக்குத் துரோகம்பண்ணவுமில்லை.

18 நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள இடத்திலே நொறுக்கி; மரண இருளினாலே எங்களை மூடியிருந்தும்,

19 எங்கள் இருதயம் பின்வாங்கவுமில்லை: எங்கள் காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவுமில்லை.

20 நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து: அந்நிய தேவனை நோக்கிக் கையெடுத்திருந்தோமானால்,

21 தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ: இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே.

22 உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்: அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்.

23 ஆண்டவரே, விழித்துக்கொள்ளும்; ஏன் நித்திரைபண்ணுகிறீர்: எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்.

24 ஏன் உம்முடைய முகத்தை மறைத்து: எங்கள் சிறுமையையும் எங்கள் நெருக்கத்தையும் மறந்துவிடுகிறீர்?

25 எங்கள் ஆத்துமா புழுதிமட்டும் தாழ்ந்திருக்கிறது: எங்கள் வயிறு தரையோடு ஒட்டியிருக்கிறது.

26 எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும்: உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்.

45. சங்கீதம். *Eructavit cor meum.*

என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; நான் ராஜாவைக்குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்: என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி.

2 எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள்பொழிகிறது: ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்.

3 சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை: நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு,

4 சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும்: உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்.

5 உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள்; அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும்: ஜனசதளங்கள் உமக்குக் கீழே விழுவார்கள்.

6 தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது: உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

7 நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்: ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்.

8 தந்த அரமனைகளிலிருந்து புறப்படுகையில்: நீர் மகிழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் லவங்கம் இவைகளின் வாசனைபொருந்தியதாயிருக்கிறது.

9 உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு: ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள்.

10 குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள்: உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு.

11 அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்: அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்.

12 தீரு குமாரத்தி காணிக்கை கொண்டுவருவாள்: ஜனங்களில் ஐசுவரியவான்களும் உன் தயவை நாடி வணங்குவார்கள்.

13 ராஜகுமாரத்தி உள்ளாக பூரண மகிமையுள்ளவள்: அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது.

14 சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டு வரப்படுவாள்: அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்.

15 அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து: ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.

16 உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்: அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்.

17 உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத்துவேன்: இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் துதிப்பார்கள்.

46. சங்கீதம். *Deus noster refugium.*

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும்: ஆபத்துக்காலத்தில் அது கூலமான துணையுமானவர்.

2 ஆகையால் பூமி நிலைமாறினாலும்: மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்,

3 அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி: அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.

4 ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும்: உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.

5 தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது: அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம்பண்ணுவார்.

6 ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது: அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று.

7 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்: யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

8 பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற: கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.

9 அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்: வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.

10 நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்: ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

11 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்: யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

மாலை ஜெபம்.

47. சங்கீதம். *Omnes gentes, plaudite.*

சகல ஜனங்களே, கைகொட்டி: தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

2 உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும்: பூமியின்மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்.

3 ஜனங்களை நமக்கு வசப்படுத்தி: ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்.

4 தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை: நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார்.

5 தேவன் ஆர்ப்பரிப்போடும்: கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார்.

6 தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்: நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

7 தேவன் பூமியனைத்திற்கும் ராஜா: கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்.

8 தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறூர்: தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறூர்.

9 ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறூர்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்: அவர் மகா உன்னதமானவர்.

48. சங்கீதம். *Magnus Dominus.*

கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும்: தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்.

2 வடதிசையிலுள்ள சீயோன்பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது: அதுவே மகாராஜாவின் நகரம்.

3 அதின் அரமனைகளில்: தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறூர்.

4 இதோ, ராஜாக்கள் கூடிக்கொண்டு: ஏகமாய்க் கடந்துவந்தார்கள்.

5 அவர்கள் அதைக் கண்டபோது: பிரமித்துக் கலங்கி விரைந்தோடினூர்கள்.

6 அங்கே நடுக்கங்கொண்டு: பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயைப்போல வேதனைப்பட்டார்கள்.

7 கீழ்காற்றினூல்: தற்சீசின் கப்பல்களை நீர் உடைக்கிறீர்.

8 நாம் கேள்விப்பட்டபடியே, நமது தேவனுடைய நகரமாகிய சேனைகளுடைய கர்த்தரின் நகரத்திலே கண்டோம்: தேவன் அதை என்றென்றைக்கும் ஸ்திரப்படுத்துவார்.

9 தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே: உமது கிருபையைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேம்.

10 தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள்பரியந்தமும் விளங்குகிறது: உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது.

11 உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் சீயோன்பர்வதம் மகிழ்வதாக: யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக.

12 சீயோனைச் சுற்றி உலாவி: அதின் கொத்தளங்களை எண்ணுங்கள்.

13 பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக: அதின் அலங்கத்தைக் கவனித்து, அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்.

14 இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்: மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

49. சங்கீதம். *Audite, hæc omnes.*

ஜனங்களே, நீங்களெல்லாரும்: இதைக் கேளுங்கள்.

2 பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்களெல்லாரும்: ஏகமாய்ச் செவிகொடுங்கள்.

3 என் வாய் ஞானத்தைப் பேசும்: என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.

4 என் செவியை உவமைமொழிக்குச் சாய்த்து: என் மறைபொருளைச் சுரமண்டலத்தின்மேல் வெளிப்படுத்துவேன்.

5 என்னைத் தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளுந் தீங்குநாட்களில்: நான் பயப்படவேண்டியதென்ன?

6 தங்கள் செல்வத்தை நம்பி: தங்கள் திரளான ஐசுவரியத்தினூல் பெருமைபாராட்டுகிற,

7 ஒருவனுவது, தன் சகோதரன் அழிவைக் காணுமல்: இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி,

8 எவ்விதத்தினுலாவது அவனை மீட்டுக்கொள்ளவும்: அவனிமித்தம் மீட்கும்பொருளைத் தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே.

9 அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது: அது ஒருபோதும் முடியாது.

10 ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து: தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறூன்.

11 தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம்: அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறூர்கள்.

12 ஆகிலும் கனம்பொருந்தியவனுயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை: அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறூன்.

13 இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம்: ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக்கொள்ளுகிறூர்கள்.

14 ஆட்டுமந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறூர்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்: அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்.

15 ஆனுலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார்: அவர் என்னை ஏற்றுக்கொள்ளுவார்.

16 ஒருவன் ஐசுவரியவானுகி: அவன் வீட்டின் மகிமை பெருகும்போது, நீ பயப்படாதே.

17 அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லே: அவன் மகிமை அவனேப் பின்பற்றிச் செல்வதுமில்லே.

18 அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினுலும்: நீ உனக்கு நன்மையை நாடினுய் என்று மனுஷர் அவனேப் புகழ்ந்தாலும்,

19 அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணுதா: தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான்.

20 கனம்பொருந்தினவனுயிருந்தும் அறிவில்லாத மனுஷன்: அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறுன்.

பத்தாம் தேதி.

காலே ஜெபம்.

50. சங்கீதம். *Deus deorum.*

வல்லமையுள்ள தேவனுகிய கர்த்தர் வசனித்து: சூரியன் உதிக்குந் திசைதொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறுர்.

2 பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து: தேவன் பிரகாசிக்கிறுர்.

3 நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்: அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்.

4 அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க: உயர இருக்கும் வானங்களேயும் பூமியையும் கூப்பிடுவார்.

5 பலியினுலே என்னேடே உடன்படிக்கைபண்ணின: என்னுடைய பரிசுத்தவான்களே என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.

6 வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்: தேவனே நியாயாதிபதி.

7 என் ஜனமே, கேள், நான் பேசுவேன்: இஸ்ரவேலே, உனக்கு விரோதமாய்ச் சாட்சியிடுவேன்; நானே தேவன், உன் தேவனுயிருக்கிறேன்.

8 உன் பலிகளினிமித்தம் உன்னேக் கடிந்துகொள்ளேன்: உன் தகன பலிகள் எப்பொழுதும் எனக்கு முன்பாக இருக்கிறது.

9 உன் வீட்டிலிருந்து காளேகளேயும்: உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்களேயும் நான் வாங்கிக்கொள்வதில்லே.

10 சகல காட்டு ஜீவன்களும்: பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்.

11 மலேகளிலுள்ள பறவைகளேயெல்லாம் அறிவேன்: வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்.

12 நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்: பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே.

13 நான் எருதுகளின் மாம்சம் புசித்து: ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனே?

14 நீ தேவனுக்கு ஸ்தோத்திரப்பலியிட்டு: உன்னதமானவருக்கு உன் பொருத்தனேகளேச் செலுத்தி,

15 ஆபத்துக்காலத்தில் என்னே நோக்கிக் கூப்பிடு: நான் உன்னே விடுவிப்பேன், நீ என்னே மகிமைப்படுத்துவாய்.

16 தேவன் துன்மார்க்கனே நோக்கி: நீ என் பிரமாணங்களே எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினுல் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு.

17 சிட்சையை நீ பகைத்து: என் வார்த்தைகளே உனக்குப் பின்னுக எறிந்துபோடுகிருய்.

18 நீ திருடனேக் காணும்போது அவனேடு ஒருமித்துப்போகிருய்: விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு.

19 உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிருய்: உன் நாவு சற்பனேயைப் பிணேக்கிறது.

20 நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி: உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிருய்.

21 இவைகளே நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன்; உன்னேப் போல நானும் இருப்பேன் என்று நினேவுகொண்டாய்: ஆனுலும் நான் உன்னேக் கடிந்துகொண்டு, அவைகளே உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றுக நிறுத்துவேன்.

22 தேவனே மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள்: இல்லாவிட்டால் நான் உங்களேப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களே விடுவிப்பதில்லே.

23 ஸ்தோத்திரபலியிடுகிறவன் என்னே மகிமைப்படுத்துகிருன்: தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறுர்.

51. சங்கீதம். *Miserere mei, Deus.*

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்: உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னேச் சுத்திகரியும்.

2 என் அக்கிரமம் நீங்க என்னே முற்றிலும் கழுவி: என் பாவமற என்னேச் சுத்திகரியும்.

3 என் மீறுதல்களே நான் அறிந்திருக்கிறேன்: என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

4 தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்: நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

5 இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

6 இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்: அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

7 நீர் என்னை ஈசோப்பால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்: என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

8 நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்: அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

9 என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து: என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

10 தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்: நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

11 உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்: உமது பரிசுத்தஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

12 உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து: உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

13 அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்: பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

14 தேவனே, என்னை இரட்சிக்குந் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்: அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.

15 ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்: அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

16 பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்: தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

17 தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்: தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

18 சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்: எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

19 அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்: அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

52. சங்கீதம். *Quid gloriaris?*

பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமைபாராட்டுகிறாய்: தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது.

2 நீ கேடுகளைச் செய்ய எத்தனம்பண்ணுகிறாய்: கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போலிருக்கிறது.

3 நன்மையைப்பார்க்கிலும் தீமையையும்: யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய்.

4 கபடமுள்ள நாவே: சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய்.

5 தேவன் உன்னை என்றென்றைக்குமிராதபடி அழித்துப்போடுவார்: அவர் உன்னைப் பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார்.

6 நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து: அவனைப் பார்த்து நகைத்து,

7 இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப் பெருக்கத்தை நம்பி: தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்.

8 நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப்போலிருக்கிறேன்: தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.

9 நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்: உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.

மாலை ஜெபம்.

53. சங்கீதம். *Dixit insipiens.*

தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லுகிறான்: அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான அக்கிரமங்களைச் செய்துவருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.

2 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க: தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

3 அவர்களெல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்: நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

4 அக்கிரமக்காரருக்கு அறிவு இல்லையா? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே: அவர்கள் தேவனைத் தொழுதுகொள்ளுகிறதில்லை.

5 உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளைத்
தேவன் சிதறப்பண்ணினபடியால், பயமில்லாத இடத்தில் மிகவும் பயந்
தார்கள்: தேவன் அவர்களை வெறுத்தபடியினால் நீ அவர்களை வெட்கப்
படுத்தினாய்.

6 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு ரட்சிப்பு வருவதாக: தேவன் தம்
முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக்
களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

54. சங்கீதம். *Deus, in Nomine.*

தேவனே, உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சித்து: உமது வல்ல
மையினாலே எனக்கு நியாயஞ்செய்யும்.

2 தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு: என் வாயின் வார்த்தைக
ளுக்குச் செவிகொடும்.

3 அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்; கொடியர் என் பிரா
ணனை வாங்கத் தேடுகிறார்கள்: தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி
நோக்கார்கள்.

4 இதோ, தேவன் எனக்குச் சகாயர்: ஆண்டவர் என் ஆத்துமாவை
ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்.

5 அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவார்:
உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும்.

6 உற்சாகத்துடன் நான் உமக்குப் பலியிடுவேன்: கர்த்தாவே, உமது
நாமத்தைத் துதிப்பேன், அது நலமானது.

7 அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார்: என் கண்
என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது.

55. சங்கீதம். *Exaudi, Deus.*

தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்: என் விண்ணப்பத்திற்கு
மறைந்திராதேயும்.

2 எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச்செய்யும்: சத்துருவினு
டைய கூக்குரலினிமித்தமும், துன்மார்க்கர் செய்யும் இடுக்கத்தினிமித்த
மும் என் தியானத்தில் முறையிடுகிறேன்.

3 அவர்கள் என்மேல் பழிசாட்டி: குரோதங்கொண்டு, என்னைப்
பகைக்கிறார்கள்.

4 என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது: மரணத்திகில் என்
மேல் விழுந்தது.

5 பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது: அருக்களிப்பு என்னை
மூடிற்று.

6 அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள்
இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்.

7 நான் தூரத்தில் அலைந்து திரிந்து: வனாந்தரத்தில் தங்கியிருப்பேன்.

8 பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்ப: தீவிரித்துக்கொள்ளுவேன்
என்றேன்.

9 ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்து
போகப்பண்ணும்: கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்
டேன்;

10 அவைகள் இரவும் பகலும் அதின் மதில்கள்மேல் சுற்றித்திரிகிறது:
அக்கிரமமும் வாதையும் அதின் நடுவில் இருக்கிறது;

11 கேடுபாடுகள் அதின் நடுவில் இருக்கிறது: கொடுமையும் கபடும்
அதின் வீதியை விட்டு விலகிப்போகிறதில்லை.

12 என்னை நிந்தித்தவன் சத்துருவல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்:
எனக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டினவன் என் பகைஞனல்ல,
அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன்.

13 எனக்குச் சமமான மனுஷனும்: என் வழிகாட்டியும், என் தோழனு
மாகிய நீயே அவன்.

14 நாம் ஒருமித்து, இன்பமான ஆலோசனைபண்ணி: கூட்டத்தோடே
தேவாலயத்துக்குப் போனோம்.

15 மரணம் அவர்களைத் தொடர்ந்துபிடிப்பதாக; அவர்கள் உயிரோடே
பாதாளத்தில் இறங்குவார்களாக: அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள்
உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது.

16 நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்: கர்த்தர் என்னை இரட்சிப்
பார்.

17 அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறை
யிடுவேன்: அவர் என் சத்தத்தைக் கேட்பார்.

18 திரளான கூட்டமாய்க் கூடி என்னோடு எதிர்த்தார்கள்: அவரோ
எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவைச் சமாதானத்துடன்
மீட்டுவிட்டார்.

19 ஆதிமுதலாய் வீற்றிருக்கிற தேவன் கேட்டு, அவர்களுக்குப் பதில
ளிப்பார்: அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினால், அவர்கள் தேவனுக்
குப் பயப்படாமற்போகிறார்கள்.

20 அவன் தன்னோடே சமாதானமாயிருந்தவர்களுக்கு விரோதமாய்த்
தன் கையை நீட்டி: தன் உடன்படிக்கையை மீறிநடந்தான்.

21 அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப்போல மெதுவானவை
கள், அவன் இருதயமோ யுத்தம்: அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிரு
துவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்.

22 கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்: நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

23 தேவனே, நீர் அவர்களை அழிவின் குழியில் இறங்கப்பண்ணுவீர்; இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதி வரையிலாகிலும் பிழைத்திருக்கமாட்டார்கள்: நானோ உம்மை நம்பியிருக்கிறேன்.

பதினோராம் தேதி.

காலை ஜெபம்.

56. சங்கீதம். *Miserere mei, Deus.*

தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான்: நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.

2 என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள்: உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர்செய்கிறவர்கள் அநேகர்.

3 நான் பயப்படுகிற நாளில்: உம்மை நம்புவேன்.

4 தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்: தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?

5 நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்: எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது.

6 அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள்: என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்து வருகிறார்கள்.

7 அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ: தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும்.

8 என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்: என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கிலல்லவோ இருக்கிறது?

9 நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்: தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.

10 தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்: கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.

11 தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்: மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

12 தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது: உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன்.

13 நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி: நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?

57. சங்கீதம். *Miserere mei, Deus.*

எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்; உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது: விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.

2 எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய: உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்.

3 என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்: தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்.

4 என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது; தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன்: அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது.

5 தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்: உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.

6 என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்; என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று: எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள்.

7 என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது: நான் பாடிக் கீர்த்தனம்பண்ணுவேன்.

8 என் மகிமையே, விழி; வீணையே, சுரமண்டலமே, விழி: அதிகாலையில் விழித்துக்கொள்ளுவேன்.

9 ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்: ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

10 உமது கிருபை வானபரியந்தமும்: உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது.

11 தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்: உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.

58. சங்கீதம். *Si vere utique.*

மௌனமாயிருக்கிறவர்களே, நீங்கள் மெய்யாய் நீதியைப் பேசுவீர்களோ: மனுபுத்திரரே, நியாயமாய்த் தீர்ப்புசெய்வீர்களோ?

2 மனதார நியாயக்கேடு செய்கிறீர்கள்: பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக்கொடுக்கிறீர்கள்.

3 துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார்கள்: தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் பொய்சொல்லி வழிதப்பிப்போகிறார்கள்.

4 சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம்: அவர்களில் இருக்கிறது.

5 பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாதபடிக்கு: தன் காதையடைக்கிற செவிட்டு விரியனைப்போல் இருக்கிறார்கள்.

6 தேவனே, அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும்: கர்த்தாவே, பால சிங்கங்களின் கடைவாய்ப்பற்களை நொறுக்கிப்போடும்.

7 கடந்தோடுகிற தண்ணீரைப்போல அவர்கள் கழிந்துபோகட்டும்: அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகக்கடவது.

8 கரைந்துபோகிற நத்தையைப்போல் ஒழிந்துபோவார்களாக: ஸ்திரீயின் முதிராப்பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக.

9 முள்நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே: பச்சையானதையும் எரிந்துபோனதையும் அவர் சுழல்காற்றினால் அடித்துக்கொண்டுபோவார்.

10 பழிவாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான்: அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான்.

11 அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும்: மெய்யாய்ப் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.

மாலை ஜெபம்.

59. சங்கீதம். *Eripe me de inimicis.*

என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்: என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.

2 அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து: இரத்தப்பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கி இரட்சியும்.

3 இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள்: கர்த்தாவே, என்னிடத்தில் மீறுதலும் பாவமும் இல்லாதிருந்தும், பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள்.

4 என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும், ஓடித்திரிந்து யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள்: எனக்குத் துணைசெய்ய விழித்து, என்னை நோக்கிப் பாரும்.

5 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலின் தேவனே, நீர் சகல ஜாதிகளையும் விசாரிக்க விழித்தெழும்பும்: வஞ்சகமாய்த் துரோகஞ்செய்கிற ஒருவருக்கும் தயைசெய்யாதேயும்.

6 அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து: நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.

7 இதோ, தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள்: அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் இருக்கிறது, கேட்கிறவன் யார் என்கிறார்கள்.

8 ஆனாலும் கர்த்தாவே, நீர் அவர்களைப் பார்த்து நகைப்பீர்: புறஜாதிகள் யாவரையும் இகழுவீர்.

9 அவன் வல்லமையை நான் கண்டு, உமக்குக் காத்திருப்பேன்: தேவனே, எனக்கு உயர்ந்த அடைக்கலம்.

10 என் தேவன் தம்முடைய கிருபையினாலே என்னைச் சந்திப்பார்: தேவன் என் சத்துருக்களுக்கு வரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார்.

11 அவர்களைக் கொன்றுபோடாதேயும், என் ஜனங்கள் மறந்துபோவார்களே: எங்கள் கேடகமாகிய ஆண்டவரே, உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடித்து, அவர்களைத் தாழ்த்திப்போடும்.

12 அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவமாயிருக்கிறது: அவர்கள் இட்ட சாபமும் சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக.

13 தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும்பொருட்டு, அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும்: இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும்.

14 அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து: நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.

15 அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து: திருப்தியடையாமல் முறுமுறுத்துக்கொண்டிருப்பார்கள்.

16 நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்: எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்.

17 என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்: தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், என் கிருபையுள்ள தேவனுமாயிருக்கிறார்.

60. சங்கீதம். *Deus repulisti nos.*

தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களைச் சிதறடித்தீர், எங்கள்மேல் கோபமாயிருந்தீர்: மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும்.

2 பூமியை அதிரப்பண்ணி, அதை வெடிப்பாக்கினீர்: அதின் வெடிப்புகளைப் பொருந்தப்பண்ணும்; அது அசைகின்றது.

3 உம்முடைய ஜனங்களுக்குக் கடினமான காரியத்தைக் காண்பித்தீர்: தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.

4 சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக: உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர்.

5 உமது பிரியர் விடுவிக்கப்படும்படி: உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எனக்குச் செவிகொடுத்தருளும்.

6 தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்: சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்துகொள்ளுவேன்.

7 கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது: எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.

8 மோவாப் என் பாதபாத்திரம், ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன்: பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள்.

9 அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டுபோகிறவர் யார்: ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?

10 எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீர் அல்லவோ: எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீர் அல்லவோ?

11 இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும்: மனுஷனுடைய உதவி விருதா.

12 தேவனாலே பராக்கிரமம் செய்வோம்: அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.

61. சங்கீதம். *Exaudi, Deus.*

தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு: என் விண்ணப்பத்தைக் கவனியும்.

2 என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.

3 நீர் எனக்கு அடைக்கலமும்: சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.

4 நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன்: உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன்.

5 தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்: உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.

6 ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்: அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்.

7 அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்: தயையும் உண்மையும் அவரைத் தற்காக்கக் கட்டளையிடும்.

8 இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக: உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம்பண்ணுவேன்.

பன்னிரண்டாம் தேதி.

காலை ஜெபம்.

62. சங்கீதம். *Nonne Deo?*

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது: அவரால் என் இரட்சிப்பு வரும்.

2 அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்: நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.

3 நீங்கள் எதுவரைக்கும் ஒரு மனுஷனுக்குத் தீங்குசெய்ய நினைப்பீர்கள்: நீங்கள் அனைவரும் சங்கரிக்கப்படுவீர்கள், சாய்ந்த மதிலுக்கும் இடிந்த சுவருக்கும் ஒப்பாவீர்கள்.

4 அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளும்படிக்கே அவர்கள் ஆலோசனைபண்ணி, அபத்தம்பேச விரும்புகிறார்கள்: தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள்.

5 என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு: நான் நம்புகிறது அவராலே வரும்.

6 அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்: நான் அசைக்கப்படுவதில்லை.

7 என் இரட்சிப்பும் என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது: பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.

8 ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்: தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.

9 கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே: தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்கள்.

10 கொடுமையை நம்பாதிருங்கள்; கொள்ளையினால் பெருமைபாராட்டாதிருங்கள்: ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.

11 தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்: வல்லமை தேவனுடையது என்பதே.

12 கிருபை உம்முடையது: ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்.

63. சங்கீதம். *Deus, Deus meus.*

தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்: வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.

2 இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து: உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.

3 ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது: என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

4 என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து: உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.

5 நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்: என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்.

6 என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது: இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.

7 நீர் எனக்குத் துணையாயிருந்ததினால்: உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.

8 என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது: உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.

9 என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ: பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள்.

10 அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்: நரிகளுக்கு இரையாவார்கள்.

11 ராஜாவோ தேவனில் களிகூருவார்; அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்: பொய்பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

64. சங்கீதம். *Exaudi, Deus.*

தேவனே, என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும்: சத்துருவால் வரும் பயத்தை நீக்கி, என் பிராணனைக் காத்தருளும்.

2 துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கும்: அக்கிரமக்காரருடைய கலகத்துக்கும் என்னை விலக்கி மறைத்தருளும்.

3 அவர்கள் தங்கள் நாவைப்: பட்டயத்தைப்போல் கூர்மையாக்கி;

4 மறைவுகளில் உத்தமன்மேல் எய்யும்பொருட்டுக் கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள்: சற்றும் பயமின்றிச் சடுதியில் அவன்மேல் எய்கிறார்கள்.

5 அவர்கள் பொல்லாத காரியத்தில் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டு: மறைவான கண்ணிகளை வைக்க ஆலோசனைபண்ணி, அவைகளைக் காண்பவன் யார் என்கிறார்கள்.

6 அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம் பண்ணுகிறார்கள்: அவர்களில் ஒவ்வொருவனுடைய உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருக்கிறது.

7 ஆனாலும் தேவன் அவர்கள்மேல் அம்புகளை எய்வார்: சடுதியாய் அவர்கள் காயப்படுவார்கள்.

8 அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்: அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள்.

9 எல்லா மனுஷரும் பயந்து: தேவனுடைய செயலை அறிவித்து, அவர் கிரியையை உணர்ந்துகொள்வார்கள்.

10 நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்: செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்.

மாலை ஜெபம்.

65. சங்கீதம். *Te decet hymnus.*

தேவனே, *சீயோனில் உமக்காகத் துதியானது அமைந்து காத்திருக்கிறது: பொருத்தனை உமக்குச் செலுத்தப்படும்.

2 ஜெபத்தைக் கேட்கிறவரே: மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.

3 அக்கிரம விஷயங்கள் என்மேல் மிஞ்சி வல்லமை கொண்டது: தேவரீரோ எங்கள் மீறுதல்களை நிவிர்த்தியாக்குகிறீர்.

4 உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்: உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.

5 பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலுமுள்ளவர்களெல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருக்கிற எங்கள் இரட்சிப்பின் தேவனே: நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிறதினால் எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர்.

6 வல்லமையை இடைகட்டிக்கொண்டு: உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி,

7 சமுத்திரங்களின் மும்முரத்தையும், அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும்: ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்.

8 கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங்களினிமித்தம் பயப்படுகிறார்கள்: காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்.

9 தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்: இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர்.

10 அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து: அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.

11 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்: உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

12 வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது: மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது.

13 மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது: பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது; அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது.

66. சங்கீதம். *Jubilate Deo.*

பூமியின் குடிகளே: நீங்களெல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

2 அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி: அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்.

3 தேவனை நோக்கி, உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர்: உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்.

4 பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்: அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள்.

5 தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்: அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்கும் கிரியையில் பயங்கரமானவர்.

6 கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்: ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்.

7 அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்: அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது; துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக.

8 ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து: அவரைத் துதிக்கும் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள்.

9 அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல்: நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.

10 தேவனே, எங்களைச் சோதித்தீர்: வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களைப் புடமிட்டீர்.

11 எங்களை வலையில் அகப்படுத்தி: எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தைப் போட்டீர்.

12 மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப் பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்: செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்.

13 சர்வாங்க தகனபலிகளோடே: உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்.

14 என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து: என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.

15 ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன்: காளைகளையும் செம்மறியாட்டுக்கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன்.

16 தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்களெல்லாரும் வந்து கேளுங்கள்: அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்.

17 அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன்: என் நாவினால் அவர் புகழப்பட்டார்.

18 என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால்: ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

19 மெய்யாய்த் தேவன் எனக்குச் செவிகொடுத்தருளினார்: என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.

20 என் ஜெபத்தைத் தள்ளாமலும்: தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

67. சங்கீதம். *Deus misereatur.*

தேவனே, பூமியில் உம்முடைய வழியும்: எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,

2 தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து: உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

3 தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

4 தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்: ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக் கடவர்கள்.

5 தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

6 பூமி தன் பலனைத் தரும்: தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

7 தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்: பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பதின்மூன்றும் தேதி.

காலை ஜெபம்.

68. சங்கீதம். *Exurgat Deus.*

தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு: அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

2 புகை பறக்கடிக்கப்படுவதுபோல அவர்களைப் பறக்கடிப்பீர்: மெழுகு அக்கினிக்குமுன் உருகுவதுபோல துன்மார்க்கர் தேவனுக்குமுன் அழிவார்கள்.

3 நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து: ஆனந்த சந்தோஷம் அடைவார்கள்.

4 தேவனைப் பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருடைய நாமம் யேகோவா, அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்.

5 தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும்: விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.

6 தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்: துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்.

7 தேவனே, நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று: அவாந்தரவெளியிலே நடந்துவருகையில்,

8 பூமி அதிர்ந்தது, தேவனாகிய உமக்கு முன்பாக வானமும் பொழிந்தது: இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற தேவனுக்கு முன்பாகவே இந்தச் சீனாய்மலையும் அசைந்தது.

9 தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்: இளைத்துப் போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர்.

10 உம்முடைய மந்தை அதிலே தங்கியிருந்தது: தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்.

11 ஆண்டவர் வசனம் தந்தார்: அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி.

12 சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடினார்கள்: வீட்டிலிருந்த ஸ்திரீயானவள் கொள்ளைப்பொருளைப் பங்கிட்டாள்.

13 நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும்: வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.

14 சர்வவல்லவர் அதில் ராஜாக்களைச் சிதறடித்தபோது: அது சல்மோன் மலையின் உறைந்த மழைபோல் வெண்மையாயிற்று.

15 தேவபர்வதம் பாசான் பர்வதம்போலிருக்கிறது: பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது.

16 உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள்; இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்கத் தேவன் விரும்பினார்: ஆம், கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

17 தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது: ஆண்டவர் பரிசுத்தஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்.

18 தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்: தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்.

19 எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக: நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே.

20 நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்: ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு.

21 மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்களின் சிரசையும்: தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்.

22 உன் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும்: உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும்,

23 என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்துவருவேன்: அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்துவருவேன் என்று ஆண்டவர் சொன்னார்.

24 தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள்: என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள்.

25 முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும்: சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள்.

26 இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே: சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

27 அங்கே அவர்களை ஆளுகிற சின்ன பென்யமீனும், யூதாவின் பிரபுக்களும்: அவர்கள் கூட்டமும், செபுலோனின் பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்களும் உண்டு.

28 உன் தேவன் உனக்குப் பலத்தைக் கட்டளையிட்டார்: தேவனே, நீர் எங்கள் நிமித்தம் உண்டுபண்ணினதைத் திடப்படுத்தும்.

29 எருசலேமிலுள்ள உம்முடைய ஆலயத்தினிமித்தம்: ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்.

30 நாணலிலுள்ள மிருககூட்டத்தையும், ஜனங்களாகிய கன்றுகளோடு கூட ரிஷபகூட்டத்தையும் அதட்டும்: ஒவ்வொருவனும் வெள்ளிப்பணங்களைக் கொண்டுவந்து பணிந்துகொள்ளுவான்; யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதறடிப்பார்.

31 பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்: எத்தியோப்பியா தேவனை நோக்கி கையெடுக்கத் தீவிரிக்கும்.

32 பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடி: ஆண்டவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

33 ஆதிமுதலாயிருக்கிற வானாதி வானங்கள்மேல் எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்: இதோ, தமது சத்தத்தைப் பலத்த சத்தமாய் முழங்கப் பண்ணுகிறார்.

34 தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள்: அவருடைய மகிமை இஸ்ரவேலின்மேலும், அவருடைய வல்லமை மேகமண்டலங்களிலும் உள்ளது.

35 தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்: இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்; தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

மாலை ஜெபம்.

69. சங்கீதம். *Salvum me fac.*

தேவனே, என்னை இரட்சியும்: வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது.

2 ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன், நிற்க நிலையில்லை: நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன், வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது.

3 நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன், என் தொண்டை வறண்டுபோயிற்று: என் தேவனுக்கு நான் காத்திருக்கையால், என் கண்கள் பூத்துப் போயிற்று.

4 நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்: வீணாக எனக்குச் சத்துருக்களாகி என்னைச் சங்கரிக்கவேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள், நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்கவேண்டியதாயிற்று.

5 தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்: என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை.

6 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்களாக: இஸ்ரவேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக.

7 உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்: இலச்சை என் முகத்தை மூடிற்று.

8 என் சகோதரருக்கு வேற்று மனுஷனும்: என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்.

9 உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.

10 என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்: அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது.

11 இரட்டை என் உடுப்பாக்கினேன்: அப்பொழுதும் அவர்களுக்குப் பழமொழியானேன்.

12 வாசலில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்: மதுபானம்பண்ணுகிறவர்களின் பாடலானேன்.

13 ஆனாலும் கர்த்தாவே, அநுக்கிரககாலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்: தேவனே, உமது மிகுந்த கிருபையினாலும் உமது இரட்சிப்பின் சத்தியத்தினாலும் எனக்குச் செவிகொடுத்தருளும்.

14 நான் அமிழ்ந்திப்போகாதபடிக்குச் சேற்றினின்று என்னைத் தூக்கிவிடும்: என்னைப் பகைக்கிறவர்களினின்றும் நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும்படி செய்யும்.

15 ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமலும், ஆழம் என்னை விழுங்காமலும்: பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமலும் இருப்பதாக.

16 கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், உம்முடைய தயை நலமாயிருக்கிறது: உமது உருக்கமான இரக்கங்களின்படி என்னைக் கடாட்சித்தருளும்.

17 உமது முகத்தை உமது அடியானுக்கு மறையாதேயும்: நான் வியாகுலப்படுகிறேன், எனக்குத் தீவிரமாய்ச் செவிகொடுத்தருளும்.

18 நீர் என் ஆத்துமாவினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும்: என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்.

19 தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர்: என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்கள்.

20 நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது, நான் மிகவும் வேதனைப்படுகிறேன்: எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனுமில்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்.

21 என் ஆகாரத்தில் கசப்புக்கலந்து கொடுத்தார்கள்: என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.

22 அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும்: அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது.

23 அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது: அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்.

24 உம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றும்: உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்துபிடிப்பதாக.

25 அவர்கள் வாசஸ்தலம் பாழாகக்கடவது: அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போவதாக.

26 தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப்படுத்தி: நீர் காயப்படுத்தினவர்களை நோகப்பேசுகிறார்களே.

27 அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தை அவர்கள்மேல் சுமத்தும்: அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக.

28 ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக: நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக.

29 நானோ சிறுமையும் துயரமுமுள்ளவன்: தேவனே, உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.

30 தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து: அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன்.

31 கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப்பார்க்கிலும்: இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.

32 சாந்தகுணமுள்ளவர்கள் இதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்; தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்.

33 கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார்: கட்டுண்டதம்முடையவர்களை அவர் புறக்கணியார்.

34 வானமும் பூமியும் சமுத்திரங்களும்: அவைகளில் சஞ்சரிக்கிற யாவும் அவரைத் துதிக்கக்கடவது.

35 தேவன் சீயோனை இரட்சித்து, யூதாவின் பட்டணங்களைக் கட்டுவார்: அப்பொழுது அங்கே குடியிருந்து அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

36 அவருடைய ஊழியக்காரரின் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்: அவருடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் அதில் வாசமாயிருப்பார்கள்.

70. சங்கீதம். *Deus in adjutorium.*

தேவனே, என்னை விடுவியும்: கர்த்தாவே, எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும்.

2 என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கி நாணுவார்களாக: எனக்குத் தீங்குவரும்படி விரும்புகிறவர்கள் பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக.

3 ஆ ஆ, ஆ ஆ, என்பவர்கள்: தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப்போவார்களாக.

4 உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக: உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

5 நானோ சிறுமையும் எளிமையுமானவன்; தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும்: நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர்; கர்த்தாவே, தாமதியாதேயும்.

பதினாலாம் தேதி.

காலைஜெபம்.

71. சங்கீதம். *In te, Domine, speravi.*

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.

2 உம்முடைய நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்: உம்முடைய செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.

3 நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்: என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாயிருக்கிறீர்.

4 என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும்: நியாயக்கேடும் கொடுமையும் உள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.

5 கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும்: என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.

6 நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்: என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.

7 அநேகருக்கு நான் ஒரு புதுமைபோலானேன்: நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.

8 என் வாய் உமது துதியினாலும்: நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.

9 முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும்: என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலுமிரும்.

10 என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி: என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி,

11 தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்: அவனை விடுவிப்பாரில்லை என்கிறார்கள்.

12 தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்: என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

13 என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும்: எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவுங்கடவர்கள்.

14 நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து: மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

15 என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்: அவைகளின் தொகையை நான் அறியேன்.

16 கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்: உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.

17 தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்: இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.

18 இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும் வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும்: முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும்வரைக்கும் என்னைக் கைவிடீராக.

19 தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது: பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?

20 அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து: திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.

21 என் மேன்மையைப் பெருகப்பண்ணி: என்னை மறுபடியும் தேற்றுவீர்.

22 என் தேவனே, நான் வீணையைக்கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்: இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக்கொண்டு உம்மைப் பாடுவேன்.

23 நான் பாடும்போது என் உதடுகளும்: நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.

24 எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால்: நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.

72. சங்கீதம். *Deus, judicium.*

தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும்: ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும்.

2 அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும்: உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்.

3 பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும்: மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.

4 ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து: ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்.

5 சூரியனும் சந்திரனும் உள்ளமட்டும்: அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள்.

6 புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும்: பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார்.

7 அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்: சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.

8 ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும்: நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்.

9 வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள்: அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.

10 தர்சிசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்: ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள்.

11 சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்: சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.

12 கூப்பிடுகிற எளியவனையும்: உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.

13 பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி: எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.

14 அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்: அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்.

15 அவர் பிழைத்திருப்பார், ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்: அவர்நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார்.

16 பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒருபிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும்: அதின் விளைவு லீபனோனைப்போல அசையும்; பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்.

17 அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்; சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும்: மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.

18 இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக: அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.

19 அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக: பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்.

மாலை ஜெபம்.

73. சங்கீதம். *Quam bonus Israel!*

சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு: தேவன் நல்லவராகவே இருக்கிறார்.

2 ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும்: என் அடிகள் சறுக்குதலுக்கும், சற்றே தப்பிற்று.

3 துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில்: வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன்.

4 மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை: அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது.

5 நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள்: மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.

6 ஆகையால் பெருமை சரப்பணியைப்போல அவர்களைச் சுற்றிக்கொள்ளும்: கொடுமை ஆடையைப்போல அவர்களை மூடிக்கொள்ளும்.

7 அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது: அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.

8 அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்: இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்.

9 தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசுகிறார்கள்: அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது.

10 ஆகையால் அவருடைய ஜனங்கள் இந்த வழியாகவே திரும்புகிறார்கள்: தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்துவரும்.

11 தேவனுக்கு அது எப்படித் தெரியும்: உன்னதமானவருக்கு அதைப்பற்றி அறிவு உண்டோ என்று சொல்லுகிறார்கள்.

12 இதோ, இவர்கள் துன்மார்க்கர்: இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.

13 நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி: குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்.

14 நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும்: காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்.

15 இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் சொன்னேனானால்: இதோ, உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்.

16 இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்: நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து,

17 அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும்: அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.

18 நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி: பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்.

19 அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்: பயங்கரங்களாலே அழிந்து நிர்மூலமாகிறார்கள்.

20 நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழியுமாப்போல: ஆண்டவரே, நீர் விழிக்கும்போது, அவர்கள் வேஷத்தை இகழுவீர்.

21 இப்படியாக என் மனம் கசந்தது: என் உள்ளிந்திரியங்களிலே குத்துண்டேன்.

22 நான் காரியம் அறியாத மூடனானேன்: உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்.

23 ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்: என் வலது கையைப் பிடித்துத் தாங்குகிறீர்.

24 உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி: முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

25 பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு: பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பம் இல்லை.

26 என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது: தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.

27 இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்: உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர்.

28 எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்: நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

74. சங்கீதம். *Ut quid, Deus?*

தேவனே, நீர் எங்களை என்றென்றைக்கும் ஏன் தள்ளிவிடுகிறீர்: உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது?

2 நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும்: நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும்.

3 நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப்பண்ணும்: பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப்போட்டான்.

4 உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கர்ச்சித்து: தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள்.

5 கோடரிகளை ஓங்கி: சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர் பெற்றவனானான்.

6 இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும்: வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப்போடுகிறார்கள்.

7 உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி: உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டும் இடித்து, அசுத்தப்படுத்தினார்கள்.

8 அவர்களை ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி: தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப்போட்டார்கள்.

9 எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம்: தீர்க்கதரிசியும் இல்லை; இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடத்தில் இல்லை.

10 தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்: பகைவன் உமது நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ?

11 உமது வலதுகரத்தை ஏன் முடக்கிக்கொள்ளுகிறீர்: அதை உமது மடியிலிருந்து எடுத்து ஓங்கி நிர்மூலமாக்கும்.

12 பூமியின் நடுவில் இரட்சிப்புகளைச் செய்துவருகிற தேவன்: பூர்வகாலமுதல் என்னுடைய ராஜா.

13 தேவரீர் உமது வல்லமையினால் சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து: ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலைகளை உடைத்தீர்.

14 தேவரீர் முதலைகளின் தலைகளை நருக்கிப்போட்டு: அதை வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தீர்.

15 ஊற்றையும் ஆற்றையும் பிளந்துவிட்டீர்: மகா நதிகளையும் வற்றிப் போகப்பண்ணினீர்.

16 பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது: தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர்.

17 பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம்பண்ணினீர்: கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர்.

18 கர்த்தாவே, சத்துரு உம்மை நிந்தித்ததையும்: மதியீன ஜனங்கள் உமது நாமத்தைத் தூஷித்ததையும் நினைத்துக்கொள்ளும்.

19 உமது காட்டுப்புறாவின் ஆத்துமாவைத் துஷ்டருடைய கூட்டத்திற்கு ஒப்புக்கொடாதேயும்: உமது ஏழைகளின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும்.

20 உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும்: பூமியின் இருளான இடங்கள் கொடுமைக் குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறதே.

21 துன்பப்பட்டவன் வெட்கத்தோடே திரும்பவிடாதிரும்: சிறுமையும் எளிமையுமானவன் உமது நாமத்தைத் துதிக்கும்படி செய்யும்.

22 தேவனே, எழுந்தருளும், உமக்காக நீரே வழக்காடும்: மதியீனனாலே நாடோறும் உமக்கு வரும் நிந்தையை நினைத்துக்கொள்ளும்.

23 உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும்: உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் அமளி எப்பொழுதும் அதிகரிக்கிறது.

பதினைந்தாம் தேதி.

காலை ஜெபம்.

75. சங்கீதம். *Confitebimur tibi.*

உம்மைத் துதிக்கிறோம், தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது.

2 நியமிக்கப்பட்ட காலத்திலே: யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்.

3 பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்துபோகிறது: அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன்.

4 வீம்புக்காரரை நோக்கி, வீம்பு பேசாதேயுங்கள் என்றும்: துன்மார்க்கரை நோக்கி, கொம்பை உயர்த்தாதிருங்கள் என்றும் சொன்னேன்.

5 உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள்: இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள்.

6 கிழக்கிலும் மேற்கிலும்: வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது.

7 தேவனே நியாயாதிபதி: ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.

8 கலங்கிப் பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது, அதிலிருந்து வார்க்கிறார்: பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்.

9 நானோ என்றென்றைக்கும் இதை அறிவித்து: யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

10 துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப்போடுவேன்: நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும்.

76. சங்கீதம். *Notus in Judæa.*

யூதாவில் தேவன் அறியப்பட்டவர்: இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது.

2 சாலேமில் அவருடைய கூடாரமும்: சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது.

3 அங்கேயிருந்து வில்லின் அம்புகளையும்: கேடகத்தையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் முறித்தார்.

4 மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப்பார்க்கிலும்: நீர் பிரகாசமுள்ளவர்.

5 தைரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்ளையிடப்பட்டு, நித்திரையடைந்து அசந்தார்கள்: வல்லமையுள்ள எல்லா மனுஷருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று.

6 யாக்கோபின் தேவனே, உம்முடைய கண்டிதத்தினால்: இரதங்களும் குதிரைகளும் உறங்கி விழுந்தது.

7 நீர், நீரே, பயங்கரமானவர்: உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்?

8 நியாயம் விசாரிக்கவும் பூமியில் சிறுமைப்பட்டவர்கள் யாவரையும் இரட்சிக்கவும்: தேவரீர் எழுந்தருளினபோது,

9 வானத்திலிருந்து நியாயத்தீர்ப்புக் கேட்கப்பண்ணினீர்: பூமி பயந்து அமர்ந்தது.

10 மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்: மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்.

11 பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்: அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள்.

12 பிரபுக்களின் ஆவியை அடக்குவார்: பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர்.

77. சங்கீதம். *Voce mea ad Dominum.*

நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன்: என் சத்தத்தைத் தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார்.

2 என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்: இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது; என் ஆத்துமா ஆறுதலடைந்துகொள்ளாமற்போயிற்று.

3 நான் தேவனை நினைத்தபோது அலறினேன்: நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோயிற்று.

4 நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர்: நான் பேசமாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன்.

5 பூர்வநாட்களையும்: ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன்.

6 இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து: என் இருதயத்தோடே சம்பாஷித்துக்கொள்ளுகிறேன்; என் ஆவி ஆராய்ச்சி செய்தது.

7 ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ: இனி ஒருபோதும் தயைசெய்யாதிருப்பாரோ?

8 அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ: வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ?

9 தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ: கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ என்றேன்.

10 அப்பொழுது நான், இது என் பலவீனம்: ஆனாலும் உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்.

11 கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன்: உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்;

12 உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து: உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்.

13 தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது: நம்முடைய தேவனைப்போலப் பெரிய தேவன் யார்?

14 அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே: ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணினீர்.

15 யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் புத்திரராகிய உம்முடைய ஜனங்களை: உமது புயத்தினாலே மீட்டுக்கொண்டீர்.

16 ஜலங்கள் உம்மைக் கண்டது; தேவனே, ஜலங்கள் உம்மைக் கண்டு தத்தளித்தது: ஆழங்களும் கலங்கினது.

17 மேகங்கள் ஜலங்களைப் பொழிந்தது, ஆகாயமண்டலங்கள் முழக்கமிட்டது: உம்முடைய அம்புகளும் தெறிப்புண்டு பறந்தது.

18 உம்முடைய குமுறலின் சத்தம் சுழல்காற்றில் முழங்கினது: மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி குலுங்கி அதிர்ந்தது.

19 உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது: உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று.

20 மோசே ஆரோன் என்பவர்களின் கையால்: உமது ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப்போல வழிநடத்தினீர்.

மாலை ஜெபம்.

78. சங்கீதம். *Attendite, popule.*

என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்: என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள்.

2 என் வாயை உவமைகளால் திறப்பேன்: பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்.

3 அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்: எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

4 பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல்: கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்.

5 அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து: அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்.

6 இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு: அவர்கள் எழும்பி, தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்;

7 தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து: தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்;

8 இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும்: இவைகளைக் கட்டளையிட்டார்.

9 ஆயுதமணிந்த வில்வீரரான எப்பிராயீம் புத்திரர்: யுத்தநாளிலே முதுகு காட்டினார்கள்.

10 அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும்: அவருடைய கட்டளைகளின்படி நடக்கச் சம்மதியாமலும்,

11 அவருடைய செயல்களையும்: அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்.

12 அவர்களுடைய பிதாக்களுக்கு முன்பாக: எகிப்துதேசத்துச் சோவான் வெளியிலே, அவர் அதிசயமானவைகளைச் செய்தார்.

13 கடலைப் பிளந்து, அவர்களைக் கடக்கப்பண்ணி: ஜலத்தைக் குவியலாக நிற்கும்படி செய்தார்.

14 பகலிலே மேகத்தினாலும்: இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார்.

15 வனாந்தரத்திலே கன்மலைகளைப் பிளந்து: மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்.

16 கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி: தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார்.

17 என்றாலும், அவர்கள் பின்னும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து: வறண்ட வெளியிலே உன்னதமானவருக்குக் கோபம்மூட்டினார்கள்.

18 தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு: தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சைபார்த்தார்கள்.

19 அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பேசி: தேவன் வனாந்தரத்திலே
போஜனபந்தியை ஆயத்தப்படுத்தக்கூடுமோ?

20 இதோ, அவர் கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு,
நதிகளாய்ப் புரண்டுவந்தது: அவர் அப்பத்தையும் கொடுக்கக்கூடுமோ,
தம்முடைய ஜனத்திற்கு மாம்சத்தையும் ஆயத்தப்படுத்துவாரோ என்றார்
கள்.

21 ஆகையால் கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார்: அவர்கள்
தேவன்பேரில் விசுவாசியாமலும், அவர் இரட்சிப்பை நம்பாமலும்போன
தினால்,

22 யாக்கோபுக்கு விரோதமாய அக்கினி பற்றியெரிந்தது: இஸ்ரவே
லுக்கு விரோதமாய்க் கோபமூண்டது.

23 அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு: வானத்தின்
கதவுகளைத் திறந்து,

24 மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி: வானத்
தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.

25 தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்: அவர்களுக்கு
ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்.

26 ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி: தம்முடைய வல்லமையி
னாலே தென்றலையும் வீசச்செய்து,

27 மாம்சத்தைத் தூளத்தனையாயும்: சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை
மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணி,

28 அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவிலும்: அவர்கள் கூடாரங்க
ளைச் சுற்றிலும் இறங்கப்பண்ணினார்.

29 அவர்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள்: அவர்கள் இச்சித்ததை
அவர்களுக்குக் கொடுத்தார்.

30 அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை: அவர்களுடைய
போஜனம் அவர்கள் வாயில் இருக்கும்போதே,

31 தேவகோபம் அவர்கள்மேல் எழும்பி, அவர்களில் கொழுத்தவர்க
ளைச் சங்கரித்து: இஸ்ரவேலில் விசேஷித்தவர்களை மடியப்பண்ணிற்று.

32 இவையெல்லாம் நடந்தும், அவர் செய்த அதிசயங்களை அவர்கள்
நம்பாமல்: பின்னும் பாவஞ்செய்தார்கள்.

33 ஆனதால் அவர்கள் நாட்களை விருதாவிலும்: அவர்கள் வருஷங்க
ளைப் பயங்கரத்திலும் கழியப்பண்ணினார்.

34 அவர்களை அவர் கொல்லும்போது, அவரைக்குறித்து விசாரித்து:
அவர்கள் திரும்பிவந்து தேவனை அதிகாலமே தேடி;

35 தேவன் தங்கள் கன்மலையென்றும்: உன்னதமான தேவன் தங்கள்
மீட்பர் என்றும் நினைவுகூர்ந்தார்கள்.

36 ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம் பேசி:
தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய்சொன்னார்கள்.

37 அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை: அவருடைய
உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை.

38 அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள்
அக்கிரமத்தை மன்னித்தார்: அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்
பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார்;

39 அவர்கள் மாம்சமென்றும்: திரும்பிவராமல் அகலுகிற காற்றென்றும்
நினைவுகூர்ந்தார்.

40 எத்தனைதரமோ வனாந்தரத்திலே அவருக்குக் கோபமூட்டி: அவாந்
தரவெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள்!

41 அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சைபார்த்து: இஸ்ரவேலின் பரி
சுத்தரை மட்டுப்படுத்தினார்கள்.

42 அவருடைய கரத்தையும்: அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி
மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள்.

43 அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும்: சோவான்
வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார்.

44 அவர்களுடைய நதிகளை இரத்தமாக மாற்றி: அவர்களுடைய ஆறு
களிலுள்ள ஜலத்தைக் குடிக்கக்கூடாதபடி செய்தார்.

45 அவர்களை அழிக்கும்படி வண்டுஜாதிகளையும்: அவர்களைக் கெடுக்
கும்படி தவளைகளையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்.

46 அவர்களுடைய விளைச்சலைப் புழுக்களுக்கும்: அவர்களுடைய பிர
யாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தார்.

47 கல்மழையினால் அவர்களுடைய திராட்சச்செடிகளையும்: ஆலாங்
கட்டியினால் அவர்களுடைய அத்திமரங்களையும் அழித்து,

48 அவர்களுடைய மிருகஜீவன்களைக் கல்மழைக்கும்: அவர்கள் ஆடு
மாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார்.

49 தமது உக்கிரமான கோபத்தையும், மூர்க்கத்தையும், சினத்தையும்,
உபத்திரவத்தையும்: தீங்குசெய்யும் தூதர்களையும் அவர்களுக்குள்ளே
அனுப்பினார்.

50 அவர் தம்முடைய கோபத்துக்கு வழிதிறந்து, அவர்கள் ஆத்துமா
வை மரணத்துக்கு விலக்கிக் காவாமல்: அவர்கள் ஜீவனைக் கொள்ளைநோய்
க்கு ஒப்புக்கொடுத்தார்.

51 எகிப்திலே தலைச்சன்கள் அனைத்தையும்: காமின் கூடாரங்களிலே
அவர்களுடைய பெலனில் முதற்பலனான யாவரையும் அழித்து;

52 தம்முடைய ஜனங்களை ஆடுகளைப்போல புறப்படப்பண்ணி: அவர்
களை வனாந்தரத்திலே மந்தையைப்போல கூட்டிக்கொண்டுபோய்;

53 அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழிநடத்தினார்: அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப்போட்டது.

54 அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும்: தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வதமட்டுக்கும் அழைத்துக்கொண்டு வந்து,

55 அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டு, தேசத்தை நூல்போட்டுப் பங்கிட்டு: அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார்.

56 ஆனாலும் அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சைபார்த்து: அவருக்குக் கோபம்மூட்டி, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற்போய்,

57 தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகி, துரோகம்பண்ணி: மோசம்போக்கும் வில்லைப்போல் துவண்டு,

58 தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபம்மூட்டி: தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள்.

59 தேவன் அதைக் கேட்டு உக்கிரமாகி: இஸ்ரவேலை மிகவும் வெறுத்து,

60 தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய: சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை நெகிழ்ந்து,

61 தமது பலத்தைச் சிறையிருப்புக்கும்: தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்கொடுத்து,

62 தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி: தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார்.

63 அவர்கள் வாலிபரை அக்கினி பட்சித்தது: அவர்கள் கன்னியாஸ்திரீகள் வாழ்க்கைப்படாதிருந்தார்கள்.

64 அவர்களுடைய ஆசாரியர்கள் பட்டயத்தால் விழுந்தார்கள்: அவர்களுடைய விதவைகள் அழவில்லை.

65 அப்பொழுது ஆண்டவர் நித்திரைதெளிந்தவனைப்போலவும்: திராட்சரசத்தால் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப்போலவும் விழித்து,

66 தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடித்து: அவர்களுக்கு நித்திய நிந்தையை வரப்பண்ணினார்.

67 அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்: எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்துகொள்ளாமல்,

68 யூதா கோத்திரத்தையும்: தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார்.

69 தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப்போலவும்: என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியைப்போலவும் கட்டினார்.

70 தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு: ஆட்டுத்தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார்.

71 கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும்: தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக அழைத்துக்கொண்டுவந்தார்.

72 இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து: தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்.

பதினாறும் தேதி.

காலை ஜெபம்.

79. சங்கீதம். *Deus, venerunt.*

தேவனே, புறஜாதியார் உமது சுதந்தரத்தில் வந்து: உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, எருசலேமை மண்மேடுகளாக்கினார்கள்.

2 உமது ஊழியக்காரரின் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும்: உமது பரிசுத்தவான்களின் மாம்சத்தைப் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுத்தார்கள்.

3 எருசலேமைச் சுற்றிலும் அவர்களுடைய இரத்தத்தைத் தண்ணீரைப்போலச் சிந்தினார்கள்: அவர்களை அடக்கம்பண்ணுவாருமில்லை.

4 எங்கள் அயலாருக்கு நிந்தையும்: எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமானோம்.

5 எதுவரைக்கும் கர்த்தாவே, நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ: உம்முடைய எரிச்சல் அக்கினியைப்போல எரியுமோ?

6 உம்மை அறியாத ஜாதிகள்மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்கள்மேலும்: உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்.

7 அவர்கள் யாக்கோபைப் பட்சித்து: அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்களே.

8 பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும்: உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக; நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போனோம்.

9 எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிசெய்து: உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்.

10 அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்: உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குதல் ஜாதிகளுக்குள்ளே எங்கள் கண்களுக்கு முன்பாக விளங்கும்படிசெய்யும்.

11 கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்: கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடே காத்தருளும்.

12 ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை: எழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும்.

13 அப்பொழுது, உம்முடைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என்றென்றைக்கும் புகழுவோம்: தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லிவருவோம்.

80. சங்கீதம். *Qui regis Israel.*

இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல நடத்துகிறவரே, செவிகொடும்: கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்.

2 எப்பிராயீம் பென்யமீன் மனாசே என்பவர்களுக்கு முன்பாக: நீர் உமது வல்லமையை எழுப்பி, எங்களை இரட்சிக்க வந்தருளும்.

3 தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்: அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

4 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே: உமது ஜனத்தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்.

5 கண்ணீராகிய அப்பத்தை அவர்களுக்குப் போஜனமாகவும்: மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகவும் கொடுத்தீர்.

6 எங்கள் அயலாருக்கு எங்களை வழக்காக வைக்கிறீர்: எங்கள் சத்துருக்கள் எங்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

7 சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்: அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

8 நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து: ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்.

9 அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்: அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது.

10 அதின் நிழலால் மலைகளும்: அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது.

11 அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும்: தன் கிளைகளை நதிமட்டாகவும் படரவிட்டது.

12 இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக: அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்?

13 காட்டுப்பன்றி அதை உழுதுபோடுகிறது: வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது.

14 சேனைகளின் தேவனே, திரும்பிவாரும்: வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து, இந்தத் திராட்சச்செடியை விசாரித்தருளும்;

15 உம்முடைய வலதுகரம் நாட்டின கொடியையும்: உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும்.

16 அது அக்கினியால் சுடப்பட்டும் வெட்டுண்டும் போயிற்று: உம்முடைய முகத்தின் பயமுறுத்தலால் அழிந்துபோகிறார்கள்.

17 உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும்: உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன்மீதிலும் இருப்பதாக.

18 அப்பொழுது உம்மை விட்டுப் பின்வாங்கமாட்டோம்: எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம்.

19 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்: உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

81. சங்கீதம். *Exultate Deo.*

நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி: யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரியுங்கள்.

2 தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து: சங்கீதம் பாடுங்கள்.

3 மாதப்பிறப்பிலும், நியமித்த காலத்திலும், நம்முடைய பண்டிகை நாட்களிலும்: எக்காளம் ஊதுங்கள்.

4 இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும்: யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது.

5 நாம் அறியாத பாஷையைக் கேட்ட எகிப்துதேசத்தை விட்டுப் புறப்படுகையில்: இதை யோசேப்பிலே சாட்சியாக ஏற்படுத்தினார்.

6 அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன்: அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது.

7 நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன்: இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உனக்கு உத்தரவு அருளினேன்; மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச்சோதித்து அறிந்தேன்.

8 என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன்: இஸ்ரவேலே, நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும்.

9 உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்கவேண்டாம்: அந்நிய தேவனை நீ நமஸ்கரிக்கவும்வேண்டாம்.

10 உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே: உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்.

11 என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை: இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை.

12 ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்: தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்.

13 ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து: இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்!

14 நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி: என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்.

15 அப்பொழுது கர்த்தனைப் பகைக்கிறவர்கள் அவருக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்: அவர்களுடைய காலம் என்றென்றைக்கும் இருக்கும்.

16 உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்: கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்.

மாலை ஜெபம்.

82. சங்கீதம். *Deus stetit.*

தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்: தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்.

2 எதுவரைக்கும் நீங்கள் அநியாயத் தீர்ப்புச் செய்து: துன்மார்க்கருக்கு முகதாட்சணியம்பண்ணுவீர்கள்.

3 ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து: சிறுமையானவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்.

4 பலவீனனையும் எளியவனையும் விடுவித்து: துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்.

5 அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்: தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது.

6 நீங்கள் தேவர்கள் என்றும்: நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்.

7 ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து: லோகப் பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்.

8 தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்: நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்.

83. சங்கீதம். *Deus, quis similis?*

தேவனே, மவுனமாயிராதேயும், பேசாமலிராதேயும்: தேவனே, சும்மாயிராதேயும்.

2 இதோ, உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து: உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள்.

3 உமது ஜனத்துக்கு விரோதமாக உபாயதந்திரங்களை யோசித்து: உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள்.

4 அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக: அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்.

5 இப்படி, ஏதோமின் கூடாரத்தாரும்: இஸ்மவேலரும், மோவாபியரும் ஆகாரியரும்,

6 கேபாலரும், அம்மோனியரும், அமலேக்கியரும்: தீருவின் குடிகளோடு கூடிய பெலிஸ்தரும்,

7 ஏக மன நிர்ணயமாய் ஆலோசனை செய்து: உமக்கு விரோதமாய் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

8 அசீரியரும் அவர்களோடேகூடக் கலந்து: லோத்தின் புத்திரருக்குப் புயபலமானார்கள்.

9 மீதியானியருக்குச் செய்ததுபோலவும்: கீசோன் என்னும் ஆற்றண்டை எந்தோரிலே அழிக்கப்பட்டு,

10 நிலத்துக்கு எருவாய்ப்போன சிசெரா யாபீன் என்பவர்களுக்குச் செய்ததுபோலவும்: அவர்களுக்குச் செய்யும்.

11 அவர்களையும் அவர்கள் அதிபதிகளையும் ஓரேபுக்கும் சேபுக்கும்: அவர்கள் பிரபுக்களையெல்லாம் சேபாவுக்கும் சல்முனாவுக்கும் சமமாக்கும்.

12 தேவனுடைய வாசஸ்தலங்களை எங்களுக்குச் சுதந்தரமாக: நாங்கள் கட்டிக்கொள்வோம் என்று சொல்லுகிறார்களே.

13 என் தேவனே, அவர்களைச் சுழல்காற்றின் புழுதிக்கும்: காற்றுமுகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும்.

14 நெருப்புக் காட்டைக் கொளுத்துவதுபோலவும்: அக்கினிஜுவாலைகள் மலைகளை எரிப்பதுபோலவும்,

15 நீர் உமது புசலினாலே அவர்களைத் தொடர்ந்து: உமது பெருங்காற்றினாலே அவர்களைக் கலங்கப்பண்ணும்.

16 கர்த்தாவே, அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு: அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும்.

17 யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே: பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி,

18 அவர்கள் என்றைக்கும் வெட்கிக் கலங்கி: நாணமடைந்து அழிந்துபோவார்களாக.

84. சங்கீதம். *Quam dilecta!*

சேனைகளின் கர்த்தாவே: உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!

2 என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிராகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது: என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.

3 என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும்: தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே.

4 உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள்.

5 உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும்: தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.

6 அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்: மழையும் குளங்களை நிரப்பும்.

7 அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து: சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்.

8 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்: யாக்கோபின் தேவனே, செவிகொடும்.

9 எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும்: நீர் அபிஷேகம்பண்ணினவரின் முகத்தைப் பாரும்.

10 ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரேநாள் நல்லது: ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்வேன்.

11 தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்: கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.

12 சேனைகளின் கர்த்தாவே: உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

85. சங்கீதம். *Benedixisti, Domine.*

கர்த்தாவே, உமது தேசத்தின்மேல் பிரியம் வைத்து: யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்.

2 உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து: அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர்.

3 உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு: உமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினீர்.

4 எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்: எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும்.

5 என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ: தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ?

6 உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி: நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?

7 கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து: உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

8 கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்: அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.

9 நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி: அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

10 கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்: நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.

11 சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்: நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்.

12 கர்த்தர் நன்மையானதைத் தருவார்: நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.

13 நீதி அவருக்கு முன்னாகச் சென்று: அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்.

பதினேழாம் தேதி.

காலை ஜெபம்.

86. சங்கீதம். *Inclina, Domine.*

கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்: நான் சிறுமையும் எளிமையுமானவன்.

2 என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பக்தியுள்ளவன்: என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும்.

3 ஆண்டவரே, எனக்கு இரங்கும்: நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

4 உமது அடியானுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும்: ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

5 ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும்: உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.

6 கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து: என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.

7 நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்: நீர் என்னைக் கேட்டருளுவீர்.

8 ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை: உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை.

9 ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து: உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்.

10 தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்: நீர் ஒருவரே தேவன்.

11 கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்: நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.

12 என் தேவனாகிய ஆண்டவரே, உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து: உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்.

13 நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது: என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்.

14 தேவனே, அகங்காரிகள் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்: கொடுமைக்காரராகிய கூட்டத்தார் என் பிராணனை வாங்கத்தேடுகிறார்கள், உம்மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காதிருக்கிறார்கள்.

15 ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும்: பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்.

16 என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்: உமது வல்லமையை உமது அடியேனுக்கு அருளி, உமது அடியாளின் குமாரனை இரட்சியும்.

17 கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு: எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும்.

87. சங்கீதம். *Fundamenta ejus.*

அவர் அஸ்திபாரம்: பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது.

2 கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப் பார்க்கிலும்: சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார்.

3 தேவனுடைய நகரமே: உன்னைக்குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும்.

4 என்னை அறிந்தவர்களுக்குள்ளே ராகாபையும் பாபிலோனையுங்குறித்துப் பேசுவேன்: இதோ, பெலிஸ்தியரிலும், தீரியரிலும், எத்தியோப்பியரிலுங்கூட, இன்னான் அங்கே பிறந்தான் என்றும்;

5 சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்: உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார்.

6 கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது: இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார்.

7 எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது என்று: பாடுவாரும் ஆடுவாரும் ஏகமாய்ச் சொல்லுவார்கள்.

88. சங்கீதம். *Domine Deus.*

என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே: இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

2 என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக: என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்.

3 என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது: என் ஜீவன் பாதாளத்திற்குச் சமீபமாய் வந்திருக்கிறது.

4 நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண்ணப்பட்டு: பெலனற்ற மனுஷனைப்போலானேன்.

5 மரித்தவர்களில் ஒருவனைப்போல நெகிழப்பட்டிருக்கிறேன்: நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, உமது கையால் அறுப்புண்டுபோய்ப் பிரேதக் குழிகளிலே கிடக்கிறவர்களைப் போலானேன்.

6 என்னைப் பாதாளக் குழியிலும்: இருளிலும் ஆழங்களிலும் வைத்தீர்.

7 உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது: உம்முடைய அலைகள் எல்லாவற்றினாலும் என்னை வருத்தப்படுத்துகிறீர்.

8 எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கி, அவர்களுக்கு என்னை அருவருப்பாக்கினீர்: நான் வெளியே புறப்படக்கூடாதபடி அடைபட்டிருக்கிறேன்.

9 துக்கத்தினால் என் கண் தொய்ந்துபோயிற்று: கர்த்தாவே, அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்.

10 மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ: செத்துப்போன வீரர் எழுந்து உம்மைத் துதிப்பார்களோ?

11 பிரேதக்குழியில் உமது கிருபையும்: அழிவில் உமது உண்மையும் விவரிக்கப்படுமோ?

12 இருளில் உமது அதிசயங்களும்: மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ?

13 நானோ கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்: காலையிலே என் விண்ணப்பம் உமக்கு முன்பாக வரும்.

14 கர்த்தாவே, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர்: ஏன் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர்?

15 சிறுவயதுமுதல் நான் சிறுமைப்பட்டவனும் மாண்டுபோகிறவனுமாயிருக்கிறேன்: உம்மால் வரும் திகில்கள் என்மேல் சுமந்திருக்கிறது, நான் மனங்கலங்குகிறேன்.

16 உம்முடைய எரிச்சல்கள் என்மேல் புரண்டுபோகிறது: உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம்பண்ணுகிறது.

17 அவைகள் நாடோறும் தண்ணீரைப்போல என்னைச் சூழ்ந்து: ஏகமாய் என்னை வளைந்துகொள்ளுகிறது.

18 சிநேகிதனையும் தோழனையும் எனக்குத் தூரமாக விலக்கினீர்: எனக்கு அறிமுகமானவர்கள் மறைந்துபோனார்கள்.

மாலை ஜெபம்.

89. சங்கீதம். *Misericordias Domini.*

கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்: உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்.

2 கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும்: உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர் என்றேன்.

3 என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கைபண்ணி: என் தாசனாகிய தாவீதை நோக்கி,

4 என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி: தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன் என்றீர்.

5 கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும்: பரிசுத்தவான்களின் சபையிலே உம்முடைய உண்மையும் விளங்கும்.

6 ஆகாயமண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்: பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்?

7 தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர்: தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்.

8 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல வல்லமையுள்ள கர்த்தர் யார்: உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது.

9 தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர்: அதின் அலைகள் எழும்பும்போது அவைகளை அடங்கப்பண்ணுகிறீர்.

10 நீர் ராகாபை வெட்டுண்ட ஒருவனைப்போல நொறுக்கினீர்: உமது வல்லமையான புயத்தினால் உம்முடைய சத்துருக்களைச் சிதறடித்தீர்.

11 வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது: பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்.

12 வடக்கையும் தெற்கையும் நீர் உண்டாக்கினீர்: தாபோரும் எர்மோனும் உம்முடைய நாமம் விளங்கக் கெம்பீரிக்கும்.

13 உமக்கு வல்லமையுள்ள புயம் இருக்கிறது: உம்முடைய கரம் பராக்கிரமமுள்ளது; உம்முடைய வலதுகரம் உன்னதமானது.

14 நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்: கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.

15 கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்: கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்.

16 அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து: உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள்.

17 நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்: உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும்.

18 கர்த்தரால் எங்கள் கேடகமும்: இஸ்ரவேலின் பரிசுத்தரால் எங்களுடைய ராஜாவும் உண்டு.

19 அப்பொழுது நீர் உம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகி: சகாயஞ்செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான்மேல் வைத்து, ஜனத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவனை உயர்த்தினேன்.

20 என் தாசனாகிய தாவீதைக் கண்டுபிடித்தேன்: என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன்.

21 என் கை அவனோடே உறுதியாயிருக்கும்: என் புயம் அவனைப் பலப்படுத்தும்.

22 சத்துரு அவனை நெருக்குவதில்லை: நியாயக்கேட்டின் மகன் அவனை ஒடுக்குவதில்லை.

23 அவன் சத்துருக்களை அவனுக்கு முன்பாக மடங்கடித்து: அவனைப் பகைக்கிறவர்களை வெட்டுவேன்.

24 என் உண்மையும் என் கிருபையும் அவனோடிருக்கும்: என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும்.

25 அவன் கையைச் சமுத்திரத்தின்மேலும்: அவன் வலதுகரத்தை ஆறுகள்மேலும் ஆளும்படி வைப்பேன்.

26 அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலையென்று சொல்லுவான்.

27 நான் அவனை எனக்கு முதற்பேறானவனும்: பூமியின் ராஜாக்களைப்பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்.

28 என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்: என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.

29 அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும்: அவன் ராஜாசனம் வானங்களுள்ளமட்டும் நிலைநிற்கவும் செய்வேன்.

30 அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல்: என் வேதத்தை விட்டு விலகி;

31 என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல்: என் நியமங்களை மீறி நடந்தால்;

32 அவர்கள் மீறுதலை மிலாறினாலும்: அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன்.

33 ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும்: என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன்.

34 என் உடன்படிக்கையை மீறாமலும்: என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.

35 ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன்: தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்.

36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்: அவன் ராஜாசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

37 சந்திரனைப்போல அது என்றென்றைக்கும் உறுதியாயும்: ஆகாய மண்டலத்துச் சாட்சியைப்போல உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர்.

38 ஆனாலும் நீர் எங்களை வெறுத்துத் தள்ளிவிட்டீர்: நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்மேல் உக்கிரமானீர்.

39 உமது அடியானுடன் நீர் பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டு: அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமானப்படுத்தினீர்.

40 அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப்போட்டு: அவன் அரணான ஸ்தலங்களைப் பாழாக்கினீர்.

41 வழிநடக்கிற யாவரும் அவனைக் கொள்ளையிடுகிறார்கள்: தன் அயலாருக்கு நிந்தையானான்.

42 அவன் சத்துருக்களின் வலதுகையை நீர் உயர்த்தி: அவன் விரோதிகள் யாவரும் சந்தோஷிக்கும்படி செய்தீர்.

43 அவன் பட்டயத்தின் கருக்கை மழுக்கிப்போட்டு: அவனை யுத்தத்தில் நிற்காதபடி செய்தீர்.

44 அவன் மகிமையை அற்றுப்போகப்பண்ணி: அவன் ராஜாசனத்தைத் தரையிலே தள்ளினீர்.

45 அவன் வாலிப நாட்களைக் குறுக்கி: அவனை வெட்கத்தால் மூடினீர்.

46 எதுவரைக்கும், கர்த்தாவே? நீர் என்றைக்கும் மறைந்திருப்பீரோ: உமது கோபம் அக்கினியைப்போல எரியுமோ?

47 என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்: மனுபுத்திரர் யாவரையும் வீணாகச் சிருஷ்டிக்கவேண்டியதென்ன?

48 மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்: தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார்?

49 ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக்கொண்டு: சத்தியம்பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே?

50 ஆண்டவரே, உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஊழியக்காரரையும்: நீர் அபிஷேகம்பண்ணினவனின் காலடிகளையும் நிந்திக்கிறபடியினாலே,

51 கர்த்தாவே, உமது அடியார் சுமக்கும் நிந்தையையும்: வலுமையான ஜனங்களெல்லாராலும் நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும்.

52 கர்த்தருக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென், ஆமென்.

பதினெட்டாம் தேதி.

காலை ஜெபம்.

90. சங்கீதம். *Domine, refugium.*

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக: எங்களுக்கு அடைக்கலமானவர்.

2 பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும்: நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

3 நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி: மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

4 உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும்: இராச்சாமம்போலவும். இருக்கிறது.

5 அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர்: நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

6 அது காலையிலே முளைத்துப் பூத்து: மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

7 நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து: உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம்.

8 எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும்: எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

9 எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது: ஒரு கதையைப்போல எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

10 எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே: அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

11 உமது கோபத்தின் வல்லமையையும்: உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்?

12 நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி: எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

13 கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்: உமது அடியாருக்காகப் பரிதபியும்.

14 நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி: காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

15 தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்: நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய், எங்களை மகிழ்ச்சியாக்கும்.

16 உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும்: உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.

17 எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக: எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

91. சங்கீதம். *Qui habitat.*

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்: சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

2 நான் கர்த்தரை நோக்கி, நீர் என் அடைக்கலம், என் கோட்டை: என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

3 அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும்: பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.

4 அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்: அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

5 இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்: பகலில் பறக்கும் அம்புக்கும்,

6 இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்: மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

7 உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும்: அது உன்னை அணுகாது.

8 உன் கண்களால்மாத்திரம் நீ அதைப் பார்த்து: துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை: உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.

10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது: வாதை உன் கூடாரத்தை அணுகாது.

11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி: உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

12 உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு: அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.

13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து: பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்.

14 அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்: என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்: ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

16 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி: என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

92. சங்கீதம். *Bonum est confiteri.*

கர்த்தரைத் துதிப்பதும்: உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும்,

2 பத்துநரம்பு வீணையினாலும் தம்புருவினாலும்: தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும்,

3 காலையிலே உமது கிருபையையும்: இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.

4 கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்: உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.

5 கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்: உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

6 மிருககுணமுள்ள மனுஷன் அதை அறியான்: மூடன் அதை உணரான்.

7 துன்மார்க்கர் புல்லைப்போலே தழைத்து, அக்கிரமக்காரர் யாவரும் செழிக்கும்போது: அது அவர்கள் என்றென்றைக்கும் அழிந்துபோவதற்கே ஏதுவாகும்.

8 கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும்: உன்னதமானவராயிருக்கிறீர்.

9 கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள், உமது சத்துருக்கள் அழிந்தேபோவார்கள்: சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டுபோவார்கள்.

10 என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்: புது எண்ணெயால் அபிஷேகம்பண்ணப்படுகிறேன்.

11 என் சத்துருக்களுக்கு நேரிடுவதை என் கண் காணும்: எனக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்கு நேரிடுவதை என் காது கேட்கும்.

12 நீதிமான் பனையைப்போல் செழித்து: லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.

13 கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்: எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள்.

14 கர்த்தர் உத்தமரென்றும்: என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி,

15 அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து: புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.

மாலை ஜெபம்.

93. சங்கீதம். *Dominus, regnavit.*

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்துகொண்டிருக்கிறார்: கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்; ஆதலால் பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது.

2 உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது: நீர் அநாதியாயிருக்கிறீர்.

3 கர்த்தாவே, நதிகள் எழும்பின; நதிகள் இரைச்சலிட்டு எழும்பின: நதிகள் அலைதிரண்டு எழும்பின.

4 திரளான தண்ணீர்களின் இரைச்சலைப்பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப்பார்க்கிலும்: கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர்.

5 உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள்: கர்த்தாவே, பரிசுத்தமானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது.

94. சங்கீதம். *Deus ultionum.*

நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே: நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும்.

2 பூமியின் நியாயாதிபதியே, நீர் எழுந்து: பெருமைக்காரருக்குப் பதிலளியும்.

3 கர்த்தாவே, துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்து: துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்?

4 எதுவரைக்கும் அக்கிரமக்காரர் யாவரும் வாயாடி: கடினமாய்ப்பேசி, பெருமைபாராட்டுவார்கள்?

5 கர்த்தாவே, அவர்கள் உமது ஜனத்தை நொறுக்கி: உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள்.

6 விதவையையும் பரதேசியையும் கொன்று: திக்கற்ற பிள்ளைகளைக் கொலைசெய்து:

7 கர்த்தர் பாரார்: யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள்.

8 ஜனத்தில் மிருகக்குணமுள்ளவர்களே, உணர்வடையுங்கள்: மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்கள்?

9 காதை உண்டாக்கினவர் கேளாரோ: கண்ணை உருவாக்கினவர் காணாரோ?

10 ஜாதிகளைத் தண்டிக்கிறவர் கடிந்துகொள்ளாரோ: மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ?

11 மனுஷனுடைய யோசனைகள் வீணென்று: கர்த்தர் அறிந்திருக்கிறார்.

12 கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும்வரைக்கும்: நீர் தீங்குநாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி,

13 சிட்சித்து: உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.

14 கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழாமலும்: தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.

15 நியாயம் நீதியினிடமாகத் திரும்பும்: செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள்.

16 துன்மார்க்கருக்கு விரோதமாய் என் பட்சத்தில் எழும்புகிறவன் யார்: அக்கிரமக்காரருக்கு விரோதமாய் என் பட்சத்தில் நிற்பவன் யார்?

17 கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால்: என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம்பண்ணியிருக்கும்.

18 என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது: கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது.

19 என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில்: உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.

20 தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம்: உமக்கு இசைந்திருக்குமோ?

21 அவர்கள் நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி: குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள்.

22 கர்த்தரோ எனக்கு அடைக்கலமும்: என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார்.

23 அவர்களுடைய அக்கிரமத்தை அவர்கள்மேல் திருப்பி, அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களைச் சங்கரிப்பார்: நம்முடைய தேவனாகிய கர்த்தரே அவர்களைச் சங்கரிப்பார்.

பத்தொன்பதாம் தேதி.

காலை ஜெபம்.

95. சங்கீதம். *Venite, exultemus.*

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி: நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

2 துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து: சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

3 கர்த்தரே மகா தேவனும்: எல்லாத் தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.

4 பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது: பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

5 சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்: வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

6 நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக: நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

7 அவர் நம்முடைய தேவன்: நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

8 இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்: வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

9 அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து: என்னைப் பரீட்சைபார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

10 நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து: அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

11 என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று: என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

96. சங்கீதம். *Cantate Domino.*

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்: பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.

2 கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து: நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

3 ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும்: சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.

4 கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்: எல்லாத் தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.

5 சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே: கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்.

6 மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது: வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.

7 ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்: கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

8 கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி: காணிக்கைகளைக் கொண்டுவந்து அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

9 பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்: பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.

10 கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்: அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.

11 வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி: சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

12 நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக: அப்பொழுது கர்த்தருக்கு முன்பாகக் காட்டு விருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும்.

13 அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்: அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

97. சங்கீதம். *Dominus regnavit.*

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்: பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது.

2 மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது: நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்.

3 அக்கினி அவருக்கு முன்சென்று: சுற்றிலும் இருக்கிற அவருடைய
சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது.
4 அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது: பூமி
அதைக் கண்டு அதிர்ந்தது.
5 கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று:
சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போ
யிற்று.
6 வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது: சகல ஜனங்க
ளும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள்.
7 சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டு
கிற யாவரும் வெட்கப்பட்டுப்போவார்களாக: தேவர்களே, நீங்களெல்லா
ரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள்.
8 சீயோன் கேட்டு மகிழ்ந்தது: கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்
புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்.
9 கர்த்தாவே, பூமி முழுவதற்கும் நீர் உன்னதமானவர்: எல்லாத் தேவர்
களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்.
10 கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்:
அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்
மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார்.
11 நீதிமானுக்காக வெளிச்சமும்: செம்மையான இருதயத்தாருக்காக
மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது.
12 நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து: அவருடைய பரிசுத்தத்தின்
நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.

மாலை ஜெபம்.

98. சங்கீதம். *Cantate Domino.*

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்
திருக்கிறார்: அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும்,
இரட்சிப்பை உண்டாக்கினது.
2 கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி: தமது நீதியை ஜாதிக
ளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.
3 அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மை
யையும் நினைவுகூர்ந்தார்: பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய
இரட்சிப்பைக் கண்டது.
4 பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய்
ஆர்ப்பரியுங்கள்: முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

5 சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: சுரமண்டலத்
தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.
6 கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில்: பூரிகைகளாலும் எக்காள சத்தத்
தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.
7 சமுத்திரமும் அதின் நிறைவும்: பூச்சக்கரமும் அதின் குடிகளும்
முழங்குவதாக.
8 கர்த்தருக்கு முன்பாக ஆறுகள்கைகொட்டி: பர்வதங்கள் ஏகமாய்க்
கெம்பீரித்துப் பாடக்கடவது.
9 அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்: பூலோகத்தை நீதியோடும்
ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

99. சங்கீதம். *Dominus regnavit.*

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக: அவர்
கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக.
2 கர்த்தர் சீயோனில் பெரியவர்: அவர் எல்லா ஜனங்கள்மேலும்
உயர்ந்தவர்.
3 மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்க
ளாக: அது பரிசுத்தமுள்ளது.
4 ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது: தேவரீர் நியாயத்தை
நிலைநிறுத்துகிறீர், நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர்.
5 நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே
பணியுங்கள்: அவர் பரிசுத்தமுள்ளவர்.
6 அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்
பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்
டார்கள்: அவர் அவர்களுக்கு மறு உத்தரவு அருளினார்.
7 மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார்: அவர்கள் அவரு
டைய சாட்சிப்பிரமாணங்களையும் அவர் தங்களுக்குக் கொடுத்த கட்டளை
யையும் கைக்கொண்டார்கள்.
8 எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளி
னீர்: நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டினபோதிலும், அவர்
களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர்.
9 நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த
பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரி
சுத்தமுள்ளவர்.

100. சங்கீதம். *Jubilate Deo.*

பூமியின் குடிகளே: எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.
2 மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து: ஆனந்த சத்தத்தோ
டே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

3 கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்: நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.

4 அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து: அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

5 கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்: அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

101. சங்கீதம். *Misericordiam et judicium.*

இரக்கத்தையும் நியாயத்தையும்குறித்துப் பாடுவேன்: கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

2 உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்: என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன்.

3 தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன்: வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்; அது என்னைப் பற்றாது.

4 மாறுபாடான இருதயம் என்னை விட்டு அகலவேண்டும்: பொல்லாதவனை அறியமாட்டேன்.

5 பிறனை இரகசியமாய் அவதூறுபண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்: மேட்டிமைக் கண்ணனையும் பெருநெஞ்சுள்ளவனையும் பொறுக்கமாட்டேன்.

6 தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்: உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்.

7 கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை: பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.

8 அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேரறுப்புண்டுபோக: தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்.

இருபதாம் தேதி.

காலை ஜெபம்.

102. சங்கீதம். *Domine, exaudi.*

கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்: என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக.

2 என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; உமது செவியை என்னிடத்தில் சாயும்: நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும்.

3 என் நாட்கள் புகையைப்போல ஒழிந்தது: என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல எரியுண்டது.

4 என் இருதயம் புல்லைப்போல வெட்டுண்டு உலர்ந்தது: என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன்.

5 என் பெருமூச்சின் சத்தத்தினால்: என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது.

6 வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்: பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப்போலானேன்.

7 நான் நித்திரையில்லாமல்: வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன்.

8 நாடோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள்: என்மேல் மூர்க்கவெறிகொண்டவர்கள் எனக்கு விரோதமாய்ச் சாபம் இடுகிறார்கள்.

9 நீர் என்னை உயரத் தூக்கி, தாழத் தள்ளினீர்: உமது சினத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளானேன்.

10 ஆதலால் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து: என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன்.

11 என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலிருக்கிறது: புல்லைப்போல உலர்ந்துபோகிறேன்.

12 கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்: உம்முடைய பேர்பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

13 தேவரீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரங்குவீர்: அதற்குத் தயைசெய்யுங் காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது.

14 உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சை வைத்து: அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள்.

15 கர்த்தர் சீயோனைக் கட்டி: தமது மகிமையில் வெளிப்படுவார்.

16 திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல்: அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்.

17 அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும்: பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்.

18 பின்சந்ததிக்காக இது எழுதப்படும்: சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்.

19 கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும்: கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும்,

20 தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து: வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார்.

21 கர்த்தருக்கு ஆராதனைசெய்ய: ஜனங்களும் ராஜ்யங்களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளுகையில்,

22 சீயோனில் கர்த்தருடைய நாமத்தையும்: எருசலேமில் அவருடைய துதியையும் பிரஸ்தாபப்படுத்துவார்கள்.

23 வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி: என் நாட்களைக் குறுகப் பண்ணினார்.

24 அப்பொழுது நான், என் தேவனே, பாதிவயதில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும்: உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்.

25 நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்: வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது.

26 அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்: அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப்போல மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம்.

27 நீரோ மாறாதவராயிருக்கிறீர்: உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை.

28 உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள்: அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் என்று சொன்னேன்.

103. சங்கீதம். *Benedic, anima mea.*

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

2 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

3 அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து: உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,

4 உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு: உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

5 நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்: கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது.

6 ஒடுக்கப்படுகிற யாவருக்கும்: கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.

7 அவர் தமது வழிகளை மோசேக்கும்: தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்.

8 கர்த்தர் உருக்கமும், இரக்கமும்: நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர்.

9 அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்: என்றைக்கும் கோபங்கொண்டிரார்.

10 அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும்: நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

11 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ: அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.

12 மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ: அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்.

13 தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல: கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

14 நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்: நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்.

15 மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது: வெளியின் புஷ்பத்தைப்போலப் பூக்கிறான்.

16 காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று: அது இருந்த இடமும் இனி அதை அறியாது.

17 கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும்: அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.

18 அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு: அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள்மேலேயே உள்ளது.

19 கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்: அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.

20 கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே: அவரை ஸ்தோத்திரியுங்கள்.

21 கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே: அவரை ஸ்தோத்திரியுங்கள்.

22 கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்: என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

மாலை ஜெபம்.

104. சங்கீதம். *Benedic, anima mea.*

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி: என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர்.

2 ஒளியை வஸ்திரமாகத் தரித்து: வானங்களைத் திரையைப்போல விரித்திருக்கிறீர்.

3 தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி: மேகங்களைத் தமது ரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார்.

4 தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும்: தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்.

5 பூமி ஒருபோதும் நிலைபெயராதபடி: அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்.

6 அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்: பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது.

7 அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி: உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று.

8 அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி: நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது.

9 அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி: கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்.

10 அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார்: அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது.

11 அவைகள் வெளியின் ஜீவன்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கும்: அங்கே காட்டுக் கழுதைகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்.

12 அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப் பறவைகள் சஞ்சரித்து: கிளைகள்மேல் இருந்து பாடும்.

13 தம்முடைய மேல்வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார்: உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது.

14 பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி: அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார்.

15 மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும்: மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்.

16 கர்த்தருடைய விருட்சங்களும்: அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும்.

17 அங்கே குருவிகள் கூடுகட்டும்: தேவதாருவிருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு.

18 உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும்: கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலம்.

19 சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்: சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்.

20 நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்: அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும்.

21 பால சிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து: தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும்.

22 சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி: தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும்.

23 அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும்: தன் பண்ணைக்கும் புறப்படுகிறான்.

24 கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது: அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.

25 பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது: அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு.

26 அதிலே கப்பல்கள் ஓடும்: அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கிலங்களும் உண்டு.

27 ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று: அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்.

28 நீர் கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும்: நீர் உம்முடைய கையைத் திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும்.

29 நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்: நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்.

30 நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்: நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.

31 கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும்: கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார்.

32 அவர் பூமியை நோக்கிப்பார்க்க, அது அதிரும்: அவர் பர்வதங்களைத் தொட, அவைகள் புகையும்.

33 நான் உயிரோடிருக்குமளவும் என் கர்த்தரைப் பாடுவேன்: நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

34 நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்: நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.

35 பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமல் போவார்கள்: என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா.

இருபத்தோராம் தேதி.

காலை ஜெபம்.

105. சங்கீதம். *Confitemini Domino.*

கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்: அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்.

2 அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.

3 அவருடைய பரிசுத்த நாமத்தைக்குறித்து மேன்மைபாராட்டுங்கள்: கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக.

4 கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்: அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.

5 அவருடைய தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே: அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே,

6 அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும்: அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.

7 அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர்: அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்.

8 ஆயிரம் தலைமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும்: ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும்,

9 அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும்: என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார்.

10 அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும்: இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி,

11 உங்கள் சுதந்தரபாகமான: கானான்தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்.

12 அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைக்குட்பட்ட: சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள்.

13 அவர்கள் ஒரு ஜனத்தை விட்டு மறுஜனத்தண்டைக்கும்: ஒரு ராஜ்யத்தை விட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்.

14 அவர்களை ஒடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமல்: அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு:

15 நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும்: என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார்.

16 அவர் தேசத்திலே பஞ்சத்தை வருவித்து: அப்பம் என்னும் ஆதரவுகோலை முற்றிலும் முறித்தார்.

17 அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார்: யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்.

18 அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்: அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது.

19 கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும்: அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது.

20 ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச் சொன்னான்: ஜனங்களின் அதிபதி அவனை விடுதலைபண்ணினான்.

21 தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும்: தன் மூப்பர்களை ஞானிகளாக்கவும்,

22 அவனைத் தன் வீட்டுக்கு ஆண்டவனும்: தன் ஆஸ்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்.

23 அப்பொழுது இஸ்ரவேல் எகிப்திற்கு வந்தான்: யாக்கோபு காமின் தேசத்திலே பரதேசியாயிருந்தான்.

24 அவர் தம்முடைய ஜனங்களை மிகவும் பலுகப்பண்ணி: அவர்களுடைய சத்துருக்களைப்பார்க்கிலும் அவர்களைப் பலவான்களாக்கினார்.

25 தம்முடைய ஜனங்களைப் பகைக்கவும்: தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், அவர்களுடைய இருதயத்தை மாற்றினார்.

26 தம்முடைய தாசனாகிய மோசேயையும்: தாம் தெரிந்துகொண்ட ஆரோனையும் அனுப்பினார்.

27 இவர்கள் அவர்களுக்குள் அவருடைய அடையாளங்களையும்: காமின் தேசத்திலே அற்புதங்களையும் செய்தார்கள்.

28 அவர் இருளை அனுப்பி, அந்தகாரத்தை உண்டாக்கினார்: அவருடைய வார்த்தைகளுக்கு எதிர்ப்பார் இல்லை.

29 அவர்களுடைய தண்ணீர்களை இரத்தமாக மாற்றி: அவர்களுடைய மச்சங்களைச் சாகப்பண்ணினார்.

30 அவர்களுடைய தேசம் தவளைகளைத் திரளாய்ப் பிறப்பித்தது: அவர்களுடைய ராஜாக்களின் அறைவீடுகளிலும் அவைகள் வந்தது.

31 அவர் கட்டளையிட: அவர்களுடைய எல்லைகளிலெங்கும் வண்டுகளும் பேன்களும் வந்தது.

32 அவர்களுடைய மழைகளைக் கல்மழையாக்கி: அவர்களுடைய தேசத்திலே ஜ்வாலிக்கிற அக்கினியை வரப்பண்ணினார்.

33 அவர்களுடைய திராட்சச்செடிகளையும் அத்திமரங்களையும் அழித்து: அவர்களுடைய எல்லைகளிலுள்ள மரங்களையும் முறித்தார்.

34 அவர் கட்டளையிட: எண்ணிமுடியாத வெட்டுக்கிளிகளும் பச்சைப் புழுக்களும் வந்து,

35 அவர்களுடைய தேசத்திலுள்ள சகல பூண்டுகளையும் அரித்து: அவர்
களுடைய நிலத்தின் கனியைத் தின்றுபோட்டது.

36 அவர்களுடைய தேசத்திலே தலைச்சன்கள் அனைத்தையும்: அவர்க
ளுடைய பெலனில் முதற்பெலனான யாவரையும் சங்கரித்தார்.

37 அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்
பண்ணினார்: அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும்
இருந்ததில்லை.

38 எகிப்தியர் அவர்களுக்குப் பயந்ததினால்: அவர்கள் புறப்பட்ட
போது மகிழ்ந்தார்கள்.

39 அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து: இரவை வெளிச்சமாக்குகிற
தற்காக அக்கினியையும் தந்தார்.

40 கேட்டார்கள், அவர் காடைகளை வரப்பண்ணினார்: வான அப்பத்
தினாலும் அவர்களைத் திருப்தியாக்கினார்.

41 கன்மலையைத் திறந்தார்: தண்ணீர்கள் புறப்பட்டு, வறண்ட வெளி
களில் ஆறாய் ஓடிற்று.

42 அவர் தம்முடைய பரிசுத்த வாக்குத்தத்தத்தையும்: தம்முடைய
தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்து,

43 தம்முடைய ஜனத்தைக் களிப்போடும்: தாம் தெரிந்துகொண்டவர்க
ளைக் கெம்பீர சத்தத்தோடும் புறப்படப்பண்ணி,

44 தமது கட்டளைகளைக் காத்து நடக்கும்படிக்கும்: தமது நியாயப்
பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படிக்கும்,

45 அவர்களுக்குப் புறஜாதிகளுடைய தேசங்களைக் கொடுத்தார்: அந்நிய
ஜனங்களுடைய பிரயாசத்தின் பலனைச் சுதந்தரித்துக்கொண்டார்கள்.
அல்லேலூயா.

மாலை ஜெபம்.

106. சங்கீதம். *Confitemini Domino.*

அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்: அவர் நல்லவர், அவர் கிருபை
என்றுமுள்ளது.

2 கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லி: அவருடைய
துதியையெல்லாம் பிரஸ்தாபப்படுத்தத்தக்கவன் யார்?

3 நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும்: எக்காலத்திலும் நீதியைச்
செய்கிறவர்களும் பாக்கியவான்கள்.

4 கர்த்தாவே, நீர் தெரிந்துகொண்டவர்களின் நன்மையை நான் கண்டு:
உம்முடைய ஜாதியின் மகிழ்ச்சியால் மகிழ்ந்து, உம்முடைய சுதந்தரத்
தோடே மேன்மைபாராட்டும்படிக்கு,

5 உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை
நினைத்து: உம்முடைய இரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும்.

6 எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவஞ்செய்து: அக்கிரமம்
நடப்பித்து, ஆகாமியம் பண்ணினோம்.

7 எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராம
லும்: உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய்,
சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம்பண்ணினார்கள்.

8 ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படிக்கு: தம்மு
டைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்.

9 அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார், அது வற்றிப்போயிற்று:
வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல அவர்களை ஆழங்களில் நடந்துபோ
கப்பண்ணினார்.

10 பகைஞன் கைக்கு அவர்களை விலக்கி இரட்சித்து: சத்துருவின்
கைக்கு அவர்களை விலக்கி மீட்டார்.

11 அவர்கள் சத்துருக்களைத் தண்ணீர்கள் மூடிக்கொண்டது: அவர்க
ளில் ஒருவனும் மீந்திருக்கவில்லை.

12 அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து:
அவருடைய துதியைப் பாடினார்கள்.

13 ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்: அவரு
டைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல்,

14 வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி: அவாந்தரவெளியிலே தேவ
னைப் பரீட்சைபார்த்தார்கள்.

15 அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்:
அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்.

16 பாளயத்தில் அவர்கள் மோசேயின்மேலும்: கர்த்தருடைய பரிசுத்த
னாகிய ஆரோனின்மேலும், பொறாமைகொண்டார்கள்.

17 பூமி பிளந்து தாத்தானை விழுங்கி: அபிராமின் கூட்டத்தை மூடிப்
போட்டது.

18 அவர்கள் கூட்டத்தில் அக்கினி பற்றியெரிந்தது: அக்கினிஜுவாலை
துன்மார்க்கரை எரித்துப்போட்டது.

19 அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி: வார்ப்பிக்
கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்.

20 தங்கள் மகிமையை: புல்லைத்தின்கிற மாட்டின் சாயலாக மாற்றி
னார்கள்.

21 எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்
களையும்: சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்த
வராகிய,

22 தங்கள் இரட்சகரான தேவனை: மறந்தார்கள்.
23 ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார்: அப்பொழுது
அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காத
படிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாக
திறப்பின் வாயிலே நின்றான்.
24 அவருடைய வார்த்தையை விசுவாசியாமல்: இச்சிக்கப்படத்தக்க
தேசத்தை அசட்டைபண்ணினார்கள்.
25 கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல்: தங்கள் கூடாரங்க
ளில் முறுமுறுத்தார்கள்.
26 அப்பொழுது அவர்கள் வனாந்தரத்திலே மடியவும்: அவர்கள் சந்ததி
ஜாதிகளுக்குள்ளே அழியவும்,
27 அவர்கள் பற்பல தேசங்களிலே சிதறடிக்கப்படவும்: அவர்களுக்கு
விரோதமாகத் தம்முடைய கையை எடுத்தார்.
28 அவர்கள் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டு: ஜீவனில்லாதவைக
ளுக்கு இட்ட பலிகளைப் புசித்து,
29 தங்கள் கிரியைகளினால் அவருக்குக் கோபம் மூட்டினார்கள்:
ஆகையால் வாதை அவர்களுக்குள் புகுந்தது.
30 அப்பொழுது பினெகாஸ் எழுந்துநின்று நியாயஞ்செய்தான்: அதி
னால் வாதை நிறுத்தப்பட்டது.
31 அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும்: அவனுக்கு நீதியாக
எண்ணப்பட்டது.
32 மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்குக் கடுங்கோபம் மூட்
டினார்கள்: அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது.
33 அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே: தன் உதடுகளி
னால் பதறிப்பேசினான்.
34 கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடி: அவர்கள் அந்த ஜனங்களை
அழிக்கவில்லை.
35 ஜாதிகளுடனே கலந்து: அவர்கள் கிரியைகளைக் கற்று;
36 அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள்: அவைகள் அவர்க
ளுக்குக் கண்ணியாயிற்று.
37 அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும்: பிசாசுக
ளுக்குப் பலியிட்டார்கள்.
38 அவர்கள் கானான்தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள்
குமாரர் குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள்:
தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது.
39 அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி: தங்கள் செய்கைக
ளினால் சோரம்போனார்கள்.

40 அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது:
அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்.
41 அவர்களை ஜாதிகளுடைய கையில் ஒப்புக்கொடுத்தார்: அவர்களு
டைய பகைஞர் அவர்களை ஆண்டார்கள்.
42 அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை ஒடுக்கினார்கள்: அவர்களு
டைய கையின்கீழ்த் தாழ்த்தப்பட்டார்கள்.
43 அநேகந்தரம் அவர்களை விடுவித்தார்: அவர்களோ தங்கள் யோசனை
யினால் அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, தங்களுடைய அக்கிரமத்
தினால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள்.
44 அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ: அவர்களுக்கு
உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி,
45 அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து: தமது மிகுந்த
கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு,
46 அவர்களைச் சிறைபிடித்த யாவரும்: அவர்களுக்கு இரங்கும்படி
செய்தார்.
47 எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப்
போற்றி, உம்மைத் துதிக்கிறதில் மேன்மைபாராட்டும்படி: எங்களை இரட்
சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்.
48 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும்
ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்: ஜனங்களெல்லாரும், ஆமென், அல்லேலூயா,
என்பார்களாக.

இருபத்திரண்டாம் தேதி.

காலை ஜெபம்.

107. சங்கீதம். *Confitemini Domino.*

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்: அவர் கிருபை என்றுமுள்ளது.
2 கர்த்தரால் சத்துருவின் கைக்கு: நீங்கலாக்கி மீட்கப்பட்டு,
3 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்க
ளிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள்: அப்படிச் சொல்லக்கடவர்கள்.
4 அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணாமல்: வனாந்தரத்திலே அவாந்தர
வழியாய்;
5 பசியாகவும், தாகமாகவும்: ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரிந்
தார்கள்.
6 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்: அவர்கள்
இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்.

7 தாபரிக்கும் ஊருக்குப்* போய்ச் சேர: அவர்களைச் செவ்வையான
வழியிலே நடத்தினார்.

8 தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி: பசியுள்ள ஆத்து
மாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று,

9 அவருடைய கிருபையினிமித்தமும்: மனுபுத்திரருக்கு அவர் செய்கிற
அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.

10 தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி: உன்
னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள்,

11 அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்து: ஒடுக்கத்தி
லும் இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள்.

12 அவர்களுடைய இருதயத்தை அவர் வருத்தத்தால் தாழ்த்தினார்:
சகாயரில்லாமல் விழுந்துபோனார்கள்.

13 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்: அவர்கள்
இக்கட்டுகளிலிருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்.

14 அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து அவர்களை வெளிப்படப்
பண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்தார்.

15 கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து: இருப்புத் தாழ்ப்பாள்களை
முறித்தாரென்று,

16 அவருடைய கிருபையினிமித்தமும்: மனுபுத்திரருக்கு அவர் செய்
கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.

17 நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும்: தங்கள் அக்கிரமங்களாலும்
நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்.

18 அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது: அவர்கள்
மரண வாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்.

19 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்: அவர்கள்
இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்.

20 அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி: அவர்களை
அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

21 அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும்: மனுபுத்தி
ரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,

22 ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி: அவருடைய கிரியைகளை ஆனந்த
சத்தத்தோடே விவரிப்பார்களாக.

23 கப்பலேறி, கடல் யாத்திரைபண்ணி: திரளான தண்ணீர்களிலே
தொழில் செய்கிறார்களே,

24 அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும்: ஆழத்திலே அவருடைய
அதிசயங்களையும் காண்கிறார்கள்.

25 அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி: அதின் அலைகளைக்
கொந்தளிக்கப்பண்ணும்.

26 அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள்: அவர்கள்
ஆத்துமா கிலேசத்தினால் கரைந்துபோகிறது.

27 வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள்: அவர்களுடைய
ஞானமெல்லாம் முழுகிப்போகிறது.

28 அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக்
கூப்பிடுகிறார்கள்: அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி
விடுவிக்கிறார்.

29 கொந்தளிப்பை அமர்த்துகிறார்: அதின் அலைகள் அடங்குகின்றது.

30 அமைதல் உண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்:
தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.

31 அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும்: மனுபுத்திர
ருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,

32 ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி: மூப்பர்களின் சங்கத்தி
லே அவரைப் போற்றுவார்களாக.

33 அவர் ஆறுகளை அவாந்தரவெளியாகவும்: நீரூற்றுகளை வறண்ட ஸ்த
லமாகவும்,

34 குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம்: செழிப்பான தேசத்தை
உவர்நிலமாகவும் மாற்றுகிறார்.

35 அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும்: வறண்ட
நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி,

36 பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார்: அங்கே அவர்கள் குடியி
ருக்கும் நகரத்தைக் கட்டி,

37 வயல்களை உண்டாக்கி விதைத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டு
கிறார்கள்: அவைகள் வரத்துள்ள பலனைத் தரும்.

38 அவர்களை ஆசீர்வதிக்கிறார், மிகுதியும் பெருகுகிறார்கள்: அவர்க
ளுடைய மிருகஜீவன்கள் குறையாதிருக்கப்பண்ணுகிறார்.

39 பின்பு அவர்கள் இடுக்கத்தினாலும், ஆபத்தினாலும், துயரத்தினாலும்:
குறைவுபட்டுத் தாழ்வடைகிறார்கள்.

40 அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சிவரப்பண்ணி: வழியில்லாத
அவாந்தரவெளியிலே அவர்களைத் திரியச்செய்து,

41 எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்
திலே வைத்து: அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார்.

42 உத்தமர்கள் அதைக் கண்டு மகிழுவார்கள்: நியாயக்கேடெல்லாம்
தன் வாயை மூடும்.

43 எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்:
ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்ளுவார்கள்.

மாலை ஜெபம்.

108. சங்கீதம். *Paratum cor meum.*

தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது: நான் பாடிக் கீர்த்தனம்பண்ணுவேன்; என் மகிமையும் பாடும்.

2 வீணையே, சுரமண்டலமே, விழி: நான் அதிகாலையில் விழிப்பேன்.

3 கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்: ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

4 உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும்: உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும் எட்டுகிறது.

5 தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும்: உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.

6 உமது பிரியர் விடுவிக்கப்படும்பொருட்டு: உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

7 தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்: சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்துகொள்ளுவேன்.

8 கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது: எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.

9 மோவாப் என் பாதபாத்திரம்: ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிவேன்; பெலிஸ்தியாவின்மேல் ஆர்ப்பரிப்பேன்.

10 அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டுபோகிறவன் யார்: ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவன் யார்?

11 எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீரல்லவா: எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீரல்லவா?

12 இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும்: மனுஷனுடைய உதவி விருதா.

13 தேவனாலே பராக்கிரமஞ்செய்வோம்: அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.

109. சங்கீதம். *Deus laudum.*

நான் துதிக்கும் தேவனே: மவுனமாயிராதேயும்.

2 துன்மார்க்கனுடைய வாயும், கபட்டுவாயும், எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது: கள்ள நாவினால் என்னோடே பேசுகிறார்கள்.

3 பகையுண்டாக்கும் வார்த்தைகளால் என்னைச் சூழ்ந்துகொண்டு: முகாந்தரமில்லாமல் என்னோடே போர்செய்கிறார்கள்.

4 என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள்: நானோ ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறேன்.

5 நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமைசெய்கிறார்கள்: என் சிநேகத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறார்கள்.

6 அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும்: சாத்தான் அவன் வலதுபக்கத்தில் நிற்பானாக.

7 அவன் நியாயம்விசாரிக்கப்படும்போது குற்றவாளியாகக்கடவன்: அவன் ஜெபம் பாவமாகக்கடவது.

8 அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது: அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன்.

9 அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும்: அவன் மனைவி விதவையுமாகக்கடவர்கள்.

10 அவன் பிள்ளைகள் அலைந்துதிரிந்து பிச்சையெடுத்து: தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக்கடவர்கள்.

11 கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக்கொள்வானாக: அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக்கொள்ளக்கடவர்கள்.

12 அவனுக்கு ஒருவரும் இரக்கங்காண்பியாமலும்: அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவுசெய்யாமலும் போவார்களாக.

13 அவன் சந்ததியார் நிர்மூலமாகக்கடவர்கள்: இரண்டாம் தலைமுறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக.

14 அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக்கடவது: அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக.

15 அவைகள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கக்கடவது: அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாவதாக.

16 அவன் தயைசெய்ய நினையாமல்: சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி, மனமுறிவுள்ளவனைக் கொலைசெய்யும்படி தேடினானே.

17 சாபத்தை விரும்பினான், அது அவனுக்கு வரும்: அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற்போனான், அது அவனுக்குத் தூரமாய் விலகிப்போம்.

18 சாபத்தை அவன் தனக்கு அங்கியாக உடுத்திக்கொண்டான்: அது அவன் உள்ளத்தில் தண்ணீரைப்போலவும், அவன் எலும்புகளில் எண்ணெயைப்போலவும் பாயும்.

19 அது அவன் மூடிக்கொள்ளுகிற வஸ்திரமாகவும்: நித்தமும் கட்டிக்கொள்ளுகிற கச்சையாகவும் இருப்பதாக.

20 இதுதான் என்னை விரோதிக்கிறவர்களுக்கும்: என் ஆத்துமாவுக்கு விரோதமாய்த் தீங்கு பேசுகிறவர்களுக்கும் கர்த்தரால் வரும் பலன்.

21 ஆண்டவராகிய கர்த்தாவே, நீர் உமது நாமத்தினிமித்தம் என்னை ஆதரித்து: உமது கிருபை நலமானதினால், என்னை விடுவித்தருளும்.

22 நான் சிறுமையும் எளிமையுமானவன்: என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது.

23 சாயும் நிழலைப்போல் அகன்றுபோனேன்: வெட்டுக்கிளியைப் போல் பறக்கடிக்கப்படுகிறேன்.

24 உபவாசத்தினால் என் முழங்கால்கள் தளர்ச்சியடைகிறது: என் மாம்சம் புஷ்டியற்று உலர்ந்துபோகிறது.

25 நான் அவர்களுக்கு நிந்தையானேன்: அவர்கள் என்னைப் பார்த்து, தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள்.

26 என் தேவனாகிய கர்த்தாவே, எனக்குச் சகாயம்பண்ணும்: உமது கிருபையின்படி என்னை இரட்சியும்.

27 இது உமது கரமென்றும்: கர்த்தாவே, தேவரீர் இதைச் செய்தீர் என்றும், அவர்கள் அறிவார்களாக.

28 அவர்கள் சபித்தாலும், நீர் ஆசீர்வதியும்: அவர்கள் எழும்பினாலும் வெட்கப்பட்டுப்போவார்களாக; உமது அடியானோ மகிழக்கடவன்.

29 என் விரோதிகள் இலச்சையால் மூடப்பட்டு: தங்கள் வெட்கத்தைச் சால்வையைப்போல் தரித்துக்கொள்ளக்கடவர்கள்.

30 கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து: அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன்.

31 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்களினின்று எளியவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி: அவர் அவன் வலதுபாரிசத்தில் நிற்பார்.

இருபத்துமூன்றாம் தேதி.

காலை ஜெபம்.

110. சங்கீதம். *Dixit Dominus.*

கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி, நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்: நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்.

2 கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்: நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும்.

3 உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமும் உள்ளவர்களாயிருப்பார்கள்: விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்.

4 நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்: மனம் மாறாமலும் இருப்பார்.

5 உம்முடைய வலதுபாரிசத்திலிருக்கிற ஆண்டவர்: தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார்.

6 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்; எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்: விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாயிருக்கிறவர்களை நொறுக்கிப்போடுவார்.

7 வழியிலே அவர் நதியில் குடிப்பார்: ஆகையால் அவர் தலையை எடுப்பார்.

111. சங்கீதம். *Confitebor tibi.*

அல்லேலூயா, செம்மையானவர்களுடைய சங்கத்திலும் சபையிலும்: கர்த்தரை முழு இருதயத்தோடும் துதிப்பேன்.

2 கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும்: அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாய் இருக்கிறது.

3 அவருடைய செயல் மகிமையும் மகத்துவமுமுள்ளது: அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.

4 அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார்: கர்த்தர் இரக்கமும் மன உருக்கமுமுள்ளவர்.

5 தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார்: தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார்.

6 ஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுத்ததினால்: தமது கிரியைகளின் பெலத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

7 அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்: அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்.

8 அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள்: அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்.

9 அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி, தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார்: அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது.

10 கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்: அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

112. சங்கீதம். *Beatus vir.*

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து: அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

2 அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்: செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.

3 ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்: அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.

4 செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்: அவன் இரக்கமும் மன உருக்கமும் நீதியுமுள்ளவன்.

5 இரங்கிக் கடன் கொடுத்து: தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.

6 அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்: நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.

7 துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்: அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்.

8 அவன் இருதயம் உறுதியாயிருக்கும்: அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்.

9 வாரி இறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான்: அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்.

10 துன்மார்க்கன் அதைக் கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்: துன்மார்க்கருடைய ஆசை அழியும்.

113. சங்கீதம். *Laudate, pueri.*

அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள்: கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்.

2 இதுமுதல் என்றும்:கர்த்தருடையநாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.

3 சூரியன் உதிக்கும் திசைதொடங்கி: அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

4 கர்த்தர் எல்லா ஜாதிகள்மேலும் உயர்ந்தவர்: அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது.

5 உன்னதங்களில் வாசம்பண்ணுகிற: நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவர் யார்?

6 அவர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி: தம்மைத் தாழ்த்துகிறார்.

7 அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்: எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

8 அவனைப் பிரபுக்களோடும்: தமது ஜனத்தின் அதிபதிகளோடும், உட்காரப்பண்ணுகிறார்.

9 மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி: வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா.

மாலை ஜெபம்.

114. சங்கீதம். *In exitu Israel.*

இஸ்ரவேல் எகிப்திலும்: யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரான ஜனத்திலுமிருந்து புறப்பட்டபோது,

2 யூதா அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும்: இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று.

3 கடல் கண்டு விலகி ஓடிற்று: யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது.

4 மலைகள் ஆட்டுக்கடாக்களைப்போலவும்: குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப்போலவும் துள்ளினது.

5 கடலே, நீ விலகியோடுகிறதற்கும்: யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புகிறதற்கும்;

6 மலைகளே, நீங்கள் ஆட்டுக்கடாக்களைப்போலவும்: குன்றுகளே, நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப்போலவும் துள்ளுகிறதற்கும், உங்களுக்கு என்ன வந்தது?

7 பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும்: யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு.

8 அவர் கன்மலையைத் தண்ணீர்த்தடாகமாகவும்: கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.

115. சங்கீதம். *Non nobis, Domine.*

எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும்: உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமைவரப்பண்ணும்.

2 அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று: புறஜாதிகள் சொல்வானேன்?

3 நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்: தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.

4 அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும்: மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

5 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது: அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

6 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது: அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது.

7 அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது: அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது.

8 அவைகளைப் பண்ணுகிறவர்களும்: அவைகளை நம்புகிறவர்கள் யாவரும்: அவைகளைப்போலவே இருக்கிறார்கள்.

9 இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு: அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

10 ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள்: அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

11 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்: அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

12 கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்: இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.

13 கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும்: ஆசீர்வதிப்பார்.

14 கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும்: வர்த்திக்கப்பண்ணுவார்.

15 வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே: நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

16 வானங்கள் கர்த்தருடையவைகள்: பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.

17 மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும்: கர்த்தரைத் துதியார்கள்.

18 நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும்: கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா.

இருபத்தினாலாம் தேதி.

காலை ஜெபம்.

116. சங்கீதம். *Dilexi, quoniam.*

கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால்: அவரில் அன்புகூருகிறேன்.

2 அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால்: நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன்.

3 மரணக் கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது: இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்.

4 அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு: கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்.

5 கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர்: நம்முடைய தேவன் மனவுருக்கமானவர்.

6 கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்: நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார்.

7 என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மைசெய்தபடியால்: நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.

8 என் ஆத்துமாவை மரணத்துக்கும்: என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.

9 நான் கர்த்தருக்கு முன்பாக: ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.

10 விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்: நான் மிகுதியும் வருத்தப்பட்டேன்.

11 எந்த மனுஷனும் பொய்யன் என்று: என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.

12 கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும்: அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

13 இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு: கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

14 நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை: அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.

15 கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்: அவர் பார்வைக்கு அருமையானது.

16 கர்த்தாவே, நான் உமது அடியேன்: நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்.

17 நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி: கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

18 நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை: அவருடைய ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும்,

19 கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும்: எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

117. சங்கீதம். *Laudate Dominum.*

ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்: ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.

2 அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது: கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா.

118. சங்கீதம். *Confitemini Domino.*

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்: அவர் கிருபை என்றுமுள்ளது.
2 அவர் கிருபை என்றுமுள்ளதென்று: இஸ்ரவேல் சொல்வதாக.
3 அவர் கிருபை என்றுமுள்ளதென்று: ஆரோனின் குடும்பத்தார் சொல்
வார்களாக.
4 அவர் கிருபை என்றுமுள்ளதென்று: கர்த்தருக்குப் பயப்படுகிறவர்
கள் சொல்வார்களாக.
5 நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்: கர்த்தர் என்
னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்.
6 கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்: நான் பயப்படேன், மனுஷன்
எனக்கு என்ன செய்வான்?
7 எனக்கு அநுகூலம்பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்
தில் இருக்கிறார்: என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்.
8 மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும்: கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்
பதே நலம்.
9 பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும்: கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்
பதே நலம்.
10 எல்லா ஜாதியாரும் என்னை வளைந்துகொள்ளுகிறார்கள்: கர்த்தரு
டைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.
11 என்னைச் சுற்றிலும் வளைந்துகொள்ளுகிறார்கள்: கர்த்தருடைய
நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.
12 தேனீக்களைப்போல என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், முள்ளில்
பற்றின நெருப்பைப்போல அணைந்துபோவார்கள்: கர்த்தருடைய நாமத்தி
னால் அவர்களைச் சங்கரிப்பேன்.
13 நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்: கர்த்தரோ எனக்கு உதவி
செய்தார்.
14 கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்: அவர் எனக்கு இரட்சிப்
புமானார்.
15 நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம்
உண்டு: கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.
16 கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது: கர்த்தரின் வலதுகரம் பராக்
கிரமஞ்செய்யும்.
17 நான் சாவாமல், பிழைத்திருந்து: கர்த்தருடைய செய்கைகளை விவ
ரிப்பேன்.
18 கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும்: என்னைச் சாவுக்கு ஒப்புக்
கொடுக்கவில்லை.

19 நீதியின் வாசல்களைத் திறவுங்கள்: நான் அவைகளுக்குள் பிரவேசித்
துக் கர்த்தரைத் துதிப்பேன்.
20 கர்த்தரின் வாசல் இதுவே: நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்
பார்கள்.
21 நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால்:
நான் உம்மைத் துதிப்பேன்.
22 வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே: மூலைக்குத்
தலைக்கல்லாயிற்று.
23 அது கர்த்தராலே ஆயிற்று: அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரிய
மாயிருக்கிறது.
24 இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்: இதிலே களிகூர்ந்து மகிழக்
கடவோம்.
25 கர்த்தாவே, இரட்சியும்: கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்
ணும்.
26 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்:
கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்.
27 கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்: பண்டிகைப்
பலியைக் கொண்டுபோய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்
டுங்கள்.
28 நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன்: நீர் என் தேவன்,நான்
உம்மை உயர்த்துவேன்.
29 கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்: அவர் கிருபை என்று
முள்ளது.

மாலை ஜெபம்.

119. சங்கீதம். *Beati immaculati.*

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற: உத்தம மார்க்கத்தார் பாக்கிய
வான்கள்.
2 அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு: அவரை முழு இருதயத்
தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.
3 அவர்கள் அநியாயம் செய்வதில்லை: அவருடைய வழிகளில் நடக்
கிறார்கள்.
4 உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி: நீர் கற்
பித்தீர்.
5 உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி: என் நடைகள் ஸ்திரப்
பட்டால் நலமாயிருக்கும்.

6 நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது: வெட்கப்பட்டுப்போவதில்லை.

7 உம்முடைய நீதி நியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது: செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்.

8 உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன்: முற்றிலும் என்னைக் கைவிடாதேயும்.

In quo corriget?

வாலிபன், தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்; உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே.

10 என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன்: என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்பவிடாதேயும்.

11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு: உமது வாக்கை என் இருதயத்தில் வைத்துவைத்தேன்.

12 கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்: உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்.

13 உம்முடைய வாக்கின் நியாத்தீர்ப்புகளையெல்லாம்: என் உதடுகளால் விவரித்திருக்கிறேன்.

14 திரளான செல்வத்தில் களிகூருவதுபோல: நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்.

15 உமது கட்டளைகளைத் தியானித்து: உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.

16 உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்: உமது வசனத்தை மறவேன்.

Retribue servo tuo.

உமது அடியேனுக்கு அநுகூலமாயிரும்: அப்பொழுது நான் பிழைத்து, உமது வசனத்தைக் கைக்கொள்ளுவேன்.

18 உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு: என் கண்களைத் திறந்தருளும்.

19 பூமியிலே நான் பரதேசி: உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்.

20 உமது நியாயங்கள்மேல் என் ஆத்துமா: எக்காலமும் வைத்திருக்கிற வாஞ்சையினால் தொய்ந்துபோகிறது.

21 உமது கற்பனைகளை விட்டு வழிவிலகின சபிக்கப்பட்ட அகங்காரிகளை: நீர் கடிந்துகொள்ளுகிறீர்.

22 நிந்தையையும் அவமானத்தையும் என்னைவிட்டகற்றும்: நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன்.

23 பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள்: உமது அடியேனோ, உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன்.

24 உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும்: என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது.

Adhæsit pavimento.

என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது: உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்.

26 என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர்: உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

27 உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும்: அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன்.

28 சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது: உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்.

29 பொய்வழியை என்னைவிட்டு விலக்கி: உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும்.

30 மெய்வழியை நான் தெரிந்துகொண்டு: உம்முடைய நியாயங்களை எனக்குமுன்பாக நிறுத்தினேன்.

31 உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்: கர்த்தாவே, என்னை வெட்கத்திற்குட்படப் பண்ணாதேயும்.

32 நீர் என் இருதயத்தை விசாலமாக்கும்போது: நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன்.

இருபத்தைந்தாம் தேதி.

காலை ஜெபம்.

Legem pone.

கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும்: முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக்கொள்ளுவேன்.

34 எனக்கு உணர்வைத் தாரும்: அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்.

35 உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்: நான் அதில் பிரியமாயிருக்கிறேன்.

36 என் இருதயம் பொருளாசையைச் சாராமல்: உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்.

37 மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி:உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்.

38 உமக்குப் பயப்படுகிறதற்கு ஏற்ற உமது வாக்கை: உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும்.

39 நான் அஞ்சுகிற நிந்தையை விலக்கியருளும்: உம்முடைய நியாயத்தீர்ப்புகள் நல்லவைகள்.

40 இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன்: உமது நீதியால் என்னை உயிர்ப்பியும்.

Et veniat super me.

கர்த்தாவே, உம்முடைய வாக்கின்படி: உமது தயவும் உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக.

42 அப்பொழுது என்னை நிந்திக்கிறவனுக்கு உத்தரவு சொல்லுவேன்: உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன்.

43 சத்திய வசனம் முற்றிலும் என் வாயினின்று நீங்கவிடாதேயும்: உம்முடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன்.

44 நான் எப்பொழுதும் என்றைக்கும்: உமது வேதத்தைக் காத்துக்கொள்ளுவேன்.

45 நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால்: விசாலத்திலே நடப்பேன்.

46 நான் உம்முடைய சாட்சிகளைக்குறித்து: ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன்.

47 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின்பேரில்: மனமகிழ்ச்சியாயிருப்பேன்.

48 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன்: உமது பிரமாணங்களைத் தியானிப்பேன்.

Memor esto servi tui.

நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை: உமது அடியேனுக்காக நினைத்தருளும்.

50 அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல்: உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது.

51 அகந்தைக்காரர் என்னை மிகவும் பரியாசம்பண்ணியும்: நான் உமது வேதத்தைவிட்டு விலகினதில்லை.

52 கர்த்தாவே, ஆதிமுதலான உமது நியாயத்தீர்ப்புகளை நான் நினைத்து: என்னைத் தேற்றுகிறேன்.

53 உமது வேதத்தை விட்டுவிலகுகிற துன்மார்க்கர்நிமித்தம்: நடுக்கம் என்னைப் பிடித்தது.

54 நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே: உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின.

55 கர்த்தாவே, இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து: உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்.

56 நான் உமது கட்டளைகளைக் கைக்கொண்டபடியினால்: இது எனக்குக் கிடைத்தது.

Portio mea, Domine.

கர்த்தாவே, நீரே என் பங்கு: நான் உமது வசனங்களைக் கைக்கொள்ளுவேன் என்றேன்.

58 முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன்: உமது வாக்கின்படி எனக்கு இரங்கும்.

59 என் வழிகளைச் சிந்தித்துக்கொண்டு: என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன்.

60 உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி: நான் தாமதியாமல் தீவிரித்தேன்.

61 துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும்: உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை.

62 உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம்: உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன்.

63 உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும்: நான் தோழன்.

64 கர்த்தாவே, பூமி உமது கிருபையினால் நிறைந்திருக்கிறது: உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

Bonitatem fecisti.

கர்த்தாவே, உமது வசனத்தின்படி: உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்.

66 உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித்தருளும்: உம்முடைய கற்பனைகளின்பேரில் விசுவாசமாயிருக்கிறேன்.

67 நான் உபத்திரவப்படுவதற்குமுன் வழிதப்பி நடந்தேன்: இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.

68 தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர்: உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

69 அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் பொய்களைப் பிணைக்கிறார்கள்: நானோ, முழு இருதயத்தோடும் உம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன்.

70 அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது: நானோ, உம்முடைய வேதத்தின்பேரில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்.

71 நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது: அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்.

72 அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும்: நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.

மாலை ஜெபம்.

Manus tuæ fecerunt me.

உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று: உம்முடைய கற்பனைகளைக் கற்றுக்கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும்.

74 நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறபடியால்: உமக்குப் பயந்தவர்கள் என்னைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்.

75 கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும்: உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன்.

76 நீர் உமது அடியேனுக்குக் கொடுத்த உமது வாக்கின்படி: உமது கிருபை என்னைத் தேற்றுவதாக.

77 நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக: உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.

78 அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப்பார்த்தபடியால் வெட்கப்பட்டுப்போவார்களாக: நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன்.

79 உமக்குப் பயந்து, உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள்: என்னண்டைக்குத் திரும்புவார்களாக.

80 நான் வெட்கப்பட்டுப்போகாதபடிக்கு: என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக்கடவது.

Defecit anima mea.

உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது: உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

82 எப்பொழுது என்னைத் தேற்றுவீர் என்று: உம்முடைய வாக்கின் மேல் நோக்கமாய் என் கண்கள் பூத்துப்போகிறது.

83 புகையிலுள்ள துருத்தியைப்போலானேன்: உமது பிரமாணங்களையோ மறவேன்.

84 உமது அடியானுடைய நாட்கள் எம்மாத்திரம்: என்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நீர் எப்பொழுது நியாயத்தீர்ப்பு செய்வீர்?

85 உம்முடைய வேதத்துக்கு விரோதமாய்: அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்கள்.

86 உம்முடைய கற்பனைகளெல்லாம் உண்மையாயிருக்கிறது: அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள்; நீர் எனக்குச் சகாயம்பண்ணும்.

87 அவர்கள் என்னைப் பூமியிலிராமல் நீக்கிவிடச் சற்றே தப்பிற்று: ஆனாலும் நான் உமது கட்டளைகளை விட்டுவிடவில்லை.

88 உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்: அப்பொழுது நான் உம்முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன்.

In æternum, Domine.

கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும்: வானங்களில் நிலைத்திருக்கிறது.

90 உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும்: பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலைத்திருக்கிறது.

91 உம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றும்படி அவைகள் இந்நாள் வரைக்கும் நிற்கிறது: சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்.

92 உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால்: என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.

93 நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்: அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்.

94 நான் உம்முடையவன், என்னை இரட்சியும்: உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன்.

95 துன்மார்க்கர் என்னை அழிக்கக் காத்திருக்கிறார்கள்: நான் உமது சாட்சிகளைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

96 சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்: உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்.

Quomodo dilexi !

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்: நாள்முழுதும் அது என் தியானம்.

98 நீர் உம்முடைய கற்பனைகளைக்கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்: அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது.

99 உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால்: எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்.

100 உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால்: முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.

101 உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு: சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.

102 நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால்: நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன்.

103 உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்: என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்.

104 உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன்: ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.

இருபத்தாறும் தேதி.

காலை ஜெபம்.

Lucerna pedibus meis.

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்: என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

106 உம்முடைய நீதிநியாயங்களைக் காத்து நடப்பேன் என்று ஆணையிட்டேன்: அதை நிறைவேற்றுவேன்.

107 நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன்: கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்.

108 கர்த்தாவே, என் வாயின் உற்சாகபலிகளை நீர் அங்கிகரித்து: உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும்.

109 என் பிராணன் எப்பொழுதும் என் கையில் இருக்கிறது: ஆனாலும் உம்முடைய வேதத்தை மறவேன்.

110 துன்மார்க்கர் எனக்குக் கண்ணிவைக்கிறார்கள்: ஆனாலும் நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழிதவறேன்.

111 உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன்: அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி.

112 முடிவுபரியந்தம் இடைவிடாமல் உம்முடைய பிரமாணங்களின்படி செய்ய: என் இருதயத்தைச் சாய்த்தேன்.

Iniquos odio habui.

வீண் சிந்தனைகளை நான் வெறுத்து: உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்.

114 என் மறைவிடமும் என் கேடகமும் நீரே: உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

115 பொல்லாதவர்களே, என்னை விட்டு அகன்றுபோங்கள்: என் தேவனுடைய கற்பனைகளை நான் கைக்கொள்ளுவேன்.

116 நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்: என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும்.

117 என்னை ஆதரித்தருளும், அப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு: எக்காலமும் உம்முடைய பிரமாணங்களின்பேரில் நோக்கமாயிருப்பேன்.

118 உமது பிரமாணங்களை விட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்துப் போடுகிறீர்: அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே.

119 பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரையும் களிம்பைப்போல அகற்றிவிடுகிறீர்: ஆகையால் உமது சாட்சிகளில் பிரியப்படுகிறேன்.

120 உமக்குப் பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது: உமது நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படுகிறேன்.

Feci judicium.

நியாயமும் நீதியும் செய்கிறேன்: என்னை ஒடுக்குகிறவர்களுக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்.

122 உமது அடியேனுக்கு நன்மையாகத் துணைநில்லும்: அகங்காரிகள் என்னையொடுக்கவொட்டாதேயும்.

123 உமது இரட்சிப்புக்கும் உமது நீதியின் வார்த்தைக்கும் காத்திருக்கிறதினால்: என் கண்கள் பூத்துப்போகிறது.

124 உமது அடியேனை உமது கிருபையின்படியே நடத்தி: உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

125 நான் உமது அடியேன்: உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்.

126 நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளைவந்தது: அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள்.

127 ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும்: அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்.

128 எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி: சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.

Mirabilia.

உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள்: ஆகையால் என் ஆத்துமா அவைகளைக் கைக்கொள்ளும்.

130 உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து: பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.

131 உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால்: என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்.

132 உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்களுக்கு வழங்கும் நியாயத்தின்படியே: என்னை நோக்கிப்பார்த்து எனக்கு இரங்கும்.

133 உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி: ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.

134 மனுஷர் செய்யும் இடுக்கத்துக்கு என்னை விலக்கி விடுவித்தருளும்: அப்பொழுது நான் உம்முடைய கட்டளைகளைக் காத்துக்கொள்ளுவேன்.

135 உமது அடியேன்மேல் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணி: உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

136 உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால்: என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஒடுகிறது.

Justus es, Domine.

கர்த்தாவே, நீர் நீதிபரர்: உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள்.

138 நீர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும்: மகா உண்மையுமானவைகள்.

139 என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால்: என் பக்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது.

140 உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது: உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன்.

141 நான் சிறியவனும் அசட்டைபண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன்: ஆனாலும் உமது கட்டளைகளை மறவேன்.

142 உம்முடைய நீதி நித்திய நீதி: உம்முடைய வேதம் சத்தியம்.

143 இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது: ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி.

144 உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்: என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்.

மாலை ஜெபம்.

Clamavi in toto corde meo.

முழு இருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்: உம்முடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன்.

146 உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை இரட்சியும்: அப்பொழுது நான் உம்முடைய சாட்சிகளைக் காத்துக்கொள்ளுவேன்.

147 அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்: உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

148 உமது வசனத்தைத் தியானிக்கும்படி: குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்.

149 உம்முடைய கிருபையின்படி என் சத்தத்தைக் கேளும்: கர்த்தாவே, உம்முடைய நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும்.

150 தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள்: அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள்.

151 கர்த்தாவே, நீர் சமீபமாயிருக்கிறீர்: உமது கற்பனைகளெல்லாம் உண்மை.

152 நீர் உம்முடைய சாட்சிகளை என்றென்றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர் என்பதை: அவைகளால் நான் நெடுநாளாய் அறிந்திருக்கிறேன்.

Vide humilita tem.

என் உபத்திரவத்தைப் பார்த்து, என்னை விடுவியும்: உமது வேதத்தை மறவேன்.

154 எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும்: உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும்.

155 இரட்சிப்பு துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறது: அவர்கள் உமது பிரமாணங்களைத் தேடார்கள்.

156 கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது: உமது நியாயங்களின்படி என்னை உயிர்ப்பியும்.

157 என்னைத் துன்பப்படுத்துகிறவர்களும் என்னை விரோதிக்கிறவர்களும் அநேகர்: ஆனாலும் உம்முடைய சாட்சிகளை விட்டு விலகேன்.

158 உமது வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது: எனக்கு அருவருப்பாயிருந்தது.

159 இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன்: கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும்.

160 உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம்: உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்.

Principes persecuti sunt.

பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள்: ஆனாலும் என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது.

162 மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழ்கிறதுபோல: நான் உமது வார்த்தையின்பேரில் மகிழுகிறேன்.

163 பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்: உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்.

164 உமது நீதிநியாயங்களினிமித்தம்: ஒருநாளில் எழுதரம் உம்மைத் துதிக்கிறேன்.

165 உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை.

166 கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்கு நான் காத்திருந்து: உம்முடைய கற்பனைகளின்படி செய்கிறேன்.

167 என் ஆத்துமா உமது சாட்சிகளைக் காக்கும்: அவைகளை நான் மிகவும் நேசிக்கிறேன்.

168 உமது கட்டளைகளையும் உமது சாட்சிகளையும் காத்து நடக்கிறேன்: என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது.

Appropinquet deprecatio.

கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக: உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனுக்கும்.

170 என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வருவதாக: உமது வார்த்தையின்படி என்னை விடுவித்தருளும்.

171 உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது: என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்.

172 உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்: ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்.

173 நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துகொண்டபடியால்: உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக.

174 கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்: உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.

175 என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது: உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக.

176 காணமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப்போனேன்: உமது அடியேனைத் தேடுவீராக; உமது கற்பனைகளை நான் மறவேன்.

இருபத்தேழாம் தேதி.

காலை ஜெபம்.

120. சங்கீதம். *Ad Dominum.*

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்: அவர் எனக்குச் செவிகொடுத்தார்.

2 கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும்: என் ஆத்துமாவைத் தப்புவியும்.

3 கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்: உனக்கு என்ன செய்யப்படும்?

4 பலவானுடைய கூர்மையான அம்புகளும்: சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.

5 ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும்: கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்.

6 சமாதானத்தைப் பகைக்கிறவர்களிடத்தில்: என் ஆத்துமா குடியிருந்தது போதும்.

7 நான் சமாதானத்தை நாடுகிறேன்: அவர்களோ, நான் பேசும்போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள்.

121. சங்கீதம். *Levavi oculos.*

எனக்கு ஒத்தாசை வரும் மலைகளுக்கு நேராக: என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து: எனக்கு ஒத்தாசை வரும்.

3 உன் காலைத் தள்ளாடவொட்டார்: உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

4 இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை: தூங்குகிறதுமில்லை.

5 கர்த்தர் உன்னைக் காக்கிறவர்: கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

6 பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும்: உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்: அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8 கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும்: இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

122. சங்கீதம். *Lætatus sum.*

கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று: எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

2 எருசலேமே, உன் வாசல்களில்: எங்கள் கால்கள் நிற்கலாயிற்று.

3 எருசலேம் இசைவிணைப்பான; நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது.

4 அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள்: கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்.

5 அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய: நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது.

6 எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்: உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.

7 உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும்: உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.

8 என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும்: உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன்.

9 எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம்: உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்.

123. சங்கீதம். *Ad te levavi oculos meos.*

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே: உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2 இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும்: எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.

3 எங்களுக்கு இரங்கும், கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்: நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம்.

4 சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும்: எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது.

124. சங்கீதம். *Nisi quia Dominus.*

மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது: கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்,

2 கர்த்தர் தாமே: நமது பக்கத்திலிராவிட்டால்,

3 அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில்: நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.

4 அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து: வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி,

5 கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டுபோயிருக்கும் என்று: இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

6 நம்மை அவர்களுடைய பற்களுக்கு: இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

7 வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று: கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

8 நம்முடைய சகாயம்: வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.

125. சங்கீதம். *Qui confidunt.*

கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல்: நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போலிருப்பார்கள்.

2 பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல: கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்.

3 நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு: ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.

4 கர்த்தாவே, நல்லவர்களுக்கும்: இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மைசெய்யும்.

5 தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்காரரோடே போகப்பண்ணுவார்: இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு.

மாலை ஜெபம்.

126. சங்கீதம். *In convertendo.*

சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது: சொப்பனம் காண்கிறவர்கள்போல இருந்தோம்.

2 அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது: அப்பொழுது, கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

3 கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்: இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

4 கர்த்தாவே, தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல: எங்கள் சிறையிருப்பைத் திருப்பும்.

5 கண்ணீரோடே விதைக்கிறவர்கள்: கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

6 அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்: ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.

127. சங்கீதம். *Nisi Dominus.*

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்: அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.

2 கர்த்தர் நகரத்தைக் காவாராகில்: காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

3 நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா: அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

4 இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்: கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.

5 வாலவயதின் குமாரர்: பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

6 அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்: அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்.

128. சங்கீதம். *Beati omnes.*

கர்த்தருக்குப் பயந்து: அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

2 உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்: உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

3 உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போலிருப்பாள்: உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போலிருப்பார்கள்.

4 இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன்: இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

5 கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்: நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

6 நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்: இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

129. சங்கீதம். *Sæpe expugnaverunt.*

என் சிறுவயதுதொடங்கி அநேகந்தரம்: என்னை நெருக்கினார்கள்.

2 என் சிறுவயதுதொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும்: என்னை மேற்கொள்ளாமற்போனார்கள்.

3 உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது: தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்.

4 கர்த்தரோ நீதியுள்ளவர்; துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார் என்று: இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

5 சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கி: பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்.

6 வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக: அது வளருமுன் உலர்ந்துபோம்.

7 அறுக்கிறவன் அதினால் தன் கையையும்: அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும் நிரப்புவதில்லை.

8 கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக: கர்த்தரின் நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம் என்று வழிப்போக்கர் சொல்வதுமில்லை.

130. சங்கீதம். *De profundis.*

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து: உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

2 ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்: என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக.

3 கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால்: யார் நிலைநிற்பான், ஆண்டவரே.

4 உமக்குப் பயப்படும்படிக்கு: உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு.

5 கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது: அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்.

6 எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்திற்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்பார்க்கிலும்: அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

7 இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக: கர்த்தரிடத்தில் கிருபையும் அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.

8 அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும்: மீட்டுக்கொள்வார்.

131. சங்கீதம். *Domine, non est.*

கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல; என் கண்களும் மேட்டிமையுள்ளதல்ல: பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை.

2 தாயின் பால் மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்: என் ஆத்துமா பால் மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது.

3 இதுமுதல் என்றென்றைக்கும்: இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக.

இருபத்தெட்டாம் தேதி.

காலை ஜெபம்.

132. சங்கீதம். *Memento, Domine.*

கர்த்தாவே, தாவீதையும்: அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்.

2 அவன், நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும்: யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்,

3 என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை: என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை;

4 என் கண்களுக்கு நித்திரையையும்: என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

5 கர்த்தருக்கு ஆணையிட்டு: யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான்.

6 இதோ, நாம் எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு: வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்.

7 அவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து: அவர் பாதபடியில் பணிவோம்.

8 கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன்: நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும்.

9 உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து: உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக.

10 நீர் அபிஷேகம்பண்ணுவித்தவனின் முகத்தை: உமது தாசனாகிய தாவீதினிமித்தம் புறக்கணியாதிரும்.

11 உன் கர்ப்பத்தின் கனியை: உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும்,

12 உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால்: அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்.

13 கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு: அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார்.

14 இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்: இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்.

15 அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்துவருவேன்: அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன்.

16 அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்: அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்.

17 அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்: நான் அபிஷேகம்பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன்.

18 அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்: அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்.

133. சங்கீதம். *Ecce, quam bonum!*

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது: எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?

2 அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும்: அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,

3 எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது: அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.

134. சங்கீதம். *Ecce nunc.*

இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே: நீங்கள் எல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

2 உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து: கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

3 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர்: சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.

135. சங்கீதம். *Laudate Nomen.*

அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்: கர்த்தரின் ஊழியக்காரரே, துதியுங்கள்.

2 கர்த்தருடைய வீட்டிலும், நமது தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே: கர்த்தரைத் துதியுங்கள்.

3 கர்த்தர் நல்லவர்; அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: அது இன்பமானது.

4 கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும்: இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்.

5 கர்த்தர் பெரியவர் என்றும்: நம்முடைய ஆண்டவர் எல்லாத் தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன்.

6 வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும்: கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.

7 அவர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி: மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

8 அவர் எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும்: மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார்.

9 எகிப்து தேசமே, உன் நடுவில் பார்வோன்மேலும் அவனுடைய எல்லா ஊழியக்காரர்மேலும்: அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்பினார்.

10 அவர் அநேகம் ஜாதிகளை அடித்து: பலத்த ராஜாக்களைக் கொன்று;

11 எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும்: கானானின் சகல ராஜ்யங்களையும் அழித்து,

12 அவர்கள் தேசத்தைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு: சுதந்தரமாகக் கொடுத்தார்.

13 கர்த்தாவே, உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது: கர்த்தாவே, உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்.

14 கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து: தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்.

15 அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள், வெள்ளியும் பொன்னும்: மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

16 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது: அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

17 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது: அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை.

18 அவைகளைப் பண்ணுகிறவர்களும்: அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலிருக்கிறார்கள்.

19 இஸ்ரவேல் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்: ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

20 லேவி குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்: கர்த்தருக்குப் பயந்தவர்களே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

21 எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு: சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக. அல்லேலூயா.

மாலை ஜெபம்.

136. சங்கீதம். *Confitemini.*

கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்: அவர் கிருபை என்றுமுள்ளது.

2 தேவாதி தேவனைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

3 கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

4 ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

5 வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

6 தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

7 பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

8 பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

9 இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

10 எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

11 அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப்பண்ணினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

12 பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

13 சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

14 அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

15 பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப்போட்டவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

16 தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

17 பெரிய ராஜாக்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

18 பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

19 எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

20 பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

21 அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

22 அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

23 நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

24 நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

25 மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரம் கொடுக்கிறவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

26 பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

137. சங்கீதம். *Super flumina.*

பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து: அங்கே சீயோனை நினைத்து அழுதோம்.

2 அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல்: எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம்.

3 எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்களகீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்.

4 கர்த்தரின் பாட்டை: அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?

5 எருசலேமே, நான் உன்னை மறந்தால்: என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக.

6 நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால்: என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

7 கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்: அவர்கள், அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபாரமட்டும் இடித்துப்போடுங்கள் என்று சொன்னார்களே.

8 பாபிலோன் குமாரத்தியே, பாழாய்ப்போகிறவளே: நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில்செய்கிறவன் பாக்கியவான்.

9 உன் குழந்தைகளைப் பிடித்து: கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்.

138. சங்கீதம். *Confitebor tibi.*

உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்: தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

2 உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்: உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

3 நான் கூப்பிட்டநாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர்: என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்.

4 கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும்: உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.

5 கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால்: அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.

6 கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப்பார்க்கிறார்: மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

7 நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்: என் சத்துருக்களின் கோபத்திற்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.

8 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்: கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

இருபத்தொன்பதாம் தேதி.

காலை ஜெபம்.

139. சங்கீதம். *Domine, probasti.*

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து: அறிந்திருக்கிறீர்.

2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்: என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

3 நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்: என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.

4 என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே: இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.

5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி: உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.

6 இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும்: எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.

7 உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்: உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?

8 நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்: நான் பாதாளத்தில் படுக்கைபோட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

9 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து: சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,

10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும்: உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.

11 இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும்: இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.

12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது, இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்: உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

13 நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்: என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

14 நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்: உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

15 நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திரவிநோதமாய் உருவாக்கப்பட்டபோது: என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.

16 என் கருவை உம்முடைய கண்கள் கண்டது: என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

17 தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்: அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்.

18 அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்: நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.

19 தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்: இரத்தப்பிரியரே, நீங்கள் என்னைவிட்டு அகன்றுபோங்கள்.

20 அவர்கள் உம்மைக்குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிறார்கள்: உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்.

21 கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும்: உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ?

22 முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்: அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்.

23 தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்: என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.

24 வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து: நித்திய வழியிலே என்னை நடத்தும்.

140. சங்கீதம். *Eripe me, Domine.*

கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்: கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்.

2 அவர்கள் தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்தித்து: யுத்தஞ் செய்ய நாள்தோறும் கூட்டங்கூடுகிறார்கள்.

3 சர்ப்பத்தைப்போல் தங்கள் நாவைக் கூர்மையாக்குகிறார்கள்: அவர்கள் உதடுகளின்கீழே விரியன்பாம்பின் விஷம் இருக்கிறது.

4 கர்த்தாவே, துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்: அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப்பார்க்கிறார்கள்.

5 அகங்காரிகள் எனக்குக் கண்ணியையும் கயிறுகளையும் மறைவாய் வைக்கிறார்கள்: வழியோரத்திலே வலையை விரித்து, எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள்.

6 நான் கர்த்தனை நோக்கி, நீர் என் தேவன் என்றேன்: கர்த்தாவே, என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும்.

7 ஆண்டவராகிய கர்த்தாவே, என் இரட்சிப்பின் பெலனே: யுத்த நாளில் என் தலையை மூடினீர்.

8 கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்: அவன் தன்னை உயர்த்தாதபடி அவனுடைய யோசனையை நடந்தேறவொட்டாதேயும்.

9 என்னை வளைந்துகொள்ளுகிறவர்களுடைய உதடுகளின் தீவினைகள்: அவர்கள் தலைகளையே மூடுவதாக.

10 நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக: அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவார்களாக.

11 பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை: கொடுமையான மனுஷனைப் பறக்கடிக்கப் பொல்லாப்பு அவனை வேட்டையாடும்.

12 சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும்: கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்.

13 நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள்: செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்.

141. சங்கீதம். *Domine, clamavi.*

கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், என்னிடத்திற்கு வரத் தீவிரியும்: நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், என் சத்தத்திற்குச் செவிகொடும்.

2 என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும்: என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது.

3 கர்த்தாவே, என் வாய்க்குக் காவல்வையும்: என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.

4 அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக்கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்: அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக.

5 நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்: என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன்.

6 அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டுபோகிறபோது: என் வார்த்தைகள் இன்பமானவைகளென்று கேட்பார்கள்.

7 பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல: எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

8 ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது: உம்மை நம்பியிருக்கிறேன்; என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும்.

9 அவர்கள் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கும்: அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

10 துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக: நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன்.

மாலை ஜெபம்.

142. சங்கீதம். *Voce mea ad Dominum.*

கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்: கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.

2 அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்: அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.

3 என் ஆவி என்னில் தியங்கும்போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்: நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணிவைத்தார்கள்.

4 வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும், என்னை அறிவார் ஒருவரும் இல்லை: எனக்கு அடைக்கலமில்லாமற்போயிற்று; என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை.

5 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்: நீரே என் அடைக்கலமும்: ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.

6 என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்: என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்.

7 உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்: எனக்கு நீர் தயவுசெய்யும்போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்.

143. சங்கீதம். *Dominc, exaudi.*

கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும்: உமது உண்மையின்படியும் உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.

2 ஜீவனுள்ள ஒருவனும் உமக்குமுன்பாக நீதிமான் அல்லாததினாலே: அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்.

3 சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி: வெகுகாலத்துக்குமுன் மரித்தவர்கள்போல் என்னை இருளிலிருக்கப்பண்ணுகிறான்.

4 என் ஆவி என்னில் தியங்குகிறது: என் இருதயம் எனக்குள் சோர்ந்துபோகிறது.

5 பூர்வ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்: உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.

6 என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்: வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.

7 கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்துபோகிறது: நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு, உமது முகத்தை எனக்கு மறையாதேயும்.

8 அதிகாலையிலே உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன்: நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

9 கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்: உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்.

10 உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்: உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

11 கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்: உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.

12 உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்: நான் உமது அடியேன்.

முப்பதாம் தேதி.

காலை ஜெபம்.

144. சங்கீதம். *Benedictus. Dominus.*

என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற: என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

2 அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும்: என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.

3 கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும்: மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும் அவன் எம்மாத்திரம்?

4 மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்: அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம்.

5 கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி: பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்.

6 மின்னல்களை வரவிட்டுச் சத்துருக்களைச் சிதறடியும்: உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும்.

7 உயரத்திலிருந்து உமது கரத்தை நீட்டி: ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும்.

8 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையுமுடைய: அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.

9 கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்: தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

10 நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து: உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர்.

11 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையுமுடைய: அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.

12 அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும்: எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனைமூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள்.

13 எங்கள் களஞ்சியங்கள் சகலவித வஸ்துக்களையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பியிருக்கும்: எங்கள் கிராமங்களில் எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும்.

14 எங்கள் எருதுகள் பலத்தவைகளாயிருக்கும்: சத்துரு உட்புகுதலும், குடியோடிப்போகுதலும் இராது, எங்கள் வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது.

15 இவ்விதமான சீரைப் பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது: கர்த்தனைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.

145. சங்கீதம். *Exaltabo te, Deus.*

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி: உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.

2 நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து: எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

3 கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்: அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

4 தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சி சொல்லி: உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.

5 உம்முடைய சிறந்த மகிமைப்பிரதாபத்தையும்: உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன்.

6 ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்: உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

7 அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி: உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்.

8 கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும்: நீடியசாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

9 கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்: அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலும் உள்ளது.

10 கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்: உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.

11 மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும்: உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு;

12 உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து: உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.

13 உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம்: உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது.

14 கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி: மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.

15 எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது: ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.

16 நீர் உமது கையைத்திறந்து: சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.

17 கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும்: தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.

18 தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்: உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

19 அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து: அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

20 கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி: துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.

21 என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக: மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது.

146. சங்கீதம். *Lauda, anima mea.*

அல்லேலூயா, என் ஆத்துமாவே: கர்த்தரைத் துதி.

2 நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்: நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

3 பிரபுக்களையும்: இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள்.

4 அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்: அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.

5 யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து: தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்,

6 அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்: அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்.

7 அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்: பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்; கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்.

8 குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார்: மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார்; நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார்.

9 பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்றபிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்: துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்.

10 கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார்: சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம்பண்ணுகிறார். அல்லேலூயா.

மாலைஜெபம்.

147. சங்கீதம். *Laudate Dominum.*

கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம்பண்ணுகிறது நல்லது: துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

2 கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்: துரத்துண்ட இஸ்ரவேலனைக் கூட்டிச்சேர்க்கிறார்.

3 இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்: அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.

4 அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி: அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்.

5 நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்: அவருடைய அறிவு அளவில்லாதது.

6 கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார்: துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்.

7 கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள்: நம்முடைய தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம்பண்ணுங்கள்.

8 அவர் வானத்தை மேகங்களால் மூடி: பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்.

9 அவர் மிருகஜீவன்களுக்கும்: கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும், ஆகாரங்கொடுக்கிறார்.

10 அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்: வீரனுடைய கால்களில் பிரியப்படார்.

11 தமக்குப் பயந்து, தமது கிருபைச்குக் காத்திருக்கிறவர்கள்மேல்: கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

12 எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி: சீயோனே, உன் தேவனைத் துதி.

13 அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி: உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசிர்வதிக்கிறார்.

14 அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி: உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்.

15 அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்: அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது.

16 பஞ்சைப்போல் உறைந்த மழையைத் தருகிறார்: சாம்பலைப்போல் உறைந்த பனியைத் தூவுகிறார்.

17 அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார்: அவருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்?

18 அவர் தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப்பண்ணுகிறார்: தமது காற்றை வீசும்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும்.

19 யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும்: இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார்.

20 அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை: அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள். அல்லேலூயா.

148. சங்கீதம். *Laudate Dominum.*

அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்: உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்.

2 அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்: அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.

3 சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்: பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள்.

4 வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள்: ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.

5 அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது: அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.

6 அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்: மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்.

7 பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்: மகா மச்சங்களே, சகல ஆழங்களே,

8 அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே: அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,

9 மலைகளே, சகல மேடுகளே: கனிமரங்களே, சகல கேதுருக்களே,

10 காட்டு மிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே: ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே,

11 பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே: பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே,

12 வாலிபரே, கன்னிகைகளே: முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்.

13 அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்: அவருடைய நாமம்மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.

14 அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக: தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

149. சங்கீதம். *Cantate Domino.*

அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்: பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக.

2 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும்: சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள்.

3 அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து: தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணக்கடவர்கள்.

4 கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்: சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

5 பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து: தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள்.

6 ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும்: ஜனங்களைத் தண்டிக்கவும்;

7 அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும்: எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும்;

8 அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும்: அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.

9 இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்: அல்லேலூயா.

150. சங்கீதம். *Laudate Dominum.*

அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்: அவருடைய வல்லமை விளங்கும் ஆகாயவிரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்.

2 அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்: மாட்சிமைபொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.

3 எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்: வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.

4 தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்: யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்.

5 ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்: பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.

6 சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக: அல்லேலூயா.

THE FORM AND MANNER OF MAKING, AND ORDAINING OF PRIESTS AND DEACONS,

ACCORDING TO THE ORDER OF THE CHURCH OF ENGLAND.

இங்கிலாந்துதேசத்துத் திருச்சபையில்

வழங்கி வருகிற ஒழுங்கின்படி

குருப்பட்டமும் உதவிக்குருப்பட்டமும் கொடுக்கும் முறைமை.

முகவுரை.

பரிசுத்த வேதவாக்கியங்களையும் பூர்வ ஆசிரியர் எழுதின நூல்களையும் உற்று வாசிக்கிற யாவரும், அப்போஸ்தலருடைய காலம்முதல் கிறிஸ்து சபையில் அத்தியட்சர், குருமார், உதவிக்குருமார் ஆகிய மூவகைப் பட்டம்பெற்ற வெவ்வேறான பணிவிடைக்காரர்கள் இருந்திருக்கிறார்களென்று தெளிவாக அறிந்துகொள்வார்கள். அந்தப் பட்டங்கள் எப்பொழுதும் கனமாக மதிக்கப்பட்டிருக்கிறபடியால், ஒருவன் முந்தி அழைக்கப்பட்டும், சோதிக்கப்பட்டும், பரிட்சிக்கப்பட்டும், பட்டம் பெறுவதற்கு ஏற்ற லட்சணங்களை உடையவனென்று காணப்பட்டும், இதற்கென்று அதிகாரம் பெற்றவர்களால் சபையில் ஜெபம்பண்ணி, சிரசின்மேல் கைகளை வைத்து, பட்டத்துக்குத் தெரிந்து ஏற்படுத்தப்பட்டும் இருந்தாலொழிய, மற்றப்படி ஒருவனும் தானாய் இந்தப் பணிவிடைகளில் ஒன்றையும் செய்யத் துணியலாகாது. ஆதலால் இங்கிலாந்துதேசசபையில் இந்தப் பட்டங்கள் நிலைபெற்றுக் கிரமமாய் வழங்கி மதிக்கப்படும்பொருட்டு, பின்சொல்லப்படுகிற ஒழுங்கின்படி ஒருவன் அழைக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, பரிட்சிக்கப்பட்டு சேர்க்கப்படவேண்டும். அல்லது இதற்குமுன் அத்தியட்சருடைய அதிகாரமுறையாய்ப் பட்டம் பெற்றிருக்கவேண்டும். மற்றப்படி ஒருவனும் இங்கிலாந்துசபை ஒழுங்கின்படி, அத்தியட்சர் என்றாவது, குரு என்றாவது, உதவிக்குரு என்றாவது எண்ணப்படக்கூடாது.

விசேஷித்த உத்தரவு கிடைத்திருந்தாலொழிய ஒருவருக்கும் 23 வயதாகிறதற்குமுன் உதவிக்குருப்பட்டம் கொடுக்கப்படாது. குருப்பட்டம் பெறுகிறவர் 24 வயதுக்குக் குறையாதவராயிருக்கவேண்டும். அத்தியட்சத்துவத்துக்குப் பிரதிஷ்டைசெய்யப்படுகிறவர் 30 வயதுக்குக் குறையாதவராயிருக்கவேண்டும்.

ஒருவர் குற்றமில்லாத நடக்கையும் நல்லொழுக்கமும் உடையவராயிருக்கிறாரென்று அத்தியட்சர் தாமே அறிந்தபின், அல்லது தகுந்த சாட்சியால் கேட்டு அறிந்தபின், அவரைப் பரிட்சித்து, சோதித்து, அவர் லத்தீன்பாஷை படித்தவரும், வேத அறிவில் தேறினவரும் என்று கண்டால், கனோன் சட்டத்தில் குறிக்கப்பட்ட காலத்திலாவது, அவசரம் நேரிட்டால் வேறெந்த ஞாயிற்றுக்கிழமையில் அல்லது திருநாளிலாவது, சபையாருக்கு முன்பாக, பின்வரும் முறைமையின்படி அவருக்கு உதவிக்குருப்பட்டம் கொடுக்கலாம்.

THE FORM AND MANNER OF MAKING OF DEACONS.

உதவிக்குருப்பட்டம் கொடுக்கும் முறைமை.

¶ அத்தியட்சர் குறித்த நாளில் காலைஜெபம் முடிந்தபின், உதவிக்குருப்பட்டம்பெற வருகிறவர்களுடைய உத்தியோகம் கடமை இன்னதென்றும், இந்த முறைமை கிறிஸ்துசபையில் மிகவும் அவசியமானதென்றும், இந்தப் பட்டம் பெறுகிறவர்களை ஜனங்கள் கனம்பண்ணவேண்டுமென்றும் காட்டும்படி பிரசங்கம் செய்யவேண்டும்.

¶ திருமேஜையண்டையில் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அத்தியட்சருக்கு முன்பாக, சிரேஷ்ட குருவாகிய ஆர்ச்சுடீக்கனாவது, அத்தியட்சரால் நியமிக்கப்பட்ட குருக்களில் வேறொருவராவது, உதவிக் குருப்பட்டம் பெறப்போகிறவர்களை யோக்கியமாய் உடுக்கப்பட்டவர்களாக நிறுத்தி, சொல்லவேண்டியதாவது:

கர்த்தருக்குள் சங்கைபொருந்திய தகப்பனே, உதவிக்குருப்பட்டம் பெறுவதற்கு இவர்களை உம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் நம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிற இவர்கள் தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய சபை பக்திவிர்த்தியடையவும், கல்வியிலும் பக்தியுள்ள நடக்கையிலும் தங்கள் பணிவிடையை நடத்த தகுந்தவர்களாயிருக்கிறார்களா என்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

¶ அதற்குச் சிரேஷ்ட குரு மறுமொழியாகச் சொல்வது:

இவர்களைக்குறித்து நான் விசாரித்தும், இவர்களைப் பரிட்சித்தும் இருக்கிறேன்; இவர்கள் தகுந்தவர்களாயிருக்கிறார்களென்று எண்ணுகிறேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் ஜனங்களைப்பார்த்துச் சொல்வது:

சகோதரரே, இப்பொழுது உதவிக்குருப்பட்டம் பெறுவதற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இவர்களில் யாராவது, இந்தத் திருப்பணிவிடை செய்யும்படி பட்டம்-பெறக்கூடாததற்குக் காரணமான யாதொரு தடையாவது, வெளிப்படையான குற்றமாவது உண்டென்று உங்களில் யாராவது அறிந்திருந்தால், அவன் தேவனுடைய நாமத்தை முன்னிட்டுவந்து, அந்தக் குற்றம் அல்லது தடை இன்னதென்று சொல்லக்கடவன்.

¶ ஒருவன்மேல் யாதொரு பெரிய குற்றமாவது தடையாவது சொல்லப்பட்டால், அவன் அதற்கு நீங்கினவனென்று தெளிவாகும்வரையும் அத்தியட்சர் அவனுக்குப் பட்டங்கொடாமல் நிறுத்திவைக்கவேண்டும்.

¶ அப்பொழுது பட்டம் பெறத் தகுந்தவர்களென்று காணப்படுகிறவர்களுக்காக, சபையார் ஜெபம்பண்ணவேண்டுமென்று அத்தியட்சர் கேட்டுக்கொண்டதின்பேரில், அவரும் குருமாரும் சபையாரும் லித்தானியா முதலிய ஜெபங்களைப் பாட அல்லது சொல்லவேண்டும்.

லித்தானியா என்னும் சாதாரணப் பிரார்த்தனை.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்த ஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும்; எங்கள் பாவங்களுக்குத்தக்க தண்டனை செய்யாதேயும்: தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும்; மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும்; பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும்; உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இருதயக் குருட்டாட்டத்தில் நின்றும்; அகந்தையிலும் வீண்பெருமையிலும் மாயத்திலும் நின்றும்; பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும், சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

விபசாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும்; உலகத்தினாலும் மாம்சத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும்; பெருவாரி விஷவியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும்; யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில் வரும் மரணத்திலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகலவித கலகத்திலும், அதிகாரிகளுக்கு விரோதமான கட்டுப்பாட்டிலும், ராஜதுரோகத்திலும் நின்றும்; சகலவித பொய்ப்போதகத்திலும் வேதப்புரட்டிலும், சபைப்பிரிவினையிலும் நின்றும்; இருதய கடினத்திலும், உமது வசனத்தையும் கற்பனையையும் அசட்டைபண்ணும் துணிவிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும்; உமது பரிசுத்தப் பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும்; உமது ஞானஸ்நானம் உபவாசம் சோதனையினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும்; உமது சிலுவைபாடுகளினிமித்தமும்; உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும்; மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினதினிமித்தமும்; பரிசுத்தஆவி வந்ததினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

துக்கப்படுங்காலத்திலும், சுகப்படுங்காலத்திலும், மரணவேளையிலும், நியாயத்தீர்ப்புநாளிலும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

கர்த்தராகிய தேவனே, பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்; எங்குமுள்ள உமது பரிசுத்த சபையைச் சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பணிவிடைக்காரியாகிய **விக்தோரியா** என்னும் எங்கள் காருணிய சக்கிரவர்த்தினி உம்மைச் செம்மையாய் ஆராதிக்கவும், நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும், அவளைக் காத்து ஸ்திரப்படுத்தவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருடைய இருதயத்தை உம்மைப் பற்றும் விசுவாசத்திலும் பயத்திலும் அன்பிலும் ஆண்டு நடத்தி; அவர் எப்பொழுதும் உம்மிடத்தில் நம்பிக்கையாயிருக்கவும், உம்முடைய கனத்தையும் மகிமையையும் எப்பொழுதும் நாடவும் கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருக்குச் சகாயரும் இரட்சகருமாயிருந்து, சத்துருக்கள் எல்லாரையும் ஜெயங்கொள்ள அவருக்குத் தயைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அத்தியட்சமார், குருமார், உதவிக்குருமார் யாவருக்கும், உமது வசனத்தைப்பற்றிய மெய்யறிவாகிய பிரகாசத்தை அளித்து; அவர்கள் பிரசங்கத்தினாலும் நடக்கையினாலும் அவ்வசனத்தைத் தகுதியாய்ப் பிரசித்தஞ்செய்து காண்பிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

இப்பொழுது உதவிக்குருப்பட்டம் [குருப்பட்டம்] பெறப்போகிற உம்முடைய ஊழியக்காரராகிய இவர்களை ஆசீர்வதித்து, இவர்கள் உமது சபைக்கு பக்திவிருத்தியாகவும் உமது நாமத்துக்கு மகிமையாகவும் செய்

யப்போகிற திருப்பணிவிடையை ஏற்றவிதமாய் நடப்பிக்கும்படி, உமது கிருபையை இவர்கள்மேல் பொழிந்தருளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ராஜ்ய பரிபாலன ஆலோசனைக் கர்த்தாக்களுக்கும், பிரபுக்கள் அனைவருக்கும், கிருபையையும் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி; அவர்கள் நியாயத்தை நடப்பிக்கவும், சத்தியத்தைப் பரிபாலனம்பண்ணவும், கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தேசங்களுக்கும் ஒருமையையும், சமாதானத்தையும், ஏகசிந்தையையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் உம்மில் அன்புகூர்ந்து, உமக்குப் பயந்து, உமது கற்பனைகளின்படி ஜாக்கிரதையாய் நடக்க, எங்களுக்கு நல்மனதைக் கொடுக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தைச் சாந்தமாய்க் கேட்டு, அன்புடனே உட்கொண்டு, ஆவியின் கனிகளைக் கொடுக்கும்படி, கிருபையை அதிகமதிகமாய்த் தந்தருளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வழிதப்பி மோசம்போன யாவரையும் சத்திய வழியில் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிற்கிறவர்களைப் பலப்படுத்தி, மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து, விழுந்தவர்களைக் கைதூக்கி; கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் ஆதரவையும் சகாயத்தையும் ஆறுதலையும் செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிலத்திலும் நீரிலும் யாத்திரைபண்ணுகிற யாவரையும், பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீகளெல்லாரையும், சகல வியாதிக்காரரையும் குழந்தைகளையும் காப்பாற்றி; காவலில் அடைபட்டவர்கள் சிறைப்பட்டவர்கள் யாவருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தாய்தந்தையில்லாப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும், திக்கற்றவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும், காத்துப் பராமரிக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எல்லா மனுஷருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களைப் பகைக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் அவதூறுபண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நாங்கள் அநுபவிக்கும்படி, அவைகளை எங்கள் உபயோகத்துக்காகத் தந்து காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து, எல்லாப் பாவங்களையும் அஜாக்கிரதையையும் அறியாமையையும் மன்னித்து; உமது பரிசுத்த வசனத்தின்படி எங்கள் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதற்கு உமது பரிசுத்த ஆவியின் கிருபையை அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச்செய்யும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, கேட்டருளும்.
கிறிஸ்துவே, கேட்டருளும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் அவரோடேகூட ஜனங்களும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, எங்கள் பாவங்களுக்குத்தக்கதாக எங்களைத் தண்டியாதேயும்.

மறுமொழி: எங்கள் அக்கிரமங்களுக்குத்தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாதேயும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே, துன்பங்களும் இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும்; உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாயதந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபைசெய்தருளும்.

கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து எங்களை இரட்சியும்.

பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும், அவர்களுக்கு முந்தின பூர்வகாலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க, எங்கள் காதுகளால் கேட்டோம்.

கர்த்தாவே, உமது மகிமைப்பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து, எங்களை இரட்சியும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கிறிஸ்துவே, எங்கள் சத்துருக்களை விலக்கி எங்களை இரட்சியும்.

கிருபையாய் எங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கும்.

உருக்கமாய் எங்கள் மனவிசாரங்களைப் பாரும்.

இரக்கமாய் உமது ஜனத்தின் பாவங்களை மன்னியும்.

தயவாய், இரக்கத்துடனே எங்கள் ஜெபங்களைக் கேளும்.

தாவீதின் மைந்தனே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, இப்பொழுதும் எப்பொழுதும் செவிகொடுத்தருளும்.

கிறிஸ்துவே, கிருபையாய்க் கேளும்; கிறிஸ்துநாதரே, கிருபையாய்க் கேளும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: நாங்கள் உம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப்பார்த்து, நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகளெல்லாவற்றையும் உமது நாமத்துக்கு மகிமையுண்டாக விலக்கி, எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும்; உமக்குக் கனமும் மகிமையும் உண்டாக எப்பொழுதும் மாசில்லாத பரிசுத்த நடக்கையுள்ளவர்களாய் உம்மைச் சேவிக்கவும், கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துநாதர் மூலமாய் மனத்தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ அப்பொழுது நற்கருணைமுறைமையைப் பாட அல்லது சொல்லவேண்டும். அதற்கடுத்த சுருக்கஜெபமும், நிருபவாக்கியமும், சுவிசேஷவாக்கியமுமாவன:

சுருக்கஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது திவ்வியசெயலால் திருச்சபையில் வெவ்வேறான பட்டமுள்ள பணிவிடைக்காரரை ஏற்படுத்தி, முதலாம் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவான் முதலானவர்களை ~~உதவிக்குருப்~~பட்டத்துக்கென்று தெரிந்துகொள்ளும்படி உமது அப்போஸ்தலரை ஏவியருளினீரே; அந்த ~~உதவிக்குரு~~ப்பட்டத்துக்கும் பணிவிடைக்கும் இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கிற உம்முடைய ஊழியக்காரராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப்பாரும். உமது திருநாமத்துக்கு மகிமையும் உமது சபைக்கு பக்திவிருத்தியும் உண்டாக, இந்தப் பணிவிடையில் இவர்கள், போதகத்தினாலும் நடக்கையினாலும், உமக்கு உண்மையாய் ஊழியஞ்செய்யும்படி, உமது வசனத்தை அறியும் மெய்யறிவினாலே இவர்களை நிரப்பி, மாசற்ற பரிசுத்த நடக்கையினாலே இவர்களை அலங்கரித்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 தீமோ. 3. 8.

உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கம் உள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களா

னால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.

¶ அல்லது, அப்போஸ்தலர் நடபடி ஆறும் அதிகாரத்திலிருந்து வாசிக்கவேண்டியது.

சுவிசேஷவாக்கியத்துக்காக: அப். 6. 2.

அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்புவையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியாபட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு, அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

¶ சுவிசேஷவாக்கியம் வாசிக்கப்படுமுன் அத்தியட்சர் தம்முடைய ஆசனத்தில் உட்கார்ந்து, பட்டம்பெற வந்திருக்கிறவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து, ஜனங்களுக்கு முன்பாகக் கேட்கவேண்டிய கேள்விகளாவன:

தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய ஜனங்கள் பக்திவிருத்தி அடையவும், அவருக்கு ஊழியஞ்செய்யத்தக்கதாய், நீங்கள் இந்தத் திருப்பணிவிடையைச் செய்ய ஏற்படும்படி, உங்கள் உள்ளம் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டிருக்கிறதென்று நம்புகிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே நம்புகிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் திருச்சபையில் பணிவிடைசெய்வதற்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின்படியும், இந்த ராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சரியான ஒழுங்கின்படியும், மெய்யாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று நினைக்கிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே நினைக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கிய திவ்விய அதிகாரமுள்ள வேதவசனங்களையெல்லாம் நீங்கள் உண்மையாய் விசுவாசிக்கிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே விசுவாசிக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் பணிவிடைசெய்யும்படி நியமிக்கப்படும் ஆலயத்தில் கூடிவரும் ஜனங்களுக்கு அந்த வேதவாக்கியங்களை உற்சாகமாய் வாசித்துவருவீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே வாசித்துவருவேன்.

அத்தியட்சர் சொல்வது:

உதவிக்குருவானவன் பணிவிடைசெய்ய நியமிக்கப்படும் ஆலயத்தில் தேவாராதனைசெய்யும்போதும், விசேஷமாய்ப் பரிசுத்த நற்கருணை கொடுக்கும்போதும், குருவானவருக்கு உதவிசெய்யவும், பரிசுத்த வேதவாக்கியங்களையும் பிரசங்கங்களையும் வாசிக்கவும், இளைஞருக்கு ஞானோபதேச வினாவிடையைப் போதிக்கவும், குருவானவர் இல்லாத சமயத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கவும், அத்தியட்சர் உத்தரவு கொடுத்தால் பிரசங்கம்பண்ணவும் கடமையுள்ளவனாயிருக்கிறான். மேலும் தரித்திரர் விசாரணைக்கு ஒழுங்குசெய்திருக்கும் இடங்களில் உதவிக்குருவானவன் தன் சேகரத்திலுள்ள வியாதியஸ்தரையும், எளியவர்களையும், பலவீனர்களையும் விசாரித்து, அவர்களுடைய நிலைமை, பேர், இடம் இன்னதென்று குருவானவரிடத்தில் தெரியப்படுத்தி, அவருடைய ஏவுதலால் சபையார் முதலானவர்கள் கொடுக்கும் தர்மங்களினாலே அவர்களுக்கு உதவிகிடைக்கும்படி செய்யவும், கடமையுள்ளவனாயிருக்கிறான். இதையெல்லாம் சந்தோஷத்தோடும் உற்சாகமனதோடும் செய்வீர்களா?

மறுமொழி: தேவனுடைய உதவியினால், அப்படியே செய்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

உங்கள் நடக்கையையும், உங்கள் வீட்டாருடைய நடக்கையையும் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு ஏற்றதாகச் சீர்திருத்தவும், நீங்களும் அவர்களும் உங்களாலானமட்டும் கிறிஸ்துவின் மந்தைக்கு நன்மாதிரிகளாய் இருக்கவும் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே நடந்துகொள்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

திருச்சபையை விசாரிக்கிற அத்தியட்சர் முதலான அதிகாரிகளுக்கும், உங்களை விசாரித்து நடத்தும்படி அதிகாரம்பெற்றிருக்கிற மற்றவர்களுக்கும் பணிவாய்க் கீழ்ப்படிந்து அவர்கள் சொல்லும் பக்திக்கேற்ற புத்திமதிகளை உற்சாகத்தோடு கேட்டு நடப்பீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே நடக்கப் பிரயாசப்படுவேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் தமக்குமுன்னே பணிவாய் முழங்கால்படியிட்டிருக்கிற அவர்கள் ஒவ்வொருவர் சிரசின்மேலும் தம்முடைய கைகளை வைத்துச் சொல்லவேண்டியது:

தேவனுடைய சபையில் உனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற ~~உதவிக்குரு~~பணிவிடையைச் செய்ய அதிகாரத்தைப் பெற்றுக்கொள். பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

¶ அப்பொழுது அத்தியட்சர் அவர்களில் ஒவ்வொருவருக்கும் புதிய ஏற்பாட்டைக் கொடுத்துச் சொல்வது:

தேவனுடைய சபையில் சுவிசேஷத்தை வாசிக்கவும், ~~அத்தியட்சர்~~ உத்தரவுகொடுத்தால் அந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்.

¶ அப்பொழுது அவர்களுக்குள் அத்தியட்சராலே தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவர் சுவிசேஷவாக்கியத்தை வாசிக்கவேண்டும்.

சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 12. 35.

உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள். எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக் கண்டால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்.

¶ பின்பு அத்தியட்சர் பரிசுத்த நற்கருணை பரிமாறும் ஒழுங்கை வாசிக்க, பட்டம்பெற்ற அனைவரும் தங்கள் சிரசின்மேல் கைவைக்கப்பட்ட இடத்திலேயே இருந்து நற்கருணையை வாங்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறினபின்பு, கடைசிச் சுருக்கஜெபத்துக்குப் பின்னும், ஆசீர்வாதத்துக்கு முன்னும், பின்வரும் சுருக்கஜெபங்களைச் சொல்லவேண்டும்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல நன்மைகளையும் ஈகிறவரே, உமது சபையில் ~~உதவிக்குரு~~ப்பட்டத்துக்கு உமது ஊழியக்காரராகிய இவர்களைத் தெரிந்துகொள்ள உம்முடைய மிகுந்த தயவினாலே சித்தங்கொண்டீரே. கர்த்தாவே, இவர்கள் தங்கள் பணிவிடையை நிறைவேற்றுவதில் அடக்கமும் வணக்கமும் விடாமுயற்சியும் உடையவர்களாயும், சபை ஒழுங்குகளையெல்லாம் அநுசரிக்க உற்சாகமுள்ளவர்களாயும் இருக்கும்படி செய்து, இவர்கள் எப்பொழுதும் நல்மனச்சாட்சியுடையவர்களாகவும், உம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் என்றும் உறுதியும் ஊக்கமும் உள்ளவர்களாகவும் இருந்து, உம்முடைய சபையில் மேலான பணிவிடைகளைச் செய்வதற்கு அழைக்கப்படப் பாத்திரராகும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்; அவருக்கே மகிமையும் கனமும் சதாகாலமும் உண்டாவதாக. ஆமேன்.

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமேன்.

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமேன்.

¶ உதவிக்குருவானவருக்கு அறிவிக்கப்படவேண்டுவது என்னவென்றால், திருச்சபைக்கடுத்த ஒழுங்குகளை நடத்துகிறதில் தேறினவராகும்படியாக அத்தியட்சர் நியாயமான முகாந்தரங்களினிமித்தம் வேறு கட்டளையைக் கொடாமற்போனால், உதவிக்குரு பணிவிடையில் ஒரு வருஷம் முழுவதும் இருக்கவேண்டுமென்பதே. அதில் அவர் உண்மையும் சுறுசுறுப்பும் உள்ளவராகக் காணப்பட்டால் சபைக்கடுத்த பிரமாணங்களாகிய கனோன் என்னும் சட்டத்தில் கண்டிருக்கிற காலங்களிலாவது, அவசரமான முகாந்தரம் நேரிட்டால், வேறொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது திருநாளிலாவது சபையாருக்கு முன்பாக அவருடைய சேகரத்து அத்தியட்சரால் பின்வருகிற ஒழுங்கின்படி அவருக்குக் குருப்பட்டம் கொடுக்கப்படும்.

THE FORM AND MANNER OF ORDERING OF PRIESTS.

குருப்பட்டம் கொடுக்கும் முறைமை.

¶ அத்தியட்சர் குறித்த நாளில் காலைஜெபம் முடிந்தபின், குருப்பட்டம் பெறவருகிறவர்களுடைய உத்தியோகம் கடமை இன்னதென்றும், இந்த முறைமை கிறிஸ்துசபையில் மிகவும் அவசியமுள்ளதென்றும், இந்த பட்டம் பெறுகிறவர்களை ஜனங்கள் கனம்பண்ணவேண்டுமென்றும் யாவருக்கும் தோன்றும்படி பிரசங்கம் செய்யவேண்டும்.

¶ திருமேஜையண்டையில் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அத்தியட்சருக்கு முன்பாக, சிரேஷ்ட குருவாகிய ஆர்ச்சுடீக்கனாவது, அத்தியட்சரால் நியமிக்கப்பட்ட குருக்களில் வேறொருவராவது, குருப்பட்டம் பெறப்போகிறவர்களை யோக்கியமாய் உடுக்கப்பட்டவர்களாக நிறுத்தி, சொல்லவேண்டியதாவது:

கர்த்தருக்குள் சங்கைபொருந்திய தகப்பனே, குருப்பட்டம் பெறுவதற்கு இவர்களை உம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் நம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிற இவர்கள் தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய சபை பக்திவிர்த்தியடையவும், கல்வியினாலும் பக்தியுள்ள நடக்கையினாலும் தங்கள் பணிவிடையை நடத்த தகுந்தவர்களாயிருக்கிறார்களா என்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

¶ அதற்குச் சிரேஷ்ட குரு மறுமொழியாகச் சொல்வது:

இவர்களைக்குறித்து நான் விசாரித்தும், இவர்களைப் பரிட்சித்தும் இருக்கிறேன். இவர்கள் தகுந்தவர்களாயிருக்கிறார்களென்று எண்ணுகிறேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் ஜனங்களைப்பார்த்துச் சொல்வது:

பிரியமானவர்களே, கர்த்தருக்குச் சித்தமானால், இன்றையத்தினம் குருத்துவமாகிய திருப்பணிவிடை செய்யும்படி பட்டம்பெற நம்மால் நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் இவர்களே; இவர்களைக்குறித்துத் திட்டமாய்

விசாரித்ததின்பேரில் இவர்கள் இந்தப் பணிவிடை செய்யக் கிரமமாய் அழைக்கப்பட்டவர்களாயும், அதற்குத் தகுந்தவர்களாயும் இருக்கிறார்களென்று தெரியவருகிறது. ஆனாலும் இவர்களில் யாராவது இந்தத் திருப்பணிவிடை செய்யும்படி பட்டம் பெறக்கூடாததற்குக் காரணமான யாதொரு தடையாவது, வெளிப்படையான குற்றமாவது உண்டென்று உங்களில் யாராவது அறிந்திருந்தால், அவன் தேவனுடைய நாமத்தை முன்னிட்டுவந்து, அந்தக் குற்றம் அல்லது தடை இன்னதென்று சொல்லக்கடவன்.

¶ ஒருவன்மேல் யாதொரு பெரிய குற்றமாவது தடையாவது சொல்லப்பட்டால், அவன் அதற்கு நீங்கினவனென்று தெளிவாகும்வரையும் அத்தியட்சர் அவனுக்குப் பட்டங்கொடாமல் நிறுத்திவைக்கவேண்டும்.

¶ அப்பொழுது பட்டம் பெறத் தகுந்தவர்களென்று காணப்படுகிறவர்களுக்காக, சபையார் ஜெபம்பண்ணவேண்டுமென்று அத்தியட்சர் கேட்டுக்கொண்டதின்பேரில், அவரும் குருமாரும் சபையாரும் உதவிக்குருப்பட்டத்தின் முறைமையில் குறிக்கப்பட்டிருக்கிறபடி லித்தானியாமுதலிய ஜெபங்களைப் பாட அல்லது சொல்லவேண்டும். ஆனாலும் லித்தானியா பிரார்த்தனையில் உதவிக்குருக்களுக்காகச் செய்யப்படும் மன்றாட்டில் உதவிக்குருப்பட்டம் என்கிற வார்த்தைகளுக்குப் பதிலாக, குருப்பட்டம் என்கிற வார்த்தைகளைச் சேர்த்துப் பிரயோகம்பண்ணவேண்டும்.

¶ அப்பொழுது நற்கருணை முறைமையைப் பாட அல்லது சொல்லவேண்டும். அதற்கடுத்த சுருக்கஜெபமும், நிருபவாக்கியமும், சுவிசேஷவாக்கியமுமாவன:

சுருக்கஜெபம்.

சகல நன்மைகளையும் அருளிச்செய்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே திருச்சபையில் வெவ்வேறான பட்டமுள்ள பணிவிடைக்காரரை ஏற்படுத்தினீரே; குருப்பட்டத்துக்கு இப்பொழுது அழைக்கப்பட்ட உமது ஊழியக்காரராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப்பாரும். உமது திருநாமத்துக்கு மகிமையும் உமது சபைக்கு பக்திவிருத்தியும் உண்டாக இந்தப் பணிவிடையில் இவர்கள் போதகத்தினாலும் நடக்கையினாலும் உமக்கு உண்மையாய் ஊழியஞ்செய்யும்படி உமது வசனத்தை அறியும் மெய்யறிவினாலே இவர்களை நிரப்பி, மாசற்ற பரிசுத்த நடக்கையினாலே இவர்களை அலங்கரித்தருளும். உம்மோடும் பரிசுத்தஆவியோடும் இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமேன்.

நிருபவாக்கியம்: எபே. 4. 7.

கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினால் அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினாரென்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

¶ பின்பு பரிசுத்த மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலிருந்து சுவிசேஷவாக்கியமாய் வாசிக்கவேண்டியதாவது:

பரி. மத். 9. 36.

இயேசு திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

¶ அல்லது, பரிசுத்த யோவான் பத்தாம் அதிகாரத்திலிருந்து சுவிசேஷவாக்கியமாய் வாசிக்கவேண்டியதாவது:

பரி. யோ. 10. 1.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான்.

அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டு ஓடிப்போம் என்றார். இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை. ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்; நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

¶ *பின்பு அத்தியட்சர் தம்முடைய ஆசனத்தில் உட்கார்ந்து குருப்பட்டம் பெற வந்திருக்கிறவர்களை நோக்கிச் சொல்லவேண்டியதாவது:*

சகோதரரே, நீங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிற இந்த உத்தியோகம் எவ்வளவு கனமுள்ளதென்றும், எவ்வளவு அவசியமுள்ளதென்றும், உங்களைத் தனிப்படப் பரிட்சித்தபோது சொன்ன புத்திமதிகளினாலும், இப்பொழுது செய்த பிரசங்கத்தினாலும், சுவிசேஷத்திலிருந்தும் அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களிலிருந்தும் எடுத்து வாசித்த பரிசுத்த வாக்கியங்களினாலும் கேட்டிருக்கிறீர்கள். நம்

முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே மறுபடியும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். நீங்கள் சிறந்த மேன்மையையும் கனமான உத்தியோகத்தையும் அதிகாரத்தையும் பெற அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எப்பொழுதும் நினைவுகூருவீர்களாக. நீங்கள் கர்த்தருடைய ஸ்தானாபதிகளும் காவலாளரும் உக்கிராணக்காரருமாயிருக்க அழைக்கப்பட்டீர்கள். கர்த்தருடைய வீட்டாரைப் போதித்து எச்சரிக்கவும் போஷித்துப் பராமரிக்கவும், இந்தப் பொல்லாத உலகத்தில் இருக்கிற கிறிஸ்துவின் பிள்ளைகளும் பல இடங்களிலும் சிதறியிருக்கிற அவருடைய ஆடுகளும் கிறிஸ்துவின் மூலமாய் என்றும் இரட்சிக்கப்பட அவர்களைத் தேடவும் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

ஆகையால் உங்கள் வசம் எவ்வளவு அருமையான பொக்கிஷம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்பதை இடைவிடாமல் உங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் கிறிஸ்து தமது மரணத்தினாலே கிரயத்துக்குக் கொண்ட ஆடுகளாயிருக்கிறார்கள்; அவர்களுக்காக அவர் தமது இரத்தத்தைச் சிந்தினார். நீங்கள் பணிவிடை செய்யவேண்டிய சபை அவருடைய மனையாட்டியும் அவருடைய சரீரமுமாயிருக்கிறது. அந்தச் சபையாவது அதிலுள்ள யாதொரு அவயவமாவது உங்களுடைய அஜாக்கிரதையினாலே யாதொரு குறைவை அல்லது நஷ்டத்தை அடைந்தால் உங்கள்மேல் சுமரும் குற்றம் எவ்வளவு பெரிதென்றும் அதற்கு நேரிடும் ஆக்கினை எவ்வளவு கொடிதென்றும் அறிந்துகொள்ளுங்கள். ஆதலால் கிறிஸ்துவின் மனையாட்டியும் அவருடைய சரீரமுமாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய சபையில் நீங்கள் பணிவிடைசெய்யவேண்டிய நோக்கத்தைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். உபதேசத்தைப்பற்றின தப்பறைக்காவது நடக்கையைப்பற்றின தாறுமாறுக்காவது உங்களுக்குள் இடம் இல்லாதபடி, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படுகிற அனைவரும் தேவனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் கிறிஸ்துவுக்குள்ளான தேறுதலிலும் நிறைவிலும் இணைக்கப்பட்டவர்களாகும்பொருட்டு உங்கள் கடமையின்படி உங்களாலானமட்டும் அவர்களை நடத்துகிறதற்கு எற்ற கவலையும் ஜாக்கிரதையும் விடாமுயற்சியும் உள்ளவர்களாய் இருப்பீர்களாக.

உங்கள் உத்தியோகம் இவ்வளவு மாட்சிமையும் இவ்வளவு பிரயாசமும் உள்ளதாயிருப்பதால், இந்த மேன்மையான நிலைமையில் உங்களை வைத்திருக்கிற ஆண்டவருக்கு நீங்கள் கீழ்ப்படிதலும் நன்றியறிதலும் உள்ளவர்களாயிருங்கள். நீங்களே தேவனுக்கு மனஸ்தாபம் உண்டாக்காமலும், மற்றவர்கள் மனஸ்தாபம் உண்டாக்க ஏதுவாயிராமலும் கருத்துள்ளவர்களாயிருங்கள். ஆனாலும் இதற்கேற்ற மனமும் விருப்பமும் உங்களாலேயே உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட விருப்பமும் அதற்கேற்ற திரா

ணியும் தேவனாலேயே அருளிச்செய்யப்படும். ஆதலால் அவர் தமது பரிசுத்த ஆவியை அநுக்கிரகிக்கவேண்டுமென்று நீங்கள் கருத்தாய் மன்றாடவேண்டும். மேலும் வேதவசனத்திலிருந்து எடுத்துக்காட்டும் உபதேசத்தினாலும் போதனையினாலும் அந்த வசனத்துக்கேற்ற நடக்கையினாலுமே அன்றி வேறெந்த எத்தனத்தினாலும் மனிதருடைய இரட்சிப்புக்கு அடுத்த இந்த அருமையான தொழிலை நிறைவேற்றக் கூடாதாகையால், நீங்கள் வேதவசனத்தை வாசித்துக் கற்றறிகிறதிலும் அதில் காட்டியபடி உங்கள் நடக்கையையும் உங்களுக்கு அடுத்தவர்களுடைய நடக்கையையும் சீர்ப்படுத்துவதிலும் மிகவும் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். இதினிமித்தம் உங்களால் கூடியமட்டும் உலகத்துக்கடுத்த சகல கவலைகளுக்கும் முயற்சிகளுக்கும் நீங்கள் விலகிக்கொள்வது உங்கள் கடமை என்று உணர்ந்துகொள்ளுங்கள்.

நீங்கள் இந்தக் காரியங்களை இதற்கு முன்னமே நன்குணர்ந்திருப்பீர்களென்றும், தேவன் இப்பொழுது உங்களை அழைக்கச் சித்தமான இந்தப் பணிவிடைக்கு அவருடைய கிருபையினாலே உங்களை முற்றும் ஒப்புக்கொடுத்து, இந்த ஒரே காரியத்துக்கென்று உங்கள் திராணிக்குத்தக்கதாக முயற்சிசெய்து, இதற்கென்றே கவலையோடே பிரயாசப்படத் தீர்மானித்திருக்கிறீர்களென்றும் உங்களைப்பற்றி நமக்கு நம்பிக்கை உண்டு. நாள்தோறும் தேவவசனத்தை வாசித்துத் தியானிக்கிறதினால் நீங்கள் உங்கள் பணிவிடையில் மேன்மேலும் தேறி பெலன்கொள்ளவும், கிறிஸ்துவின் கட்டளைக்கும் உபதேசத்துக்கும் ஏற்க உங்கள் நடக்கையைச் சீர்திருத்தி, ஜனங்களுக்கு உத்தம மாதிரிகளாயிருக்கவும்வேண்டும். இதற்கென்று பிதாவாகிய தேவன் நம்முடைய ஏக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினிமித்தம் பரிசுத்தஆவியினுடைய திவ்விய சகாயத்தைத் தரவேண்டுமென்று இடைவிடாமல் ஜெபம்பண்ணுவீர்களென்று உறுதியாய் நம்புகிறோம்.

இப்பொழுதும் இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற கிறிஸ்துவின் சபையார் இந்தக் காரியங்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தையும் தீர்மானத்தையும் அறியவும், நீங்கள் கொடுக்கும் வாக்கினாலே உங்கள் கடமைகளை நிறைவேற்றும்படி நீங்களே ஏவப்படவும் தக்கதாக, தேவனுடைய நாமத்தினாலும் அவருடைய சபையின் நாமத்தினாலும் நாம் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் தெளிவாக மாறுத்தரம் சொல்லவேண்டும்.

நீங்கள் குருப்பட்டத்துக்குரிய பணிவிடையைச் செய்ய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின்படியும், இங்கிலாந்து சபை ஒழுங்கின்படியும், உண்மையாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று உங்கள் இருதயத்திலே நினைக்கிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே நினைக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நித்திய இரட்சிப்பு அடைவதற்கு அவசியமாய் அறியவேண்டிய உபதேசம் யாவும் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறதென்று நிச்சயங்கொண்டு, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்களை அந்த வேதவாக்கியங்களைக் கொண்டே போதிக்கவும், வேதத்தினாலே ரூபிக்கப்படத்தக்கவைகளே அன்றி மற்ற எதுவும் நித்திய இரட்சிப்புக்கு அவசியம் என்று போதியாதிருக்கவும் தீர்மானித்திருக்கிறீர்களா?

மறுமொழி: நான் அப்படியே நிச்சயித்தும், தேவகிருபையை முன்னிட்டு அப்படியே செய்யத் தீர்மானித்தும் இருக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டதாயும், இந்தச் சபையும் ராஜ்யமும் தேவ கட்டளைப்படி அங்கிகரித்துக்கொண்டதாயும் இருக்கிற கிறிஸ்துவின் உபதேசத்தையும் சாக்கிரமெந்துக்களையும் சபை ஒழுங்கையும், எப்பொழுதும் கைக்கொள்ள உண்மையாய்ப் பிரயாசப்பட்டு, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்கள் அவைகளைக் காத்துநடக்கும்படி அவர்களுக்குக் கருத்தாய்ப் போதித்துவருவீர்களா?

மறுமொழி: கர்த்தருடைய சகாயத்தினாலே, அப்படியே செய்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

தேவவசனத்துக்கு விரோதமான சகல தப்பறைகளையும் விகற்பமான உபதேசங்களையும் அகற்றித் தள்ளவும், உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் சேகரத்தில் அவசரத்துக்கும் சமயத்துக்கும் தக்கபடி, வியாதியுடையவர்களுக்கும் சுகமுடையவர்களுக்கும் வெளிப்படையாகவும் தனிப்படவும் எச்சரிக்கவும் புத்திசொல்லவும், எப்பொழுதும் உண்மையும் ஜாக்கிரதையும் உள்ளவர்களாயிருப்பீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

லௌகிக நன்மைகளையும் சரீர சௌக்கியங்களையும் நாடாமல், ஜெபம்பண்ணுதலையும், வேதவசன வாசிப்பையும், வேத அறிவுவிர்த்திக்கு உபயோகமான முயற்சிகளையும் ஜாக்கிரதையாய் நாடுவீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்யப் பிரயாசப்படுவேன்.

அத்தியட்சர் சொல்வது:

உங்கள் நடக்கையையும் உங்கள் வீட்டாருடைய நடக்கையையும் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு ஏற்றதாகச் சீர்திருத்தவும், நீங்களும் அவர்களும் கூடியவரையிலும் கிறிஸ்துவின் மந்தைக்கு நன்மாதிரிகளாயிருக்கவும் பிரயாசப்படுவீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்யப் பிரயாசப்படுவேன்.

அத்தியட்சர் சொல்வது:

எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும், விசேஷமாய் உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்களுக்குள்ளும், அமைதலும் சமாதானமும் அன்பும் மேன்மேலும் பெருகி வளரும்படி உங்களாலானமட்டும் பிரயாசப்படுவீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

உங்களை விசாரித்து நடத்த அதிகாரம் பெற்றிருக்கிற அத்தியட்சர் முதலான பிரதான குருமாருக்குப் பணிவாய்க் கீழ்ப்படிந்து, அவர்கள் சொல்லும் பக்திக்கேற்ற புத்திமதிகளை உற்சாகத்தோடு கேட்டு, அவர்களுடைய பக்தியுள்ள தீர்மானங்களுக்கு அடங்கி நடப்பீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

¶ *அப்பொழுது அத்தியட்சர் எழுந்துநின்று சொல்வதாவது:*

இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் செய்ய உங்களுக்கு விருப்பத்தைக் கொடுத்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன் இவைகளைச் செய்வதற்கான பெலத்தையும் சத்துவத்தையும் அருளி, உங்களிடத்தில் தொடங்கியிருக்கிற தம்முடைய கிரியையை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் முடிய நடத்துவாராக. **ஆமேன்.**

¶ *இதற்குப்பின் இவை எல்லாவற்றையும்பற்றித் தேவனிடத்தில் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளும்படி சபையார் ஒவ்வொருவரும் மனசுக்குள்ளே ஜெபம்பண்ண அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்கிறதற்குக் கொஞ்ச நேரம் சத்தமில்லாமல் யாவரும் அமைதலாயிருக்கவேண்டும்.*

¶ *பிற்பாடு குருப்பட்டம் பெறப்போகிறவர்கள் முழங்கால்படியிட்டிருக்க, "அடியார் நெஞ்சைத் தயவாய்" என்கிற கீதம் பாட அல்லது சொல்லவேண்டும். இதில் அத்தியட்சர் ஒரு வரியையும், கூட இருக்கிற குருமார் முதலானவர்கள் ஒரு வரியையும் பாட அல்லது சொல்லவேண்டும்.*

அடியார் நெஞ்சைத் தயவாய்
சந்தித்து நெப்பி உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே.

மெய் தேற்றரவளிக்கிற
பர ஈவாயிருக்கிறீர்,
வானபிஷேகமாகிய
ஜீவாறும் நேசத்தீயும் நீர்.

அடியார் எச்சரிக்கையாய்
நீர் ஏவும்போல் நடக்கவே
பிசாசின் சூதைத் தூரமாய்
விலக்கும் மனவாசரே.

பிதா சுதனையும் நன்றாய்
அறிந்து அண்டிக்கொள்ளவே
நீர் எங்கள் தேவ வாத்தியாய்
இரும், இருவர் ஆவியே.

திரியேக தெய்வமாகிய
பிதா குமாரன் ஆவிக்கும்
எப்போதென்றைக்கும் சகல
புகழ்ச்சியும் உண்டாகவும்.

¶ *இதற்குப்பின் அத்தியட்சர் செய்யவேண்டிய ஜெபம்:*

ஜெபம்பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, பரம பிதாவே, தேவரீர் எங்கள்பேரில் வைத்த அளவில்லாத காருணியத்தினாலே உம்முடைய ஒன்றான நேசகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எங்களுக்கு மீட்பராகவும் நித்திய ஜீவனுக்குக் காரணராகவும் தந்தருளினீரே. அவர் தமது மரணத்தினாலே எங்களுக்குப் பூரணமான மீட்பு உண்டாக்கி, பரமண்டலத்துக்கு எழுந்தருளியபின், தம்முடைய அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் சுவிசேஷகரையும் போதகரையும் மேய்ப்பரையும் உலகமெங்கும் அனுப்பி, உம்முடைய திருநாமத்துக்கு நித்திய புகழ்ச்சியுண்டாக அவர்களுடைய ஊழியத்தினாலும் பிரயாசத்தினாலும் உலகத்தின் எத்திசையிலும் பெரிய

மந்தையைச் சேர்த்தருளினாரே. தேவரீர் உம்முடைய நித்திய கிருபையினாலே செய்திருக்கிற இந்தச் சிறந்த உபகாரங்களுக்காகவும், மானிடர் இரட்சிப்புக்கு ஏதுவாகத் தேவரீர் நியமித்த இந்த உத்தியோகத்துக்கும் பணிவிடைக்கும் உம்முடைய ஊழியக்காரரான இவர்களை அழைத்தருளினதற்காகவும், முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உம்மைப் புகழ்ந்து போற்றுகிறோம். இவ்விடத்திலும் மற்றெல்லா இடங்களிலும் உம்முடைய திருநாமத்தைத் தொழுதுகொள்ளுகிற நாங்கள் அனைவரும் தேவரீர் அருளிச்செய்த சகல உபகாரங்களுக்காகவும் எங்கள் நன்றியறிதலை இடைவிடாமல் காண்பிக்கவும், பரிசுத்த ஆவியைக்கொண்டு நாங்கள் தேவரீரையும் உம்முடைய குமாரனையும் பற்றிய அறிவிலும் விசுவாசத்திலும் தினந்தோறும் வளர்ந்து தேறவும் அநுக்கிரகித்தருளும். உம்முடைய பணிவிடைக்காரராகிய இவர்களாலும் இவர்களுடைய விசாரணைக்கு ஒப்புவிக்கப்படுகிறவர்களாலும் உமது திருநாமம் என்றைக்கும் மகிமைப்படவும், உமது ஞானராஜ்யம் விர்த்தி அடையவும் கிருபைசெய்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒன்றானவராய்ச் சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு இதைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ *இந்த ஜெபம் முடிந்தபின், பட்டம் பெறுகிறவர்கள் தாழ்மையாய் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சரும் கூட இருக்கிற குருமாரும் அவர்கள் ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் கைகளை வைக்க, அத்தியட்சர் சொல்வேண்டியது:*

எங்கள் கைகளை உன்மேல் வைக்கிறதினால் தேவனுடைய சபையில் இப்பொழுது உனக்குக் கொடுக்கப்படுகிற குருப்பட்டத்துக்குரிய உத்தியோகத்தையும் பணிவிடையையும் செய்யும்படியாகப் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறாயோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறாயோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும். நீ தேவனுடைய வசனத்தையும் அவருடைய பரிசுத்த சாக்கிரமெந்துக்களையும் உண்மையாய்ப் பகிர்ந்துகொடுக்கிறவனாயிருப்பாயாக. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

¶ *பின்பு அவர்கள் எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சர் அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் வேதாகமத்தைக் கொடுத்துச் சொல்லவேண்டியது:*

நீ கிரமப்படி நியமிக்கப்படும் சபையில் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கவும், பரிசுத்த சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கவும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்.

¶ *இது முடிந்தபின் நீசேயா விசுவாசப்பிரமாணத்தைப் பாட அல்லது சொல்லவேண்டும். பின்பு அத்தியட்சர் நற்கருணை பரிமாறும் ஒழுங்கை வாசிக்க, பட்டம்பெற்ற அனைவரும் தங்கள் சிரசின்மேல் கைவைக்கப்பட்ட இடத்திலேயே இருந்து நற்கருணையை வாங்கவேண்டும்.*

¶ *நற்கருணை பரிமாறினபின்பு, கடைசிச் சுருக்கஜெபத்துக்குப் பின்னும் ஆசீர்வாதத்துக்கு முன்னும், பின்வரும் சுருக்கஜெபங்களைச் சொல்லவேண்டும்.*

மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய ஊழியக்காரரான இவர்கள் நீதியினால் அலங்கரிக்கப்படவும், இவர்கள் வாயினால் சொல்லும் உமது வசனம் ஒருபோதும் வீணாய்ப்போகாமல் நன்றாய்ப் பயன்படவும், இவர்கள் மேல் உம்முடைய பரம ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளும். இவர்கள் உம்முடைய பரிசுத்த வசனத்திலிருந்து எடுத்துச் சொல்லுகிறதும் அதற்கு இசைவாய்ப் போதிக்கிறதுமான உபதேசங்களை நாங்கள் எங்கள் இரட்சிப்புக்கு ஏதுவாகக் கேட்டு அங்கிகரிக்கவும், எங்கள் எல்லா வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் நாங்கள் உம்முடைய மகிமையையும் உம்முடைய ராஜ்யத்தின் விர்த்தியையும் நாடித் தேடவும் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இதை எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். **ஆமேன்.**

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்தஆவியுமாகிய சர்வவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. **ஆமேன்.**

THE ARTICLES OF RELIGION.

வேத உபதேசத்தைக்குறித்து உண்டான

வெவ்வேறான கொள்கைகளை நீக்கி,

சர்வ சம்மத கோட்பாட்டை நிலைநிறுத்தும்படிக்கு

இங்கிலாந்து தேசத்திலுள்ள

மேற்றிராணி ஆதிக்க மாகாணங்கள் இரண்டையும் சேர்ந்த

குருமார் யாவரும், அத்தியட்சமாரும், பிரதான அத்தியட்சமாரும்

1562–ஆம் லண்டன் நகரத்தில் சங்கமாகக் கூடிவந்து

ஆலோசித்து நிர்ணயித்த

வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

---

1. பரிசுத்த திரித்துவத்தைப் பற்றும் விசுவாசம்.

ஜீவனுள்ள ஒரே மெய்த்தேவன் உண்டு; அவர் நித்தியர், சரீரம் இல்லாதவர், பகுக்கப்படாதவர், தாபம் இல்லாதவர்; அளவில்லாத வல்லமையும், ஞானமும், கிருபையும் உள்ளவர்; காணப்படுகிறதும் காணப்படாததுமாகிய சகலத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவர். இந்த ஒரே தேவத்துவத்தில், ஒரே தன்மையையும், வல்லமையையும், நித்தியத்துவத்தையும் உடைய பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய மூவர் உண்டு.

2. மெய்யான மனுஷனாய் அவதரித்த தேவ குமாரனாகிய வார்த்தையானவர்.

பிதாவின் வார்த்தையாகிய குமாரனானவர், பிதாவினாலே அநாதியாய் ஜநிப்பிக்கப்பட்டவர், நித்தியரான மெய்த்தேவன், பிதாவோடே ஒரே தன்மையை உடையவர். அவர் பாக்கியவதியான கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்திலே உற்பவித்து, அவளுடைய தன்மையில் மனுஷத்தன்மையைத் தரித்துக்கொண்டார். இவ்விதமாய்த் தேவத்துவம் மனுஷத்துவம்

ஆகிய குறைவற்ற சம்பூரணமுள்ள இரண்டு தன்மைகளும் ஒருக்காலும் பிரிக்கப்படாதபடி ஒருவரில் சேர்ந்திருக்கிறதினால், அவர் மெய்த்தேவனும் மெய்மனுஷனுமான ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார். அவர் தம்முடைய பிதாவை நம்மோடே ஒப்புரவாக்கவும், மனுஷருடைய ஜந்மபாவத்தையும் கர்மபாவத்தையும் நீக்கும் பலியாயிருக்கவும்; மெய்யாய்ப் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார்.

3. கிறிஸ்து பாதாளத்தில் இறங்கினது.

கிறிஸ்து நமக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார் என்று விசுவாசிக்கிறதுபோல, அவர் பாதாளத்தில் இறங்கினார் என்றும் விசுவாசிக்க வேண்டும்.

4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து மெய்யாய் எழுந்தருளி, பூரண மனுஷத்தன்மைக்குரிய மாம்சம் எலும்பு முதலானவைகளுள்ள தமது சரீரத்தை மறுபடியும் ஏற்றுக்கொண்டு, அதனோடு பரமண்டலத்துக்கேறி, கடைசிநாளில் எல்லா மனுஷரையும் நியாயந்தீர்க்கத் தாம் திரும்ப வரும் அளவும் அவ்விடத்தில் வீற்றிருக்கிறார்.

5. பரிசுத்த ஆவியானவர்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற பரிசுத்தஆவியானவர், பிதாவோடும் குமாரனோடும் ஒரே தன்மையும் மகத்துவமும் மகிமையும் உள்ள நித்தியரான மெய்த்தேவனாயிருக்கிறார்.

6. இரட்சிப்படைவதற்குப் பரிசுத்த வேதாகமங்களே போதுமானது.

இரட்சிப்படைவதற்கு அவசியமாய் அறியவேண்டியவைகள் எல்லாம் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறது. ஆகையால் அவைகளில் கண்டிராததும், அவைகளால் ரூபிக்கப்படாததுமான யாதொன்றையும் விசுவாசிக்கவேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும், இரட்சிப்புக்கு அவசியம் என்று எண்ணவும், ஒருவருக்கும் கட்டளையிடக்கூடாது. பரிசுத்த வேதஆகமங்கள் எவையெனில், திருச்சபை எக்காலத்திலும் சந்தேகப்படாமல் திவ்விய அதிகாரமுள்ளவைகள் என்று ஒப்புக்கொண்டிருக்கிற பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கியிருக்கிற ஆகமங்களேயாம்.

திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களின் பேரும் இலக்கமும் அடங்கிய அட்டவணை.

ஆதியாகமம்.
யாத்திராகமம்.
லேவியராகமம்.
எண்ணாகமம்.
உபாகமம்.
யோசுவா.
நியாயாதிபதிகள்.
ரூத்.
சாமுவேலின் முதலாம் ஆகமம்.
சாமுவேலின் இரண்டாம் ஆகமம்.
ராஜாக்களின் முதலாம் ஆகமம்.
ராஜாக்களின் இரண்டாம் ஆகமம்.
நாளாகமத்தின் முதலாம் ஆகமம்.
நாளாகமத்தின் இரண்டாம் ஆகமம்.
எஸ்றா. [எஸ்றாவின் முதலாம் ஆகமம்.]
நெகேமியா. [எஸ்றாவின் இரண்டாம் ஆகமம்.]
எஸ்தர்.
யோபு.
சங்கீதம்.
நீதிமொழிகள்.
பிரசங்கி.
உன்னதப்பாட்டு.
பெரிய தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் நான்கு.
சின்ன தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் பன்னிரண்டு.

பின்சொல்லிய மற்றுமுள்ள ஆகமங்களைக்குறித்து யெரோம் என்பவர் சொல்லியிருக்கிறபடி, நன்மாதிரியைக் கண்டு நல்லொழுக்கத்தில் தேறும்படியாகத் திருச்சபை அவைகளை வாசிக்கும்படி நியமிக்கிறதே அல்லாமல், அவைகளைக்கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்க அவைகளைப் பிரயோகிக்கிறதில்லை. அவைகளாவன:

எஸ்றாவின் மூன்றாம் ஆகமம்.
எஸ்றாவின் நான்காம் ஆகமம்.
தோபியாவின் ஆகமம்.
யூதீதின் ஆகமம்.
எஸ்தர் ஆகமத்தின் குறைபங்கு.
ஞான ஆகமம்.
சிராக்கின் குமாரன் இயேசுவின் ஆகமம்.
பாரூக்கு தீர்க்கதரிசியின் ஆகமம்.
மூன்று வாலிபரின் பாட்டு.
சூசன்னாளின் சரித்திரம்.
பெல்லையும் வலுசர்ப்பத்தையும் குறித்துச் சொல்லிய ஆகமம்.
மனாசேயின் ஜெபம்.
மக்கபேயரின் முதலாம் ஆகமம்.
மக்கபேயரின் இரண்டாம் ஆகமம்.

சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டிலுள்ள ஆகமங்கள் எல்லாவற்றையும், நாமும் திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

7. பழைய ஏற்பாடு.

தேவனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தராயிருக்கிற தேவனும் மனுஷனுமாகிய கிறிஸ்துவினாலே நித்திய ஜீவனை அடையலாமென்று,

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அறிவித்திருக்கிறபடியால், பழைய ஏற்பாட்டுக்குப் புதிய ஏற்பாடு விரோதமானதல்ல. ஆதலால் பழைய ஏற்பாட்டில் சொல்லிய முற்பிதாக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகள் இம்மைக்குமாத்திரம் உரியவைகளென்று நம்பினதாகச் சொல்லுகிற வீண்பேச்சை ஒப்புக்கொள்ளக்கூடாது. மோசேமூலமாய் தேவன் அருளின பிரமாணங்களில், சடங்குப்பிரமாணத்தை நிறைவேற்ற கிறிஸ்தவர்கள் கடமையுள்ளவர்கள் அல்ல; அவைகளிலுள்ள துறைத்தனப் பிரமாணங்களை எந்த ராஜ்யத்திலாவது ஏற்றுக்கொள்வதும் அவசியம் அல்ல; ஆகிலும் அவைகளிலுள்ள சன்மார்க்கப்பிரமாணம் என்னப்பட்ட கற்பனைகளின்படி நடக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டிருக்கிறான்.

8. விசுவாசப்பிரமாணங்கள் மூன்று.

நீசெயா விசுவாசப்பிரமாணமும், அதநாசி விசுவாசப்பிரமாணமும், அப்போஸ்தலருடையதென்று சொல்லப்படுகிற விசுவாசப்பிரமாணமும் ஆகிய இம்மூன்றும், பரிசுத்த வேதவாக்கியங்களினாலே யாதொரு சந்தேகமும் இன்றி ரூபிக்கப்படும். ஆகையால் அவைகளை முற்றும் ஒப்புக்கொண்டு விசுவாசிக்கவேண்டும்.

9. ஜன்மபாவம்.

ஆதாம் குற்றஞ்செய்ததுபோலக் குற்றஞ்செய்கிறது ஜன்மபாவம் என்று பெலாகியுவின் கொள்கைக்காரர் சொல்லுகிறது வீண்; ஆதாமின் சந்ததியில் இயல்பாய்ப் பிறந்த ஒவ்வொருவனுடைய சுபாவத்துக்கும் உரிய பழுதும் கேடுமே ஜன்மபாவமாம்; அதினாலே மனுஷர் ஆதிநீதியை விட்டு வெகுதூரம் விலகி, தீமைக்கு இயல்பாய்ச் சாய்கிறார்கள், மாம்சமும் எப்பொழுதும் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது; ஆகையால் இவ்வுலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவனும் ஜன்மபாவமுள்ளவனாயிருப்பதினால், தேவனுடைய கோபத்துக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் பாத்திரவானாயிருக்கிறான். இந்தச் சுபாவக்கேடு மறுஜன்மம் அடைந்தவர்களிலும் இன்னும் இருக்கிறது. ஆதலால் கிரேக்கைப்பாஷையில் பிரோநீமா சார்கொஸ் (φρόνημα σαρκός) என்றிருக்கிற மாம்ச சிந்தையானது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறது. இந்த வார்த்தைக்குச் சிலர் மாம்சஞானம் என்றும், சிலர் மாம்சஇன்பம் என்றும், சிலர் மாம்சபற்று என்றும், சிலர் மாம்சஇச்சை என்றும் அர்த்தம் சொல்லுகிறார்கள். விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லாதிருந்தும், அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறபடி, அவர்களுக்குள்ளும் இருக்கும் இச்சையானது பாவத்தன்மையுள்ளதாயிருக்கிறது.

10. சுயாதீன சித்தம்.

ஆதாம் பாவஞ்செய்ததுமுதல், மனுஷனானவன் தன் இயல்பான திராணியினாலும் நற்கிரியைகளினாலும் விசுவாசிக்கவும், தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவும், தன் மனதைத் திருப்பி, தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளக்கூடாத நிலைமைக்கு உட்பட்டிருக்கிறான். ஆகையால் கிறிஸ்துவின்மூலமாய் உண்டாகும் தேவனுடைய கிருபை நமக்கு முந்திக்கொண்டு நம்மில் நல்ல சித்தத்தை உண்டாக்குகிறதுமல்லாமல்; நல்ல சித்தம் உண்டானபின்பும், அந்தக் கிருபை நம்மோடேகூடக் கிரியைசெய்யாவிட்டால், தேவன் அங்கிகரிக்கத்தக்க பிரியமான கிரியைகளை நாம் செய்வதற்குப் பெலனற்றவர்களாயிருப்போம்.

11. மனுஷன் நீதிமானாக்கப்படுதல்.

நாம் செய்யும் கிரியைகளின்நிமித்தமாவது, நம்முடைய புண்ணியங்களின்நிமித்தமாவது, நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களென்று எண்ணப்படாமல், விசுவாசத்தினாலே நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தின் நிமித்தமே நீதிமான்களென்று எண்ணப்படுகிறோம். ஆகையால் நாம் விசுவாசத்தினாலேமாத்திரம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற உபதேசம் ஆரோக்கியமும் பூரண ஆறுதலும் உள்ளதாயிருக்கிறது. மனுஷர்கள் நீதிமான்களாக்கப்படுவதைக் குறித்துச் சொல்லிய ஓமிலி என்னும் பிரசங்கத்தில் இது விவரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

12. நற்கிரியைகள்.

விசுவாசத்தின் கனிகளாயும், நீதிமான்களானபின்பு செய்யப்படுகிறவைகளாயும் இருக்கிற நற்கிரியைகள், நம்முடைய பாவங்களைப் பரிகரிக்கவும், தேவனுடைய கண்டிப்பான நியாயத்தீர்ப்பைத் தாங்கவும் கூடாதவைகளாயிருந்தும், கிறிஸ்துவின் மூலமாய் அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகளாயும் அங்கிகரிக்கத்தக்கவைகளாயும் இருக்கிறது. அன்றியும் அவைகள் உண்மையும் உயிரும் உள்ள விசுவாசத்தினாலே இயல்பாய் உண்டாகிற பலன். எப்படியெனில், மரத்தின் தன்மையை கனியினாலே அறிகிறதுபோல, உயிருள்ள விசுவாசத்தை நற்கிரியைகளினாலே தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

13. நீதிமான்களாக்கப்படுமுன் செய்யும் கிரியைகள்.

கிறிஸ்துவின் கிருபையையும் அவருடைய ஆவியின் ஏவுதலையும் அடைவதற்குமுன்னே, மனுஷர் செய்யும் கிரியைகள் இயேசுகிறிஸ்துவைப் பற்

றும் விசுவாசத்தால் உண்டானவைகளாயிராததினால், தேவனுக்குப் பிரியமானவைகளும் அல்ல. அவைகள் கிருபையைப் பெறுவதற்கு மனுஷரைப் பாத்திரவான்களாக்குகிறதும் அல்ல, அல்லது, சில கல்விமான்கள் சொல்லியபடி, அவைகள் கிருபையைப் பலனாகப் பெறத் தகுதியானவைகளும் அல்ல; மேலும் அவைகள் தேவனுடைய சித்தத்தின்படியும் கட்டளையின்படியும் செய்யப்படாதவைகளானதால், அவைகள் பாவத்தன்மை உள்ளவைகள் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

14. மிச்சப்புண்ணியக் கிரியைகள்.

தேவன் கட்டளையிட்டதற்கு அதிகமாக சுதாவாய்ச் செய்கிற கிரியைகள் மிச்சப்புண்ணியக் கிரியைகளாம். இப்படிச் செய்யக்கூடும் என்று போதிக்கிறது அகங்காரமாயும் அவபக்தியாயும் இருக்கிறது. அவைகளைச் செய்தோம் என்கிறவர்கள், தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையைத் தாங்கள் சரியாய் நிறைவேற்றினதும் அல்லாமல், கட்டளையிட்டிருக்கிற கடமையிலும் அதிகமாய் அவருக்காகச் செய்தோம் என்கிறவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவோ: உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் என்று சொல்லுங்கள் என்று தெளிவாய்ப் போதித்திருக்கிறார்.

15. கிறிஸ்து ஒருவரே பாவம் இல்லாதவர்.

நம்முடைய தன்மையை மெய்யாய்த் தரித்துக்கொண்ட கிறிஸ்து, பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நமக்கு ஒப்பானவரானார். சரீரத்திலும் ஆத்துமாவிலும் அவர் முற்றும் பாவம் இல்லாதவர். அவர் மாசில்லாத ஆட்டுக்குட்டியாகத் தம்மைத்தாமே ஒரேதரம் பலியிட்டு உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்க வந்தார். பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறபடி, அவரிடத்தில் பாவம் இல்லை. நாமோ ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்களாயிருந்தும், அநேக விஷயங்களில் தவறுகிறோம்; நமக்குப் பாவம் இல்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

16. ஞானஸ்நானத்துக்குப்பின்பு செய்யும் பாவம்.

ஞானஸ்நானம் பெற்றபின்பு மனதாரச் செய்யும் மரணத்துக்கு ஏதுவான ஒவ்வொரு பாவமும் பரிசுத்த ஆவிக்கு விரோதமான மன்னிக்கப்படாத பாவம் அல்ல. ஆகையால் ஞானஸ்நானம் பெற்றபின்பு, பாவத்தைச் செய்தவர்கள் மனந்திரும்பி மன்னிப்புப் பெறுவதற்கு இடம் இல்லை என்று தீர்க்கக்கூடாது. நாம் பரிசுத்தஆவியைப் பெற்றபின்பும், நமக்கு அருளின கிருபையை விட்டு விலகி, பாவத்தில் விழுகிறதும் உண்டு;

திரும்பவும் தேவகிருபையினாலே எழுந்திருந்து சீர்ப்படுகிறதும் உண்டு. ஆதலால், தாங்கள் இம்மையில் இருக்குமளவும் பாவம்செய்யக் கூடியவர்கள் அல்ல என்று சொல்லுகிறவர்களும், உண்மையாய்க் குணப்படுகிறவர்களுக்குப் பாவமன்னிப்பு இல்லை என்று சொல்லுகிறவர்களும் தப்பிதமான கொள்கைக்காரர் என்று தீர்க்கவேண்டும்.

17. முன்குறித்தல், தெரிந்துகொள்ளுதல்.

நித்திய ஜீவனுக்கு ஏதுவான முன்குறித்தலானது, உலகத்தோற்றத்துக்குமுன் கிறிஸ்துவுக்குள்ளே மனுஷரில் தாம் தெரிந்துகொண்டவர்களைச் சாபத்தினின்றும் ஆக்கினைத்தீர்ப்பினின்றும் விடுதலையாக்கி, அவர்களைக் கனத்துக்கு ஏற்ற பாத்திரங்களாக நித்திய இரட்சிப்புக்குக் கொண்டுவந்து சேர்ப்போம் என்று, நமக்கு இரகசியமாயிருக்கிற தமது திருவுள ஆலோசனையினாலே தீர்மானித்திருக்கிற தேவனுடைய அநாதி நிர்ணயமே. ஆகையால், இவ்வளவு மேன்மையான திவ்விய அருள் பெற்றிருக்கிறவர்களுடைய சலாக்கியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் ஏற்றகாலத்தில் அவர்களுக்குள்ளே கிரியைசெய்ய, அவர்கள் தேவதீர்மானத்தின்படி அழைக்கப்படுகிறார்கள்; தேவகிருபையினாலே அந்த அழைப்புக்குக் கீழ்ப்படிகிறார்கள்; இலவசமாய் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; புத்திரசுவிகாரத்தினாலே தேவனுக்குப் பிள்ளைகளாகிறார்கள்; அவருடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒப்பாகிறார்கள்; நற்கிரியைகளைச் செய்து தேவபக்தியாய் நடக்கிறார்கள்; கடைசியில் தேவனுடைய இரக்கத்தினாலே நித்திய ஆநந்தம் அடைகிறார்கள்.

மாம்சத்துக்கேற்ற கிரியைகளையும், பூமிக்குரிய தங்கள் அவயவங்களையும் அழித்துப்போடவும், பரத்துக்கேற்ற மேலானவைகளைச் சிந்திக்கவும் தக்கதாய், கிறிஸ்துவின் ஆவியானவர் தங்களுக்குள்ளே செய்கிற கிரியையை உணர்ந்தறிகிற தேவபக்தியுள்ளவர்கள் முன்குறித்தலையும், கிறிஸ்துவுக்குள்ளே தாங்கள் தெரிந்துகொள்ளப்பட்டதையும் பக்தியாய்த் தியானம்பண்ணும்போது, அந்தத் தியானம், கிறிஸ்துவின் மூலமாய் நித்திய இரட்சிப்பை அநுபவிக்கலாம் என்கிற அவர்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறதும் அன்றி, தேவன்மேல் வைத்த அவர்கள் அன்பை வளரச்செய்கிறதினாலேயும், அது அவர்களுக்குச் சந்தோஷமாயும், நிறைந்த ஆறுதல் உள்ளதாயும் இருக்கிறது. அப்படிப்போல, கிறிஸ்துவின் ஆவி இல்லாத மாம்ச சிந்தையுள்ளவர்கள் முன்குறித்தலாகிய தேவனுடைய நிர்ணயத்தை ஆராயவேண்டுமென்று துணிவுகொண்டு சிந்தித்துக்கொண்டேவந்தால், சாத்தானுடைய தூண்டுதலினால் அவர்கள் அவநம்பிக்கையிலாவது, அதற்குச் சரியான வெட்கங்கெட்ட துன்மார்க்க நடக்கையிலாவது,

அகப்படுவார்கள்; ஆகையால் அது அவர்களுக்குக் கொடிய மோசமுள்ளதாயிருக்கும்.

மேலும், தேவன் பரிசுத்த வேதவாக்கியங்களில் யாவருக்கும் பொதுவாய்ச் செய்திருக்கிற அந்தந்த வாக்குத்தத்தங்களை அந்தந்தப்பிரகாரமாகவே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவவசனத்தில் நமக்குத் தெளிவாய் அறிவித்திருக்கிற தேவசித்தத்தையே நமது நடக்கைக்குப் பிரமாணமாக வைத்து நடக்கவேண்டும்.

18. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே நித்திய இரட்சிப்பு கிடைப்பது.

மனுஷர் இரட்சிக்கப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமம்மாத்திரமே பரிசுத்த வேதவாக்கியங்களில் காட்டியிருக்கிறபடியால், எந்த சாஸ்திரத்தையாவது, எந்த சமயத்தையாவது பற்றிக்கொண்டிருக்கிறவன், அந்த சமய சாஸ்திரத்தின்படியும் இயற்கை அறிவின்படியும் கிரமமாய் நடப்பானாகில், அதினால் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லத் துணிகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று எண்ணப்படவேண்டும்.

19. திருச்சபை.

தேவனுடைய சுத்தாங்கவசனம் பிரசங்கிக்கப்பட்டும், கிறிஸ்துவின் நியமப்படி சாக்கிரமெந்துக்களுக்கு அவசியம் வேண்டிய யாவற்றையும் செய்யவேண்டிய விதமாய்ச் செய்து தகுதியாய் ஆசரிக்கப்பட்டும் வருகிற விசுவாசிகளுடைய சங்கமே கிறிஸ்துவின் வெளியரங்கமான சபை.

எருசலேம், அலெக்சந்திரியா, அந்தியோகியா சபைகள், நடக்கை, சடங்கு, ஆசாரங்களையும் குறித்துமாத்திரம் அல்ல, விசுவாசிக்கவேண்டியவைகளைக்குறித்தும் தவறிப்போனதுபோல, ரோமசபையும் தவறிப்போயிருக்கிறது.

20. திருச்சபைக்குரிய அதிகாரம்.

ஆராதனைக்கேற்ற முறைமைகளையும் சடங்குகளையும் ஏற்படுத்துகிறதற்கும், விசுவாசிக்கவேண்டியவைகளைக்குறித்து உண்டாகும் தர்க்கங்களைத் தீர்க்கிறதற்கும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் எழுதியிருக்கிற தேவவசனத்துக்கு விரோதமான யாதொன்றையும் ஏற்படுத்துவதற்கும், வேத ஆகமத்திலுள்ள ஒரு வாக்கியத்தை மற்ற வாக்கியத்துக்கு விரோதமாக வியாக்கியானம் செய்வதற்கும் திருச்சபைக்கு அதிகாரம் இல்லை; ஆகையால், திருச்சபையானது வேத எழுத்துக்களுக்குச் சாட்சியாயும், அவைகளைக் காக்கும் அதிகாரியாயும் இருந்தும், அது அவைக

ளுக்கு விரோதமான யாதொன்றையும் ஏற்படுத்தவும் கூடாது; அவைகளில் அடங்கியிராத யாதொன்றையும் இரட்சிப்படைவதற்காக விசுவாசிக்க வேண்டுமென்று கட்டளையிடவும் கூடாது.

21. திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்களின் அதிகாரம்.

ராஜாக்களுடைய உத்தரவும் அநுமதியும் இல்லாமல், திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்கள் கூடிவரக்கூடாது. கூடிவந்திருக்கும் போதும், அந்தச் சங்கத்தார் மனுஷராயிருப்பதினாலும், தேவனுடைய ஆவியினாலும் வசனத்தினாலும் ஆளப்படாதவர்கள் அவர்களுக்குள்ளே இருப்பதினாலும், திவ்விய காரியங்களைக்குறித்து அவர்கள் தவறிப்போவதற்கு ஏது உண்டு, அப்படித் தவறிப்போனதும் உண்டு; ஆகையால் இரட்சிப்படைவதற்கு அவசியம் என்று அவர்கள் தீர்மானிக்கிறவைகள் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறவைகள் என்று ரூபிக்கக்கூடாவிட்டால், அவைகள் உறுதியும் அதிகாரமும் உள்ளவைகள் அல்ல.

22. உத்தரிக்கும் ஸ்தலம்.

உத்தரிக்கும் ஸ்தலத்தைக்குறித்தும், பரிபூரண பலன்களைக்குறித்தும், சொரூபங்களையும் அர்ச்சியசிஷ்ட பண்டங்களையும் பணிந்து வணங்குகிறதைக்குறித்தும், அர்ச்சியசிஷ்டவான்களை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறதைக்குறித்தும், ரோமைச்சபை போதிக்கிற உபதேசம் புத்தியீனமாய்க் கட்டின வீண்காரியமாயும், வேதவாக்கியங்களினாலே ரூபிக்கப்படக் கூடாமல் தேவவசனத்துக்கு விரோதமாயும் இருக்கிறது.

23. சபையில் செய்யப்படும் பணிவிடை.

கிரமப்படி அழைத்து அனுப்பப்படுமுன் சபையிலே பிரசங்கிக்கவும் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கவும் ஒருவனும் தானாய் ஏற்படக்கூடாது. கர்த்தருடைய திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அழைத்து அனுப்பும்படி, திருச்சபையில் வெளியரங்கமாய் அதிகாரம் பெற்றிருக்கிறவர்களாலே இந்தப் பணிவிடைக்குத் தெரிந்தெடுத்து அழைக்கப்பட்டிருக்கிறவர்களே, கிரமப்படி அழைத்து அனுப்பப்பட்டவர்கள் என்று நிதானிக்க வேண்டும்.

24. சபையாருக்குத் தெரிந்திருக்கிற பாஷையிலே தேவ ஆராதனை செய்தல்.

ஜனங்களுக்குத் தெரியாத பாஷையிலே தேவாலயத்தில் வெளியரங்கமாய் ஜெபம்பண்ணுகிறதும், சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கிறதும், தேவவசனத்துக்கும் பூர்வ திருச்சபை வழக்கத்துக்கும் முற்றும் விரோதமான காரியமாயிருக்கிறது.

25. சாக்கிரமேந்துக்கள்.

கிறிஸ்துவினாலே ஏற்படுத்தப்பட்ட சாக்கிரமெந்துக்கள் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரிக்கிறதற்குக் குறிப்படையாளங்களாகமாத்திரம் அல்ல, தேவகிருபைக்கும், தேவன் நம்மிடத்தில் வைத்திருக்கிற பிரியத்துக்கும், நிச்சயமான சாட்சிகளாகவும், பலன் செய்யும் அடையாளங்களாகவும், அவர்மேல் நாம் வைக்கிற விசுவாசத்தை எழுப்பிப் பலப்படுத்துவதற்கு அவர் நமக்குள்ளே அந்தரங்கமாய்க் கிரியைசெய்கிற யத்தனங்களாகவும் இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து சுவிசேஷத்தில் ஏற்படுத்தின சாக்கிரமெந்துக்கள் இரண்டு: அவைகள் ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போஜனமுமாம்.

சிலர் சாக்கிரமெந்துக்கள் என்று சொல்லுகிற திடப்படுத்தல், பாவசங்கீர்த்தனம், குருப்பட்டம், விவாகம், அவஸ்தைப்பூசுதல் ஆகிய இவ்வைந்தில், சிலது அப்போஸ்தலர் செய்ததைச் சரியாய்ப் பின்பற்றாமல், கெடுதியாய்ப் பின்பற்றினதினாலே உண்டானவைகள்; சிலது வேதவாக்கியங்களினாலே ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைமைகள்; ஆனாலும் தேவன் நியமித்த புறம்பான அடையாளமும், முறையும், அவைகளுக்கு இல்லாததினால், அவைகள் ஞானஸ்நானமும் இராப்போஜனமுமாகிய சாக்கிரமெந்துக்களுக்குரிய தன்மை உடையவைகளல்ல. ஆகையால் அவைகளைச் சுவிசேஷ சாக்கிரமெந்துக்கள் என்று எண்ணக்கூடாது.

வேடிக்கையாய்ப் பார்க்கிறதற்கும் எடுத்துக்கொண்டு திரிகிறதற்கும் அல்ல, நாம் ஏற்றவிதமாய் அநுசரிப்பதற்கே கிறிஸ்துவானவர் சாக்கிரமெந்துக்களை ஏற்படுத்தினார். பாத்திரராய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரம் அவைகள் சுகிர்த பிரயோஜனமாய்ப் பலிக்கும்; அவைகளை அபாத்திரராய்ப் பெறுகிறவர்கள் பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறபடி தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

26. அபாத்திரரான தேவ பணிவிடைக்காரராலே கொடுக்கப்படும் சாக்கிரமேந்துக்களின் பலன் குறைபடாமை.

வெளியரங்கமான திருச்சபையிலே நல்லாரோடே தீயோர் எப்பொழுதும் கலந்திருக்கிறதும் அல்லாமல், தேவவசனத்தைப் பிரசங்கித்துச் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கும் பணிவிடையில் சிலவேளை தீயோர் முதன்மையாயிருக்கிறதும் உண்டு. ஆனாலும் அவர்கள் தங்களுடைய நாமத்தினாலேயல்ல, கிறிஸ்துவின் நாமத்தினாலேயே அவைகளைச் செய்து, அவருடைய கட்டளையினாலும் அதிகாரத்தினாலும் பணிவிடையை நடப்

பிக்கிறபடியினாலே, அவர்கள் மூலமாய் நாம் தேவவசனத்தைக் கேட்கலாம், சாக்கிரமெந்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களுடைய துன்மார்க்கத்தினாலே கிறிஸ்துவினுடைய நியமம் பலனற்றதாய்ப் போகிறதுமில்லை, அவர்களாலே கொடுக்கப்படும் சாக்கிரமெந்துக்களை விசுவாசத்தினாலே ஏற்றவிதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, தேவவரப்பிரசாதங்களுக்குரிய கிருபை குறைந்துபோகிறதுமில்லை. அந்தச் சாக்கிரமெந்துக்கள் துன்மார்க்கர்மூலமாய்க் கொடுக்கப்பட்டாலும், கிறிஸ்துவின் நியமத்தினாலும் வாக்குத்தத்தத்தினாலும் பலன்செய்கிறவைகளாயிருக்கும்.

ஆகிலும், துன்மார்க்கமாய் நடக்கிற தேவ பணிவிடைக்காரரைக் குறித்து விசாரிக்கிறதும், அவர்கள் செய்த குற்றங்களை அறிந்திருக்கிறவர்கள்மூலமாய் அவர்களை விசாரணைக்குக் கொண்டுவருகிறதும், குற்றமுள்ளவர்கள் என்று காணப்பட்டால் நீதியுள்ள தீர்ப்பினாலே அவர்களை நீக்கிப்போடுகிறதும், திருச்சபையின் ஒழுங்குக்கு ஏற்றது.

27. ஞானஸ்நானம்.

ஞானஸ்நானமானது கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்துக்கொள்வதற்கு அடையாளமாகவும், கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களாகாத மற்றவர்களும் இன்னாரென்று காண்பிக்கத்தக்க வேற்றுமைக் குறிப்பாகவும்மாத்திரம் அல்ல, மறுபிறப்புக்கு அடையாளமாகவும் இருக்கிறது; ஞானஸ்நானத்தைத் தகுதியாய்ப் பெறுகிறவர்களைத் திருச்சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறதற்கு அது ஒரு யத்தனமாயிருக்கிறது. அதனாலே பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியினாலே தேவனுக்குப் பிள்ளைகளாவதற்கு ஏற்ற புத்திரசுவிகாரத்தையும் பற்றிய வாக்குத்தத்தங்கள் பிரத்தியட்சமாய்க் கையொப்பமும் முத்திரையும் இட்டதுபோல உறுதியாக்கப்படுகிறது, விசுவாசமும் பலப்படுகிறது, தேவனை நோக்கிச் செய்யும் ஜெபத்தின் மூலமாய்க் கிருபையும் அதிகரிக்கிறது. குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கிறது, கிறிஸ்துவின் நியமத்துக்கு ஏற்றதென்று திருச்சபையிலே எப்பொழுதும்போல அதை அநுசரித்துவரவேண்டும்.

28. கர்த்தருடைய இராப்போஜனம்.

கர்த்தருடைய இராப்போஜனமானது கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் வைக்கவேண்டிய அன்புக்கு அடையாளமாகமாத்திரம் அல்ல, கிறிஸ்துவின் மரணத்தினாலே நமக்கு உண்டான மீட்புக்குரிய சாக்கிரமெந்தாயும் இருக்கிறது. எப்படியெனில், அதைக் கிரமப்படியும் பாத்திரமாயும் விசுவாசத்தோடு வாங்குகிறவர்களுக்கு நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தைப் பெற்றுக்கொள்ளுதலாயும், ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பெற்றுக்கொள்ளுதலாயும் இருக்கிறது.

கர்த்தருடைய இராப்போஜனத்திலே அப்பமும் திராட்சரசமுமாகிய இவற்றின் சுபாவமாறுதல் உண்டென்பது (*Transubstantiation*), தேவவசனத்தினாலே ரூபிக்கப்படாமல், தெளிவான வேதவாக்கியங்களுக்கு விரோதமாயும், சாக்கிரமெந்தின் தன்மையை மறுக்கிறதாயும், அநேக வீண்பக்திக்குக் காரணமாயும் இருக்கிறது.

இராப்போஜனத்திலே கிறிஸ்துவினுடைய சரீரம் ஆவிக்குரிய திவ்விய பிரகாரமாகமாத்திரம் கொடுக்கப்பட்டும், வாங்கப்பட்டும், புசிக்கப்பட்டும் வருகிறது. கிறிஸ்துவின் சரீரத்தை இராப்போஜனத்திலே வாங்கிப் புசிக்கிற யத்தனம் விசுவாசமே.

கர்த்தருடைய இராப்போஜனமாகிய சாக்கிரமெந்தை வைத்துவைக்கிறதும், எடுத்துக்கொண்டு திரிகிறதும், உயர்த்திக் காட்டுகிறதும், நமஸ்கரிக்கிறதும், கிறிஸ்துவின் ஏற்பாடு அல்ல.

29. துன்மார்க்கர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாங்கினாலும், கிறிஸ்துவின் சரீரத்தைப் புசியாமை.

துன்மார்க்கரும் உயிருள்ள விசுவாசமில்லாதவர்களும் (பரிசுத்த அகுஸ்தீன் சொல்லியபடி) சரீரப்பிரகாரமாக வெளியரங்கமாய்த் தங்கள் பற்களாலே கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமுமாகிய சாக்கிரமெந்தைமென்று தின்றாலும், அவர்கள் எவ்விதத்தினாலேயும் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாகாமல், தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாகத்தக்கதாக, இவ்வளவு பெரிய காரியத்துக்கு அடையாளமாயிருக்கிற சாக்கிரமெந்தைப் புசித்துப் பானம்பண்ணுகிறார்கள்.

30. அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் பெறுதல்.

கிறிஸ்துவின் நியமத்தின்படியும் கட்டளையின்படியும், கர்த்தருடைய சாக்கிரமெந்துக்குரிய அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் வித்தியாசமில்லாமல் கிறிஸ்தவர்களெல்லாருக்கும் கொடுக்கவேண்டியதாகையால், கர்த்தருடைய பாத்திரத்தைச் சபையாருக்குக் கொடாமல் இருக்கக்கூடாது.

31. கிறிஸ்து சிலுவையில் செலுத்தி முடித்த ஒரே பலி.

கிறிஸ்து ஒரேதரம் செலுத்தின பலியானது ஜந்மபாவமும் கர்மபாவமுமாகிய உலகத்தின் பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கின சம்பூரண

மான மீட்பும், பிராயச்சித்தமும், பரிகாரமுமாய் இருக்கிறது. இதுவேயல்லாமல், பாவத்துக்கு வேறொரு பரிகாரமும் இல்லை. ஆகையால், உயிருள்ளோருக்கும் மரித்தோருக்கும் உண்டாயிருக்கும் தண்டனையையாவது, குற்றத்தையாவது நீக்கும்படி குருவானவர் அவர்களினிமித்தம் கிறிஸ்துவைப் பலியிடுகிறார் என்று வழக்கமாய்ச் சொல்லுகிற பூசைப்பலிகள் தேவதூஷணமுள்ள கட்டுக்கதைகளும், மோசம் நிறைந்த வஞ்சனைகளுமாயிருக்கிறது.

32. குரு விவாகம்.

அத்தியட்சமார்களும், குருமார்களும், உதவிக்குருமார்களும் விவாகம் செய்துகொள்வதில்லை என்று பிரமாணம் பண்ணவேண்டுமென்றாவது, விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்றாவது, தேவவசனத்திலே கட்டளையிட்டிருக்கிறதில்லை. ஆதலால், மற்றக் கிறிஸ்தவர்களைப்போல இவர்களும் விவாகம்செய்துகொள்வது தேவபக்திக்கு ஏதுவாயிருக்கும் என்று எண்ணுவார்களானால், தங்கள் இஷ்டத்தின்படி விவாகம் செய்துகொள்ளலாம்.

33. சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களுக்கு விலகியிருத்தல்.

திருச்சபை பிரசித்தஞ்செய்யும் தீர்ப்பினாலே சபையின் ஐக்கியத்தை விட்டு நியாயமாய்ப் புறம்பாக்கப்பட்டவன், வெளியரங்கமாய்த் தபசு செய்து ஒப்புரவாகித் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளத்தக்க அதிகாரியினாலே சேர்க்கப்படுமளவும், எல்லா விசுவாசிகளாலும் அவன் அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் எண்ணப்படவேண்டும்.

34. திருச்சபையின் பாரம்பரை வழக்கங்கள்.

பாரம்பரை வழக்கங்களும், சடங்குகளும் எல்லா இடங்களிலும் யாதொரு வேற்றுமையும் இல்லாமல் ஒரேவிதமாய் இருக்கவேண்டிய அவசியம் இல்லை; அவைகள் எக்காலத்திலேயும் வெவ்வேறாயிருந்தன. அந்தந்தத் தேசத்துக்கும், காலத்துக்கும், ஜனத்தின் ஆசாரங்களுக்கும் தக்கதாக அவைகளை மாற்றிக்கொள்ளலாம்; தேவவசனத்துக்கு விரோதமாகமாத்திரம் யாதொன்றும் நியமிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தேவவசனத்துக்கு விரோதமாயிராமல் பொதுவான அதிகாரத்தினாலே ஏற்படுத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற திருச்சபையின் பாரம்பரை வழக்கங்களையும் சடங்குகளையும் தன் சுய அபிப்பிராயப்படி மனதார வேண்டுமென்றே வெளியரங்கமாய் மீறுகிறவன் எவனோ, அவன் திருச்சபையின் பொதுவான ஒழுங்குக்கு விரோதமாய் நடந்து, நியாயாதிபதிகளின் அதிகாரத்தை இகழ்ந்து, பலவீன சகோதரரின் மனச்சாட்சியைப்

புண்படுத்துகிறவனாய் இருக்கிறபடியால், மற்றவர்களுக்கு எச்சரிப்புண்டாக அவன் வெளியரங்கமாகக் கண்டிக்கப்படவேண்டும்.

மனுஷ அதிகாரத்தினால் ஏற்படுத்தப்பட்டவைகளாகிய சபையின் சடங்குகளையும் முறைமைகளையும் தேவபக்திக்கு ஏதுவாக மாற்றவும், ஒழித்துப்போடவும், ஏற்படுத்தவும் அந்தந்தத் தேசத்துச் சபைக்கு அதிகாரம் உண்டு; எல்லாம் பக்திவிருத்திக்கு ஏதுவாகமாத்திரம் இருக்கவேண்டும்.

35. ஓமிலி பிரசங்கங்கள்.

ஆறாம் எட்வார்ட் ராஜாவின் நாட்களில் பிரசித்தஞ்செய்த ஓமிலி பிரசங்கங்கள் அடங்கிய முதலாம் புஸ்தகத்தைப்போல, இந்தப் பிரமாணத்தின் அடியில் காட்டியிருக்கிற ஓமிலி பிரசங்கங்கள் அடங்கிய இரண்டாம் புஸ்தகத்திலும், தேவபக்திக்கும் திவ்விய ஆரோக்கியத்துக்கும் ஏற்றதும், இக்காலத்துக்கு அவசியம் வேண்டியதுமான உபதேசம் அடங்கியிருக்கிறது. ஆகையால், ஜனங்களுக்கு விளங்கத்தக்கதாக அவைகளைக் குருமார் தேவாலயத்தில் கருத்தோடும் தெளிவான சத்தத்தோடும் வாசிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறோம்.

ஓமிலி பிரசங்கங்களின் அட்டவணை.

1. தேவாலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய கிரமம்.
2. விக்கிரகாராதனையின் மோசத்துக்கு விலகுவது.
3. தேவாலயங்களைப் பழுதுபார்த்துச் சுத்தமாய் வைப்பது.
4. உபவாசம் முதலான நற்கிரியைகள்.
5. பெருந்தீனியும் வெறியும் விலக்கல்.
6. வஸ்திராபரணங்களை மட்டுமிஞ்சித் தரியாதிருத்தல்.
7. ஜெபம்பண்ணுதல்.
8. ஜெபம்பண்ணுவதற்கு ஏற்ற காலமும் இடமும்.
9. ஜனங்களுக்குத் தெரியும்பாஷையில் பொதுவான ஜெபங்களையும் சாக்கிரமெந்து முறைமைகளையும் நடத்துவது.
10. தேவவசனத்தைப் பயபக்தியாய் எண்ணுவது.
11. தர்மஞ்செய்வது.
12. கிறிஸ்துவின் ஜநநம்.
13. கிறிஸ்துவின் பாடு.
14. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
15. கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தைப் பாத்திரராய் வாங்குதல்.
16. பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதங்கள்.
17. பரமண்டலத்துக்கேறின நாளுக்கு முந்தின மூன்று நாட்கள்.
18. விவாக நிலைமை.
19. மனந்திரும்புதல்.
20. சோம்பற்றனம்.
21. இராஜதுரோகம்.

36. அத்தியட்சமார் குருமார் பட்டாபிஷேகம்.

பிரதான அத்தியட்சமார் அத்தியட்சமாரின் பிரதிஷ்டை முறைமையும், குருமார் உதவிக்குருமாரின் பட்டாபிஷேக முறைமையும் அடங்கிய புஸ்தகம், ஆறாம் எட்வார்ட் ராஜாவின் நாட்களில் பிரசித்தஞ்செய்யப்பட்டு, அக்காலத்துப் பார்லமெந்து சபையின் அநுமதியும் பெற்றிருக்கிறது. பிரதிஷ்டை பட்டாபிஷேகமுறைமைகளில் செய்யவேண்டியவைகளெல்லாம் அந்தப் புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது; அதிலே வீண்பக்திக்கும் அவபக்திக்கும் ஏதுவானது ஒன்றும் இல்லை. ஆதலால், மேற்சொல்லிய எட்வார்ட் ராஜாவின் இரண்டாம் வருஷமுதல் இதுவரைக்கும் அந்தப் புஸ்தகத்தின் முறைமைகளின்படி கண்காணிப்புப் பிரதிஷ்டையாவது, குருப்பட்டாபிஷேகமாவது பெற்றிருக்கிறவர்களும், இனிமேல் அந்த முறைமைகளின்படி பெறுகிறவர்களுமாகிய யாவரும் சரியாயும் ஒழுங்காயும் நியாயமாயும் பட்டம் பெற்றவர்கள் என்று தீர்மானிக்கிறோம்.

37. தேச அதிகாரிகள்.

இங்கிலாந்து ராஜ்யத்துக்கும், அதைச்சேர்ந்த மற்றத் தேசங்களுக்கும் இராஜாத்தியே பிரதான அதிகாரி, அவைகளிலுள்ள திருச்சபைக்கும் ராஜாங்கத்துக்குமுரிய சகல அந்தஸ்துடையவர்களின் சகல விவகாரங்களையும் தீர்மானிக்கிற அதிகாரமும் அவருக்கே உரியது: அவர் அந்நியதேசத்து எந்த அதிகாரத்துக்கும் உட்பட்டவரும் அல்ல, உட்படவும் கூடாது.

இராஜாத்தியானவருக்குப் பிரதான அதிகாரம் உண்டென்று நாம் சொல்வதைக்குறித்து சிலர் மனவெறுப்புக்கொண்டு ஆட்சேபிக்கிறார்கள் என்று தெரியவருகிறதினால் நாம் அறிவிக்கிறது என்னவென்றால்: நம்முடைய இராஜாத்தியாகிய எலிசபேத்து கொஞ்சக்காலத்துக்கு முன்னே பிரசித்தஞ்செய்திருக்கிற கட்டளைகளினாலே தெளிவாய்த் தோன்றுகிறபடியே, தேவவசனத்தைப் பிரசங்கித்துச் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கிற பணிவிடை நம்முடைய ராஜாக்களுக்கு உண்டென்று சொல்லாமல்; தேவனாலேயே தேவபக்தியுள்ள ராஜாக்களுக்கு எப்பொழுதும் கொடுக்கப்பட்டிருந்ததென்று வேதவாக்கியங்களினாலே காட்டியிருக்கிற அதிகாரம்மாத்திரம் அவர்களுக்கு உண்டென்று சொல்லுகிறோம். அந்த அதிகாரம் என்னவென்றால், திருச்சபையிலாவது, ராஜாங்கத்திலாவது, தேவன் தங்களுடைய விசாரணைக்கு ஒப்புவித்திருக்கிற எந்த அந்தஸ்துடையவர்களையும் ஆண்டு, முருட்டாட்டக்காரரையும் துன்மார்க்கரையும் நீதியாகிய கட்கத்தினாலே அடக்கிப்போடுகிற அதிகாரமேயாம்.

இங்கிலாந்து ராஜ்யத்திலே ரோமை அத்தியட்சருக்கு அதிகாரமே இல்லை.

கொடிய பாதகங்களைச் செய்திருக்கிற கிறிஸ்துமார்க்கத்தாரையும் ராஜ்யத்துப் பிரமாணங்களின்படி மரண ஆக்கினைக்கு உட்படுத்தலாம்.

தேச அதிகாரிகளின் உத்தரவுப்படி கிறிஸ்தவர்கள் ஆயுதம் தரித்துப் போர்ச்சேவகம்பண்ணலாம்.

38. கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகள் பொதுவாயிராமை.

கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகளைக்குறித்து யாவருக்கும் பொதுவான பாத்தியமும் அநுபோகமும் உண்டென்று, அனபப்திஸ்தர் சாதிக்கிறது அபத்தம். ஆனாலும், ஒவ்வொருவனும் தன்தன் திராணிக்குத்தக்கதாக, தனக்கு உண்டானவைகளில் ஏழைகளுக்கு உதாரமாய்க் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருக்கிறான்.

39. கிறிஸ்தவர்கள் சத்தியம்பண்ணுதல்.

வியர்த்தமாயும் பயபக்தியில்லாமலும் சத்தியம்பண்ணுகிறது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், அவர் அப்போஸ்தலனாகிய யாக்கோபினாலும், கிறிஸ்தவர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நாம் ஒப்புக்கொண்டபோதிலும்; தேச அதிகாரிகள் உத்தரவுகொடுத்தால், விசுவாசத்துக்கும் அன்புக்கும் அடுத்த விஷயங்களில், தீர்க்கதரிசி போதித்தபடி, கிறிஸ்தவனானவன் நீதியாயும் நியாயமாயும் உண்மையாயும் சத்தியம்பண்ணலாம் என்று நிதானிக்கிறோம்.

உறுதிப்படுத்தல்.

மேற்சொல்லிய வேதசித்தாந்தப் பிரமாணங்கள் அடங்கிய புஸ்தகம் கிறிஸ்து பிறந்து 1571-ம் வருஷத்தில் பிரதான அத்தியட்சமார் அத்தியட்சமார் மேற்சங்கமாகவும், எல்லாக் குருமார்களும் கீழ்ச்சங்கமாகவும் கூடிவந்தபோது, கவனமாய் வாசிக்கக்கேட்டும், அவர்கள் கையொப்பத்தினாலே உறுதியாக்கப்பட்டும் இருந்ததும் அல்லாமல்; தேவகிருபையினாலே இங்கிலாந்து, பிரான்சு, ஐர்லாந்து என்னும் தேசங்களுக்கு இராஜாத்தியும், கிறிஸ்துமார்க்கப் பரிபாலினி என்கிற பேர்பெற்றவருமாயிருக்கிற நம்முடைய சுயாதிபதியாகிய எலிசபேத்து இராஜாத்தியாலே மறுபடியும் சம்மதியும் அநுமதியும் பெற்று, அது இந்த ராஜ்யமெங்கும் கைக்கொள்ளப்படலாமென்று உறுதியாக்கப்பட்டும் இருக்கிறது.

வேதசித்தாந்தப் பிரமாணங்களின் பெயர் அட்டவணை.

1. பரிசுத்த திரித்துவத்தைப் பற்றும் விசுவாசம்.
2. மெய்யான மனுஷனாய் அவதரித்த தேவ குமாரனாகிய வார்த்தையானவர்.
3. கிறிஸ்து பாதாளத்தில் இறங்கினது.
4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
5. பரிசுத்த ஆவியானவர்.
6. இரட்சிப்படைவதற்குப் பரிசுத்த வேதாகமங்களே போதுமானது.
7. பழைய ஏற்பாடு.
8. விசுவாசப் பிரமாணங்கள் மூன்று.
9. ஜந்மபாவம்.
10. சுயாதீன சித்தம்.
11. மனுஷன் நீதிமானாக்கப்படுதல்.
12. நற்கிரியைகள்.
13. நீதிமான்களாக்கப்படுமுன் செய்யும் கிரியைகள்.
14. மிச்சப்புண்ணியக் கிரியைகள்.
15. கிறிஸ்து ஒருவரே பாவம் இல்லாதவர்.
16. ஞானஸ்நானத்துக்குப்பின்பு செய்யும் பாவம்.
17. முன்குறித்தல், தெரிந்துகொள்ளுதல்.
18. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே நித்தியரட்சிப்பு கிடைப்பது.
19. திருச்சபை.
20. திருச்சபைக்குரிய அதிகாரம்.
21. திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்களின் அதிகாரம்.
22. உத்தரிக்கும் ஸ்தலம்.
23. சபையில் செய்யப்படும் பணிவிடை.
24. சபையாருக்குத் தெரிந்திருக்கிற பாஷையிலே தேவ ஆராதனை செய்தல்.
25. சாக்கிரமெந்துக்கள்.
26. அபாத்திரரான தேவ பணிவிடைக்காரராலே கொடுக்கப்படும் சாக்கிரமெந்துக்களின் பலன் குறைபடாமை.
27. ஞானஸ்நானம்.
28. கர்த்தருடைய இராப்போஜனம்.
29. துன்மார்க்கர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாங்கினாலும், கிறிஸ்துவின் சரீரத்தைப் புசியாமை.
30. அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் பெறுதல்.
31. கிறிஸ்து சிலுவையில் செலுத்தி முடித்த ஒரே பலி.
32. குரு விவாகம்.
33. சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களுக்கு விலகியிருத்தல்.
34. திருச்சபையின் பாரம்பரை வழக்கங்கள்.
35. ஓமிலி பிரசங்கங்கள்.
36. அத்தியட்சமார் குருமார் பட்டாபிஷேகம்.
37. தேச அதிகாரிகள்.
38. கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகள் பொதுவாயிராமை.
39. கிறிஸ்தவர்கள் சத்தியம்பண்ணுதல்.

இன்னின்னாரை விவாகஞ்செய்யக்கூடாதென்று,
வேதவாக்கியங்களினாலும், தேசப்பிரமாணங்களினாலும்
கட்டளையிட்டிருக்கிற

இனமுறை சம்பந்த விவாக அட்டவணை.

ஒருவன்.	ஒருத்தி.
1. தன்னுடைய பாட்டியையும்,	1. தன்னுடைய பாட்டனையும்,
2. பாட்டனுடைய மனைவியையும்,	2. பாட்டியினுடையபுருஷனையும்,
3. மனைவியினுடைய பாட்டியையும்,	3. புருஷனுடைய பாட்டனையும்,
4. தகப்பனுடைய சகோதரியையும்,	4. தகப்பனுடைய சகோதரனையும்,
5. தாயினுடைய சகோதரியையும்,	5. தாயினுடைய சகோதரனையும்,
6. தகப்பனுடைய சகோதரன் மனைவியையும்,	6. தகப்பனுடைய சகோதரி புருஷனையும்,
7. தாயினுடைய சகோதரன் மனைவியையும்,	7. தாயினுடைய சகோதரி புருஷனையும்,
8. மனைவியின் தகப்பனுடைய சகோதரியையும்,	8. புருஷனின் தகப்பனுடைய சகோதரனையும்,
9. மனைவியின் தாயினுடைய சகோதரியையும்,	9. புருஷனின் தாயினுடைய சகோதரனையும்,
10. தாயையும்,	10. தகப்பனையும்,
11. தகப்பனுடைய மனைவியையும்,	11. தாயினுடைய புருஷனையும்,
12. மனைவியினுடைய தாயையும்,	12. புருஷனுடைய தகப்பனையும்,
13. மகளையும்,	13. மகனையும்,
14. மனைவியினுடைய மகளையும்,	14. புருஷனுடைய மகனையும்,
15. மகனுடைய மனைவியையும்,	15. மகளுடைய புருஷனையும்,
16. சகோதரியையும்,	16. சகோதரனையும்,
17. மனைவியினுடைய சகோதரியையும்,	17. புருஷனுடைய சகோதரனையும்,
18. சகோதரனுடைய மனைவியையும்,	18. சகோதரியினுடைய புருஷனையும்,
19. மகனுடைய மகளையும்,	19. மகனுடைய மகனையும்,
20. மகளுடைய மகளையும்,	20. மகளுடைய மகனையும்,

ஒருவன்.

21. மகனின் மகனுடைய மனைவியையும்,
22. மகளின் மகனுடைய மனைவியையும்,
23. மனைவியின் மகனுடைய மகளையும்,
24. மனைவியின் மகளுடைய மகளையும்,
25. சகோதரனுடைய மகளையும்,
26. சகோதரியினுடைய மகளையும்,
27. சகோதரனின் மகனுடைய மனைவியையும்,
28. சகோதரியின் மகனுடைய மனைவியையும்,
29. மனைவியின் சகோதரனுடைய மகளையும்,
30. மனைவியின் சகோதரியினுடைய மகளையும்,

விவாகஞ்செய்யக்கூடாது.

ஒருத்தி.

21. மகனின் மகளுடைய புருஷனையும்,
22. மகளின் மகளுடைய புருஷனையும்,
23. புருஷனின் மகனுடைய மகனையும்,
24. புருஷனின் மகளுடைய மகனையும்,
25. சகோதரனுடைய மகனையும்,
26. சகோதரியினுடைய மகனையும்,
27. சகோதரியின் மகளுடைய புருஷனையும்,
28. சகோதரியின் மகனுடைய புருஷனையும்,
29. புருஷனின் சகோதரனுடைய மகனையும்,
30. புருஷனின் சகோதரியினுடைய மகனையும்,

விவாகஞ்செய்யக்கூடாது.

முற்றிற்று.

C. K. S. Press, Vepery, Madras. 1885.

FORM OF PRAYER
FOR THE
QUEEN'S ACCESSION.

Translation Approved by BISHOP CALDWELL and BISHOP SARGENT and Sanctioned by the LORD BISHOP OF MADRAS.

சக்கரவர்த்தினியவர்கள்
பட்டாபிஷேகதின ஜெபமுறைமை.

மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினியவர்கள் தங்கள் பாக்கியமுள்ள அரசாட்சியைத் துவக்கின நாளாகிய ஜூன்மாசம் இருபதாந்தேதியில் வருஷந்தோறும் எல்லாத் தேவாலயங்களிலும் கோவில்களிலும், சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி ஸ்தோத்திரத்தோடு செய்யவேண்டிய ஜெபமுறைமை.

¶ இந்த ஜெபஆராதனைக்கென்று விசேஷித்துக் குறித்திருக்கிறவைகளல்லாமல், மற்றதெல்லாம் சகலத்திலும் திருநாட்களில் செய்யும் ஆராதனைமுறைக்கு ஒத்திருக்கவேண்டும்.

¶ இந்த நாள் ஞாயிற்றுக்கிழமையில் வருமானால் கீழேகாட்டிய ஆராதனை முறையை முழுவதும் வழங்கவேண்டும்.

¶ காலைஜெபம் தொடங்கும்போது இந்த வேதவாக்கியங்களை வாசிக்கவேண்டும்.

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தி என்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. 1 தீமோ. 2. 1–3.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவா. 1. 8, 9.

¶ 'கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி' என்ற 95-ம் சங்கீதத்திற்குப்பதிலாக அடியில்வரும் ஞானகீதத்தை குருவானவரும் மற்ற தேவஊழியக்காரரோடே ஜனங்களும் மாற்றி மாற்றிச் சொல்ல அல்லது பாடவேண்டும்.

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. சங். 8. 1.

கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும்: மனுப்புத்திரனை நீர் எண்ணுகிறதற்கும் அவன் எம்மாத்திரம்? சங். 144. 3.

அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார்: கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமுமுள்ளவர். சங். 111. 4.

ஆகையால் அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும்: மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதிப்பார்களாக. சங். 107. 21.

எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும்: நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தைப் பாரும். சங். 84. 9.

அவர்கள் காலடிகள் வழுவாதபடிக்கு அவர்கள் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும். சங். 17. 5.

சக்கரவர்த்தினியவர்களுடைய நாட்களோடே நாட்களைக் கூட்டி: அவர்களை உமது சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்கும். சங். 61. 6; 21. 6.

அவர்கள் உமக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்களாக: தயையும் உண்மையும் அவர்களைத் தற்காக்கக் கட்டளையிடும். சங். 61. 7.

அவர்களுடைய நாட்களில் நீதிமான் செழிப்பானாக: எங்கள் எல்லைகளெங்கும் சமாதானமிருப்பதாக. சங். 72. 7; 147. 14.

அவர்களுடைய சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்தும்: அவர்கள் மீதிலோ கிரீடம் பூப்பதாக. சங். 132. 18.

இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக: அவரே அதிசயங்களைச் செய்கிறவர். சங். 72. 18.

அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக: பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். சங். 72. 19.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

விசேஷித்த சங்கீதங்கள்.

சங்கீதம். 20, 21, 101.

விசேஷித்த பாடங்கள்.

முதலாம் பாடம். யோசுவா. 1. 1–9.

"தேவனே உம்மைத்துதிக்கிறோம்" என்னும் கீர்த்தனம்.

இரண்டாம் பாடம். ரோம. 13.

"பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடுங்கள்" என்னும் சங்கீதம்.

¶ விசுவாசப் பிரமாணத்துக்குப் பின்வரும் விண்ணப்பங்கள்.

குரு: கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

குரு: கர்த்தாவே, எங்கள் சக்கரவர்த்தினியை இரட்சியும்.

மறுமொழி: அவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.

குரு: உம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அவர்களுக்கு சகாயத்தை அனுப்பும்.

மறுமொழி: எப்பொழுதும் உமது வல்லமையைக்கொண்டு அவர்களைக் காத்தருளும்.

குரு: அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை மேற்கொள்ள இடங்கொடாதிரும்.

மறுமொழி: பொல்லாங்கன் அணுகி அவர்களைச் சேதப்படுத்தாதபடி செய்யும்.

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறுமொழி: தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.

குரு: கர்த்தாவே, எங்களுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: எதிராளியின் முகத்துக்கு எங்களை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேர்வதாக.

¶ காலைஜெபத்தில் வாசிக்கப்படுகிற முதல் சுருக்கஜெபத்திற்குப் பதிலாக மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினியவர்கள் சிம்மாசனம் ஏறினதற்காகச் செய்ய வேண்டிய அடியில்கண்ட ஸ்தோத்திர சுருக்கஜெபத்தை வழங்கவேண்டும்.

உலகத்திலுள்ள சகல ராஜ்யங்களையும் ஆண்டு உம்முடைய பிரிய சித்தத்தின்படியே அவைகளை நடத்திவருகிற சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் சுயாதிபதியாகிய விக்த்தோரியா என்னும் சக்கரவர்த்தினியும் உமது பணிவிடைக்காரியுமானவர்களை இந்நாளைப்போலொத்த நாளில் இந்த ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வைத்தருளினதற்காக உண்மையாய் நாங்கள் உமக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். உம்முடைய ஞானம் அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்து உமது கரம் அவர்களை பலப்படுத்துவதாக; நீதியும் உண்மையும் பரிசுத்தமும் சமாதானமும் அன்பும் கிறிஸ்துமார்க்கத்துக்கு அலங்காரமாயிருக்கும் சகல சற்குணங்களும் அவர்களுடைய நாட்களில் செழித்தோங்குவதாக. அவர்களுடைய ஆலோசனைகளையும் முயற்சிகளையும் உமது மகிமைக்கும் பிரஜைகளுடைய க்ஷேமத்துக்கும் ஏதுவாக நடத்தியருளும். மனச்சாட்சியினிமித்தம் நாங்கள் உற்சாகமாய் மனதார அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு கிருபை தந்தருளும். அவர்கள் பிரஜைகளின் க்ஷேமத்துக்காகக் கொண்டிருக்குங் கவலைகளை எங்கள் பாவ ஆசைகளினாலாவது தற்பொழிவான யோசனைகளினாலாவது நாங்கள் வியர்த்தமாக்கிப்போடாதபடிசெய்யும். அவர்களுடைய குடிஜனங்கள் எக்காலமும் அவர்களைக் கனப்படுத்தி அவர்களுடைய ஆளுகைக்கு அடங்கி நடக்கத்தக்கதாக அவர்கள் இருதயங்கள் அவர்கள்மேல் பற்றுதலைகொள்ளும்படி செய்தருளும். அவர்களுடைய ஆளுகை நீடித்த காலம் செழித்தோங்கவும் மறுமையில் அவர்கள் சாகா ஜீவனால் முடிசூட்டப்படவும் கடாட்சித்தருளும். எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

¶ இந்த நாளில் எப்போதும் லித்தானியா ஜெபத்தை வழங்கவேண்டியது. அதின் முடிவில் 'பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப் பார்த்து' என்று துவக்குகிற சுருக்கஜெபத்திற்குப் பின் சக்கரவர்த்தினியவர்களுக்காகவும் ராஜகுடும்பத்திற்காகவும் பின்வரும் ஜெபத்தை வழங்கவேண்டும்.

வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் தாங்கி நடத்துகிற எங்கள் கர்த்தராகிய தேவனே, உமது கிருபையினாலும் திருவுளச்செயலினாலும் இந்நாளைப்போலொத்த நாளில், எங்கள் சுயாதிபதியாகிய விக்த்தோரியா பெருமாட்டியவர்கள் எங்கள்மேல் இராக்கினியாயிருக்கும்படி அருள்புரிந்ததற்காக நாங்கள் நன்றியறிந்த இருதயத்தோடே தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவர்களுக்காகத் தாழ்மையோடே விண்ணப்பம்பண்ணுகிறோம். அப்படியே வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசரையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பமனைத்தையும் ஆசீர்வதித்தருளும். அவர்களெல்லாரும் உமது இரக்கத்

தையே நம்பி உமது வல்லமையால் காக்கப்பட்டு, உமது அளவில்லாத கருணையினாலும் தயவினாலும் முடிசூட்டப்பட்டவர்களாய், சுகத்திலும் சமாதானத்திலும் சந்தோஷத்திலும் கனத்திலும் உமது சமுகத்தில் நிலைத்திருந்து இம்மையில் நீடித்தகாலம் பூரிப்பாய் வாழ்ந்து மரணத்துக்குப்பின் உமது பரம ராஜ்யத்தில் நித்திய ஜீவனையும் மகிமையையும் அடையும்படி கிருபைசெய்தருளும். பிதாவோடும் பரிசுத்தஆவியோடும் சதாகாலமும் ஒரே தேவனாய் என்றென்றைக்கும் ஜீவித்தரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தமும் மத்தியஸ்தத்தினிமித்தமுமே. ஆமென்.

¶ இதன்பின் தம்முடைய சத்துருக்களெல்லாருக்கும் விலக்கமாய்த் தேவன் சக்கரவர்த்தினியவர்களைக் காப்பதற்காகச் செய்யும் இந்தச் சுருக்க ஜெபம் வரும்.

மிகுந்த கிருபையுள்ள தேவனே, விக்த்தோரியா என்னும் எங்கள் சக்கரவர்த்தினியவர்களாகிய உம்முடைய பணிவிடைக்காரியை அவர்கள் முன்னோர்களின் ராஜாசனத்தில் வீற்றிருக்கும்படி செய்திருக்கிறீரே! அதில் அவர்களை நிலைப்படுத்தி அவர்களுக்கு நேரிடும் சகல மோசங்களுக்கும் அவர்களை விலக்கிக்காத்து ரட்சிக்கவேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடே உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம். அடங்காதவர்களின் கூட்டத்திற்கும் பொல்லாங்கு செய்கிறவர்களின் அமளிக்கும் அவர்களை மறைத்தருளும். சத்துருக்களுடைய அந்தரங்க துராலோசனைகளினாலும் பகிரங்க கொடுமைகளினாலும் அவர்களுடைய ராஜ்யத்தில் சமாதானபேதம் உண்டாகாமல், சத்துராதிகளின் கைகளை பலவீனப்படுத்தி அவர்கள் உபாயங்களை வியர்த்தமாக்கி அவர்கள் பிரயத்தனங்களைக் குலைத்துப்போடும். சக்கரவர்த்தினியவர்களை உம்முடைய செட்டைகளின் நிழலின்கீழ் பாதுகாத்து உம்முடைய வல்லமையினால் அவர்களை ஆதரித்து சகல எதிராளிகளையும் மேற்கொண்டு வெற்றிசிறக்கச்செய்வதினால் நீரே அவர்களுடைய பாதுகாவலரென்றும் சகல வருத்தங்களிலும் துன்பங்களிலும் வல்லமையுள்ள இரட்சகரென்றும் உலகம் உம்மைக்குறித்து அறிக்கைசெய்யும்படி கிருபைசெய்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பார்லமெந்து என்னும் மகாசங்கம் கூடுகிற காலமாயிருந்தால், அந்தச் சங்கத்தாருக்காகச் செய்யப்படுகிற ஜெபம் இதன்பின் வாசிக்கப்படும்.

¶ பரிசுத்த நற்கருணை ஆராதனையில் திருபவாக்கியம் வாசிப்பதற்கு முன்னாக சக்கரவர்த்தினியவர்களுக்காகவும் அந்த நாளுக்கென்றும் குறித்திருக்கிற சுருக்க ஜெபங்களுக்குப் பதிலாக இந்தச் சபைக்கு மேலதிகாரியான இராக்கினியவர்களுக்காக இந்த ஜெபம் வழங்கவேண்டும்.

கிருபையுள்ள கர்த்தாவே, உம்முடைய சத்தியமார்க்கத்தைக் காக்கவும் ஜனங்களுடைய இகபரநன்மைகளை விர்த்திபண்ணவும் கிறிஸ்தவர்களான

ராஜாக்களுக்குக் கட்டளைகொடுத்திருக்கிறீரே! எங்கள் மகா காருணிய சக்கரவர்த்தினியாகிய உம்முடைய ஊழியக்காரி இந்தச் சபைக்கும் ராஜ்யத்திற்கும் மேல்அதிகாரியாயிருக்கும்படி அவர்களை நியமித்த உம்முடைய உன்னத தயவை தாழ்மையும் நன்றியறிதலுமுள்ள இருதயத்தோடு அறிக்கையிடுகிறோம். இவ்வளவு சிறந்த பொறுப்பான பணிவிடையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டருளும். அவர்களுடைய தேவனாகிய உம்முடைய வேலை அவர்கள் கைகளில் சித்திபெறுவதாக. எங்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற உம்முடைய சத்தியமார்க்கத்தின் அனுகூலத்திற்கென்று அவர்கள்கொண்டிருக்கும் நோக்கங்கள் கைகூடிவருவதை அவர்களுடைய கண்பார்ப்பதாக. சத்தியத்திற்கு விரோதமாய் துன்பங்களும் இடுக்கண்களும் நேரிடும் இடங்களிலெல்லாம் அதைப் பாதுகாக்கவும் பிரபலப்படுத்தவும், அவர்களை உமக்கேற்ற கருவியாக்கி அவர்கள் பிரயத்தனங்களை ஆசீர்வதித்தருளும். மாயமும் மார்க்கநிந்தையும் அவபத்தியும் விக்கிரகஆராதனையும் அவர்களுடைய முகத்தைவிட்டுப் பறந்துபோவதாக. வேதப்புரட்டுகளும் பொய்போதகங்களும் சபையின் சமாதானத்தைக் குலைக்காமலும், சபைப்பிரிவினைகளும் அகாரணமான பேதங்களும் அதைப் பலவீனப்படுத்தாமலும் இருக்கச்செய்யும். நாங்களோ எங்கள் தேவனாகிய உம்மைச் சேவிப்பதில் ஏகமனதும் ஏகசிந்தையுமுள்ளவர்களாயிருக்கவும், உம்முடைய சித்தத்தின்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இவ்வாசீர்வாதங்கள் பிற்காலங்களுக்குங் கிடைக்கவும் எங்களுடைய சந்ததியார் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையுங் காணவும் இந்த ஐக்கிய ராஜ்யத்தில் எக்காலமும் ஆளுகை செய்துகொண்டிருக்க அவர்களுடைய வம்சத்தில் சந்தானம் அற்றுப்போகாதிருப்பதாக. இப்படியாக உம்முடைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் என்றென்றைக்கும் உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி தலைமுறை தலைமுறையாக உம்முடைய புகழை எப்போதுங் கூறி அறிவிக்கக் கிருபைசெய்தருளும். **ஆமேன்.**

நிருபவாக்கியம். 1 பேது. 2. 11.

சுவிசேஷவாக்கியம். பரி. மத். 22. 16.

¶ நிசேயா விசுவாசப் பிரமாணத்துக்குப்பின் பிரசங்கம் வரும்.

¶ காணிக்கை வாங்கும்போது பின்வரும் வாக்கியம் வாசிக்கப்படவேண்டும்.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது. பரி. மத். 5. 16.

¶ கிறிஸ்துசபை அனைத்தின் சீருக்காகச் செய்யும் ஜெபத்திற்குப்பின் அடியில் வருகிற சுருக்கஜெபங்களை வழங்கவேண்டும்.

திருச்சபையின் ஒருமைப்பாட்டுக்காகச் செய்யப்படும் ஜெபம்.

எங்கள் ஒன்றான இரட்சகரும் சமாதானப் பிரபுவுமாகிய எங்கள் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனே, சஞ்சலத்துக்கேதுவான எங்கள் பிரிவினைகளால் எங்களுக்குண்டாயிருக்கிற பெரிய மோசங்களை நாங்கள் நன்றாய் சிந்தித்து உணரும்படி அருள்புரியும். சகலவிதமான பகையையும் பிடிவாதத்தையும் நீக்கி, தேவபக்திக்கேதுவான ஐக்கியத்தையும் ஏகசிந்தையையும் கெடுக்கத்தக்க மற்றெல்லாத் தகாத குணங்களையும் எங்களைவிட்டு அகற்றியருளும். ஒரே சரீரமும் ஒரே ஆவியும் ஒரே நம்பிக்கைக்கேதுவான அழைப்பும் ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் இருப்பதுபோல, நாங்கள் இதுமுதல் ஒரே மனமும் ஒரே ஆவியுமுள்ளவர்களாயும் சத்தியம் சமாதானம் விசுவாசம் அன்பு என்னும் பரிசுத்த கட்டினால் கட்டப்பட்டவர்களாயும் ஒரேமனதினாலும் ஒரே வாக்கினாலும் உம்மை மகிமைப்படுத்துகிறவர்களாயும் இருக்கும்படி கடாட்சித்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

ஆண்டவரே, உமது திருச்சபை நிறைந்த தேவபக்தியுள்ள அமரிக்கையோடே உமக்குச் சந்தோஷமாய் ஊழியஞ்செய்யும்படி இவ்வுலக சம்பவங்களை உமது ஆளுகையினால் சமாதானமாய் நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

சர்வவல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய நாமத்துக்குக் கனமும் புகழும் உண்டாவதற்கேதுவாக நன்னடைக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்திலே பதித்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்குமுன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப்பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத்தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அனுக்கிரகித்தருளும். **ஆமேன்.**

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருந்து நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்தாவியுமாகிய சருவவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமேன்.

S. P. C. K. Press, Vepery, Madras. 1885.